# நெய்தல்
## Neithal

இழைத்தல், இணைத்தல், ஆக்கம் 2022 (2025) தொகுதி~13 எண்~1,2

கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**Faculty of Arts and Culture**
**Eastern University, Sri Lanka**

# நெய்தல்

**இழைத்தல், இணைத்தல், ஆக்கம்**

**தொகுதி – 13, எண்: 1, 2**

வெளியீடு

**கலை கலாசார பீடம்**

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**

**2022 (2025)**

## Neithal

A bi-annual peer reviewed journal of the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka Vol:13, No.-1 & 2.



**Editorial Board:**

Chief Editor : Mr. C. Sasitharan

Co-Editor : Mr. R. Kiruparajah

Administrative Editor : Rev. Fr. A. A. Navaretnam

Editorial Board Member : Dr. N. Pushparajah

Mrs. Mekala Sivakumaran

Mrs. Thakshaayini Rajendram

Copy Right : Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka



Publishing Year: December 2025


---


## நெய்தல்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தினால் நெய்தல் என்னும் பெயரில் வருடத்திற்கு இரண்டு இதழ்களாக வெளியிடப்படும் ஆய்வுச் சஞ்சிகை, தொகுதி-13, இதழ் எண்-1,2.



பதிப்பாசிரியர் குழு:

பிரதம பதிப்பாசிரியர் : திரு. C. சசிதரன்

இணைப் பதிப்பாசிரியர் : திரு R. கிருபராஜா

நிருவாகப் பதிப்பாசிரியர் : அருட்தந்தை A.A. நவரெட்ணம்

பதிப்புக் குழு உறுப்பினர்கள் : கலாநிதி. N. புஸ்பராஜா

திருமதி. மேகலா சிவகுமாரன்

திருமதி. தாக்ஷாயினி இராஜேந்திரம்

இவ்விதழில் வெளிவந்துள்ள ஆராட்சிக் கட்டுரைகளில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் ஆசிரியருக்கே உரியதாகும்.

# பிரதம பதிப்பாசிரியரின் அறிமுக உரை

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், கலைகலாசார பீடத்தினது ஒரு தொடர் பயணமாக "நெய்தல்" என்னும் ஆய்வுச் சஞ்சிகையினை 13வது தொகுதியாக வெளியிடுவதையிட்டு பெருமை அடைகின்றேன். அந்த வரிசையில் இதழ் எண்-1, இதழ் எண்-2 ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்த வகையில் 14 கட்டுரைகளைத் தாங்கியதாக இச் சங்சிகையானது வெளிவருகின்றது. தேர்ச்சிமிக்க ஆராய்ச்சியாளர்களின் இலக்கியம், கல்வி, சமயம், தத்துவம் என்னும் பொருண்மைகளை வெளிப்படுத்தும் வகையில் அய்வுக் கட்டுரைகள் அமைந்துள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழக புலமையாளர்கள் மாத்திரமல்லாது பிற பல்கலைக் கழகங்களைச் சேர்ந்தவர்கள், பிற கல்வி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என பலரது பங்களிப்போடு மலர்ந்துள்ள இவ்விதழை வாசகர் கரங்களில் தவழவிடுவது கல்விச் சமூகத்துக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் ஆற்றும் உயரிய பங்களிப்பாகும்.

இவ்விதழ் சிறப்பாக வெளிவர ஒத்துழைப்பு வழங்கிய துணைவேந்தர், கலை கலாசார பீட பீடாதிபதி, கட்டுரை ஆசிரியர்கள், மீளாய்வாளர்கள், பதிப்பாசிரியர் குழுவினர், தகவல் தொழில்நுட்பத் துறை உத்தியொகத்தர்கள், அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**பிரதம ஆசிரியர்**
***திரு.சீ.சசிதரன்***

# பீடாதிபதியின் உரை

ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் களமாக கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தினால் வருடா வருடம் வெளியிடப்படும் "நெய்தல்" சஞ்சிகை விளங்குகின்றது. அத்தகைய உயர்நிலை மிக்க சஞ்சிகைக்கு வாழ்த்துரையை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். அறிவைப் பகிர்வது மட்டும் ஆசிரியர்களது கடமையல்ல, சமகால உலகின் மாற்றங்களுக்கு முகம் கொடுக்கத்தக்கவாறு மாணவ சமுதாயத்தை நெறிப்படுத்தி, தம்மையும் தம்மையும் இற்றைப்படுத்திக் கொள்ளும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு உண்டு. இதற்கு உறுதுணை புரிவதே "ஆராய்ச்சி" ஆகும். இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி, பல்கலைக்கழக ஆசிரியாகளின் ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு *2022* ஆம் அண்டு வெளிவரவேண்டிய இச்சஞ்சிகையானது, பல தவிர்க்க முடியாத தடங்கல்களின் காரணமாக *2025* ஆம் ஆண்டு இதழ்-*13*, இரண்டு தொகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் வெளிவருவதையிட்டு பேருவகை அடைகின்றேன். இச் சஞ்சிகை ஆராய்ச்சி உலகிற்கு மட்டுமல்லாது, பாமர சமூகத்துக்கும் பயனுடையதாக அமையும் என் எண்ணுகின்றேன். இதன் பொருட்டு தமது பல்வேறு கடமைகளுக்கும், பொறுப்புக்களுக்கும் மத்தியில் அர்ப்பணிப்புடன் கருமமாற்றிய பிரதம பதிப்பாசிரியருக்கும், ஆசிரிய குழுவினருக்கும், மற்றும் கட்டுரை ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்தும் இவ்விதழ் எவ்வித தடைகளுமின்றி மலர்ந்து மணம் வீச வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

**பேராசிரியர் வ. குணபாலசிங்கம்**
**பீடாதிபதி**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அறபுத் தமிழ் ஆவணங்களை மீள் பாதுகாப்புக்கான முனைவுகள்: இலங்கைச் சூழலை மையப்படுத்திய ஒரு வரலாற்றுப் பார்வை | 1 |
| 2. | ஆறியப்படாத ஆளுமை: புலவர் கி. அருளம்பலம் | 10 |
| 3. | இலங்கையின் பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் அரசியல் பங்கேற்ப்பு: வாய்ப்புகளும் சவால்களும். | 24 |
| 4. | ஈழத்துச் சிறுவர் கதைகள்: சிறுவர் உளவியல் நோக்கிலான ஆய்வு | 43 |
| 5. | உணவுப் பண்பாட்டில் பெண்கள் | 60 |
| 6. | புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தொழிலாளர்தரநிலைகளுடன் இலங்கை தொழிலாளர் தரநிலைகளின் இணக்கத்தன்மை. | 78 |
| 7. | மட்டக்களப்பு தேசத்தின் வேதாந்த மரபில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை | 91 |
| 8. | மட்டக்களப்பு வாவியில் பாடுமீன்கள் ஓர் புவியியல் நோக்கு | 106 |
| 9. | தமிழர் கல்விச் சிந்தனை மரபு: நன்நூலை அடிப்படையாகக்கொண்ட பார்வை | 118 |
| 10. | விசிட்டாத்துவைதம் குறிப்பிடும் முத்தி: ஓர் சமய மெய்யியல் ஆய்வு | 125 |
| 11. | A study on investment behaviour of Government workers in Jaffna Divisional Secretariat Division, Sri Lanka. | 136 |
| 12. | Aggression on life satisfaction among the youth. | 156 |
| 13. | The Role of Islamic Historical Cartoons in Enhancing Arabic Speaking Skills among Non-Arabic-Speaking Students: Challenges and Strategies for Implementation in the Sri Lankan Context. | 166 |
| 14. | The use of OpenStreetMap (OSM) in research activities a comprehensive review. | 176 |

# அறபுத் தமிழ் ஆவணங்களை மீள் பாதுகாப்புக்கான முனைவுகள்: இலங்கைச் சூழலை மையப்படுத்திய ஒரு வரலாற்றுப் பார்வை

ஜவ்பர் ஹுசைன்
இஸ்லாமிய கற்கைகள் துறை
குலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
hussainaj@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்:**

தாய் தொழி தமிழின் வளர்ச்சியும் அதன் மீதான முஸ்லிம்களின் அதீத ஈடுபாடும் அறபுத் தமிழ் வழக்கொலிய மிகப் பிரதான காணிகளில் ஒன்றாக மாறியுள்ளன. இவ்வகையில் இவ்வறபுத் தழில் ஆவணங்களை மீள்பாதுகாத்து எதிர்கால சந்ததிகளுக்கு வழங்கவேண்டிய தேவை எழுந்துள்ளது. இலங்கையில் அறபுத் தமிழ் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகளை இனங்காண்பதும், அழிவடையும் நிலையிலுள்ள அறபுத் தமிழ் ஆவணங்களை மீள் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை வெளிக்கொணர்தலும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தி அறபுத் தழில் ஆவணங்களின் மீளாய்வுக்குட்படுத்தியுள்ளது. தமிழ் மொழி மீதான முஸ்லிம்களின் பற்று, அச்சு இயந்திரங்களின் தோற்றம், தமிழ் நூல்களின் அதிகரித்த செல்வாக்கு, தமிழ் மொழியில் இஸ்லாமிய சமயம் சார்ந்த வழிகாட்டல்கள் கிடைக்கப்பெறல் போன்ற காரணிகளினால் அறபு தமிழ் செல்வாக்கிழந்தது என்பது இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். சமூக ஆர்வளர்கள், அமைப்புக்கள், இஸ்லாமிய நிறுவனங்கள் என்பன இத்தகைய அறபுத் தமிழ் ஆவணங்களை பாதுகாப்பதற்கான வழிகாட்டல்களை வழங்குவதில் இவ்வாய்வு துணைநிற்கின்றது.

முதன்னமைச் சொற்கள்: இலங்கைச் சு+ழல், அறபுத் தமிழ் ஆவணங்கள், பாதுகாப்பு முயற்சிகள்

## அறிமுகம்

அறபு எழுத்துக்களைக் கொண்டு தமிழை எழுதுவது அறபுத் தமிழ் எனப்படுகிறது. இது லிபி அறபாகவும், ஒலி தமிழாகவும் உள்ள XH அற்புத அமைப்பகும். அறபுத் தமிழ் பற்றிய பொதுவான கருத்து இதுவாகும். எனினும், அறபு, தமிழ் ஆகிய எந்த வரி வடிவத்தில் எழுதப்பட்டாலும் அறபுச் சொற்கள் கலந்த தமிழையே அறபுத் தமிழ் என்பதாக ஏ. எம். ஏ அஸீஸ் கருதுகிறாH. அறபுமொழி, தமிழ் மொழி மீது ஏற்படுத்திய முக்கியமான விளைவுகளுள் ஒன்றாக அறபுத் தமிழைக் கருதலாம்.

இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னா; அறபுத் தீபகற்பத்தில் வழக்கிலிருந்த, சிறந்த வளாச்சியைக் கண்டு இலக்கிய வளம் மிக்க ஒரு மொழியாகக் காணப்பட்ட அறபு மொழியானது இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் குஆனின் மொழியாகப் பரிணமித்து, இஸ்லாமிய பண்பாட்டின் வளச்சியோடு இஸ்லாமிய கலாஞானங்களின் மொழியாக மாறியது. அல்குர்ஆனை அனைத்து முஸ்லிம்களும் வாசித்தறிந்து, அதன் பிரகாரம் ஒழுக வேண்டுமென்பதால் முஸ்லிம்கள் அனைவரும் அம்மொழியோடு நன்கு பரிச்சயமாயினர். அதனை எழுதவும், வாசிக்கவும், விளங்கிக் கொள்sTk;

இயலுமானவராயிருந்தனர். இவர்களது பேச்சு, வர்த்தக மொழியாக தமிழ் உபயோகிக்கப்பட்டது. எனினும், அதனை எழுத, வாசிக்கத் தொந்தோரின் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. அவ்வாறு எழுதும் பொழுது சில அறபுச் சொற்களை அவற்றின் சரியான உச்சரிப்புக்கேற்பவும், உரிய கருத்தைத் தரக்கூடியதாகவும் தமிழ் மொழியில் எழுத முடியாதிருந்தது. சில தமிழ்ச் சொற்களை அறபு மொழியில் அதே உச்சரிப்பில் எழுத முடியாது. இதன் விளைவாகவே, தமிழ் மொழியினை அறபு எழுத்துக்களில் எழுதும் புதிய கிளைமொழியொன்று உருவாகியது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறபுத்தமிழின் செல்வாக்கு சரியத் தொடங்கி, அம்மொழியுடன் பரிச்சயமுள்ளவர் எவராவது உள்ளனரா என சந்தேகிக்கும் நிலைக்கு வந்துள்ளது. பழைய நூல்களைப் பேணிவரும் சிலரே இனறு அவற்றைப் பயன்படுத்துகின்றனH. முஸ்லிம்களின் எழுத்தறிவு வீதம் தொடந்து அதிகரித்து வந்துள்ளமையால் இன்று பெரும்பாலான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தமிழிலேயே நூல்களை வாசித்து விளங்கும் ஆற்றல் உடையவகளாக விளங்குகின்றனH.

மதம் பற்றிய மனப்பான்மையும் இப்போது விரிவடைந்துள்ளது. அல்குஆன் மொழி பெயப்புகளும் அது பற்றிய விரிவுரைகளும், ஏனைய இஸ்லாமிய நூல்களும் தமிழிலேயே வெளிவர வேண்டியது அவசியம் என்ற கொள்கை வேரூன்றி விட்டது. அத்தயாவசிய அறபுச் சொற்களை மட்டும் பயன்படுத்தி ஏனையவற்றுக்குத் தகுந்த தமிழ்ச் சொற்களைக் கையாள வேண்டும் என்ற வகையில் முஸ்லிம்களின் மொழிக் கொள்கையும் நெகிழ்ச்சியடைந்துள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வெளிவந்துள்ள இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகள் என்பன இதனையே உணத்துகின்றன. தனித் தமிழிலான வெளியீடுகள் வெளிவர ஆரம்பித்தமையினால் இவற்றோடு அறபுத் தமிழ் போட்டியிட முடியவில்லை.

1963ஆம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டில் சேH ரசிக் பரீத் கொண்டு வந்த 'இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி அறபுத்தமிழ்' என்ற தீமானம் தோல்வியடைந்தது. பெரும்பாலான அறபுத் தமிழ் ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே காணப்பட்டதால் அவை நீண்ட ஆயுளைக் கொண்டிருக்க வில்லை.

## ஆய்வின் நோக்கங்கள் (ழுடிதநஉவளநள)

1. இலங்கையில் அறபுத் தமிழ் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகளை இனங்காணல்.
2. அழிவடையும் நிலையிலுள்ள அறபுத் தமிழ் நூல்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை வெளிக்கொணர்தல்.

## ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் அறபுத் தமிழ் வாசிக்கத் தொந்த பல முதியவாகள் மரணித்து விட்டாகள். அவாகளால் பாவிக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட பல நூல்களும் செல்லாத்து, அழிவடைந்து விட்டன. இப்பின்னணியில் அறபுத் தழிழ் முஸ்லிம்களிடம் பெற்றிருந்த செல்வாக்கு பற்றிய தெளவை எதிர்கால சந்ததினர்களுக்கு வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

## இலக்கிய மீளாய்வு

அறபுத் தமிழைப் பற்றி, காலத்துக்குக் காலம் பல கட்டுரைகள் வெளிவந்துள்ள போதிலும், அம்மொழியைப் பற்றி பரிபூரண ஆய்வின் வெளிப்பாடான நூல் கீழக்கரையைச் சேர்ந்த கலாநிதி தைக்கா சுஐப் ஆலிம் அவர்களுடைய 'யுசயடிஉ. யுசறi and Pநசளயைn in ஞுயசயனெடி and Tamil யேனர' என்பதாகும். 1993 ஆம் ஆண்டில் வெளிவந்த 824 பக்கங்களைக் கொண்ட ஆங்கில மொழி மூலமான இந்நூல் அறபு, அர்வி (அறபுத் தமிழ்), பாரசீகம், உருது மொழிகளிலான இலக்கியம் மற்றும் கல்வித் துறைக்கு இலங்கை மற்றும் தமிழ் நாடு என்பன வழங்கிய பங்களிப்பு என்பவற்றை மிக விரிவாக ஆராய்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழக அறபு, இஸ்லாமிய நாகரிகத்துறையின் முன்னாள் தலைவரான எம்.ஐ.எம்.அமீன், தான் எழுதிய 'இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870 – 1915)' என்ற நூலில் அறபுத் தமிழ் பற்றிய ஓர் அறிமுகத்துடன் இக்காலப்பகுதியில் இலங்கையில் பிரசுரமாகிய அறபுத் தமிழ் நூற்களின் பட்டியலொன்றையும் இணைத்துள்ளார்.

பல்கலைக்கழக மட்டத்தில் இத்துறையில் செய்யப்பட்ட ஆய்வுகளில் தென்கிழக்கு பல்கலைக்கழக அறபுத் தறைப் பேராசிரியரான எம்.எஸ்.எம்.மஸாஹிர் எழுதிய 'அறபுத் தமிழில் உள்ள அல்குர்ஆன் விளக்கவுரைகள்: GJ}ஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா' பற்றிய விசேட ஆய்வு, என்ற நூல் சிறப்பிடம் பெறுகிறது.

அத்துடன் அவ்வப்போது பல்கலைக்கழகங்களில் வெளியிடப்பட்ட சில சஞ்சிகைகளிலும், இலங்கையின் தேசிய நாளிதழ்களிலும் அறபுத் தமிழ் பற்றிய சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

## ஆய்வு முறையியல்

இது ஓர் பண்புசார் ஆய்வாகும். முற்றிலும் இரண்டாம் நிலைத் தரவுகளே இவ்வாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அறபுத் தமிழ் தொடாபாக எழுதப்பட்டுள்ள நூல்கள், கட்டுரைகள் என்பவற்றின் துணையுடன் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## அறபுத் தமிழ் என்றால் என்ன?

அறபு எழுத்துக்களைக் கொண்டு தமிழை எழுதுவது அறபுத்தமிழ் எனப்படுகிறது. இது லிபி அறபாகவும், ஒலி தமிழாகவும் உள்ள ஓர் அற்புத அமைப்பகும். அறபுத்தமிழ் பற்றிய பொதுவான கருத்து இதுவாகும். எனினும், அறபு, தமிழ் ஆகிய எந்த வரி வடிவத்தில் எழுதப்பட்டாலும் அறபுச் சொற்கள் கலந்த தமிழையே அறபுத்தமிழ் என்பதாக ஏ. எம். ஏ அஸீஸ் கருதுகிறாH. "அறபுத்தமிழ் என்ற பெயரே அது அறபும் தமிழும் இணைந்த கூட்டு மொழி என்ற கருத்தைத் தருகிகின்றது." எனும் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரியின் கருத்து ஏ. எம். ஏ அஸீஸின் மேற்படி கூற்றுக்கு மேலும் வலுச் சேக்கிறது. அறபுமொழி, தமிழ்மொழி மீது ஏற்படுத்திய முக்கியமான விளைவுகளுள் ஒன்றாக அறபுத்தமிழைக் கருதலாம்.

முஸ்லிம்களால் பாரசீகம் கைப்பற்றப்பட்ட போது, அங்கு இஸ்லாத்தின் பரவலோடு அறபு மொழியும் பாரசீக மொழியில் அதன் செல்வாக்கை ஏற்படுத்தியது. பாரசீக

மொழி, அறபு லிபியில் எழுதப்படும் மரபு தோன்றியதோடு எண்ணற்ற அறபுச் சொற்கள் பாரசீக மொழியோடு கலந்து அதன் சொல்லகராதியில் பெரும் மாற்றத்தை விளைவித்தது இதேபோன்ற நிலையைத் துருக்கி மொழியைபபொருத்தளவிலும் அவதானிக்க முடிகிறது. 1920களில் நிகழ்ந்த மொழிச் சீதிருத்தத்திற்கு முன்னH துருக்கி மொழியானது அறபு லிபியிலேயே எழுதப்பட்டது. இவ்வாறே தென்னிந்தியாவில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இஸ்லாம் பரவிய போது, அங்கு செல்வாக்குப் பெற்றிருந்த தமிழ் மொழியோடு அறபு மொழி கலந்து அதன் செல்வாக்கை ஏற்படுத்தியது.

அறபுத் தமிழ் தப்ஸPH, ஹதீஸ், பிக்ஹ், அகாயித், தஸவ்வுப் போன்ற இஸ்லாமியக் கலைகள் சாந்த ஆயிரக் கணக்கான நூல்களும் வானவியல், தத்துவம், வரலாறு, மருத்துவம் போன்ற கலைகளுடன் தொடபுடைய பல்வேறு நூல்களும் எழுதப்பட்டன. அந்நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் விளக்கங்களைக் கொண்ட அறபுத் தமிழ் அகராதிகளும் தொகுக்கப்பட்டன. கி.பி. 1869 இல் இலங்கையில் 'அலாமத் லங்காபுரி' என்ற இதழ் வெளிவந்தது. இது அறபுத் தமிழில் வெளிவந்த முதல் இதழ் என்று கலாநிதி தைக்கா ஷுஐப் ஆலிம் குறிப்பிடுகிறாH. 'கஷ்புற்றான் அன் கல்பில் ஜான்' எனும் பெயரில் ஒரு அறபுத் தமிழ் பத்திரிகை 1889 – 1890 காலப்பகுதியில் இலங்கையில் பிரசுரமாகியது.

இலங்கையில் முஸ்லிம்களுள் 'கொழும்பு ஆலிம்' என அழைக்கப்பட்ட 'ஸெய்யித் முஹம்மத் ஆலிம்' 'கஸாவத்தை ஆலிம்' என அழைக்கப்பட்ட அஷ்ஷெய்க் முஹம்மது லெப்பை ஆலிம், எம். சி. சித்திலெப்பை ஆகியோH அறபுத் தமிழில் பல ஆக்கங்கள் உருவாக்கினH. 1882ஆம் ஆண்டு சித்திலெப்பையினால் வெளியிடப்பட்ட 'முஸ்லிம் நேசன்' அறபுத் தமிழ் நடையில் ஆனால் தமிழ் எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டது. அக்கால அறபுத் தமிழ் உரைநடையின் பாங்கை நாம் முஸ்லிம் நேசனில் இனங்காண முடிகிறது.

## அறபுத்தமிழின் தோற்றம்.

இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னH அறபுத் தீபகற்பத்தில் வழக்கிலிருந்த, சிறந்தவளச்சியைக் கண்டு இலக்கியவளம் மிக்க ஒரு மொழியாகக் காணப்பட்ட அறபுமொழியானது இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னH குஆனின் மொழியாகப் பரிணமித்து, இஸ்லாமிய பண்பாட்டின் வளச்சியோடு இஸ்லாமிய கலாஞானங்களின் மொழியாக மாறியது. இந்த வகையில் இஸ்லாத்திக் பரவலோடு அதன் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களிலெல்லாம் பரவிய அறபு மொழியானது அப்பகுதிகளில் ஏற்கனவே வழக்கிலிருந்த மொழிகளில் அதன் செல்வாக்கைப் பதித்த பான்மையினை, கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி 'அறபுத் தமிழின் பண்பாட்டுப் பாரம்பரியம்' என்ற தனது கட்டுரையில் பின்வருமாறு விளக்குகிறாH.

"முஸ்லிம்களால் பாரசீகம் கைப்பற்றப்பட்ட போது, அங்கு இஸ்லாத்தின் பரவலோடு அறபு மொழியும் பாரசீக மொழியில் அதன் செல்வாக்கை ஏற்படுத்தியது. பாரசீக மொழி, அறபு லிபியில் எழுதப்படும் மரபு தோன்றியதோடு எண்ணற்ற அறபுச் சொற்கள் பாரசீக மொழியோடு கலந்து அதன் சொல்லகராதியில் பெரும் மாற்றத்தைவிளைவித்தது இதேபோன்ற நிலையைத் துருக்கி பொருத்தளவிலும் அவதானிக்க முடிகிறது. 1920களில் நிகழ்ந்த மொழிச் சீதிருத்தத்திற்கு முன்னH துருக்கி மொழியானது அறபு லிபியிலேயே எழுதப்பட்டது. இவ்வாறே தென்னிந்தியாவில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இஸ்லாம் பரவிய போது, அங்கு செல்வாக்குப்

பெற்றிருந்த தமிழ்மொழியோடு அறபுமொழி கலந்து அதன் செல்வாக்கை ஏற்படுத்தியது." அறபு எழுத்தைக் கையாண்டு அறபுத்தமிழை முஸ்லிம்கள் எப்போது எழுத ஆரம்பித்தாகள் என்று சரியாகக் கணித்துக் கூறுவதற்கான சான்றுகள் இதுகாலவரை ஆய்வாளகளுக்கு கிடைக்கவில்லை" எனப் பேராதனைப் பல்கலைக்கழக அறபு இஸ்லாமிய நாகரீகத்துறை முன்னாள் முதுநிலை விரிவுரையாளரான எம். ஐ. எம். அமீன் குறிப்பிடுகிறாH.

## தோற்றத்துக்கான காரணங்கள்.

அறபுத் தமிழின் தோற்றத்திற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றின் பின்வரும் மூன்று காரணங்களை முக்கியமானவை என பேராசிரியH எம். ஏ. நுஃமான் கருதுகிறாH.

1. தமிழ் எழுத்தறிவில்லாத பெரும்பாலான பாமர மக்களுக்குச் சமய அறிவை ஊட்டுவதற்கு அது வாய்ப்பாக அமைந்தமை.
2. குஆன் விளக்கவுரைகள் (தப்ஸீகள்) அறபு எழுத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும் என்ற கருத்து சமய அறிஞகள் மத்தியில் நெடுங்காலமாக நிலவி வந்தமை.
3. அறபுச் சொற்களை ஒலிச் சிதைவும் பொருட்சிதைவும் இன்றி எழுதுவதற்கு அறபுத் தமிழ் வாய்ப்பாக அமைந்தமை.

ஒரு முஸ்லிம் எந்த மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த போதும் அறபு மொழியிலும் சில வாக்கியங்களை மொழிய வேண்டிய நிப்பந்தம் உண்டு. அந்த வகையில் ஒருவன் முஸ்லிமாவதற்குக் கூற வேண்டிய 'கலிமா', தொழுகையில் கட்டாயம் ஓத வேண்டிய 'சூரதுல் பாதிஹா', 'அத்தஹிய்யாது', 'அல்லாஹு அக்பர்' எனும் சொற்றொடர், ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமைக் கண்டால் கூறும் முகமன் வாத்தையான 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்பவற்றைப் பொருளறியாத நிலையிலும் அறபு மொழியிலேயே கூற வேண்டியவனாகின்றான். இதனால், இளமைப் பருவம் முதலே தங்கள் பிள்ளைகளுக்கு அறபு மொழியைக் கற்பிக்கும் மரபை, அறபு மொழி பேசா நாடுகளில் உள்ள முஸ்லிம்களும் கைக்கொண்டு வந்துள்ளனH. அத்துடன் அறபு எழுத்துக்களை எழுதுவதையும் எழுதப் பழக்குவதையும் ஒரு வணக்கமாக, நன்மை தரும் செயலாக முஸ்லிம்கள் கருதினH. இதனால் ஒரு முஸ்லிம் தனது தாய்மொழியை வாசிக்க அறியாதிருந்தாலும், குறைந்த பட்சம் அறபுமொழியை வாசிக்கும் பயிற்சியையாவது பெற்றுக்கொண்டான். ஆதலால் அறபு எழுத்து தமிழ் எழுத்தை விட பல முஸ்லிம்களுக்கு அறிமுகமாகி இருந்தது, அவகளுக்கு அறபு மொழி தெரியாதுளூ ஆனால் அறபு எழுத்துக்களை வாசிக்கத் தெரியும். தமிழ் எழுத்துக்களை வாசிக்கத் தெரியாது ஆனால் தமிழ் தெரியும். எனவே தெரிந்த எழுத்துக்களைக் கொண்டு எழுதினால், அதனை வாசிப்பது இலகுவானது. இதனாலேயே அறபு எழுத்தைக் கொண்டு எழுதப்படும் தமிழ் ஆக்கங்களை அதிக முஸ்லிம்கள் வாசிக்க முடியுமாயிருந்தது.

அறபு எழுத்துக்களுக்கு முஸ்லிம்கள் ஒரு புனிதத் தன்மையைக் கற்பித்து வருகின்றனH. அறபு எழுத்தைக் குஆன் எழுத்து என்றே சாதாரண முஸ்லிம்கள் அழைக்கினறனH. அறபு எழுத்தை நிலத்தில் கிடந்து காலில் மிதிபடுவது பாவம் என்று அவகள் கருதுகின்றனH. அறபுமொழியில் ;கிதாப்' என்ற சொல்லுக்கு புத்தகம் என்பது பொருளாகும். ஆனால் முஸ்லிம்களைப் பொருத்த வரை அறபு எழுத்தில் எழுதப்பட்ட நூல்களையே 'கிதாப்' என்று அழைக்கினறனH. ஏனையவற்றை அவகள் புத்தகம்

என்றே அழைக்கின்றனH. அறபு மொழிக்கு அவகள் வழங்கும் இந்தப் புனிதத்தன்மை காரணமாகவே அறபு மொழியில் அருளப்பட்ட தங்களது வேதமான அல்குஆனை அறபுமொழியிலேயே படிக்க வேண்டும் என்றும், அதை வேறுமொழிகளில் மொழி பெயக்க் கூடாது என்றும் நீண்ட காலமாக அவகள் கருதி செயற்பட்டு வந்துள்ளனH. 'தப்ஸீர்' என அழைக்கப்பட்ட அல்குஆன் விளக்கவுரைகளைக் கூட அறபு எழுத்தில் மட்டுமே எழுத வேண்டும் என்ற கருத்து இலங்கை முஸ்லிம்களிடையே இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டில் கூட நிலவி வந்ததாக ஏ. எம். ஏ அஸீஸ் சுட்டிக்காட்டியுள்ளார். இத்தகைய சிந்தனைப் போக்கினாலேயே தமிழ் பேசிய முஸ்லிம்கள் ஆரம்பத்தில் நாம் பேசிய தமிழை அறபு எழுத்தில் எழுதினாகள்.

தமிழ்மொழியானது இந்து கலாச்சாரப் பாரம்பரியத்தோடு இணைந்த ஒரு மொழியாகக் காணப்படுவதால் இஸ்லாமிய கோட்பாடுகளோடு இணைந்த அறபுப் பதங்களைத் தமிழில் புலப்படுத்த முனையும் போது, அதற்குப் பொருத்தமானதும் இஸ்லாமிய சிந்தனை மரபோடு இணைந்ததுமான சொற்களைத் தமிழில் பெறுவது சிரமமாகும். உதாரணமாக இறைவனைக் குறிக்கும் அறபுச் சொல்லான 'அல்லாஹ்' என்ற பதத்தை எடுத்துக் கொள்ளலாம். இப்பதத்தைச் செவிமடுக்கும் ஒரு முஸ்லிம் புரிந்து கொள்ளும் கருத்தை இறைவனைக் குறிக்கும் வேறு எந்தத் தமிழ்ப் பதத்தாலும் வழங்க முடியாது. இவ்வாறே நபி, ரசூல், ஆகிரா, மலா,கா, ஜின் போன்ற அறபுப்பதங்களுக்கு இணையான சொற்கள் தமிழில் இல்லை. இவை போன்ற அறபு வாத்தைகளில் பொதிந்துள்ள ஆழமான கருத்துக்களை இன்னுமொருமொழியில் புலப்படுத்துவதும் சாத்தியமில்லை. அவற்றை வழக்கிலுள்ள தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதும் போது, அதன் பொருளைப் புரிந்து கொள்ள முடியாத நிலையும் ஏற்படலாம். இத்தகைய் ஒரு வரலாற்றுச் சூழ்நிலையிலேயே முஸ்லிம்கள் தமிழ் மொழியை அதன் இலக்கண அமைப்பை முற்றிலும் பேணி, அறபு லிபியில் எழுதும் முறையைத் தோற்றுவித்ததோடு, இஸ்லாமியக் கோட்பாடுகளுடனும் மதக் கிரியைகளுடனும் தொடபுடைய அறபுப் பதங்களைத் தமிழ் மொழியோடு இணைத்துப் பிரயோகிக்கவும் ஆரம்பித்தனH.

மேற்குறிப்பிட்ட வரலாற்றுச் சூழ்நிலைகள் காரணமாக அறபுமொழிக்கும் தமிழ்மொழிக்குமிடையே ஏற்பட்ட இணைப்பினடியாக அறபுத்தமிழ் தோன்றி வளர ஆரம்பித்தது. அறபுத் தமிழில் தமிழ்மொழியின் இலக்கண அடைப்பு பேணப்பட்ட அதே நேரத்தில் அது அறபியில் எழுதப்பட்டு, அறபுச் சொற்கள் அதில் பெருமளவு பயன்படுத்தப்பட்டன.

## அறபுத் தமிழ் ஒரு தனி மொழியா அல்லது கிளை மொழியா?

அறபுத் தமிழ் ஒரு தனி மொழியா அல்லது கிளை மொழியா என ஆராய்கின்ற போது, அறபுத் தமிழ் மொழி என்று ஒரு தனி மொழி இல்லாததால் அதை ஒரு கிளை மொழியாகக் கொள்ளலாம் என்று பேராசிரியH எம். எம். உவைஸ், அறிஞH எம் ஏ. எம். அஸீஸ் ஆகியோH கருதுகின்றனH. ஒன்றை மொழியென ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் அதற்கெனத் தனித்தன்மை வாய்ந்த அடிப்படை இலக்கண அமைப்புகள், மொழியியல் மரபுகள் இருக்க வேண்டும். ஆனால் அறபுத் தமிழைப் பொறுத்தவரை அதற்கென தனியான இலக்கணம் எதுவும் இல்லாததால் அதற்கெனத் தனிமொழித் தகுதிதர முடியாது என்பது, இது பற்றி ஆராய்ந்த ஆய்வாளகளின் கருத்தாகும்.

## அறபுத் தமிழ் நூல்கள், பத்திரிகைகள்.

அறபுத் தமிழ் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகாயித், தஸவ்வுப் போன்ற இஸ்லாமியக் கலைகள் சாந்த ஆயிரக் கணக்கான நூல்களும் வானவியல், தத்துவம், வரலாறு, மருத்துவம் போன்ற கலைகளுடன் தொடபுடைய பல்வேறு நூல்களும் எழுதப்பட்டன. அந்நூல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் விளக்கங்களைக் கொண்ட அறபுத்தமிழ் அகராதிகளும் தொகுக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறபுத் தமிழில் ஏராளமான இலக்கியங்களும், இதழ்களும் வெளிவந்தால் அந்நூற்றாண்டை 'அறபுத் தமிழின் பொற்காலம்' எனக் குறிப்பிடவேண்டும் என அ.மா. சாமி தனது 'தமிழில் இஸ்லாமிய இதழ்கள்' எனும் நூலில் குறிப்பிடுகிறாH. கி.பி. 1869 இல் இலங்கையில் ;அலாமத் லங்காபுரி' என்ற இதழ் வெளிவந்தது. இது அறபுத் தமிழில் வெளிவந்த முதல் இதழ் என்று கலாநிதி தைக்கா ஷுஐப் ஆலிம் குறிப்பிடுகிறாH.

காயல்பட்டணத்தைச் சேந்த 'ஹபீப் முஹம்மது ஆலிம்' என்பவர் 'புதுஹாதுர் ரஹ்மானிய்யா பீ தப்ஸீரி கலாமிர் ரஹ்மானிய்யா' என்ற பெயரில் அறபுத் தமிழில்; எழுதிய குர்ஆன் விரிவுரை நூல் கி.பி. 1897,ல் பம்பாயில் பிரசுரிக்கப்பட்டது. 'மாப்பிள்ளை லெப்பை ஆலிம்' என அழைக்கப்படும் அஷ்ஷெய்க் ஸெய்யித் முஹம்மதிப்னு அஹ்மத் லெப்பை ஆலிம், அறபுத் தமிழில் பல்வேறு கலைகளைத் தழுவிய பல நூல்களையும் கஸீதாக்களையும் இயற்றினாH.

1870ஆம் ஆண்டு சென்னையிலிருந்து 'அஜாயிபுல் அக்பாH' என்ற பெயரில் அறபுத் தமிழ் வாராந்தப் பத்திரிகையொன்று பிரசுரமானது. 'கஷ்புற்றான் அன் கல்பில் ஜான்' எனும் பெயரில் ஒரு அறபுத் தமிழ் பத்திரிகை 1889 – 1890 காலப்பகுதியில் இலங்கையில் பிரசுரமாகியது. இதே பத்திரிகை காயல்பட்டனத்திலும் அச்சிட்டு வெளியிடப்பட்டது. மாப்பிள்ளை லெப்பை ஆலிம் 'மதீனதுந் நுஹாஸ்' என்ற பெயரில் அறபுத் தமிழில் ஒரு நாவலை எழுதியுள்ளாH. இந் நாவல் 1900ஆம் ஆண்டளவில் 'முஹம்மது ஸுலைமான்' என்பரால் இலங்கையில் பிரசுரிக்கப்பட்டது.

இலங்கையில் முஸ்லிம்களுள் 'கொழும்பு ஆலிம்' என அழைக்கப்பட்ட 'ஸெய்யித் முஹம்மத் ஆலிம்' 'கஸாவத்தை ஆலிம்' என அழைக்கப்பட்ட அஷ்ஷெய்க் முஹம்மது லெப்பை ஆலிம், எம். சி. சித்திலெப்பை ஆகியோH அறபுத் தமிழில் பல ஆக்கங்களை உருவாக்கினH. 1882ஆம் ஆண்டு சித்திலெப்பையினால் வெளியிடப்பட்ட 'முஸ்லிம் நேசன்' அறபுத் தமிழ் நடையில் ஆனால் தமிழ் எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டது. அக்கால அறபுத் தமிழ் உரைநடையின் பாங்கை நாம் முஸ்லிம் நேசனில் இனங்காண முடிகிறது.

கிபி; 1870 – 1915 காலப் பகுதியில் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பின்வரும் அறபுத் தமிழ் பத்திரிகைகள் வெளியிடப்பட்டதாக முதுநிலை விரிவுரையாளரான எம். ஐ. எம். அமீன் குறிப்பிடுகிறாH.

| | | |
|---|---|---|
| 1. | புதினாலங்கா புரி | 1873 |
| 2. | முஸ்லிம் நேசன் | 1882 |
| 3. | சவஜன நேசன் | 1886 |
| 4. | கஷ்புற்றான் அன் கல்பில் ஜான் | 1890 |
| 5. | சைபுல் இஸ்லாம் | 1890 |
| 6. | ஞான சூரியன் | 1891 |
| 7. | இஸ்லாம் மித்திரன் | 1894 |

| | | |
|---|---|---|
| 8. | அஸ்ஸவாபு | 1900 |
| 9. | முஸ்லிம் பாதுகாவலன் | 1901 |
| 10. | மிஸ்பாஹுல் இஸ்லாம் | 1906 |
| 11. | முஸ்லிம் | 1909 |
| 12. | ஜவாஹிருள் அஃலம் | 1910 |
| 13. | இலங்கை முஸ்லிம் | 1914 |

இதுவரை இரண்டாயிரத்துக்கும் அதிகமான அறபுத் தமிழ் நூல்கள் பற்றிய விபரங்கள் காணப்படுவதாக கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி குறிப்பிடுகிறாH.

## வீழ்ச்சி

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறபுத் தமிழின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. பழைய நூல்களைப் பேணிவரும் சிலரே இனறு அவற்றைப் பயன்படுத்துகின்றனH. முஸ்லிம்களின் எழுத்தறிவு வீதம் தொடந்து அதிகரித்து வந்துள்ளமையால் இன்று பெரும்பாலான முஸ்லிம் ஆண்களும் பெண்களும் தமிழிலேயே நூல்களை வாசித்த விளங்கும் ஆற்றல் உடையவகளாக விளங்குகின்றனர். மதம் பற்றிய மனப்பான்மையும் இப்போது விரிவடைந்துள்ளது. அல்குஆன் மொழி பெயப்புகளும் அது பற்றிய விரிவுரைகளும், ஏனைய இஸ்லாமிய நூல்களும் தமிழிலேயே வெளிவர வேண்டியது அவசியம் என்ற கொள்கை வேரூன்றி விட்டது.

அத்தயாவசிய அறபுச் சொற்களை மட்டும் பயன்படுத்தி ஏனையவற்றுக்குத் தகுந்த தமிழ்ச் சொற்களைக் கையாள வேண்டும் என்ற வகையில் முஸ்லிம்களின் மொழிக் கொள்கையும் நெகிழ்ச்சியடைந்துள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வெளிவந்துள்ள இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகள் என்பன இதனையே உணத்துகின்றன. தனித் தமிழிலான வெளியீடுகள் வெளிவர ஆரம்பித்தமையினால் இவற்றோடு அறபுத் தமிழ் போட்டியிட முடியவில்லை.

1936 ஆம் ஆண்டில் இலங்கை முஸ்லிம்களின் கல்வி பற்றிய மாநாடொன்று கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் அல்லாமா யூஸுப் அலி தலைமையில் நடைபெற்றுள்ளது. இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழியாக அறபுத் தமிழைப் பிரகடனம் செய்ய வேண்டுமெனும் பிரேரணையொன்று இம்மாநாட்டில் ஆராயப்பட்டாலும், அப்பிரேரணைக்குப் போதிய ஆதரவு கிடைகாமையினால் அம்முயற்சி கைவிட்பட்டது. 1963ஆம் ஆண்டில் எம்.எச்.எம். சஹீத் என்பவர் அகில இலங்கை அறபுத் தமிழ் இயக்கத்தை ஆரம்பித்து சிலகாலம் நடத்திச் சென்றாலும் அது வேரூன்றவில்லை. பெரும்பாலான அறபுத் தமிழ் ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே காணப்பட்டதால் அவை நீண்ட ஆயுளைக் கொண்டிருக்க வில்லை.

## முடிவுரை

அறபுத் தமிழ் நூல்கள் பல அதன் பிரயோகம் வழக்கொழிந்து புறக்கணிக்கப்பட்ட நிலையில் அழிந்து விட்டன. ஆனால் பல நூல்கள் மஸ்ஜித்கள், தைக்காக்கள், ஸாவியாக்களில் பரந்து காணப்படுகின்றன. ஏற்கனவே குறிப்பிட்டவாறு பழைய நூல்களைப் பேணி வரும் சில தனிப்பட்ட நபகளும் இவற்றைச் சேகரித்து வைத்திருக்கக் கூடும். லண்டனில் உள்ள இந்திய அரசாங்க அலுவலக நூல் நிலையத்தில் சுமாH அறுபது அறபுத் தமிழ் நூல்கள் உள்ளதாகவும் இலங்கையிலும்,

தமிழ் நாட்டிலும் உள்ள சுவடிகள் கூடத்திலும் பல அறபுத் தமிழ் நூல்கள் உள்ளதாகவும் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி அவகளின் கட்டுரை தெரிவிக்கின்றது.

## பரிந்துரைகள்

1. அறபுத் தமிழிலான சிறுவர் இலக்கிய நூல்கள் வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்கக்கூடிய முதுசொமாகும். எனவே, இதன் அருமை பெருமைகளை அவர்கள் அறிந்து கொள்வதற்கு சிறு வயதிலிருந்தே அவர்களுக்குப் பயிற்சியளித்தல் அவசியமாகும். இதற்கென இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அடிப்படையிலான சிறுவர் இலக்கியங்கள் அறபுத் தமிழில் வெளிவரல் வேண்டும். இவ்விலக்கியங்கள் தற்காலத்தில் வெளிவரும் நூல்களின் அமைப்பு, அச்சு முதலிய அம்சங்களைத் தழுவியதாக அமைதல் வேண்டும்.

2.அறபு மத்ரஸாக்களில் அறபுத் தமிழை மேம்படுத்தலாம்.

3. கிராபப் புறங்களில் பழைய லெப்பைமார்கள் அறபுத் தமிழிலான ஜும்ஆப் பிரசங்கங்களைப் பார்த்து வாசிப்பர். தங்போதைய நவீன நடைமுறைக்கு ஏற்றவிதத்தில் அவற்றைப் புதுப்பிக்க முடியும்.

4.பல்கலைக்கழக மட்டத்தில் இது தொடர்பான ஆய்வு முயற்சிகளில் ஈடுபட முடியும். குறிப்பாக அறபுத் துறை, மொழித் துறை என்பன இணைந்து இம்முயற்சியை முன்னெடுக்கலாம்.

5. அழிவடையும் நிலையிலுள்ள எஞ்சியிருக்கும் அறபுத் தமிழ் நூல்களைத் தேடிப் பெற்று அவற்றை மீள்பதிப்பு செய்வதன் மூலம் அழிவடைவதிலிருந்து அவற்றைப் பாதுகாக்கலாம்.

6. முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கம் இது பொடர்பில் பாரிய பொறுப்புள்ளது. வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய மீலாத் விழா போட்டிகளில் அறபுத் தமிழ் பாரம்பரியத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில் பாடசாலை, அறபு மத்ரஸா மாணவர்களிடையே அறபுத் தமிழ் சார்ந்த போட்டி நிகழ்ச்சிகளை நடத்தலாம்.

## உசாத்துணைகள்

அஸீஸ், எ.எம்.எ., (2012). அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ். (விரிவாக்கிய மீள் பதிப்பு). கொழும்பு. கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் மன்றம்.

அஸீஸ், எ.எம்.எ., (1963). இலங்கையில் இஸ்லாம், யாழ்ப்பாணம். கலைவாணி புத்தக நிலையம்.

அமீன், எம்.ஐ.எம்., (2000). இலங்கை முஜ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870 – 1915), ஹெம்மாதகம. அல்ஹஸனாத் பதிப்பகம்.

மஸாஹிர், எஸ்.எம்.எம்., (2006). அறபுத் தமிழில் உள்ள அல்குர்ஆன் விளக்கவுரைகள்: 'GJ}ஹாதுர் ரஹ்மானிய்ய பீ தப்ஸீரி கலாமிர் ரப்பானிய்யா' பற்றிய விசேட ஆய்வு, பேராதனைப் பல்கலைக்கழகம், பதிப்பிக்கப்படாத KJ தத்துவமானி ஆய்வுக் கட்டுரை.

மௌலானா, எஸ்.ஏ.ஆர்.எம்., ஸெய்யித் ஹஸன், (2005). இஸ்லாமும் தமிழும். மருதமுனை. இஸ்லாமிய இலக்கியக் கழகம்.

# அறியப்படாத ஆளுமை புலவர் கி.அருளம்பலம்

முனைவர் முருகு தயாநிதி
பணிப்பாளர்;
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.
muruguthayanithy@gmail.com

## ஆய்வுச்சுருக்கம்

சிவனிடமிருந்து ஆரம்பமாகின்ற தமிழ்ப் புலவர் சரிதம், முற்சங்கங்களில் குவியமாகி இலங்கையில், ஈழத்துப் பூதந்தேவனாருடன் மேற்கிழம்புகின்றது. எனினும், மட்டக்களப்புத் தமிழகப் புலவர் சரிதம் முழுமை பெறாமலும் தெளிவாக வெளிப்படுத்தப்படாத தன்மையிலும் காணப்படுகின்றது. இதனால் இங்குள்ள புலவர்களையோ அவர்கள் எழுதிய ஆக்கங்களையோ கண்டுகொள்வதில் தொடர்ந்து சிக்கலும் இடைவெளியும் காணப்படவே செய்கின்றன. இவ்வாறான சிக்கலினையும் இடைவெளியினையும் நிவிர்த்தி செய்யும் ஓர் முயற்சியாக, அறியப்படாத ஆளுமை புலவர் கி.அருளம்பலம் எனும் தலைப்பு ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. கன்னன்குடா கிராமத்தில் பிறந்து, பருத்திச்சேனையில் வசித்துவரும் இவர், திமிலைத்துமிலனிடமிருந்து கவிதை எழுதுகின்ற முறையினைப் கற்றுக்கொண்டு, கூத்து, நவீன நாட்டுக்கூத்து, நாடகம், கரகம், கும்மி, காவியம், சதகம், அம்மானை, கவிதை, கைக்கூ கவிதை, சிலேடை வெண்பா, சிறுவர் கட்டுரை என்று மரபு தழுவிய முறையில் தனித்துவமான பல ஆக்கங்களைப் படைத்துவருகின்றார். இத்தகைய ஆளுமை கொண்ட புலவர் கி. அருளம்பலத்தினுடைய பணியினைக் வெளிக்கொண்டுவருவதில்; ஆய்வுலகம் பெரிதாக எந்த முயற்சியினையும் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை. எனவேதான், இந்த ஆய்வுக் கட்டுரை, புலவருடைய தனித்தவமான இலக்கிய முயற்சிகளைக் கண்டுகொள்ளும் நோக்கினை நிறைவு செய்கின்றது. இதற்காக களஆய்வுமுறை, பணுவல் ஆய்வுமுறை என்பன பின்பற்றப்படுவதோடு, நேர்காணல் முறைமூலமும் தகவல்கள் பெறப்பட்டன. இதற்காக அவர் எழுதி வெளியிட்ட ஆக்கங்களும் வெளியிடப்படாத கையெழுத்துப்பிரதிகளும் அவருடைய கலைக்கவிஞன் எனும் முகநூலில் வெளியிடப்பட்ட ஆக்கங்களும் வாசித்தறியப்பட்டு, மட்டக்களப்புத் தமிழகத்தில் எழுந்த புலவர்களுள் தனித்தன்மை கொண்ட புலவராக கி.அருளம்பலம் குவியமாவது, இந்த ஆய்வுக் கட்டுரைவழி கண்டுகொள்ளப்படுகின்றது.

திறவுச்சொற்கள் : புலவர் கி.அருளம்பலம், ஆக்கங்கள், காலப்பின்னணி, புலமைத்துவமரபு

## அறிமுகம்

மூன்று சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்தபோதும், தமிழ்ப்புலவர் சரிதம் சிவனிடமிருந்தே கால்கோள் ஆகின்றது என்பது பொதுமரபு. குமரிக்கண்ட காலந்தொடக்கம் தமிழ்ச் சங்கங்கள் இருந்தமை பற்றி ஆய்வுகளின் வழி அறிகின்றோம். இதன் தொடர்ச்சியில் தென்மதுரையில் முதற்சங்கம் இருந்தமை பற்றி இறையனார் களவியலுரை அடையாளப்படுத்தகின்றது. பாண்bad; வெண்தேர்ச்செழியன் என்ற மன்னரால் நிறுவப்பட்ட இடைச் சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் முதலிய 549 புலவர்கள் இருந்தமை அடையாளப்படுத்தகின்றது. முடத்திருமாறனால் நிறுவப்பட்ட கடைச்சங்கத்தில் சேந்தம்பூதனார், அறிவுடையார், பெருங்குன்றூர்க்கிழார், கணக்காயனார் மகன் நக்கீரனார் முதலிய புலவர்கள் இருந்திருக்கின்றனர். இத்தகைய மூன்றுசங்கங்கள் இருந்தமை பற்றி டாக்கர் உ.வே.சாமிநாதையர், கா.சுப்பிரமணியபிள்ளை, கா.அப்பாத்துரை, ஞா.தேவநேயப்பாவாணர் முதலியோர் ஆய்வின்வழி நிறுவியுள்ளனர். ஆய்வு நோக்கில் அவதானிக்கும்போது பத்தாயிரம் வருடங்களுக்கு முன்னர் சங்கங்கள் இருந்து தமிழ் வளர்த்திருக்கின்றன. இதில்

தென்மதுரையில் இருந்த முதற்சங்கமும் கபாடபுரத்தில் இருந்த இடைச்சங்கமும் கடற்கோளினால் மூழ்கிப்போக, மதுரையில் தோன்றிய கடைச்சங்கத்தில் இருந்தே பிற்காலத்தில் தமிழை வளர்த்தனர். சங்ககாலத்தில் பல ஆயிரக்கணக்கான பாடல்கள் பற்றி அறியக்கிடைக்கின்றபோதும், அவற்றுள்; 2381 பாடல்களே தற்போது கிடைக்கின்றன. எனினும், அவற்றுள்ளும் 2279 பாடல்களைப்பாடிய 475 புலவர்களே பதிவாகின்றனர். குறிப்பாகக் காரைக்கால் அம்மாயார் மற்றும் முதல் மூவாழ்வார்களால் தோற்றுவிக்கப்பட்ட பக்தி இயக்கத்தின் தொடர்ச்சியினால் பல்வேறு மாற்றங்கள் இடம்பெறுகின்றன. ஒரு வகையில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் சிறந்த கவிஞர்களாகவும் புலவர்களாகவும் நோக்கப்படுகின்றனர். சைவமும் தமிழும் இவர்களால் மேன்மையடைந்திருக்கின்றன. இளங்கோ, கம்பன், செயங்கொண்டார், ஒட்டக்கூத்தன், புகழேந்தி, இரட்டையர், காளமேகம் என்று குறிப்பிடத்தக்க பெரும் பெரும் புலவர்கள் தமிழை வளர்த்துள்ளனர். நீண்ட காலம் உயிர்வாழக்கூடிய நெல்லிக்கனியை அதியமான் அவ்வைக்கு கொடுத்ததன் மூலம், புலமைத்துவத்தைப் பாதுகாக்கும் காப்பினை அறிமுகப்படுத்தினான். இவ்வாறான பின்னணியில் ஈழத்து புலவர் மரபும் ஈழத்துப்பூதந்தேவனாருடன் ஆரம்பமாவதோடு, அதனைத் தொடர்ந்து புலவர்கள் பலர் தோற்றம் பெற்றாலும், மட்டக்களப்புத் தமிழகப் புலவர் சரிதம் பெரிதும் பதிவுசெய்யப்படவில்லை என்ற குறைபாடு இன்றுவரையும் நிலவுகின்றது.

### ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாக, அறியப்படாத ஆளுமை புலவர் கி.அருளம்பலம் என்பவருடைய தனித்துவமான இலக்கிய முயற்சிகள் கண்டறியப்படுகின்றன.

### நியாயப்பாடு

ஈழநாட்டைப் பொறுத்தவரையில் ஈழத்துப் பூதந்தேவனாருடனே புலவர் மரபு ஆரம்பமாகின்றது. இவருடைய தொடரினால் உருவான புலவர் மரபினை கணேசையர் வரைக் காட்டி, ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம் 102 புலவர்களை அடையாளப்படுத்துகின்றது. இவ்வாறான ஒரு பின்னணியில் மட்டக்களப்புத் தமிழகத்தில் நீண்ட வரலாற்றைக்கொண்ட புலமைத்துவமரபு ஒன்று முறையாக அடையாளப்படுத்தப்படாமல் விடப்பட்டிருகின்றது. இம்மரபு இங்கு இருந்தமையினை இப்பிரதேசத்தில் கிடைக்கின்ற ஓலைச்சுவடிகளும் கையெழுத்துப் பிரதிகளும் உறுதிசெய்கின்றன. எனினும், மட்டக்களப்புத் தமிழகப் புலவர் பரம்பரை வித்துவான் ச.பூபாலபிள்ளை தொடக்கம் அருணாசலதேசிகமணி வரைக் காட்டுகின்றது. (மட்டக்களப்புத் தமிழகம் ப.ப.205 - 237) இவ்வாறான பின்னணியில் புலமைத்துவமரபினைப் பதிவுசெய்யவேண்டிய தேவை உள்ளது. எனவே, இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வதனால், புலமைத்துவமரபினை இனியாவது அடையாளப்படுத்தவேண்டிய அவசியம் ஆய்வுலகிற்கு உள்ளதோடு, முன்னைய மரபினை மேற்கிழம்பச் செய்வதற்கும் இந்த ஆய்வுக்கட்டுரை உதவுகின்றது.

## ஆய்வுமுறை

இந்த ஆய்வுக் கட்டுரையினைப் பூரணப்படுத்தவதற்காக களஆய்வுமுறை பெரிதும் பின்பற்றப்பட்டன. களஆய்வில் மேலும் தகவல்கள் பெறப்படுவதற்காக நேர்காணல் வினாத் தயாரிக்கப்பட்டுத் தகவல்களும் விளக்கங்களும்; பெறப்பட்டன. மேலும், சந்தேகங்கள் ஏற்படும்போது, கையடக்கத் தொலைபேசியில் விடயங்கள் தெளவாக உறுதிப்படுத்தப்பட்டன. பனுவல் முறையினைப் பயன்படுத்தி புலவர் எழுதிய ஆக்கங்களை வாசித்து விடயங்கள் பெறப்பட்டன. இவற்றிற்கு அப்பால், புலவருடைய கலைக் கவிஞன் எனும் முகநூலில் இருந்து பெறப்பட்ட தகவல்களும் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

## வாழ்க்கைப் பின்னணி

மட்டக்களப்புத் தமிழகம் இரண்டு பிரதேசங்காளக நிற்கின்றது. ஒன்று எழுவான்கரை மற்றயது படுவான்கரை. இந்தப் பிரதேசங்களில் படுவான்கரையில் கன்னன்குடா எனும் கிராமம் ஒன்றுண்டு. இக்கிராமம் தமிழர்களின் கலையான கூத்துக்கலைக்கு பேர்போனது. இங்கிருந்த மரபுவழிப் புலவர்கள் கூத்துக்களை மட்டுமன்றி பல்வேறு ஆக்கங்களையும் படைத்துள்ளனர். அவர்களுள் கணபதிப்பிள்ளை நோஞ்சிப்போடி, பொன்னம்பலம், உசுமுண்டாப்போடி கணபதிப்பிள்ளை, மாணிக்கம் சிதம்பரப்பிள்ளை, க.திருநாவுக்கரசு, நோஞ்சிப்போடி சண்முகநாதன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இத்தகைய ஒரு புலமைத்துவமரபில் வந்தவர்தான் புலவர் கிருஷ்ணபிள்ளை அருளம்பலம். இவர், கிருஷ்ணபிள்ளை நாகமுத்து தம்பதிகளுக்கு 14.01.1963ஆம் ஆண்டு பிறந்தவர். பருத்திச்சேனைக் கிராமத்தில் அழகுராணி என்பவரைத் திருமணம் செய்தார். இவருக்கு இரண்டு பெண்குழந்தைகளும் இரண்டு ஆண்குழந்தைகளும் உண்டு. தனது இளமைக்கல்வியை கன்னங்குடா மகாவித்தியாலயத்தில், தரம் 10 வரையுமே கற்றிருந்தார். கூலித் தொழிலாளியாக இருக்கும் இவர், எந்த வேலைகளையும் இயல்பாகச் செய்யும் ஆற்றல் கொண்டவர். சிறப்பாக கட்டடப்பகுதியில் கொங்கிறீட் கம்பி கட்டுவதில் தேர்ச்சி பெற்றவராகக் காணப்படுகின்றார். அன்றாட உழைப்பில் வாழ்ந்து, ஏழைப் புலவராகவே அடையாளமாகும் இவர், ஆக்கங்களை எழுதவேண்டும் என்ற எண்ணப்பாடுகொண்டு, முதலில் கண்ணதாசன் பாடல்களால் கவரப்பட்டார். இதன் உந்துதலால் தனது பதினாறாவது வயதிலிருந்து பல்வேறு ஆக்கங்களை எழுதத் தொடங்கினார். குறிப்பாக பத்திரிகை, வானொலி என்று அது விரிவடைந்தன. தொடர்ந்து மருபுக்கவிதை எழுத வேண்டும் என்ற எண்ணம் அவருடைய மனதிலே இயல்பாக எழத் தொடங்கியது. இதற்காக திமிலைதீவில் உள்ள திமிலைத்துமிலனை நாடி, மரபுதழுவிய ஆக்கங்களை எழுதுவது தொடர்பாக இரண்டு வாரங்கள் கற்றுக்கொண்டார். அதன் பின்னர், அவர் கொடுத்த மரபுக்கவிதை எழுதுவது தொடர்பான புத்தகத்தினைக் கொண்டே, மரபினை மேலும் தெளவாக அறிந்து, கூத்து, (தென்மோடி, வடமோடி) நவீனநாட்டுக்கூத்து, நாடகம், கரகம், கும்மி, காவடிப்பாடல், காவியப்பாடல், வண்ணப்பாடல், சதகம், சிலேடை வெண்பா, கைக்கூ கவிதை எனப் பல்வேறு

வகையான தலைப்புக்களில் ஆக்கங்களைப் படைத்த ஆளுமைப்பாடுடைய ஒருவராக வாழ்ந்து வருகின்றார்.

**ஆக்கங்கள்:**

**கூத்து**

புலவர் அருளம்பலம் தென்மோடிக்கூத்து, வடமோடிக்கூத்து, நவீன நாட்டுக்கூத்து (டிஸ்கோ கூத்து) ஆக்கிய வடிவங்களில் கூத்துக்களை எழுதியுள்ளார். இத்தகைய கூத்துக்களை எழுதும் எண்ணம் அவருக்கு, 1980ஆம் ஆண்டு மார்கழி மாத காலத்தில் உருவாகின்றது. அதன் விளைவாக “மோசிகாசு+ரன் சண்டை” எனும் தென்மோடிக்கூத்தினை முதன் முதலாக எழுதுகின்றார். இவருடைய கூத்துக்கள்; வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா எனும் பாவடிவங்களையும், கட்டளைக் கலித்துறையினையும், அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், எழுசீர் விருத்தம், எதுகைத்தொடை, மோனைத்தொடை எனும் இலக்கண வரம்புக்குள் நின்றும் எழுதப்பட்டவை. குறிப்பாக மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆற்றுகை செய்யப்பட்டு வரும் 189 கூத்துக்களில் 70 தென்மோடிக்கூத்துக்களும் 119 வடமேடிக் கூத்துக்களும் அடங்கும். அவ்வாறாயின் வீகிதாராச அடிப்படையில் நோக்கும்போது, மட்டக்களப்புத் தமிழகத்தில் உள்ள கூத்துக்களில் இருந்து 15 சதவீதக் கூத்துக்களையும், கன்னன்குடாக் கிராமத்தில் இருந்து எழுந்த கூத்துக்களுள் 36 சதவீதக் கூத்துக்களையும் படைத்த ஒருவராகக் காணப்படுகின்றார்.

**தென்மோடிக்கூத்து**

இவர் எழுதிய தென்மோடிக்கூத்துக்களாக, நளாயினி, இராவணன் மோட்சம், பாதுகை பட்டாபிசேகம், திமிலைதீவுத் திருமணம், துரோபதை திருமணம், மங்கிகட்டு மகின்மை, பாசுபதம், நாகமோகினி, ஜயாதிமோட்சம், தேவரகசியம், மீனாட்சி யுத்தம், மாமாங்கேஸ்வரம், காகமும் நாகமும் என்பன அடங்கும்.

**வடமோடிக்கூத்து**

மேலும் வீரப்பிரதாபன், ஆதிசிவன் யுத்தம், துரோணர் மோட்சம், பதினைந்தாம் பதினாறாம் நாள் யுத்தம், (திருத்தி எழுதியது) சுவேதனன் சண்டை, அசுவத்தாமன் யுத்தம், வனவாசம், ஆடகசவுந்தரி, நந்தியின் மகின்மை, கற்பரசி, அம்மா, மாயமோகினி, தோல்வி நிச்சயம், சு+ரியபுத்திரன் எனும் பதினான்கு வடமோடிக் கூத்துக்களையும் எழுதினார்.

**நவீன நாட்டுக்கூத்து**

இன்று ஆற்றுகை செய்யப்படும் கூத்துக்களில் நவீன நாட்டுக்கூத்து சிறப்புடையனவாக நிற்கின்றன. இக்கூத்தினை டிஸ்கோ கூத்து என்பர். அதாவது சமூகத்தில் காணப்படுகின்ற கதை ஒன்றினை மையமாக் கொண்டு இக்கூத்தின் பொருண்மை அமைந்திருக்கும். இந்தக் கூத்து முற்றிலும் சமூகசீர்திருத்தக் கருத்தினை வேண்டிநிற்கின்றது. அதற்காக தென்மோடி, வடமோடி கலந்த தன்மையில் இக்கூத்தினை ஆற்றுகைசெய்வதுண்டு. குறிப்பாக இப்படித்தான் ஆடவேண்டும் என்பதற்கு அப்பால், சமூகத்தினை

விழிப்படையச் செய்வதற்காக நகைச்சுவையாக ஆடுவது வழக்கமாகும். இக்கூத்தில் மத்தளமும் சல்லரியும் இசையினை வழங்கும். இவ்வாறான தன்மை கொண்ட கூத்துக்கள் பலவற்றை எழுதியுள்ளார். அவற்றுள் இயமன்போட்ட மருந்து, மருந்துவிழுங்கிய மாமி, தயிர்ப்பானைத் தம்பையா, பாலத்தடிப் பசாசு, உனக்கும் இல்லை எனக்கும் இல்லை, தட்டாந்தான் பட்டான், உன்னிச்சைத் தண்ணி, ரீச்சரைத் திருடிய ரீமேக்கர், டொக்டர் போட்ட ஊசி, கழுதை முட்டை, வாச்சரும் டீச்சரும், நெத்தலிப் பயில்வான், இயமன்போட்ட மருந்து, கொத்துவாங்கிய குமுதா போன்றவற்றைக் கொள்ளமுடியும்.

**பாடும்போது கூத்து எழுதுதல்**

பாடும் போது மற்றவர் எழுதுதல் என்பது சாதாரண புலவருக்கு உரித்தான திறமை அல்ல. அது வரகவியுடையவர்களுக்கே பொருத்தமுடையது. இத்தகைய திறன்கொண்டவராகப் புலவர் பதிவாகின்றார். அதாவது, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் எழுதுவதற்காக "காகமும் நாகமும்" எனும் தென்மோடிக்கூத்தினை பாடிக்கொண்டே இருந்தார். அதுபோல், கன்னன்குடா கண்ணகி முத்தமிழ் மன்றம் 2024ஆம் ஆண்டு ஆற்றுகை செய்த "சூரியபுத்திரன் " எனும் வடமோடிக் கூத்தினையும் புலவர் பாடும்போது, அக்கழகத்தனர் எழுதிமுடித்தனர். இவ்வாறாகப் புலவர் வேறு பல ஆக்கங்களையும் இந்த முறையிலே நிறைவுசெய்திருக்கின்றார்.

**நாடகம்**

மக்கள் கலை என்ற நிலையில் மேடை நாடகங்கள் இன்று பெரிதும் போற்றுதலுக்குரியனவாக நிற்கின்றன. இன்று கிராமங்கள் தோறும் உள்ள கலைக்கழகத்தினர் அவ்வாறான நிகழ்வினை ஆற்றுகை செய்து வருகின்றனர். குறிப்பாக இதிகாச, புராண, வரலாற்றுக் கதைகளையும் சமூகக் கதைகளையும் பாடுபொருளாகக்கொண்டு இத்தகைய நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான முயற்சியின் நீட்சியில் புலவர் அருளம்பலம் அவர்கள் பல்வேறு நாடகங்களைப் படைத்துள்ளார். அவற்றுள் புராணநாடகங்களாக அண்ணனின் ஆணை, new;றிக்கண், அகலிகை, மூன்றுமுகம் முதலியவனவும், சமூகசீர்திருத்த நாடகங்களாக என்ஜீவன் வாடுது, அவளொரு மணிப்புறா, இரும்பு மலர்கள், ஒரு தீபம் அணைகின்றது என்பனவும், வரலாற்று நாடகங்களாக மணிமாறன், மட்டுநகரி மாகோன், குருதி வடியும் காலம் என்பனவும், காசிய நாடகங்களாக பாலத்தடிப் பசாசி, நெத்தலிப் பயில்வான், தாடிபோன போக்கு, என்னபோடியார் சவிக்கியமா போன்ற நாடகங்களையும் எழுதியுள்ளார். இந்த நாடகங்கள் யாவும் 2007ஆம் ஆண்டு அசாதாரண சூழ்நிலையினால் இடம்பெற்ற இடம்பெயர்வின்போது எரியுண்டு போயுள்ளன.

**கரகம், கும்மி**

சிறுவர்களின் கலையம்சத்தினை மேற்கிழம்பச் செய்யும் நோக்குடன் கரகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இக்கரகங்களின் உள்ளீடு அல்லது பொருண்மை ஏதோ ஒரு மரபினை மீட்டெடுக்குத் தன்மை கொண்டதாக அமையும். அக்கதைகள் சமூக்கதைகளாக மேலெழும்போது பண்பாட்டு விழுமியத்தின் உட்பொருளைக் குவியச் செய்கின்றன. அத்தகைய

பொருண்மை கொண்ட கரகங்களாக சத்தியவான் சாவித்திரி, மீனாட்சியுத்தம், பாலநாகம்மா, பவளவல்லி, மாயமோகினி, வீரப்பிரதாபன், ஸ்ரீ முருகன் திருக்கல்யாணம், அல்லி அருச்சுனா, அகத்தியன் சாபம் ஆகியவற்றைக் கொள்ளமுடிகின்றன. இக்கரகங்களின் பெயர்களை அவதானிக்கும்போது கூத்தினுடைய பெயர்களாகவும் வருகின்றன. ஆனால், இக்கரகங்கள் அதன்பொருண்மையில் இருந்து மேலெழுந்து பல்வேறு விடயங்களைப் பேசுகின்றன. இவ்வாறாகக் கன்னன்குடா கண்ணகி அம்மன் எனும் தலைப்பில் கும்மிப்பாடலினையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

### காவியம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் காவியம் அல்லது காப்பியம் என்ற ஊடாட்டத்தில் ஐம்பெரும் காப்பியங்கள், IQ;சிறு காப்பியங்கள் என்ற போக்கு உண்டு. ஆனால், இவைதவிர இன்று பல்வேறு காவியங்கள் படைக்கப்படுகின்றன. குறிப்பாக கிராமியத் தெய்வங்களான மாரியம்மன், கண்ணகி அம்மன், கடல்her;சி அம்மன், பேச்சியம்மன், வீரபத்திரர், வைரவர், நாகதம்பிரான் முதலான தெய்வங்களை மூலமாகக்கொண்டு புலவர்கள் பலரால் இக்காவியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான காவியங்கள் பலவற்றை மகமாரிதேவி திவ்விய கரணியில் கண்டுகொள்ளமுடிகின்றது. இக்காவியங்கள் எட்டு வரிகளைக்கொண்டு பல பாடல்களாக அமையப்பெறுகின்றன. இவ்வாறான ஒரு பின்னணியில் புலவர் அருளம்பலம் அவர்கள் முதலைக்குடா காளியம்மன்மீதும், புளியடிமடுக் காளியம்மன்மீதும் காவியங்களைப் படைத்துள்ளார்.

### அம்மானை

மட்டக்களப்புத் தமிழகத்தில் அம்மானைகள் பல எழுந்துள்ளன. அவற்றுள் இன்று கிடைப்git வைகுந்த அம்மானை, கஞ்சன் அம்மானை, பாரத அம்மானை, இராமர் அம்மானை, வள்ளியம்மன் அம்மானை, திரோபதை அம்மானை போன்றவற்றைக் கொள்ளமுடியும். இவ்வாறான பின்னணியில் புதிய வைகுந்த அம்மானை எனும் அம்மானை ஒன்றைப் புலவர் படைத்திருக்கின்றார். இந்த அம்மானை 2000 வரிகளைக் கொண்ட, ஆயிரம் பாட்டுக்களாலும் வெண்பா, கலிப்பா, எழுசீர் விருத்தம், அறுசீர் விருத்தம் கொண்டுட யாப்புக்களாலும் அமைந்தது. இப்புத்தக வெளியீடு 17.05.2025ஆம் ஆண்டு பருத்திச்சேனைக் கிராமத்தில் இடம்பெற்றது. அதாவது, வைகுந்த அம்மானை விஷ்ணுவுக்கு முதன்மை கொடுத்துச் செல்ல இவருடைய அம்மானை சிவனுக்கு முதன்மைகொடுப்பதனை அவதானிக்கமுடிகின்றது. ஆனால், கதைப்போக்கில் பெரிதாக மாற்றம் இடம்பெறாதபோதிலும், பல்வேறு சம்பவங்கள் பாரதக்கதையினை மீட்டுருவாக்கிச் செல்கின்றன. மேலும், இவர் அகதி அம்மானையும் பாடியுள்ளார். 2007ஆம் ஆண்டு இடம்பெயர்வு இடம்பெற்ற காலத்தில் இந்த அம்மானையினைப் பாடியமை குறிப்பிடத்தக்கது.

### சதகம்

புலவர் கி.அருளம்பலம் அவர்கள் கன்னங்குடாக் கண்ணகி அம்மன்மீது ஆசிரியர் விருத்தத்தினைக் கையாண்டு பாடிய சதகம், 2024ஆம் ஆண்டு கன்னன்குடா கண்ணகி ஆலயமுன்றலில் உள்ள மேடையில், வைகாசி மாதச்

சடங்கு இடம்பெற்றபோது வெளியிடப்பட்டது. இவ்வாறான ஆசிரியர் விருத்தத்துடன் எழுந்த சதகங்கள் சிலவே உள்ளன. அவற்றுள் குமரேசசதகம், அறப்பளீஸ்சுர சதகம், கதிர்காமத்துச் சதகம், காண்டேஸ்வரர் சதகம் என்பனவற்றைக் கொள்ளமுடிகின்றது. இத்தகைய சதகங்களுடன் வைத்து எண்ணத்தகு சதகமாக 'கன்னன்குடா கண்ணகி சதகம்' மேற்கிழம்புகின்றது. புலவருடைய ஆசிரியர் விருத்தம் ஒவ்வொன்றும் வியத்தகு செய்திகளைத் தருகின்றன. குறிப்பாக அகத்திணை சார்ந்து விடயங்கள் முன்கொண்டு சொல்லப்படுவதோடு, சமய தத்துவங்களை விளக்கி, சமுதாயத்திற்கு அறிவுரை கூறும் பாங்கில் பாடியிருப்பது சிறப்பாகும். இதன் வழியே அவர் கண்ணகி வரலாற்றினையும் பிற விடயங்களையும் பேசுகின்றார். ஒரு மனிதன் சமுதாயத்திற்குச் செய்யும் சிறந்த மற்றும் பொருத்தமற்ற செயற்பாடுகளை எடுத்தக்காட்டிச் சமுதாய நலன் வேண்டி நிற்கின்றார். இதற்காக அவர் ஆங்காங்கு பழமொழிகளைக் கையாண்டுள்ளமை மேலும் சிறப்பைத் தருகின்றது. இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் வரும் பல்வேறு எடுகோள்களைச் சதகத்தில் எடுத்தாள்கின்றார்.

“பத்தாவைத் தெய்வமாய் எண்ணியவன் வீட்டினில்
பரிவோடு திருவி ருக்கும்
படிப்பினைத் தெய்வமாக எண்ணியவன் வீட்டினில்
பற்றியே வாணி நிற்றும்
எத்தாலும் தந்தையை எண்ணியவன் வீட்டில்
எக்காலும் பண்பு நிற்கும்
எந்தையே தெய்வ மென்றெண்ணியவன் வீட்டினில்
என்றென் றுமன்பு நிற்கும்
முத்தான பிள்ளைகளைப் பெற்றவன் வீட்டினில்
முதல் வீரம் அமைந்தி ருக்கும்
மூதாதை சொற்கேட்டு வாழ்ந்தவன் இடத்தினில்
மூன்றுதமிழ் தோன்றி நிற்கும்
கைத்தாள மணியதிரக் காற்சிலம் போலமிட
கண்ணார முன்தோன் றுவாய்
கன்னன் குடாவூரைக் கார்த்திடவே அமர்ந்திட்ட
கண்ணகி அருளு வியே”

(ஆசிரிய விருத்தம் -14)

**வண்ணப் பாடல்**

பாடல் ஒன்று பல வண்ணங்களால் அமைந்து காணப்படும். அதவது, சொல்லப்பட்ட சொல் திரும்பத் திரும்ப வருவது இதன் சிறப்பாகும். இது எதுகை வண்ணம், மோனை வண்ணம், தொடை வண்ணம் என்ற வகையில் அமையும். ஒரு வண்ணம் 24 வரிகளில் வருவது முறை. ஆனால், இவற்றில் மாற்றமும் இடம்பெறுவது வழக்கம். அருணகிரிநாதர் திருப்புகழில் வண்ணப்பாட்டின் தன்மையினை அவதானிக்கமுடியும். புலவர் அருளம்பலம் யாப்பு தன்மைக்கு எற்ப, முருகனுக்கு 24 வரிகளில் 22 வண்ணப் பாடல்களைப் பாடியுள்ளார்.

தான தத்தன தந்தன தந்தன
தான தத்தன தந்தன தந்தன
தான தத்தன தந்தன தந்தன தனதான

மாசி யுற்றிடு சிந்தனை கொண்டிடு
ஆசை யிப்படி வஞ்சனை வந்திட
மாறு மித்தனை நெஞ்சினை நம்பிட - முடியாதே
மானி லத்தினில் தந்திர மொன்றிய
தேக மெச்சிய நிந்தனை வந்தொரு
மாயை பெற்றிட எந்தனை நொந்திட - விடலாமோ?
தூசி சத்JU அன்பினை வென்றிட
லாகு மெத்தனை வம்பினில் நின்றொரு
தூறி யிப்படி நண்பனை நம்புவ - தொருநாளோ?
தோத வித்தையில் வெம்பிடு அம்புலி
யாகி பொய்ப்படு அம்புவி விந்தையில்
தோழ ருத்தம ரென்றிட மந்திர - முரையாதே
வாசி சித்திர மங்கையு மஞ்சிட
நூபு ரத்தினை தங்கிய சங்கரி
வாலை யுத்தமி கண்ணகி கண்மணி - உறுதேவி
வாகை பெற்றவ னும்முடி மன்னனும்
சாக epf;கிர கம்விடு மங்கையு
மாகி யிப்புவி வந்திடு மிங்கித - மகதேவி
தேசி நித்திய குங்கும லங்கும
ஆக மத்தினில் தங்குப யங்கரி
தேடு சத்திய தந்திர எந்திர - யமசு+லி
தேக மெய்ப்படி ஒன்றியும் நின்றிட
வேணு தத்துவ மும்கவி யும்பல
தேறு சுத்தமு தந்திட வந்தருள் - தருவாயே.

**காவடிப்பாடல்**

கிராமியத் தெய்வ வழிபாட்டில் தீ மிதித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், அலகுபோடுதல், புரட்டணம் செய்தல் என்று பல்வேறு நேர்த்திக்கடன்கள் உண்டு. அவற்றுள் காவடி எடுத்தல் பக்தியின் உச்சத்தினை மேற்கிழம்பச் செய்கின்றது. காவடி எடுக்கும்போது பல்வேறு தெய்வங்கள் மீது பாடல்கள் பாடப்படுவது வழக்கம். அப்பாடல்கள் பெரிதும் ஒரு ஆலயம் சார்ந்த தெய்வத்தினைச் சுட்டி அமைவதாக இருக்கும். அவ்வாறான காவடிப்பாடல்களில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். அவை எல்லாம் கிடைக்காவிட்டாலும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரம், கன்னங்குடாக் கண்ணகியம்மன், குறிஞ்சாமுனைக் காளியம்மன், புளியடிமடுக் காளியம்மன், காந்திநகர் முருகன், கும்பனாறு நரசிங்க வைரவர் போன்ற ஆலயங்களிலுள்ள தெய்வங்கள்மீது பாடப்பட்ட பாடல்கள் இன்றும் கிடைகின்றன. கன்னன்குடா கண்ணகியம்மன் காவியப்பாடல் இறுவட்டு மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

**கவிதைகள்**

புலவர் அருளம்பலம் கவிதைகளை ஆக்குவதில் சிறப்புடைய ஒருவர் மட்டுமன்றி, அதில் புரட்சியும் செய்துள்ளார். இன்றுவரையும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மரபுக்கவிதைகளை எழுதியுள்ளார். அத்தகைய கவிதைகள்

ஒவ்வொன்றும் சிறப்புடையவையாக அமையப்பெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றினை இங்கு அவதாணிக்கமுடிகின்றது.

**உண்மைக் கனவு**

(விளம் ஃ மா ஃ மா ஃ விளம் ஃ மா ஃ மா என்னும் வாய்பாட்டால் ஆனது.)
அழகிய வண்ண மேடை
அருகினில் தெய்வம் ஒன்று
பழகிய மஞ்சல் மேனி
பவளவாய் வெள்ளைச் சட்டை
இளகிய இன்ப வார்த்தை
இருந்தனள் மேடை மீது
நழுவிடா கையைப் பற்றி
நலமுடன் வாறேன் என்றேன்.

**மதுவொழிப்புத் தினம்**

(மா ஃ விளம் ஃ மா ஃ கனி ஃ மா என்னும் வாய்பாட்டால் ஆனது.)
தள்ளம் பாறுது கால்கள்
தடுமாறுது கைகள்
கள்ளம் பறையுது வாய்கள்
கரியேறுது கண்கள்
வெள்ளம் போடுது உடல்கள்
வெளியேறுது பொய்கள்
உள்ளம் பாடுது மதுவால்
உணர்வேறிய தையோ.
சட்டம் கூWJ இதழ்கள்
சரசரக்FJ பற்கள்
நட்டம் போவது கூட
நளினமாகுது சொற்கள்
பட்டம் பதவிகள் எதற்கு
பரிமாறிய மதுவில்
கட்டம் போட்டொரு வாழ்வைக்
கரையேறிட வேண்டே.

**கலிவிருத்தம்**

(தேமாஃகூவிளம்ஃ கூவிளம்ஃகூவிளம் என்னும் வாய்பாட்டால் ஆனது.)
தேவ தேவனைத்
தேவியின் கேள்வனைப்
பாவ மோசனைப்
பாவியர் நாசனைத்
தூவ லேந்திய
தூமணிப் போதனைக்
காவ லாக்கிடக்
கைதொழக் காப்பதே.
ஆர ணத்தினை
ஆக்கிய நாதனைப்

பூர ணத்தினில்
பூத்திடும் பூமனைப்
பார னைத்தையும்
பார்த்திடும் பாமனைக்
கார ணத்தினால்
கைதொழக் காப்பதே.
பாடல் முக்கிய
பாளிதத் தேவனை
ஆடல் புக்கிய
ஆதியந் தாரனைக்
கூட கோபுரக்
கோமுகக் கோபியைக்
காடு கூடினும்
கைதொழக் காப்பதே.

**சகுனம்**
(முற்று மாச்சீர்)
மூன்று முடக்குக் கிழவி
முன்னே வந்தாள் ஓர்நாள்
ஊன்று கோலும் இல்லை
உறவும் பகையு மில்லை
ஆன்ற சகுனம் ஒன்றை
அவளால் கண்டே னன்று
தோன்றும் மனிதர் கூடத்
தொல்லை தருவார் தினமே.
தினமும் கண்ணில் விழிக்கும்
தீராப் பகைவன் கூடத்
தனியே கண்டால் ஆகாச்
சகுனம் என்றே சொல்வார்
மனிதன் வாழ்வில் இதுவும்
வழக்க மாகிப் போனால்
புனிதம் எங்கு பிழைக்கும்
புரியாக் கேள்விப் புதிரே.
புதிராய் பூத்த சகுனம்
பூமி யாண்டால் ,பூனை
எதிரே வந்தால் கெடுதி
எண்ணைத் தலையர் ,மொட்டை
உதிரம் பாம்பு உடும்பு
ஒன்றைக் கண்டால் கேடாம்
விதியின் தீர்ப்பே விளையும்
விபரம் தெரிந்தால் விளக்கே.

**உள்ளடக்கம் இல்லாத ஒரு கவிதை**
(கருவிளம் ஃ தேமா ஃ கருவிளம் ஃ கருவிளம் ஃ தேமா ஃ கருவிளம் என்னும் வாய்பாட்டால் ஆனது.)

அவந்திய நாட்டு அருந்ததி
அவள்தனக் கென்ன அனுமதி
சுவந்திய வீட்டுச் சுகந்தினி
சுகமுட னிந்தச் சுமங்கலி
நிபந்தனை யற்ற நிலந்தனில்
நிறைவுற வாழும் நிசந்தினி
பவந்தனை எண்ணும் பலந்தனில்
பரிவுற நின்றாள் பசுங்கிளி.
கரந்தனில் வந்தாள் கலங்கரை
கரைதனைக் கண்டாள் கவிமழை
வரந்தனைத் தந்தாள் வளந்தனில்
வளைந்திட நின்றாள் வனங்கிளி
நிரந்தர மென்றாள் நிறைமதி
நிலவிய தங்கம் நினைவினில்
புரந்தர சக்தி புரந்தரி
புவிதனில் வந்தாள் புவிமதி.

**அறுசீர் கழிநெடிலடி விருத்தம்**
(ஒன்று மூன்று ஐந்து மோனை)
கண்ணா வுந்தனை காரிகை நம்பினேன்
கற்றது பற்றிவரும்
மன்னா வுந்தனை மங்கையு எண்ணிட
மற்றவ ருற்றவரும்
கண்ணா யெந்தனை கட்டிய ணைத்திடில்
கங்கையும் பொங்கிவரும்
பெண்ணா யெந்தனை பேணிடக் கல்வியில்
பெற்றவ னுற்றவனே.
(பூவும் பொட்டும்)
கைகூ கவிதை
கொண்டாட்டம் என்று
கொண்டு வந்து
கொன்று ஆடுகிறார்கள்
ஆட்டை

**சிலேடை அணிக் கவிதை**
கருவாடு உரித்தெடுத்து
காக்கா கறிசமைத்து
தருவோடு பலகைதட்டி
தந்தநா கவிதைபாடு.

வெற்றிலை பாக்குமாம்
மேல்வாய் புண்ணாக்கும்
கொற்றவரை காய்நடுவில்
கோமாதா குடியிருப்பாள்.

**சிந்தியல் இன்னிசை வெண்பா**

கண்ணாரக் கண்டேன் கனவொன்று இன்றிரவு
மண்ணார உன்னை மடுவில் புதைப்பதற்கு
என்னாகு மோ,னி ஈது

**சிலேடை வெண்பா**

சேலை திறந்திருக்கும் செவ்வாய் உடனிருக்கும்
காளை அருகே கனிந்திருக்கும் - மாலைதனில்
காலை விரித்துக் களிப்பாய் மணியடிக்கும்
ஆலயமும் பெண்ணும் அது

புலவர் கி.அருளம்பலம், ஆலய நிகழ்வினையும் பெண்ணின் உறவு நிலையினையும் ஒருமித்துப் பார்க்கின்றார். அதாவது, ஆலயத்தில் திரைச்சீலை திறந்திருக்கும் வேளையில் செவ்வாய் கிரகமும் காளை என்று சொல்லப்படும் எருதும் அங்கு இருக்கும். மாலை வேளையில் பூசை இடம்பெறும்போது மணியடிக்கவேண்டும். அப்போது, மணி அடிப்பவருடைய கால் இயல்பாகவே விரிந்து நிற்கும் என்பதனை, உடலுறவின்போது பெண்ணின் சேலை திறந்திருக்க, அவளது வாயும் சிவந்திருக்கும். அவ்வேளையில் அவளுடைய கணவனும் (காளை) அருகில் இருப்பான். மாலை வேளையில் இருவரும் உடலுறவு கொள்ளும்போது அவனது இரண்டு காலும் இயல்பாகவே விரிந்து நிற்க அவனது உடலுறுப்பு மணி அடிப்பதுபோல் இருக்கும் என்று இரண்டு செயற்பாட்டினையும் சிலேடையாகக் காண்கின்றார்.

**வருக்க எதுகை கவிதை**

(யாவும் காய்ச்சீர்)
நீசிரித்த சிரிப்பழகின்
நினைவிருக்கும் காலமதில்
பேயிருக்கும் சுடுகாட்டில்
பெண்ணுனக்காய் காத்திருப்பேன்
பூசிரித்த அக்கமதில்
பிள்ளைமனம் பறிபோக
ஏசிரித்தாய் என்னன்பே !
இணைந்திடும் நாளெப்போது?

**கண்ணகி கவிமலர்**

கவிதை புனைவதில் மேற்கிழம்பும் புலவர், கவிமலர் எனும் தொகுப்பினையும் பாடியுள்ளார். இந்தப் புத்தகத்தனை பருத்திச்சேனைக் கலைமகள் கலைக்கழகத்தினர் 17.05.2025ஆம் திகதி வெளியீடு செய்தனர். இந்தக் கவிமலரில் எழுசீர் விருத்தம் கொண்ட 108 பாடல்கள் உள்ளன. இதனை காய்ஃமாஃகாய்ஃமாஃகாய்ஃமாஃமா எனும் வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தி பாடியுள்ளார்.

மாம்பூவி லன்று மகளாகி வந்து
    மலைநாடி ருந்த திருவே
பாம்பூது நாட்டில் சிலம்பால லைந்து
    பாண்டியனைச் சுட்ட திருவே
வேம்போடு ஆலை வெளிவீதி வம்மி

வில்வமொடு காண அரிதாய்
காம்போடு ஆய்ந்து மலர்தூவி நின்றேன்
கன்னனூர மர்ந்த திருவே.

**வானொலி நிகழ்வுகள்**

சிறுவர்களுக்காக இவர் எழுதிய கட்டுரைகள் பலவாகும். இக்கட்டுரைகள் பல 1982 தொடக்கம் 1986 வரையுள்ள காலத்தில் சிந்தாமணிப் பத்திரிகையில் வெளிவந்ததோடு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளான இசையும் கதையும், இன்றைய நேயர் முதலிய நிகழ்ச்சிகளில் பேசுபொருளாகியது. இவ்வாறே லண்டன் வானொலியிலும் அவருடைய கவிதையான உடன்பிறப்பே எனும் கவிதை 24.05.2020 ஆம் திகதியும் தொலைந்த முகவரிகள் எனும் கவிதை 30.05.2020ஆம் திகதியும் ஒலிபரப்பாகின. இவ்வானொலியில் இவருடைய பல கவிதைகள் தொடர் நிகழ்ச்சியில் இடம்பெற்றிருக்கின்றது.

**முடிவுரை**

இலங்கைப் புலவர் சரிதத்தில் புலவர்.கி.அருளம்பலம் பிரதான இடத்தினைப்பெறுகின்ற ஒருவர். தமிழியலில் உள்ள ஏனைய புலவர்களுடன் ஒப்பிடுகையில் இவருடைய ஆக்கமுயற்சி பல்வேறு நிலைகளில் மேலெழுகின்றது. தென்மோடி, வடமோடிக் கூத்துக்களை எழுதிய ஏனைய புலவர்களைவிட, அதிக கூத்துக்களை எழுதியவராகவும் நவீன நாட்டுக்கூத்து, நாடகம், காவடிப்பாடல், கவிதை, அம்மானை, வண்ணப்பாட்டு என்று விரிவடையும் ஆக்கத்தளம் சதகம் வரை நீள்கின்றது. இன்று முதன் முதலில் கிழக்கு மண்ணில் சதகம் மற்றும் வண்ணப்பாடல் பாடிய புலவராகவும் பதிவாகி, பெரும் பெரும் புலவர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க ஒருவராகக் காணப்படுகின்றார். பொதுவாகப் புலவர்கள் தனிப்பட்ட ஆக்கங்களையோ அல்லது ஒரு சில ஆக்கங்களையோ எழுதுவது வழக்கமாக உள்ளது. ஆனால், பல்வேறு ஆக்கங்களை வினைத்திறனுடன் எழுதி இருப்பது இவருடைய திறனுக்குச் சான்றாகின்றது. இவர் இரண்டு வாரங்கள் மரபுக்கவிதை பற்றிக் கற்று அணியிலக்கணத்துடன் படைப்புக்களைத் தருவது சாதாரணவிடயம் அல்ல. இவருக்குப் பின்னால் இருக்கும் தெய்வசக்தியும் அவருடைய சுயமுயற்சியுமே காரணமாகும். எனவே, புலவருடைய முயற்சிகள் கண்டுகொள்ளப்படாமலும் மேலோட்டமாகப் பார்க்கப்படுவதுமாகிய நிலை மாறவேண்டும். இவருடைய அறிவினை உயர்கல்வி நிறுவனங்கள்பெற்று, அதனை மாணவர்களுக்கு மீப்பாய்ச்சவேண்டும். அத்தகைய மீப்பாய்ச்சிகை மட்டக்களப்புத் தமிழகத்தின் புலவர் மரபினையும் புலமைத்தவ மரபினையும் மேற்கிழம்பச் செய்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் என்பது இக்கட்டுரைவழி கண்டுகொள்ளப்படுகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**

கந்தையா, வி.சி. (1964). மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், இலங்கை.

கமலநாதன்,சா.இ.(2005). மட்டக்களப்பு பூர்வசரித்திரம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, இலங்கை.

கோடீஸ்வரன், வி. (2019). மண்முனை மேற்கு வவுனதீவுப் பிரதேச மரபுவழிப் புலவர்களின் ஆக்கங்கள், கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குக் கொடுக்கப்பட்ட ஆய்வேடு.
மௌனகுரு, சி. (1998). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு.

**தகவல் தந்தோர்**

புலவர் கி.அருளம்பலம், வயது 63, பருத்திச்சேனை, கன்னன்குடா, மட்டக்களப்பு.
திலகராணி கோபாலப்பிள்ளை, வயது 38, கன்னன்குடா, மட்டக்களப்பு.
வி.கோடீஸ்வரன், வயது 36, கன்னன்குடா, மட்டக்களப்பு.

# இலங்கையில் பாலின சமத்துவமும் பெண்களின் அரசியல் பங்கேற்பும் : சந்தர்ப்பங்களும் , தடைகளும்

தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்
அரசறிவியல் பேராசிரியர்
சமுக விஞ்ஞானங்கள் துறை
krishnamohant@esn.ac.lk

திரு கந்தசாமி சத்தியசேகர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமுகவியலும் மானிடவியலும்
சமுக விஞ்ஞானங்கள் துறை
sathiyasegark@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

நாடாளுமன்ற அரசாங்க முறைமை ஆரம்பமாகிய காலத்தில் இருந்து தீர்மானம் எடுக்கும் நிறுவனங்களில் பெண்களின் அரசியல் பங்கேற்பும், பிரதிநிதித்துவமும் அவர்களின் சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்திருக்கவில்லை. இதனால் பெண்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொறிமுறையாகப் பாலின சமத்துவத்தை உருவாக்குதல் தொடர்பான விழிப்புணர்வு சர்வதேசளவில் உருவாக்கப்பட்டது. குறிப்பாக அரசியல் மற்றும் சட்டமன்றங்களில் தீர்மானம் எடுக்கும் மற்றும் கொள்கை உருவாக்கும் நிறுவனங்களில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதன் மூலம் பெண்களை வலுவுள்ளவர்களாக மாற்ற முடியும் என உணரப்பட்டது. உலகின் வெவ்வேறு நாடுகளில் பெண்களின் அரசியல் பங்கேற்பில் கணிசமான வேறுபாடுகள் உள்ளன. இக்கட்டுரை, தெற்காசியாவை மையமாகக் கொண்டு சட்டமன்றங்களில் அதிகரித்து வரும் பெண்களின் பங்கேற்பினைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இலங்கையின் நிலவரத்தை கருத்தில் எடுக்கிறது. இலங்கையின் வரலாற்றில், 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் பெண்களின் அரசியல் பங்கேற்பில் அதிகபட்ச பிரதிநிதித்துவத்தைக் காட்டியுள்ளது. இலங்கை நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை அதிகரிப்புப் பெண்களை வலுவூட்டுவதற்கு எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை இவ்ஆய்வு கவனத்தில் கொள்கிறது.

திறவுச் சொற்கள் : ஆசன முறைமை, பிரதிநிதித்துவம், பெண்கள் சாசனம், பெண் வேட்பாளர்கள், வலுவூட்டுதல்,

**அறிமுகம்**

பாலின சமத்துவம் என்பது அடிப்படை மனித உரிமை மட்டுமல்ல, செழிப்பான சமூக-பொருளாதார மாற்றங்களை உருவாக்குவதற்கான வழிமுறையுமாகும். பெண்கள் மற்றும் சிறுமிகள் தொடர்ந்தும் பாகுபாடு மற்றும் வன்முறைக்குள்ளாகின்றனர். அமைதியான சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பாலின சமத்துவம் அவசியமானதாகும். 2030 களில் பாலின சமத்துவத்தில் நிலையான வளர்ச்சியை அடையும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை

நிகழ்ச்சி நிரல்களைத் தயாரித்துள்ளது (UNDP Sri Lanka Country Office 2023-2027). உலகில் வாழும் ஒவ்வொரு தனிநபருக்கும் கல்வி, சுகாதாரம், கண்ணியமான வேலை, பாகுபாடு மற்றும் துஷ்பிரயோகம் இல்லாத வாழ்க்கை, சமத்துவத்தையும், உரிமையையும் உறுதி செய்தல் என்பன மிகவும் முக்கியமானதாகும். பாலின சமத்துவத்தை இலக்காகக் கொண்ட முயற்சிகளை தூண்டுமாறு 'உலக நிலையான வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரல்' அனைத்து நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. மேலும் பெண்களை வலுவூட்டுதல், பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மனிதவளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தூண்டுதல்களை வழங்குமாறும் அழைப்பு விடுக்கிறது (UNDP Sri Lanka Country Office 2023-2027). ஆனாலும் பாலின ஏற்றத்தாழ்வுகள் உலகிலுள்ள ஒவ்வொரு சமூகத்திலும் ஆழமாக வேரூன்றியுள்ளன. பெண்களுக்குக் கண்ணியமான வேலை கிடைப்பதில்லை மேலும் தொழில் ரீதியாகப் பிரிவினையும், பாலின ரீதியாக ஊதிய இடைவெளிகளும் காணப்படுகின்றன. சர்வதேசளவில் பெண்களுக்கு இன்றும் கல்வி மற்றும் சுகாதார வசதிகள் மறுக்கப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப்படுவதுடன் ,பெண்கள் வன்முறை மற்றும் பாகுபாடுகளுக்கும் உள்ளாகின்றனர். அரசியல் மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பான தீர்மானம் எடுக்கும் செய்முறைகளில் பெண்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது குறைவான பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. இவ்வகையில் இவ் ஆய்வுக் கட்டுரை நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான ஆசன எண்ணிக்கை அதிகரிப்பு அவர்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் வலுப்படுத்தலுக்கு ஆற்றிய பங்களிப்பினைப் பகுப்பாய்வு செய்கிறது . இவ்வகையில் பெண்களின் அரசியல் பங்கேற்பு மற்றும் சட்டமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்துடன் தொடர்புடைய முக்கிய விடயங்களை கருத்தில் கொள்கின்றது. நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தின் தாக்கத்தை மதிப்பிடுவதும், எதிர்காலத்திற்கான படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ள அரசியல் பங்கேற்பின் செயல்திறனை மதிப்பிடுவதும் அவசியமானதாகும். அரசியல் பங்கேற்பிற்கான சர்வதேச வழிமுறைகள், தெற்காசிய நாடுகளில் பெண்களின் அரசியல் பங்கேற்பு, இலங்கையின் பாலினசமத்துவம், மற்றும் அரசியல் பங்கேற்பு போன்ற விடையங்களைப் பகுப்பாய்வு செய்கின்றது. இதற்காக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஐக்கிய நாடுகள் சபை, பாலின சமத்துவம், பெண்களை வலுவூட்டுதல்**

சர்வதேசளவில் பெண்களும், சிறுமிகளும் கௌரவத்தைப் பெற்றுக் கொள்வதற்காக 'உலகளவில் பெண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்' என்ற இலக்கு நோக்கிச் சர்வதேச நாடுகள் முன்னேறுவதை விரைவுபடுத்த 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஐ.நா பெண்கள் மற்றும் பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான அமைப்பை உருவாக்கியது (UN Women For all Women & Girls, n.d). ஐ.நா சாசனத்தின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் ஐ.நா பெண்கள் அமைப்பின் இலக்குகளாக வடிவமைக்கப்பட்டன. (i) பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை நீக்குதல் (ii) பெண்களை வலுவூட்டுதல், (iii) அபிவிருத்தி, மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகள், அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் பங்காளிகளாகவும்,

பயனாளிகளாகவும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் சமத்துவத்தை அடைதல் என்பனவாகும் (UN Women For all Women & Girls, n.d). பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பிற்கு ஆற்றல்மிக்கதொரு வலுவான அமைப்பாகவும், பெண்களுக்குச் சர்வதேச, பிராந்திய மற்றும் உள்ளூர் மட்டங்களில் சக்திவாய்ந்த குரலாகவும் இது இருக்கும் எனவும் நம்பப்பட்டது.

இதன் மூலம், பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் தொடர்பான ஐ.நா. அமைப்பின் இலக்குகளை விரைவுபடுத்துவதில் உறுப்பு நாடுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளில் பங்கெடுக்கத் தொடங்கின. ஐ.நா. பெண்கள் அமைப்பின் உருவாக்கம் ஐ.நா. சீர்திருத்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகப் பார்க்கப்பட்டது. பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுதல் ஆகியவற்றில் பிரத்தியேகமாகக் கவனம் செலுத்திய ஐ.நா பெண்கள் அமைப்பு, நான்கு வேறுபட்ட அமைப்புக்களை ஒன்றிணைத்துச் செயற்பட்டது. அவைகளாவன (i) பெண்கள் முன்னேற்றத்திற்கான பிரிவு (DAW) (ii) பெண்கள் முன்னேற்றத்திற்கான சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (INSTRAW) (iii) பாலினப் பிரச்சினைகள் மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கான சிறப்பு ஆலோசகர் அலுவலகம் (OSAGI) (iv) பெண்களுக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் (UNIFEM) என்பனவாகும்(UN Women For all Women & Girls, n.d). இப்பணிகளை ஒன்றிணைத்துச் செயற்படுத்தியதன் மூலம் பின்வரும் மூன்று முக்கிய வகிபாகத்தினை ஐ.நா பெண்கள் அமைப்பு சர்வதேச நாடுகள் சார்பில் மேற்கொண்டது. (i) அரசாங்கங்களுக்கிடையில் பெண்கள் அமைப்புகள் தொடர்பான கொள்கைகள், உலகளாவிய தரநிலைகள் மற்றும் நெறிமுறைகளை உருவாக்குவதற்கு உதவுதல், (ii) இத் தரங்களைச் செயல்படுத்த உறுப்பு நாடுகளுக்கு உதவுதல், உதவி கோரும் நாடுகளுக்குத் தகுந்த தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியை வழங்குதல், சிவில் சமூகங்களுடன் பயனுள்ள கூட்டுறவுகளை உருவாக்குதல், (iii) பாலின சமத்துவம் தொடர்பான தனது கடமைகளுக்குப் பொறுப்புக்கூறுதல், முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்தல் என்பனவாகும் (UN Women For all Women & Girls, n.d).

ஆயினும், ஐ.நா பெண்கள் அமைப்பின் முயற்சிகளுடன் ஒன்றித்துப் பெண்களின் அரசியல் பங்கேற்பினை அர்த்தமுள்ள வகையில் ஊக்குவிக்கச் சர்வதேச சமூகம் தவறிவிட்டது என்ற விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் வகையில், தற்காலிக ஏற்பாடாக, அரசியல் பங்கேற்பில் அதிகூடிய பாலின சமத்துவத்தினை உறுதி செய்வதற்கான சர்வதேச சட்ட நடைமுறையாக ஒதுக்கீட்டு (Quotas) முறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பெண்களின் அரசியல் பங்கேற்பினை அதிகரிப்பதற்கான தற்காலிகக் கருவியாக ஒதுக்கீட்டு முறைமையைப் பயன்படுத்துவதைப் பீஜிங் பெண்கள் மகாநாட்டு (Beijing Declaration) தீர்மானம் ஏற்றுக் கொண்டது. மேலும் ஒதுக்கீடுகள் 'பாகுபாடாகக் கருதப்படாது' என்பதை பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான பீஜிங் மாநாடு (The Convention on the Elimination of All Forms of Discrimination against Women - CEDAW) ஏற்றுக்கொண்டது (United Nations, 2003). ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டத்தின் ஆட்சி தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிறுவப்பட்ட வெனிஸ் ஆணைக்குழு (Venice Commission) போன்ற பிராந்திய அமைப்புகள் பாலின

ஒதுக்கீட்டு முறைகளை நாடுகள் பின்பற்றவும், பாலின ஒதுக்கீட்டைப் பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்தக் கண்காணிப்பு வழிமுறைகளை ஊக்குவிக்கவும் பரிந்துரைத்து (Compilation of Venice Commission Opinions and Reports Concerning Political Parties (Revised in October 2021). அரசியலில் பெண்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்காக ஒதுக்கீட்டு முறைகள் சிபார்சு செய்யப்பட்டனவாயினும், தமக்குப் பொருத்தமான முறையில், அளவில் ஒதுக்கீட்டு முறைமையினைப் பின்பற்ற நாடுகள் அனுமதிக்கப்பட்டன. இவ்வகையில் பெண்களின் அரசியல் பங்கேற்பிற்கு மூன்று வகையான ஒதுக்கீட்டு முறைமைகள் சர்வதேசளவில் பயன்படுத்தப்படுகின்றன.

**i. ஒதுக்கப்பட்ட இடங்கள்:**

ஒதுக்கப்பட்ட ஆசன முறைமையில் (Reserved Seats System) பெண் பிரதிநிதிகளுக்கு குறிப்பிட்ட சதவீத ஆசனங்கள் அல்லது எண்ணிக்கைகள் ஒதுக்கப்படும். ஒதுக்கப்பட்ட ஆசன முறைமை என்பது சட்டபூர்வமான ஆசன ஒதுக்கீடாகும். இது அரசியலமைப்பு அல்லது தேர்தல் சட்டச் திருத்தங்கள் மூலம் உருவாக்கப்படும். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தேர்தல் தொகுதிகள் அல்லது வட்டாரங்கள் பெண்களுக்கு என உறுதிப்படுத்தப்பட்டு (Enforceable) ஒதுக்கப்படும். தேர்தல் தொகுதிகளுக்கு வேட்பாளர்களாகப் பெண்கள் பரிந்துரைக்கப்படுதல் என்பதைவிட, உண்மையில் பெண்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதை ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் முறைமை உறுதி செய்கின்றது. இதன்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கைக்குள் பெண்களின் ஆசனமும் நிச்சயக்கப்பட்டு விடுகிறது ( European Parliament, March 1997). ஒதுக்கீட்டு ஆசன முறைமை தெற்காசிய நாடுகளில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

போட்டி இல்லாமல் ஆசனங்களை வழங்கும் முறைமை மூலம் பெண் வேட்பாளர்களின் தகுதி குறைமதிப்பிற்கு உட்படுவதாக விமர்சிக்கப்படுகின்றது. ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கு பெண் வேட்பாளர்களுக்கிடையில் போட்டியை நடாத்த அனுமதிப்பதன் மூலம் தகுதி குறித்த கவலையினைத் தவிர்க்கலாம். உதாரணமாக, கென்யா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்குப் பெண்களுக்கிடையில் போட்டி நடைபெறுகின்றது. பாக்கிஸ்தான் மற்றும் வங்களாதேசம் போன்ற நாடுகளில் பெண்கள் போட்டியின்றித் தேசியளவில் சட்டசபைக்கு நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒதுக்கப்பட்ட ஆசன முறைமை பெண்கள் அதிகளவில் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கலாம் எனக் கருதப்பட்டாலும், பொருத்தமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதில் பயனுள்ளதாக இருக்காது என்ற விமர்சனமும் உள்ளது.

**ii. சட்டமன்ற ஒதுக்கீடு:**

சட்டமன்ற ஒதுக்கீடுகள் என்பது அரசியல் குறிப்பிட்டதொரு சதவீத பெண் வேட்பாளர்களை அல்லது எண்ணிக்கையான பெண் வேட்பாளர்களைச் சட்டமன்றத்திற்குப் பரிந்துரை செய்தலாகும். ஏறக்குறைய 80 நாடுகள் பாலின சட்டமன்ற ஒதுக்கீட்டுச் சட்டங்களை ஏற்றுக் கொண்டன. ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் வேட்பாளர் ஒதுக்கீட்டு

முறைகள் பெரும்பாலும் சட்டப்படி நடைபெறுகின்றன. ஆனாலும் பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற வாய்ப்பளிக்காத வகையில் வேட்பாளர்கள் பட்டியலின் இறுதிப்பகுதியில் பெயரிடப்படுகின்றனர். அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள் நியமனப் பட்டியலின் தரவரிசையில் பெண்களைப் பலவீனமான நிலையில் வைக்க முடியும், வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு குறைவாகவுள்ள தொகுதிகளில் பெண் வேட்பாளர்களை கட்சிகள் நிறுத்துகின்றன. அதே நேரத்தில் வெற்றி பெறக்கூடிய தொகுதிகளில் ஆண் வேட்பாளர்களைக் கட்சிகள் நிறுத்துகின்றன. இதனால் பெண் வேட்பாளர் என்ற நிலைக்கு அப்பால் வேறு பதவிகளில் பெண்கள் அமர்த்தப்பட வாய்ப்பிருப்பதில்லை. தேர்தல் சட்டங்களிலுள்ள பலவீனங்களால் ஒதுக்கப்பட்ட ஆசன முறைமையை விட சட்டமன்ற ஒதுக்கீட்டு ஆசன முறைமையைச் செயல்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவானதாகும்.

இதனை நிவர்த்தி செய்யப் பல நாடுகள் வேட்பாளர்கள் பட்டியலில் குறைந்தபட்ச சதவீதம் அல்லது குறைந்தபட்ச பெண்களின் எண்ணிக்கை என்ற 'இரட்டை ஒதுக்கீட்டு முறைமையை சட்டப்படியானதாக மாற்றியுள்ளன. மேலும் பெண் வேட்பாளர்களின் ஆசன ஒதுக்கீட்டுக் கொள்கைக் கட்டளைக்கு இணங்கத் தவறும் கட்சிகளின் வேட்பாளர்கள் பட்டியல்களை இரத்து செய்யும் முறைமையையும் நாடுகள் பின்பற்றுகின்றன. இதன்மூலம் வேட்பாளர்கள் பட்டியலில் பெண் வேட்பாளர்கள் சேர்க்கப்பட்டிருப்பது கட்டாயமானதாகும்.

2017 ஆம் ஆண்டு பாக்கிஸ்தானின் தேர்தல் சட்டத்தில் அரசியல் கட்சிகளின் வேட்பாளர் பட்டியலில் குறைந்தது ஐந்து (5) சதவீத பெண் வேட்பாளர்கள் உள்ளடக்கப்பட வேண்டும் எனத் திருத்தம் கொண்டுவரப்பட்டதாயினும் இதன் மூலமான விளைவு மிகக் குறைவானதாக இருந்தது. (Background Paper the Elections Act, 2017 an Overview Background Paper, 2018). 2013 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகள் உட்பட மொத்தம் 228 பெண்கள் பிரதிநிதிகளாக உள்ளனர். இதில் 70 பெண்கள் நாடாளுமன்றத்திலும், 17 பெண்கள் செனட் சபையிலும், 141 பெண்கள் மாகாண சபைகளிலும் பிரதிநிதிகளாக உள்ளனர். ஏறக்குறைய இருபது (20 % ) சதவீதமான பெண் வேட்பாளர்கள் அரசியலில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தனர் (Maliha Zia, 2013) . 2018 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு அறுபத்தொன்பது (69) பெண் வேட்பாளார்கள் தெரிவு செய்யப்பட்டனர் (National Assembly Election Results,July 2018).

பெண் வேட்பாளர்களைத் தேர்தலில் முன்மொழிவது மிக உயர்ந்த சதவீதத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக ருவாண்டா இத்தகைய முறைமையை ஏற்றுப் பின்பற்றுகின்றது. அர்ஜென்டினா, பொலிவியா, கோஸ்டாரிகா மற்றும் மெக்ஸிகோ போன்ற நாடுகள் வேட்பாளர் பட்டியலில் பெண் வேட்பாளர்களின் பெயர்கள் முன்மொழியப்படுவதைத் தூண்டுவதற்காக அரசியல் கட்சிகளுக்குச் சில தடைகளை விதிக்கின்றன. உதாரணமாக வேட்பு மனுக்களை அல்லது கட்சி வேட்பாளர்கள் பட்டியல் பதிவை ஏற்காது விடுவது அல்லது நிராகரிப்பது அல்லது அரசியல் கட்சிகளைப் பகிரங்கமாக கண்டிப்பது அல்லது பட்டியல்களைச் சரிசெய்ய 48 மணி நேரத்தை வழங்குவது போன்றவற்றைச் செய்கின்றன இதன்மூலம் அதிகமான பெண்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

### iii. கட்சி விருப்ப ஆசன ஒதுக்கீடுகள்

கட்சி விருப்ப ஆசன ஒதுக்கீடு (Voluntary party quotas) என்பது அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்கள் பட்டியலில் குறிப்பிட்ட விகிதத்தை அல்லது எண்ணிக்கையைப் பெண்களுக்கு சுய விருப்பத்தில் பரிந்துரைத்தலாகும். சுவீடன் போன்ற நாடுகளில் கட்சி விருப்ப ஆசன ஒதுக்கீடு என்பது அரசியல் கட்சிகளின் யாப்புக்களில் எழுதப்பட்டுள்ளன. அரசியல்யாப்பு அல்லது தேர்தல் சட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் ஆசன இடஒதுக்கீடு போலல்லாமல் கட்சி ஆசன ஒதுக்கீடுகள் அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. அரசியல் பங்கேற்பில் பெண் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கு விருப்பம் இல்லாத நாடுகளில் கட்சி விருப்ப ஆசன ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இதன் மூலம் கிடைக்கும் விளைவுகள் செயல்திறன் குறைந்தவைகளாகக் காணப்படுகின்றன. கட்சிகளின் விருப்ப ஆசன ஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்தச் சட்டபூர்வமான கட்டளைகள் அல்லது தடைகள் அரசியல் முறைமையில் கிடையாது. ஆண் அரசியல் மேலாதிக்கப் பண்புகளைக் கொண்டிருக்கும் கட்சிகளுக்குள் ஜனநாயக ரீதியில் போராடி வெற்றி பெறும் பெண் உரிமைப் போராளிகளின் ஆளுமை மற்றும் திறனில் இது தங்கியுள்ளது.

### தெற்காசியா நாடுகளில் பெண்களின் அரசியல் பங்கேற்பு

பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்கு மிகக் குறைந்தளவு முக்கியத்துவம் தெற்காசியாவில் வழங்கப்படுகின்றது. பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஆண் மேலாதிக்கப் பண்புகள் கொண்டவைகளாகும். இதனால் பெண்களையும், அவர்களின் நலன்களையும் அரசியல் கட்சிகள் புறக்கணிக்கின்றன. பொது வெளியில் அதிகாரத்தைப் பயன்படுத்தப் பெண்களை விட ஆண்கள் சிறந்தவர்கள் என்ற நம்பிக்கைகள் தெற்காசியாவில் பரவலாகவும், ஆழமாகவும் வளர்ந்துள்ளது. அரசியல் கட்சிகள் பெண்களின் பங்கேற்பினைப் புறக்கணித்தாலும், பெண்களின் புகைப் படங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வாக்குகளை பெற்றுக் கொள்கின்ற கலாசாரம் வளர்ந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

அரசியல் பங்கேற்பில் சர்வதேசளவில் முன்னேற்றம் ஏற்பட்டு வந்தாலும், தெற்காசிய நாடுகளின் (8 நாடுகள்) அரசியல் பங்கேற்பில் பாலின ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைப் புரிந்துகொள்ளலாம். கலாசார மாறாவுருநிலைப் படிமங்கள், ஆணாதிக்கச் சமூக நெறிமுறைகள், கல்வி மற்றும் வளப் பற்றாக்குறைகள் போன்ற தடைகளைப் பெண்கள் தொடர்ந்து எதிர்கொள்கின்றனர். இத் தடைகளையும் தாண்டிக் குறிப்பிடத்தக்க சாதனைகளையும் பெண்கள் பதிவு செய்துள்ளனர். இச் சாதனைகள் சட்டசபைகள், உள்ளூராட்சி சபைகள் போன்றவற்றில் முக்கிய பதவிகளைப் பெற்றமை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தெற்காசிய நாடுகள் பலவற்றில் குடும்பத் தொடர்புகளின் மூலமான மிக உயர்ந்த அதிகாரமுள்ள அரசியல் பதவிகளைப் பெண்கள் பெற்றுள்ளனர். உதாரணமாக உலகின் முதல் பெண் பிரதமராகப் பதவி வகித்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா (இலங்கை), முஸ்லிம் மக்கள் பெரும்பான்மை வாழும் பாகிஸ்தானில் இஸ்லாமிய கலாசார மாறாவுருநிலைப்

படிமங்களைத் தாண்டி இரண்டு தடவைகள் பெண் பிரதமராகப் பதவி வகித்த பெனாசிர் பூட்டோ, இலங்கையில் முதல் பெண் ஜனாதிபதி பதவி வகித்த சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரணதுங்க, இந்தியாவின் முதல் பெண் பிரதமராக பதவி வகித்த இந்திரா காந்தி உட்பட பல முக்கிய பெண் அரசியல் தலைவர்கள், வங்களாதேசத்தில் முதல் பெண் பிரதம மந்திரிப் பதவி வகித்த ஷேக் ஹசீனா போன்றவர்கள் குடும்பத் தொடர்புகளின் மூலம் அரசியல் அதிகாரத்திற்கு வந்திருந்தனர். மேலும், இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிக்கும் சோனியா காந்தியையும் இப்பட்டியலுக்குள் அடக்கலாம்.

**இந்தியா**

இந்திரா காந்திக்குப் பின்னர், அரசியல் அதிகாரத்தின் மிக உயர்ந்த பதவிகளில் இந்தியப் பெண்களுக்கு முக்கியத்துவம் கிடைக்காது விட்டாலும், 1990 களில் இருந்து கிராமிய மட்டத்தில் பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தன. இந்திய அரசியலமைப்பிற்குச் செய்யப்பட்ட 73 ஆம் மற்றும் 74 ஆம் திருத்தங்கள் பஞ்சாயத்துகளில் (கிராம சபைகள்) பெண்களுக்கு 1/3 பங்கு ஆசனங்களை ஒதுக்கீடு செய்தது (பிரிவு (3) சரத்து 243 D ,The Constitution (Seventy-Third Amendment) Act 1992). இது பெண்களின் அரசியல் பங்கேற்பில் மிகப்பெரிய மாற்றத்திற்கு வழிவகுத்தது. கிராமிய மட்டங்களில் தலைவர்களாகவும், தீர்மானங்கள் எடுப்பவர்களாகவும் இதன் பின்னர் பெண்கள் உருவாகத் தொடங்கினர். மேலும் மாநிலங்கள் மட்டத்தில் 50 சதவீதத்திற்கு மேலான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளத் தொடங்கினர். 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் 74 பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர் (Lok Sabha Eclection-2019). 2024 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல்கள் கடுமையான மாற்றம் எதுவும் நடைபெறவில்லை. பாராளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கை 14 சதவீதம் முதல் 13.6 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. மக்களவைக்கு 78 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர் (Lok Sabha Eclection-2024). இவர்களில் 31 பெண்கள் பாரதிய ஜனதா கட்சி மூலம் மக்களவை உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகியவற்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. 2024 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி மக்களவையில் பெண்கள் 14 சதவீத ஆசனங்களை பெற்றிருந்தனர் (The Law Advice, 26 Sep 2024). நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத ஆசனங்களை ஒதுக்குவது என்பதை நோக்கமாகக் கொண்டு ஒதுக்கீட்டு மசோதா தொடர்பான விவாதங்கள் நடைபெற்று வந்தாலும், இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை.

**பாகிஸ்தான்**

அரசியலில் பெண்கள் பங்கேற்றலிலுள்ள குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் நோக்கில் நாடாளுமன்றத்தில் 'பெண்களுக்கு ஆசனங்களை ஒதுக்கீடு (quota) செய்தல்' என்னும் கொள்கையினை 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1973 ஆம் ஆண்டு வரை பாகிஸ்தான் தனது அரசியலமைப்பில் சேர்த்துக் கொண்டது. 1956 ஆம் ஆண்டு வரையப்பட்ட அரசியலமைப்பில் பெண்களுக்கு 3 சதவீத ஆசன ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் 1956 ஆம் ஆண்டு அரசியலமைப்பு பெண்களுக்கு 10 ஆசனங்கள் ஒதுக்கீடு வழங்கப்பட்டன (Constitution of

Pakistan 1956,சரத்து 44, உப சரத்து 2). இது கிழக்கு மற்றும் மேற்கு பாகிஸ்தானுக்கு இடையில் சமமாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 1973 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரகாரம் பெண்களுக்கு 20 ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன (National Assembly of Pakistan) . 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதுடன், 1977 ஆம் ஆண்டு யூலை மாதம் இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. 1981 ஆம் ஆண்டு ஜெனரல் ஜியா உல் ஹக் (Zia-ul-Haq) சமஸ்டி ஆலோசனை கவுன்சிலை (Majlis-e-Shoora) உருவாக்கியதுடன், அதில் 20 பெண்களை உறுப்பினர்களாகவும் சேர்த்திருந்தார் (National Assembly of Pakistan). 1985 ஆம் ஆண்டு தேசிய சட்டமன்றத்தில் பெண்களுக்கு, தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்குப் புறம்பாக, 20 சதவீத ஆசன ஒதுக்கீடு வழங்கப்பட்டது**.** இது 1956 ஆம் ஆண்டு பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆசன ஒதுக்கீட்டின் இரு மடங்காகும். இந்நடைமுறை 1990 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்தது. பின்னர் இந்நடைமுறை பின்பற்றப்படவில்லை. தற்போது பாகிஸ்தான் தேசிய சட்டமன்றத்தில் பெண்களுக்கு 60 ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன்(Saira Bano, 2009) , 11 ஆசனங்கள் பொதுத் தேர்தல் மூலமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆசனங்களாக வழங்கப்பட்டுள்ளன*. மொத்தமாக 71 ஆசனங்கள் தற்போது பாக்கிஸ்தானில் பெண்களுக்கு சட்டமன்றத்தில் வழங்கப்பட்டுள்ளன(Saira Bano, 2009). பெண்கள் மாகாண மட்டத்தில் மொத்தம் 128 ஆசனங்கள் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி அரசாங்க சபைகளில் தற்போது 33 சதவீத ஆசனங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன (Bano, 2009)

**வங்களாதேசம்**

பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்ட ஆசனங்களை அறிமுகப்படுத்திய நாடுகளில் வங்களாதேசமும் ஒன்றாகும். இதன்மூலம் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிந்தது.1972 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த அரசியலமைப்பின் பிரகாரம் ஐந்து சதவீத ஆசனங்கள் அதாவது, மூந்நூறு உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பதினைந்து ஆசனங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு இது பத்து சதவீதமாக (முப்பது ஆசனங்கள்) ஆக உயர்த்தப்பட்டது (Halder,2024). ஒருமித்த கருத்து இல்லாததால், ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கான ஏற்பாடு 1988 ஆம் மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் புதுப்பிக்கப்படவில்லை. ஆனால் ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் தவிர நேரடியாகத் தேர்தல் மூலம் இரண்டு சதவீத பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**நேபாளம்**

2015 ஆம் ஆண்டு புதியதொரு அரசியலமைப்பை நேபாளம் ஏற்றுக்கொண்டது. இதில் பெண்களுக்குச் சட்டசபையிலும், உள்ளூராட்சி அரசாங்க சபைகளிலும் குறைந்தது 33 சதவீத ஆசனங்கள் (The Constitution of Nepal, September 2015) வழங்கப்பட வேண்டும் என்பது சட்ட பூர்வமானதாகும் எனக் கூறுகின்றது. இவ் ஒதுக்கீட்டு முறைமை மூலம் அரசியலில் பெண்களின் பங்கேற்பினைக் கணிசமானளவு நேபாளம் அதிகரித்துள்ளது எனக் கூறலாம். இதன்மூலம் உள்ளூராட்சி அரசாங்க சபைகளிலும் மற்றும் சட்டசபையிலும் பங்கேற்பதன் மூலம் பெண்கள் சாதனை படைத்தனர்.

**மாலைதீவுகள்**

மாலைதீவுகளின் அரசியலமைப்பு ஏனைய தெற்காசிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான ஆசன ஒதுக்கீட்டிற்குச் சிறப்பு ஏற்பாடுகள் எதுவும் அரசியலமைப்பில் கூறப்படவில்லை. ஆனால் அரசியலில் பெண்கள் பங்கேற்பதற்கு அரசியலமைப்புத் தடைகள் எதுவும் இல்லாதிருந்தாலும், பெண் அடிமைத்தனக் கலாசாரம் மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ள நாடாக மாலைதீவு உள்ளது. ஆண்களை விட பெண்கள் குறைந்த திறன் கொண்டவர்கள் என்ற நம்பிக்கை அதிகமாகவுள்ளது. இதனால் அரசியல் பங்கேற்பு என்பதற்கு இக் கலாசாரக் காரணிகள் பெரும் தடைகளாகவுள்ளன. 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 368 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர். இவர்களில் 42 பெண் வேட்பாளர்கள் போட்யிடிருந்தனர். ஆனால் இவர்களில் மூன்று பெண்கள் (Mohamed Rehan, Apr 22, 2024) மட்டுமே வெற்றி பெற்றனர் .

**பூட்டான்**

பூட்டானில் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட ஒப்பீட்டளவில் குறைவானதாகும். தேசிய சட்டமன்றம், தேசிய கவுன்சில் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு 8 சதவீதத்திற்கும் குறைவான பெண்கள் பரிந்துரைக்கப்பட்டுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்டங்கள் பெண்களுக்கு சமமான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை வழங்கியுள்ளது. ஆயினும் அரசியலில் பங்கேற்கும் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகும். இதற்குத் தீர்வு காணும் நோக்கில் பெண்களுக்கான ஆசன ஒதுக்கீட்டு முறைமை உருவாக்கப்பட்டது. இதன் பிரகாரம் அரசியல் கட்சிகள் 30 சதவீதத்தைப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பது தேர்தல் சட்டத்தில் இணைக்கப்பட்டது. ஆயினும் இத்தேர்தல் திருத்தச் சட்டம் தேசிய சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. பூட்டானில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டு 13.8 சதவீதமாகவும், 2013 ஆம் ஆண்டுத் தேர்தலில் 8.3 சதவீதமாக இருந்தது. இது 2018 ஆம் ஆண்டு 15.2 சதவீதமாக அதிகரித்தது (Ministry of Education & Skills Development, 19th Oct,2018).

**இலங்கையில் பாலின சமத்துவமும் பெண்களை வலுவூட்டுவதற்கான கொள்கைகளும்**

சட்டத்தின் முன் சமத்துவம், சமமான பாதுகாப்பு, பாலின பாகுபாடு இன்மை போன்றவற்றை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பு உறுதி செய்கிறது. பெண்கள், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர்களின் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்படும் சட்டங்கள், விதிகள் , ஒழுங்குமுறைகள் மற்றும் நிர்வாகச் செயல்களை அரசியல் யாப்புத் தடுக்காது (The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, சரத்து 12 உப சரத்து 4) கூறுகின்றது. இதன் மூலம் பாகுபாடு இல்லாத சமூகத்தை உருவாக்குவது என்பதை யாப்பு இலக்காகக் கொண்டுள்ளது எனக் கூறலாம்.

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல் யாப்பு பின்வருமாறு விபரிக்கின்றது. " இனம், மதம், மொழி, சாதி, பாலினம், அரசியல் கருத்து அல்லது தொழில் ஆகியவற்றின்

அடிப்படையில் தகுதியீனத்தை எந்தவொரு குடிமகனும் அனுபவிக்காதபடி சமவாய்ப்பை அரசு உறுதி செய்யும்" (The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, சரத்து 27 உப சரத்து 6). மேலும் பொருளாதார மற்றும் சமூக சலுகைகளையும் ஏற்றத்தாழ்வுகளையும், மனிதனால் மனிதன் அல்லது அரசால் மனிதன் சுரண்டப்படுவதையும் அரசு இல்லாதொழிக்க வேண்டும் (The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, சரத்து 27 உப சரத்து 7). ஆனால் இந்த விதிகளை நடைமுறைப்படுத்தவில்லை என்று எந்தவொரு நீதிமன்றத்திலும் அல்லது எந்தவொரு தீர்ப்பாயத்திலும் அரசிற்கு எதிராக மக்கள் குற்றம் சுமத்த முடியாது (The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, சரத்து 27) எனவும் அரசியல் யாப்பு கூறுகின்றது. எனவே இச்சரத்துத் தொடர்பான நீதித்துறை மறுஆய்வை அரசியல் யாப்பு அங்கீகரிக்கவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதன்மூலம் பாரபட்சமான சட்டங்களும், அடிப்படை உரிமைகளுடன் ஒத்துப்போகாத சட்டங்களும் இலங்கையில் உள்ளன என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது எனக் கூறலாம். ஆயினும் அரசியலில் பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்காக, 2017 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அரசாங்க சபைகளுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் பெண்களுக்கு 25 சதவீத ஆசன ஒதுக்கீட்டைக் கட்டாயப்படுத்தும் சட்டம் **(**Local Authorities Elections (Amendment) Act, No. 16 of 2017) இலங்கையில் இயற்றப்பட்டு நடைமுறைபடுத்தப்படுகிறது.

பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்கான அரச பொறிமுறை 1978 ஆம் ஆண்டு மகளிர் பணியகத்தை நிறுவியதன் மூலம் இலங்கையில் நடைமுறைக்கு வந்தது. தேசியளவில் பெண்கள் விவகாரங்களைக் கவனிப்பதற்கு 1985 ஆம் ஆண்டு மகளிர் அமைச்சு* நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு பெண்கள் சாசனம் (Women's Charter) உருவாக்கப்பட்டதுடன், பெண்கள் தேசியக் குழு (National Committee on Women - NCW) நிறுவப்பட்டது . 2000 ஆம் ஆண்டு பால் மற்றும் பால்நிலைசார்ந்த வன்முறைகள் (Sexual and Gender-based Violence -SGBV) தொடர்பாக வளர்ந்து வரும் கவலைகளை நிவர்த்தி செய்யக் காவல் நிலையங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் முறைப்பாடு செய்வதற்குத் தனியான அலுவலக அறைகள் நிறுவப்பட்டன . அதேபோன்று 2008 ஆம் ஆண்டு தொழிலாளர் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சில் பாலினப் பணியகம் நிறுவப்பட்டதுடன், இதன் அடிப்படையில் இலங்கை பாலின சமத்துவம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பின்வரும் உடன்படிக்கைகளை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டது.

- 1981 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 திகதி ஏற்றுக் கொள்ளப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை (Ratified UN Convention on the Elimination of All Forms of Discrimination against Women-CEDAW - 5 October 1981)
- 1995 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4-15 திகதிகளில் கையொப்பமிடப்பட்ட பீஜிங் செயல்பாட்டுத் தளம் (Signature to the Beijing Platform for Action -BPFA - 4- 15 September 1995 )
- 1991 ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறுவர்கள் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை **(**Ratified UN Convention on the Rights of the Child – 1991)

- 1993 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி இலங்கை ஏற்றுக் கொண்ட பாலின சமத்துவம் தொடர்பான பிரதான சர்வதேச தொழிலாளர் உடன்படிக்கை, 1951 ஆம் ஆண்டு (எண். 100) சம ஊதிய ஒப்பந்தம் (Sri Lanka ratified a key International Labour Convention on gender equality, the Equal Remuneration Convention, 1951 (No. 100) on 01 April 1993)
- 1994 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது இழிவான செயல் அல்லது தண்டனைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை (Sri Lanka acceded to the UN Convention against Torture and Other Cruel, Inhuman, or Degrading Treatment or Punishment on 3 January 1994)
- 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 திகதி CEDAW உடன்படிக்கையின் விருப்பநெறிகளை இலங்கை ஏற்றுக்கொண்டது (Sri Lanka acceded to the CEDAW Convention Optional Protocol on 15 October 2002)
- 2006 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 திகதி திட்டமிட்டுச் செய்யப்படும் நாடு கடந்த குற்றங்களுக்கு (பலேர்மோ (Palermo) உடன்படிக்கை) எதிரான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை (Ratified UN Convention against Transnational Organized Crime (Palermo Convention) on 22 September 2006)
- 2006 ஆம் ஆண்டு கள்ளக்கடத்தல் தொடர்பான விதிகள் 16 ஆம் இலக்கத் தண்டனைச் சட்டத் திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டன (Provisions related to trafficking were introduced by the Penal Code Amendment Act No. 16 of 2006)

**கலந்துரையாடலும் பகுப்பாய்வும்**

வளர்ந்து வரும் நாடு ஒன்று தனது நாட்டின் மனிதவளத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.மக்கள் அனைவரும் சமத்துவமாக நடாத்தப்படுவதுடன், சமவாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டும். இதற்காக விளிம்பு நிலையில் வாழும் மக்களாகிய பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஊனமுற்ற குடிமக்கள் மற்றும் குழுக்கள் தொடர்பாக அரசு செயல்திறன் மிக்க வகிபங்கினைக் கொண்டிருக்க வேண்டும். எனவே பால் நிலை உட்பட எந்தவொரு உடல் தகுதியீனத்தையும் கருத்தில் எடுக்காது அனைத்து மக்களுக்கும் சமவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

அடிப்படை உரிமைகள் தொடர்பாக அரசியல் யாப்பு வழங்கிய உத்தரவாதங்கள் சமூகச் சட்டங்களால் கட்டுப்படுத்துவதை இலங்கையில் காணலாம். அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் ஒத்துப்போகாத எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சமூகச் சட்டங்கள் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதை அரசியல் யாப்பு ஏற்றுக்கொண்டுள்ளது (The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka,சரத்து 16). இதற்கு உதாரணமாக தேசவழமைச் சட்டம், கண்டிய சட்டம் போன்றவற்றை கூறலாம். தேசவழமை சட்டம் வடமாகாணத்தில் வாழும் மக்களின் பொது வாழ்க்கையுடன் தொடர்பான விடயங்களை கூறுகின்றது. திருமணமான வடமாகாண பெண் தனது கணவனின் எழுத்துமூல அனுமதியின்றி நிலம், நிலத்துடன் கூடிய வீடு போன்ற தனது

அசையாச் சொத்துக்களை வாங்குவது அல்லது விற்பனை செய்வதை தேசவழமைச் சட்டம் கட்டுப்படுத்துகிறது.

இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் ஆண்களைப் போன்று பெண்களும் சம வாய்ப்புகளையும், சம உரிமைகளையும் அனுபவிக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் பெண்களை இரண்டாம் நிலையில் வைத்துப் பார்க்கும் சமூகப் பார்வை இதுவரை மாற்றமடையவில்லை எனப் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் இயக்கங்கள் குரலெழுப்புகின்றன. இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஆனால் இதில் பெண் வேட்பாளருக்கு எந்தவொரு கட்சியும் சந்தர்ப்பம் வழங்கவில்லை. இதனால் பெண்கள் வேட்பாளர்களாகப் போட்டியிடாத ஜனாதிபதித் தேர்தலாக இது பதிவு செய்யப்பட்டது. பாலின நோக்கில் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முழுமையாக ஆண்களிற்கு இடையிலான அதிகாரப் போராட்டத்திற்கான தேர்தலாக இருந்தது எனலாம்.

1931 ஆம் ஆண்டில் 21 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் உயர்குழாமினருக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் இக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வாக்குரிமையிலிருந்து விலக்கப்பட்டனர். பெண்கள் தமது சர்வசன வாக்குரிமைக்காக போராட வேண்டியிருந்தது. தங்கள் வாக்களிக்கும் உரிமையைக் கோரி டொனமூர் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பம் செய்தனர். இதன் விளைவாக உயர்குழாம் அரசியல் தலைவர்கள் சிலரின் எதிர்ப்பை மீறி பெண்களுக்கும் சமமாக வாக்குரிமை வழங்கப்பட்டது.

1931 ஆம் ஆண்டு அரசாங்க சபைக்கு (State Council) இரண்டு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது மொத்த அரசாங்க சபை உறுப்பினர்களில் 4 சதவீதமாகும். 1934 ஆம் ஆண்டு அரசாங்க சபைக்கு ஒரு பெண் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர் 1947 ஆம் ஆண்டு வரை அரசாங்க சபைக்கு பெண்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. 1947 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு 95 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் இடதுசாரி அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று பெண்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டனர். 1947 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான 77 ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கை 2.7 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது (பார்க்க அட்டவணை இல -01).

அட்டவணை – 01: சட்டசபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 1931-2024

| சட்டசபை | தேர்தல் ஆண்டு | மொத்த ஆசனம் | பெண்கள் ஆசனம் | % |
|---|---|---|---|---|
| 1 ஆம் அரசாங்க சபை | 1931-1935 | 58 | 2 | 3.4 |
| 2 ஆம் அரசாங்க சபை | 1936-1947 | 58 | 1 | 1.7 |
| 1 ஆம் நாடாளுமன்றம் | 1947-1952 | 101 | 3 | 3.0 |
| 2 ஆம் நாடாளுமன்றம் | 1952-1956 | 101 | 2 | 2.0 |
| 3 ஆம் நாடாளுமன்றம் | 1956-1959 | 101 | 4 | 4.0 |
| 4 ஆம் நாடாளுமன்றம் | மார்ச்-ஏப்ரல் 1960 | 157 | 3 | 1.9 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 ஆம் நாடாளுமன்றம் | யூலை,1960-1964 | 157 | 3 | 3.8 |
| 6 ஆம் நாடாளுமன்றம் | 1965-1970 | 157 | 6 | 3.8 |
| 7ஆம் நாடாளுமன்றம், மற்றும் 1ஆம் தேசிய அரசுப் பேரவை | 1970-1972, 1972-1977 | 157 | 6 | 6.5 |
| 2 ஆம் தேசிய அரசுப் பேரவை, மற்றும் 1 ஆம் நாடாளுமன்றம் | 1977-1978, 1978-1989 | 168 | 11 | 5.8 |
| 2 ஆம் நாடாளுமன்றம் | 1989-1994 | 225 | 13 | 5.3 |
| 3 ஆம் நாடாளுமன்றம் | 1994-2000 | 225 | 12 | 4.0 |
| 4 ஆம் நாடாளுமன்றம் | 2000-2001 | 225 | 9 | 4.4 |
| 5 ஆம் நாடாளுமன்றம் | 2001-2004 | 225 | 10 | 5.8 |
| 6 ஆம் நாடாளுமன்றம் | 2004-2010 | 225 | 13 | 5.8 |
| 7 ஆம் நாடாளுமன்றம் | 2010-2015 | 225 | 13 | 5.8 |
| 8 ஆம் நாடாளுமன்றம் | 2015-2020 | 225 | 13 | 5.8 |
| 9 ஆம் நாடாளுமன்றம் | 2020-2024 | 225 | 12 | 5.3 |
| 10 ஆம் நாடாளுமன்றம் | 2024-இன்றுவரை | 225 | 22 | 9.7 |

ஆதாரம்: நாடாளுமன்ற (கையேடு), இணையத்தளம்

இலங்கை அரசியல் பரிணாம வளர்ச்சியின் மற்றொரு கட்டமாகிய 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் அமைந்தது. இதில் 8,800 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்டனர் (The Morning, 11th Nov, 2024) . இத் தேர்தலில் மிகவும் குறைவான பெண்கள் வேட்பாளர்களாக போட்டியிட்டனர். ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டுத் தோல்வியடைந்த மக்கள் விடுதலை முன்னணி உட்பட பிரதான அரசியல் கட்சிகள் ஏனைய மாவட்டங்களை விட கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட சில பெண் வேட்பாளர்களைப் பரிந்துரைத்தன. இத்தேர்தலில் 9.7 சதவீதமான பெண்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் (பார்க்க அட்டவணை இல - 01).

தெற்காசிய நாடுகளின் நாடாளுமன்றத்தில் பெண்களின் அரசியல் பங்கேற்பு மிகவும் குறைந்தளவு சதவீதம் உள்ள நாடு இலங்கையாகும். ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் (2020-2024) பன்னிரெண்டு (12) பெண்கள் மாத்திரமே அங்கத்தவர்களாக இருந்தனர் (பார்க்க அட்டவணை இல -01). அவர்களில் சிலர் தற்போதைய பிரதம மந்திரி ஹரினி அமரசூரியா உட்பட தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்குச் சென்றிருந்தனர்.

2024 ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தியால் பரிந்துரைக்கப்பட்ட பெண் வேட்பாளர்களில் ஐந்து (5) பெண் வேட்பாளர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். இது மொத்த கொழும்பு மாவட்ட வேட்பாளர்களில் 23.8 சதவீதமாகும். கம்பகா மாவட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட 22 மொத்த வேட்பாளர்களில் மூன்று பேர்கள் மாத்திரமே பெண்களாகும். களுத்துறை மாவட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட 14 வேட்பாளர்களில் மூன்று பேர்கள் மாத்திரமே பெண்களாகும். இது மொத்த வேட்பாளர்களில் முறையே 13.6 மற்றும் 7 சதவீதமாகும்.கண்டி, மாத்தளை, பதுளை, காலி, குருநாகல் மாவட்டங்களில் தலா இரண்டு பெண் வேட்பாளர்கள் பரிந்துரைக்கப்பட்டனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்கள் தவிர, ஏனைய மாட்டங்களில் தலா ஒரு வேட்பாளர்கள் பரிந்துரைக்கப்பட்டனர் (பார்க்க அட்டவணை இல -02).

அட்டவணை – 02: நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பெண்கள்-2024

| மாவட்டங்கள் | போட்டியிட்ட பெண்கள் | வெற்றி பெற்ற பெண்கள் |
|---|---|---|
| கொழும்பு | 5 | 3 |
| களுத்துறை | 3 | 2 |
| கம்பகா | 3 | 1 |
| பதுளை | 2 | 1 |
| மாத்தறை | 1 | 1 |
| இரத்தினபுரி | 1 | 1 |
| கேகாலை | 1 | 1 |
| குருநாகல் ; | 2 | 1 |
| புத்தளம் | 1 | 1 |
| மொனராகல | 1 | 1 |
| கண்டி | 2 | 1 |
| காலி | 2 | 1 |
| அம்பாந்தோட்டை | 1 | 0 |
| மாத்தளை | 2 | 1 |
| நுவரெலியா | 2 | 2 |
| பொலநறுவை | 1 | 0 |
| அனுராதபுரம் | 1 | 0 |
| திகாமடுல்ல | 1 | 1 |
| திருகோணமலை | 1 | 0 |
| வன்னி | 1 | 0 |
| தேசியப்பட்டியல் | | 2 |
| மொத்தம் | **34** | **21** |

ஆதாரம்: தேர்தல் திணைக்களம்,2024

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையில் அனைத்து பிரதான அரசியல் கட்சிகளின் நியமன முறைகளைப் பகுப்பாய்வு செய்யும் போது, அவர்களின் நியமனப்பட்டியல் பிரேரணைகளில் பெண் வேட்பாளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாமையினை அவதானிக்க முடிகின்றது . பெண்கள் இலங்கையின் மக்கள் தொகையில் 52 சதவீதத்திற்கும், பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில் 56 சதவீதத்திற்கும் அதிகமாகவுள்ளனர். ஆனால் 2020 - 2024 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் சட்டபையில் ஐந்து (5) சதவீதமான பெண்கள் மாத்திரமே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தனர் (பார்க்க அட்டவணை இல 01).

ஆனால் அனைத்து அரசியல் கட்சிகளும் பெண்களை வேட்பாளர்களாகப் பரிந்துரைக்கத் தயங்குவதுடன், வேட்பாளர்களை நியமனம் செய்யும் அரசியல் கட்சிகளின் உயர்பீடங்களில் பொதுவாக ஆண்களின் ஆதிக்கம் காணப்படுகிறது. இது பெருமளவிற்குப் பெண்களை வேட்பாளர்களாக நியமனம் செய்வதில் கட்டமைப்பு சார்ந்த தடைகளையும், அலட்சியத்தையும் ஏற்படுத்தக் காரணமாகிறது. நாடாளுமன்றத் தேர்தல்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயப்படுத்தும் ஆசன ஒதுக்கீட்டுச் சட்டங்கள்

இன்றுவரை இயற்றப்படவில்லை என்பதையும் கருத்தில் எடுத்து பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் 262 வேட்பாளர்களில் (NPP) 34 பெண்களை வேட்பாளர்களாகப் பரிந்துரைத்தது. இது மொத்த வேட்பாளர்களில் 12.9 சதவீதமாகும். ஐக்கிய மக்கள் சக்தி (Samagi Jana Balawegaya-SJP) 15 பெண்களை வேட்பாளர்களைப் பரிந்துரைத்தது (பார்க்க அட்டவணை இல -02). தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இரண்டும் கூடுதலாகப் பெண்களுக்கு முறையே நான்கு இடங்களைத் தேசிய பட்டியல்களில் ஒதுக்கின (Editorial, 26th October, 2024)

தேர்தல் ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இறுதி வேட்பாளர்கள் நியமனபட்டியலில் இலங்கைப் பொதுஜன பெரமுன (Sri Lanka Podujana Peramuna-SLPP) பிரேரித்த மொத்த 252 வேட்பாளர்களில் 4 சதவீதமானவர்கள் மட்டுமே பெண்களாகும். ஐக்கிய மக்கள் சக்தி (SJB) பிரேரித்த மொத்த 262 நியமனங்களில் பெண்களுக்கு ஒன்பது (9) நியமனங்கள் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டது (Editorial, 26th October, 2024). இது 3.4 சதவீதமாகும். தேசிய மக்கள் சக்தி (NPP) பரிந்துரைத்த 262 நியமனங்களில் பெண்களுக்கு 16 நியமனங்களைப் பரிந்துரைத்தது (Editorial, 26th October, 2024). இது 6 சதவீதமாகும். இலங்கை தமிழ் அரசு கட்சி பரிந்துரைத்த 44 வேட்பாளர்களில் மூன்று (3) பெண்களை மட்டும் வேட்பாளர்களாகப் பரிந்துரைத்தது (Editorial, 26th October, 2024).

2010-2015 ஆம் ஆண்டிலிருந்து வேட்பாளர்கள் நியமன பட்டியலில் பிரதான அரசியல் கட்சிகள் பெண்களுக்கு 5 சதவீதத்தை மட்டுமே ஒதுக்கின (Editorial, 26th October, 2024). 2015 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (United People's Freedom Alliance-UPFA) பிரேரித்த 241 வேட்பாளர்கள் நியமனங்களில் 17 பெண்கள் மட்டுமே பரிந்துரைத்தது (Editorial, 26th October, 2024). இலங்கைத் தமிழரசுக்கட்சி (ITAK) 2015 ஆம் ஆண்டு தேர்தலில் அவர்கள் பரிந்துரைத்த 44 வேட்பாளர்களில் இரண்டு (2) பெண்களை மட்டும் வேட்பாளர்களாக நியமனம் செய்திருந்தது (Editorial, 26th October, 2024). அதேநேரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) பெண் வேட்பாளர்களாக எவரையும் பரிந்துரைக்கவில்லை.

2010 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (The United People's Freedom Alliance -UPFA) எட்டு (8) பெண்களையும், ஐக்கிய தேசியக் கட்சி பதினைந்து (15) பெண்;களையும், தமிழரசுக் ஒரு (1) பெண்ணையும் வேட்பாளராகப் பரிந்துரை செய்திருந்தது (Editorial, 26th October, 2024). மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதர கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டன.

மேற்கு மாகாணத்தில் பெரும்பாலும் கொழும்பு மற்றும் கம்பாஹா மாவட்டத்தில் பெண்கள் வேட்பாளர்களாகப் பரிந்துரைக்கப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் உவா மாகாணத்தில் பதுளை மாவட்டங்களில் கடந்த மூன்று தேர்தல்களில் எந்தவொரு பெண் வேட்பாளரும் பரிந்துரைக்கப்படவில்லை. கடந்த மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் கொழும்பு மாவட்டத்தில் ஐந்து (5) பெண் வேட்பாளர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர் (Editorial, 26th October, 2024).

பெரும்பாலான மாவட்டங்களில் திரும்பத் திரும்ப ஒரே பெண்கள் வேட்பாளர்களாகப் பரிந்துரைக்கப்படுகின்ற பண்பும் காணப்படுகின்றது. இவர்கள் தமக்கான வாக்கு வங்கிளை உருவாக்கி வைத்துள்ளனர். இது புதிய பெண் அரசியல்வாதிகளை ஊக்குவிக்கும் மனப்பாங்கு அரசியல் கட்சிகளிடம் வளராமல் இருப்பதற்குத் தடையாக உள்ளது. ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் (The Executive Director of the Institute for Democratic Reforms and Electoral Studies- IRES) நிர்வாக இயக்குனர் மஞ்ஜுளா கஜநாயக்க (Manjula Gajanayake) இது தொடர்பாக கூறும் போது "கடந்த கால பெண் வேட்பாளர்களின் பரிந்துரைகளை கட்டவிழ்த்துப் பார்த்தால் அதற்குள் பிரதான இரண்டு வடிவங்கள் இருப்பது தெரியும். பிரதான அரசியல் கட்சிகள் மிகக் குறைந்தளவு எண்ணிக்கையில் பெண் வேட்பாளர்களைப் பரிந்துரைத்தன. சுயேட்சைக் குழுக்கள் அதிகளவு பெண் வேட்பாளர்களைப் பரிந்துரை செய்திருந்தன. கடந்த தேர்தல்களில் ஏறக்குறைய 320 சுயேட்சைக் குழுக்கள் போட்டியிட்டிருந்தன. அவைகளின் வேட்பாளர்கள் பட்டியலில் அதிகமான பெண்கள் வேட்பாளர்களாகப் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் சிலருக்கு அவர்களின் வேட்பாளர் நியமனம் தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்ற முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன*" என்று கூறினார்.

தேசிய சமாதானப் பேரவை மன்றம் மற்றும் பவ்ரல் (PAFFREL) ஆகியவற்றின் ஆதரவுடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் (The Association of War Affected Women -AWAW) நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 25 சதவீத ஆசன ஒதுக்கீட்டை உறுதி செய்ய ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்தது. இச் சந்திப்பில் நாடாளுமன்றத்தில் பெண் வேட்பாளர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும், பெண்கள் அரசியலில் பங்கேற்க வேண்டிய காரணங்களையும் வலியுறுத்தும் அறிக்கை கையளித்தது. ஆனால் இது தொடர்பாக எவ்வித முன்னேற்றமும் இதுவரை ஏற்படவில்லை.

**முடிவுரை**

தெற்காசிய நாடுகளில் அரசியல் பங்கேற்பைக் கட்டுப்படுத்தும்,ஆழமாக வேரூன்றிய,சமூக நெறிமுறைகளைப் பெண்கள் எதிர்கொள்கின்றனர். பாலின அடிப்படையிலான வன்முறையின் நீட்சி, சமவாய்ப்பும், சந்தர்ப்பமும் இல்லாத கல்வி முறைமை, பாரம்பரிய பாலின வகிபங்கு போன்றன பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்கான கணிசமான தடைகளை ஏற்படுத்துகின்றன. பெண்கள் தொடர்பான அன்புறவுக் கோட்பாடுகளின் பற்றாக்குறை, அரசியல் கட்சிகளில் போதியளவு பிரதிநிதித்துவம் வழங்காமை, பெண்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டும் மனப்பாங்கு போன்றன பெண்களின் அரசியல் பங்கேற்பினைத் தடுக்கிறது. பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்கு அரசியல் வன்முறையும் தடையாகவுள்ளது. இதனால் பெண்கள் அரசியலில் பங்கேற்பதற்குத் தயங்குகிறார்கள்.

சமூகக்களங்கம், நிதித் தன்னிறைவின்மை, அரசியல் அனுபவமின்மை போன்ற காரணிகளால் அரசியல் பங்கேற்பில் பெண்கள் பெரும் தடைகளை எதிர்கொள்கின்றனர். ஓரங்கட்டப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் பெரும்பாலும் பாரம்பரிய அதிகாரச்

சமூகக் கட்டமைப்பிலிருந்து பெரும் எதிர்ப்பைச் சந்திக்கின்றனர். பாரம்பரிய அதிகாரச் சமூகக் கட்டமைப்பு ஓரம்கட்டப்பட்ட பெண்களின் தீர்மானம் எடுக்கும் செயல்முறைகளில் தங்கள் செல்வாக்கைப் பிரயோகிக்கின்றன.

இலங்கையின் அரசியலமைப்பு பாலின சமத்துவத்தைச் சட்டப்பூர்வமாக உறுதிப்படுத்துவதுடன், பாலின அடிப்படையிலான பாகுபாட்டையும் தடுக்கிறது. மேலும் பெண்களின் முன்னேற்றத்திற்கான சட்டம், ஒழுங்குமுறைகள் அல்லது நிர்வாக நடவடிக்கைகளின் மூலம் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நாட்டின் சட்டக் கட்டமைப்பானது அனைவரின் உரிமைகளையும் நிலைநிறுத்தத் தேவையான சட்டங்களையும், தீர்வுக்கான வழிமுறைகளையும் வழங்குகிறது. ஆயினும் முஸ்லிம் சட்டம் (ஷரீஆ), தேசவழமைச் சட்டம் மற்றும் கண்டியச் சட்டம் போன்ற தனிப்பட்ட சட்டங்கள் அல்லது சமூகச் சட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பினால் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை மீறுகின்றன என்ற விமர்சனங்களை மறுப்பதற்கில்லை.

அரசியல் கட்சிகளுக்குள் உட்கட்சி ஜனநாயகம் வளர்த்தெடுக்கப்படவில்லை. உட்கட்சி ஜனநாயகம் இல்லாத அரசியல் கட்சிகளுக்குள் பெண்கள் வேட்பாளர்களாக நியமனம் பெறுதலை ஆண்கள் இலகுவாகத் தோற்கடித்து விடுகிறார்கள். அரசியல் பங்கேற்பு என்பது மக்களுக்குச் சேவையாற்றும் உயர்ந்த பணி என்பதை விட பணம் சம்பாதிப்பதற்கான இலகுவான தொழில் என்ற மனப்பாங்கும் வளர்ந்துள்ளது. இதனால் பணம் சம்பாதிக்கும் தொழிலில் பெரும் போட்டி உருவாகியுள்ளது. ஆண்கள் இத்தொழிலைப் பெண்களுக்கு விட்டுக் கொடுக்க விரும்புவதில்லை.

அரசியலில் பெண்களின் சமமான பங்கேற்பு மற்றும் அவர்களின் பிரதிநிதித்துவம், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழித்தல் என்பன ஐ.நா சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இவைகளை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் நோக்கில் இதில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது. ஆணாதிக்கச் சமூகத்தில் இயல்பாக இருக்கக் கூடிய ஆதிக்கச் சிந்தனையினால் தீர்மானம் எடுக்கும் செய்முறையில் பெண்களுக்குரிய இடம் அல்லது அந்தஸ்த்துத் தொடர்ந்தும் மறுக்கப்படுவதாகப் பொது அபிப்பிராயம் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தன்று சர்வதேசளவில் நடத்தப்படும் நிகழ்வுகளில் இலங்கையும் பங்கெடுத்துப் பெண்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் தொடர்பாக விவாதிக்கின்றது. மேலும் பெண்களின் உரிமைகள், சுதந்திரங்கள் தொடர்பான நிகழ்வுகள் பல்வேறு ஊடகங்களிலும் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஆனால் பெண்களின் அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் இலங்கையில் மிகவும் மெதுவான வேகத்தில் நடைபெறுகின்றன. ஆயினும் பெண்களுக்கு வலுவூட்டுதல் மூலம் குறிப்பிடத்தக்க விளைவுகள் கிடைக்கவில்லை என ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையின் வரலாறு முழுவதிலும் பெண்கள் அரசியலில் பங்குகொள்ளாமை அல்லது ஒரு சிலர் மட்டும் பங்குகொள்கின்றமை தொடர்ச்சியான பிரச்சினையாக இருந்து வருகிறது. இதனால் இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமும், தலைமைத்துவமும் குறைவாக உள்ளது.

பெண்களின் வரலாறு பெண்களால் எழுதப்படவில்லை. பதிலாக ஆண்களால் எழுதப்படுகிறது. பெண்கள் தங்கள் சொந்த வரலாற்றை எழுத முன்வருமாறு பெண்கள் இயக்கங்கள் வலியுறுத்தின. இந்த அழைப்பு வெறுமனே தேர்தலில் அணிவகுத்து, பிரச்சாரம் செய்து வாக்களிக்கும் நிகழ்வுடன் நின்றுவிடமுடியாது. பதிலாக நாடாளுமன்றத்தில் அரசியல் தீர்மானங்கள் எடுக்கும் நிகழ்வுகளில் பங்கேற்கும் நிகழ்வுகளாகவும் மாற்றமடைய வேண்டும். பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியலில் பெண்களின் பங்கேற்பு யதார்த்தமாக இருக்க வேண்டும். அதிக கல்வியறிவு விகிதம் உள்ள இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சராசரியாக 5-6 சதவீதம் பேர் மட்டுமே பெண்களாக உள்ளனர். இது இலங்கையின் ஜனநாயகம் மற்றும் பாலின சமத்துவத்தின் மீதுள்ள நீடித்த கறை எனக் கூறலாம். இச் சமநிலையின்மையைச் சரிசெய்யப் பெண்கள் மற்றும் ஆண்களுக்குப் போதுமான அறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வுச் செயலூக்க நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

## References


Background Paper the Elections Act, 2017 an Overview Background Paper. (2018). Pakistan Institute of Legislative Development and Transparency . https://pildat.org/wp-content/uploads/2018/05/TheElectionsAct2017_AnOverview.pdf?

Bano, S. (2009). Women in Parliament in Pakistan: Problems and Potential Solutions. Women's Studies Journal, 23, 19–35. https://wsanz.org.nz/journal/docs/WSJNZ231Bano19-35.pdf

CIR Web Editor. (2024, October 26). SERIES: Parliamentary Elections 2024 – Where have all the women gone? | CIR. Cir.lk. https://cir.lk/2024/10/26/series-parliamentary-elections-2024-where-have-all-the-women-gone/

Compilation of Venice Commission Opinions and Reports concerning Political Parties (revised in October 2021). (2021). Venice Commission. https://www.coe.int/en/web/venice-commission/-/CDL-PI(2021)016rev-e

Dhaneshi, Y. (2014, November 11). Women's political representation: Less women in politics, democratically wrong. The morning; Liberty Publishers (Pvt) Ltd. https://www.themorning.lk/articles/Jh2CfC7Nna55HkRYSAcs

Female representation drops, only 3 MPs elected. (2025). SunOnline International. https://en.sun.mv/88906

Halder, N. (2004, June). Female Representation In Parliament: A Case Study From Bangladesh. New Zealand Journal of Asian Studies 6, 1 (June 2004): 27-63. https://citeseerx.ist.psu.edu/document?repid=rep1&type=pdf&doi=3cfda7a9888b75d8e500a021f124bcea0aecd650

Impact Of Electoral Systems On Female Political Representation (5) - Differential Impact Of Electoral Systems On Female Political Representation. (n.d.). Www.europarl.europa.eu. https://www.europarl.europa.eu/workingpapers/femm/w10/4_en.htm

Maliha Zia. (2013, November). *2013 elections - women's representation in legislatures*. Legislative Watch; AURT Foundation. https://www.af.org.pk/newsl/1390295273.pdf

Ministry of Education & Skills Development. (2018, October 19). Congratulating Seven Women (elect) members and all other elect members of the National Assembly. National Commission for Women and Children. https://www.ncwc.gov.bt/notifications/289

National Assembly (July 2018). Election results. Pakistan. IPU Parline: global data on national parliaments. (2018). IPU Parline: Global Data on National Parliaments. https://data.ipu.org/parliament/PK/PK-LC01/election/PK-LC01-E20180725/

National Assembly Secretariat. (n.d.). PARLIAMENTARY HISTORY. National Assembly of

Pakistan; Directorate General of Information Technology. Retrieved March 26, 2025, from https://www.na.gov.pk/en/content.php?id=75

Parliament of The Democratic Socialist Republic of Sri Lanka. (2017, August 17). Local Authorities Elections (Amendment) Act, No. 16 of 2017. A Supplement to Part II of the Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka. https://elections.gov.lk/web/wp-content/uploads/publication/acts/16-2017_E.pdf

Rai, M. (2024, January 13). Challenges and Aspirations: A Closer Look at Women's Representation in Bhutanese Politics in backdrop of NA results. The Bhutanese. https://thebhutanese.bt/challenges-and-aspirations-a-closer-look-at-womens-representation-in-bhutanese-politics-in-backdrop-of-na-results/

Secretary, National Assembly of Pakistan. (2018, May 31). The Constitution of The Islamic Republic of Pakistan. https://www.na.gov.pk/uploads/documents/1549886415_632.pdf

The Constitution of Sri Lanka. (2023). The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka. Parliament Secretariat. https://www.parliament.lk/files/pdf/constitution.pdf

The Constitution of Nepal. (2015). https://ag.gov.np/files/Constitution-of-Nepal_2072_Eng_www.moljpa.gov_.npDate-72_11_16.pdf

The Gazette of India Extraordinary Part Ii-Section 1 Published By Authority. (N.D.). https://cdnbbsr.s3waas.gov.in/s316026d60ff9b54410b3435b403afd226/uploads/2023/02/2023022123-1.pdf

The Law Advice - Articles - Women's Reservation in India: An Overview. (2024). Thelawadvice.com. https://www.thelawadvice.com/articles/woman-reservation-in-india-an-overview

Total women winners: Lok Sabha 2019 Election. (2019). Myneta.info. https://www.myneta.info/LokSabha2019/index.php?action=summary&subAction=winner_women&sort=candidate

UNDP Sri Lanka Country Office 2023-2027. (n.d.). https://www.undp.org/sites/g/files/zskgke326/files/2024-05/gender_equality_strategy.pdf

UN Women for All Women And Girls. (n.d.). About UN Women. UN Women. Retrieved March 26, 2025, from https://www.unwomen.org/en/about-us/about-un-women

United Nations Inter-Parliamentary Union. The Convention on the Elimination of All Forms of Discrimination against Women and its Optional Protocol Handbook for Parliamentarians. (n.d.). https://www.un.org/womenwatch/daw/public/handbook_parliamentarians_cedaw_en.pdf

# ஈழத்துச் சிறுவர் கதைகள்: சிறுவர் உளவியல் நோக்கிலான ஆய்வு

கலாநிதி த.மேகராசா
விரிவுரையாளர்
தமிழ் கற்கைகள் துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
megarajaht@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்து இலக்கியச் செல்நெறியில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து வளர்ச்சியடையத் தொடங்கிய ஒரு செல்நெறியாகச் சிறுவர் இலக்கியம் காணப்படுகின்றது. எனினும் கவிதை, நாவல், சிறுகதை முதலான நவீன இலக்கிய வடிவங்களுடன் ஒப்பிடுகின்றவிடத்து விருத்தியடையாத ஒரு பிரிவாகவே சிறுவர் இலக்கியம் உள்ளது. சிறுவர் இலக்கியங்களுள்ளும் சிறுவர் பாடல்கள் ஓரளவு வளர்ச்சிபெற்றிருப்பதைக் காணலாம். சிறுவர் கதைகள், சிறுவர் கதைப்பாடல்கள் முதலானவை குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய அளவிற்கு வளர்ச்சிபெறவில்லை. சிறுவர் கதைகள் என்ற அடிப்படையில் ஏராளமான ஆக்கங்கள் வெளிவந்துள்ளபோதிலும் சிறுவர்களின் உளவியலைக் கருத்திற்கொண்டு சிறந்தமுறையில் எழுதப்பட்டமை மிகமிகக் குறைவாகவே உள்ளன. சிறுவர் இலக்கியம் குறித்த ஆய்வுகளும் சிறந்த முறையில் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய பின்புலத்திலேயே சிறுவர் கதைகள் குறித்த உளவியல் நோக்கிலான ஆய்வு என்பது தேவையானதாக அமைகின்றது. அவ்விதத்திலேயே ஈழத்துச் சிறுவர் கதைகளை உளவியல் நோக்கில் ஆராய்ந்து அக்கதைகளின் பலமென்ன, பலவீனமென்ன என்பதை எடுத்துக்கூறுவதை நோக்கமாகக்கொண்டு பகுப்பாய்வு மற்றும் விமர்சன முறையியல்களுக்கு அமைய இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஈழத்தில் வெளிவந்துள்ள சிறுவர் கதைகளில் பெரும்பாலானவை முதியவர்களின் மனநிலையை வெளிப்படுத்துகின்ற வகையிலேயே அமைந்துள்ளன. சிறுவர்களின் மனநிலை, கற்பனைத் திறன், சொற்பயன்பாடு முதலானவற்றைக் கவனத்திற்கொண்டு எழுதப்பட்டவை குறைவாகவே உள்ளன. அதன்காரணமாகவே ஈழத்தில் இன்னும் விருத்தியடையாத ஒரு இலக்கியப் பிரிவாகச் சிறுவர் இலக்கியம் காணப்படுகின்றது என்பதையும் சிறுவர் உளவியல் குறித்த கரிசனையுடன் சிறுவர்களுக்கான இலக்கியம் படைக்கப்படுவதுடன் சிறுவர் இலக்கியங்களையும் உளவியல் நோக்கில் அணுகுகின்ற ஆய்வுகள் வெளிவரவேண்டும் என்பதையும் எடுத்துக்கூறுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

திறவுச்சொற்கள்: சிறுவர் இலக்கியம், சிறுவர் கதைகள், சிறுவர் உளவியல், சிறுவர் இலக்கிய ஆய்வுகள்

**அறிமுகம்**

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து வளர்ச்சிபெறத்தொடங்கிய ஒரு செல்நெறியாக சிறுவர் இலக்கியத்தை அடையாளப்படுத்தமுடியும். எனினும் ஈழத்து இலக்கியச் சூழலில் நவீன கவிதை, நாவல், சிறுகதை முதலானவற்றுடன் ஒப்பிடுமிடத்து சிறுவர் இலக்கியம்

காத்திரமானதொரு வளர்ச்சிநிலையை எட்டவில்லையென்றே குறிப்பிடமுடியும். குறிப்பாக சிறுவர் பாடல் துறை ஓரளவு வளர்ச்சிபெற்றுள்ளபோதிலும் சிறுவர் கதைகள், சிறுவர் கதைப்பாடல்கள் ஆகியவை படைப்புநிலை சார்ந்தும் ஆய்வு சார்ந்தும் வளர்த்தெடுக்கப்படாதவையாகவே உள்ளன. சிறுவர் இலக்கியப் படைப்பாக்கத்திலும் ஆய்விலும் சிறுவர் உளவியல் குறித்த கரிசனை இன்றியமையாததாகும். சிறுவர் கதைகள் என்ற அடிப்படையில் ஏராளமான ஆக்கங்கள் வெளிவந்துள்ளபோதிலும் அவை அனைத்தும் சிறுவர்களின் உளவியலைக் கருத்திற்கொண்டு அமைந்துள்ளன என்று கூறமுடியாதுள்ளது. உளவியலை முன்னிறுத்திய காத்திரமான விமர்சன ஆய்வினூடாகவே சிறந்த சிறுவர் இலக்கியச் செல்நெறியை முன்னெடுக்கமுடியும் என்ற அடிப்படையிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### ஆய்வுப் பிரச்சினைகள்

சிறுவர் கதைகள் குறித்து உளவியல் நோக்கிலான காத்திரமான ஆய்வுகள் வெளிவந்துள்ளனவா என்பதே ஆய்வுப்பிரச்சினையாகும். குறிப்பாக சிறுவர் கதைகளும் சிறுவர் கதைகள் குறித்த சில ஆய்வுகளும் ஈழத்திலே வெளிவந்துள்ளபோதிலும் அவை உளவியல் நோக்கில் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. இதனால் சிறந்ததொரு சிறுவர் கதைக்கான தளத்தை உருவாக்கமுடியவில்லையென்பதே இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினையாகும்.

### ஆய்வு நோக்கமும் முறையியலும்

ஈழத்துச் சிறுவர் கதைகளை உளவியல் நோக்கில் ஆராய்ந்து அக்கதைகளின் பலமென்ன, பலவீனமென்ன என்பதை எடுத்துக்கூறுவதை நோக்கமாகக்கொண்ட இவ்வாய்வானது பகுப்பாய்வு மற்றும் விமர்சன முறையியல் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

### இலக்கிய மீளாய்வு

ஈழத்துச் சிறுவர் கதைகளை மையப்படுத்தி உளவியல் நோக்கிலான ஆய்வுகள் மிகவும் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சஞ்சீரா சிவகுமாரின் 'சிறுவர் இலக்கியத்தில் அறிவியல் புனைகதைகள்' என்ற கட்டுரை அறிவுத் தேவை, பொழுதுபோக்குத் தேவை, கலை ஆர்வம், ஈடுபாடு, இரசனை என்பவற்றை நோக்காகக்கொண்டு சிறுவர் இலக்கியங்கள் ஆக்கப்படவேண்டும் என்பதை எடுத்துக்கூறி, சிறுவர் உளவியலுக்கு ஏற்றபடி கதைகூறும் மரபு பலவீனமாகவே உள்ளது என்பதை முன்வைக்கின்றது. தொடர்ந்து அறிவியல் புனைகதைகளின் அவசியத்தை எடுத்துக்கூறி, மூடக்கொள்கைகள் சிறுவர் மனதில் படிமமாகப் படிவதை ePf;கும் வகையிலும் புதிய விஞ்ஞான ரீதியான தகவல்களையும் சிந்தனைகளையும் சிறுவர் மனதில் பதிக்கின்ற வகையிலும் அறிவு பூர்வமான பழக்கவழக்கங்களுக்குச் சிறுவர்களைப் பழக்குகின்ற வகையிலும் ஆராய்ச்சி மனப்பாங்கையும் முனைப்பூக்கத்தையும் ஏற்படுத்துகின்ற வகையிலும் சிறுவர்களுக்கான அறிவியல் புனைகதைகள் அமையவேண்டும் என்பதையும் எடுத்துக்கூறுகின்றது.

செ.யோகராசா எழுதிய 'பேராசிரியர் சபா ஜெயராசாவும் ஈழத்தில் சிறுவர் இலக்கியமும்' என்ற கட்டுரை முக்கியமானதாகும். சபா ஜெயராசாவின் பாலர் பள்ளிப்பாடல்(1979), பாலர் கல்விப்பாடல் (1998), பாலர் கதைகள் (1999), ஆகிய தொகுப்புக்களை முன்வைத்து சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு இலக்கியம் படைத்த முக்கியமான ஆளுமை சபா ஜெயராசா என்பதை நிறுவுகின்ற வகையில்

இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர ஈழத்துச் சிறுவர் கதைகளை உளவியல் நோக்கில் நுண்மையாக எடுத்துக்கூறுகின்ற ஆய்வுகள் இடம்பெறவில்லை.

### ஆய்வுப் பொருளும் கலந்துரையாடலும்

### சிறுவர் கதைகள்

அச்சுப் பண்பாடும் பொழுதுபோக்குச் சாதனங்களும் விருத்திகண்டிராத சூழலில் கதைகூறலும் கதைகேட்டலுமே முதன்மையான பொழுதுபோக்காகவும் அதேவேளை அறிவு விருத்திக்கான தளமாகவும் அமைந்தன. இப்பின்புலத்தில் சிறுவர்களுக்கான ஆர்வங்களுள் ஒன்றாக கதைகேட்டல் அமைந்தமையால் எழுத்து மரபுக்குப் புறம்பாக உலக நாடுகளில் கதைகூறல் மரபு முக்கியத்துவம்பெற்று விளங்கியதெனலாம். வீடுகளில் வயதான பெரியவர்கள் குறிப்பாகத் தாத்தாமார், பாட்டிமார் கதைசொல்லிகளாகவும் அவர்களின் பேரக்குழந்தைகள், பிள்ளைகள் கதைகேட்பவர்களாகவும் இருப்பதைக் காணலாம். இக்கதை கூறல் மரபினூடாகப் பல்வேறு மனிதப் பண்புகளை குழந்தைகளிடையே வளர்க்க அவர்கள் முயன்றனர். அச்சுப் பண்பாடு வளர்ச்சியடைந்த நிலையில் இலக்கிய ஆக்கங்கள் பெருமளவில் வெளிவரத் தொடங்கியபோது சிறுவர்களுக்கான கதை நூல்கள் பல வெளிவரத்தொடங்கின. இவை சிறுவர்களைக் கவர்வதையும் சிறுவர்களை நல்வழிப்படுத்துவதையும் அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதையும் மகிழ்விப்பதையும் பிரதான நோக்கங்களாகக்கொண்டு எழுதப்படலாயின. அத்தகைய சூழலில் சிறுவர்களின் வயது, மனநிலை, ஆர்வங்கள், கற்பனைத் திறன், எழுத்தறி திறன் முதலானவற்றைக் கருத்திற்கொண்டு சிறுவர்களுக்கான கதைகள் அமைவது அவசியம் என்ற கருத்து உலக அளவில் முக்கியத்துவம்பெற்றது.

ஈழத்தில் சிறுவர் கதைகளின் முன்னோடியாக ஆறுமுகநாவலரைக் குறிப்பிடமுடியும். ஆங்கிலேயரின் காலத்தில் ஈழத்தில் நவீன கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில் மாணவர்களுக்குக் கற்பிக்கும்பொருட்டு பாட நூல்கள் ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய பணியில் ஈடுபட்ட ஆறுமுக நாவலர் வெளியிட்ட பால பாடநூல்கள் ஈழத்துச் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி முயற்சிகளாகவுள்ளன. குறிப்பாக சிறுவர்களுக்கான கதைகள் பலவற்றை ஆறுமுகநாவலர் வெளியிட்டு அக்காலத்தில் பெரும்சாதனை நிகழ்த்தினார். அவரது இரண்டாம் பாலபாடம் என்னும் நூலில் இருபத்தொரு கதைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அளவிற் சிறியனவாகவும் சிறுவர்களுக்கு ஏற்றனவாகவும் இவர் வெளியிட்ட பெரும்பாலான கதைகள் காணப்படுகின்றன.

ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் நன்னெறிக்கதாசங்கிரகமும் ஈழத்துச் சிறுவர் இலக்கிய முயற்சிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். குமாரசுவாமிப்புலவர் சிறுவர்களுக்காக கீதோபதேசத்தையும் இளைஞர்களுக்காகச் சிசுபாலசரிதம் என்ற கதை நூலையும் எழுதியுள்ளார். பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி (அழகு சுந்தரதேசிகர்) இராமன் கதை, பாண்டவர் கதை ஆகிய நூல்களை ஆக்கியுள்ளார். இவற்றின் மொழிநடையும் கதைசொல்லல் முறையும் சிறுவர் கதைகளுக்கான ஆரம்ப முயற்சிகளென்பதைக் காட்டுகின்றன. இவர்களைத் தவிர முன்னோடிகள் என்ற வகையில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பண்டிதர் சு.வேலுப்பிள்ளை, பஞ்சாட்சரசர்மா முதலானோரும் சிறுவர் கதைகளை வெளியிட்டுள்ளனர். தொடர்ந்து செங்கை ஆழியான், ச.அருளானந்தம், த.துரைசிங்கம், செ.யோகநாதன், சபா ஜெயராசா, ஓ.கே.குணநாதன், மாஸ்டர் சிவலிங்கம், பி.பி.அந்தோனிப்பிள்ளை, அகளங்கன், ச.அருளானந்தம், யோ.சத்யன், பத்மா இளங்கோபன், முதலானோரின் சிறுவர் கதை நூல்கள் பல வெளிவந்துள்ளன. இன்றும் இளையவர்களின் பல கதைத் தொகுதிகள்

வெளிவந்துகொண்டிருக்கின்றன. தரம் தரமின்மை என்பதற்கு அப்பால் அச்சுப் பண்பாடும் இணையவழி வெளிப்பாட்டு வசதிகளும் விருத்தியடைந்துள்ள இன்றைய காலத்தில் அதிகமான சிறுவர் கதை நூல்கள் வெளிவருகின்றன.

**சிறுவர் கதைகளின் பொருண்மைகள்**

சிறவர் உளவியல் சார்ந்த கோட்பாடுகள், கருத்துநிலைகளின் அடிப்படையில் சிறுவர் சிறுகதைகளின் பொருண்மைகள் பின்வருமாறு ஆராயப்படுகின்றன:

**அறிவாற்றல் வளர்ச்சி**

சிறுவர் இலக்கியங்கள் அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தும் கருவிகளாக நோக்கப்படுகின்றன. வைகோட்ஸ்கியின் சமூக மேம்பாட்டுக் கோட்பாடு (1978) அறிவாற்றல் வளர்ச்சியில் சமூகத் தொடர்பு அடிப்படையானது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய சமூகத் தொடர்புகளைப் புரிந்துகொள்ள சிறுவர் கதைகள் உதவுகின்றன. குறிப்பாகச் சிறுவர் கதைகள் சமூகமேம்பாட்டுக்கும் கற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பங்களிப்புச்செய்கின்றன.

அறிவு விருத்தியை ஏற்படுத்தும் நோக்கு வெறுமனே பிரசாரப் பாங்கானதாக அன்றி குழந்தைகளின் உளத்தன்மைக்கு ஏற்றதாக அமைதல் இன்றியமையாததாகும். சிறுவர்களின் அறிவு வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்றதான கதைகளை உருவாக்குவதில் குழந்தை உளவியல் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாகச் சிறுவர்கள் தத்தமது பருவ வயது நிலைகளுக்கு ஏற்ப வெவ்வேறு கருத்துநிலைகளை, உணர்வு நிலைகளை, ஆர்வங்களைக் கொண்டிருப்பர். அதற்கு ஏற்ற வகையில் கதைகளை ஆக்குகின்றபோது அக்கதைகள் சிறுவர்களால் விரும்பப்படுவனவாகவும் அவர்களின் அறிவாற்றலை மேம்படுத்துவனவாகவும் அமையும். குழந்தைகளின் அறிவாற்றல் திறன்கள் வயதுநிலைகளுக்கு ஏற்ப உருவாகின்றன. ஜீன் பியாஜேயின் அறிவாற்றல் வளர்ச்சிக் கோட்பாடு (1952) குழந்தைகள் அறிவுசார் வளர்ச்சியின் வெவ்வேறு நிலைகளைக் கடந்து செல்கின்றமையை எடுத்துக்கூறுகின்றது. சிறுவர்களின் கவனத்தை ஈர்க்கவும் கற்றலை வளர்க்கவும் கதைகள் அறிவுசார் வளர்ச்சி நிலைகளுடன் ஒத்துப்போக வேண்டும். இரண்டு வயதுக்குட்பட்டோருக்கு பிரகாசமான விளக்கப்படங்கள் கொண்ட புத்தகங்கள் உணர்ச்சி அனுபவங்களைத் தூண்டச்செய்கின்றன. இரண்டு தொடக்கம் ஏழு வயதுக்குட்பட்டோருக்கான கதைகள் எளிமையானதாகவும் குறுகியதாகவும் காட்சிகளைப் பெரிதும்கொண்டதாகவும் விசித்திரமும் கற்பனை நயமும் நிறைந்ததாகவும் இருத்தல் அவசியமாகும். ஏழு தொடக்கம் பதினொரு வயதுக்குட்பட்டோருக்கு தர்க்கரீதியான வரிசைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் கூறுகளைக் கொண்ட கதைகள் ஏற்புடையனவாக அமையும். இத்தகைய கதைகள் விமர்சன சிந்தனையை மேம்படுத்த வழிவகுக்கின்றன. பதினொரு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு சுருக்க கருப்பொருள்களைக் கொண்ட சிக்கலான விவரிப்புகள் உயர் மட்ட பகுத்தறிவுத் திறன்களை வளர்க்க உதவுகின்றன.

குழந்தைகளின் அறிவு வளர்ச்சி முளையிடும் முதலிடமாக வீட்டுச் சூழலே அமைகின்றது. அதற்கு அடுத்தபடியாகவே பாடசாலை முக்கியம்பெறுகின்றது. வீட்டில் தாய் தந்தையர் தமது நூலறிவையோ, அனுபவ அறிவையோ பக்குவமாகத் தமது குழந்தைகளுக்குக் கடத்துவது சிறந்ததாகும். இப்பின்புலத்தில் ச.அருளானந்தத்தின் ‘விண்கலம் செய்வோம்’ என்ற கதை முக்கியம்பெறுகின்றது. அப்பாவும் பிள்ளைகளும் விண்கலம் ஒன்றினைச்செய்து பரீட்சித்துப்பார்ப்பதாக அமைந்த இக்கதை விஞ்ஞானபூர்வமான அறிவைச் சிறுவர்களுக்கு ஊட்டக்கூடியதாகவுள்ளது. சிறுவர்களுக்குச் சூழலில் வாழும் உயிரினங்கள் பற்றிய அறிவு அவசியமானதாகும்.

அதேவேளை அதனைச் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் முன்வைப்பதும் முக்கியமானதாகும். செ.யோகநாதனின் 'தங்கத்தாமரை' என்ற சிறுகதை கடலில் வாழும் உயிரினங்கள் பற்றிச் சிறுவர்கள் அறிந்துகொள்ளும் வகையிலும் சிறுவர்களுக்கு ஏற்புடைய வகையிலும் எழுதப்பட்டுள்ளது. தாயொருத்தி காலை வேளையில் தன்மகளிடம் கடலில் வாழும் மிருகங்கள் பற்றியும் மீன்களைப் பற்றியும் தெரிவித்து, மாலை நேரம் கடற்கரைக்குச் செல்வோம் என்றும் கூறுகின்றாள். அதனைக்கேட்டுவிட்டு நித்திரையாகிய சிறுமி கனவிலே கடல் ராஜாவோடு உரையாடுவதாகவும் கடல் ராஜாவின் முதுகில் ஏறி கடலுக்குச் சென்று தன் தாய் கூறிய கடல் வாழ் உயிரினங்களைக் காண்பதாகவும் எழுதப்பட்டுள்ளது.

எதையும் நடைமுறைச் சாத்தியப்பாடுடையதாக மாற்றிக் கொண்டு முன்னேறுவதற்குரிய சமயோசித ஆற்றல் சிறுவர்களிடையே கட்டியெழுப்பப்படவேண்டும். இன்று பலர் வாழ்வில் முன்னேறுவதற்கு வழி எதுவும் இல்லையே என்று முடங்கிக்கிடக்கின்ற நிலை காணப்படுகின்றது. பொருளீட்டுவதாயின் அதிக முதலீடு வேண்டும் என்றே பலரும் கருதுகின்றனர். அத்தகையோருக்கும் வழிகாட்டும்வகையில் அமைந்துள்ளது பஞ்சாட்சரசர்மாவின் 'எலிக்குன்சுச்செட்டியார்' என்ற கதை. ஒருவர் செத்துப்போன எலியை மூலதனமாகக்கொண்டு வசதியானவராக மாறியமையை இக்கதை எடுத்துக்கூறுகின்றது. குறிப்பாக முயற்சியும் புத்திசாதூரியமும் இருந்தால் வாழ்வில் முன்னேற்றமடையலாம் என்பதை ஆசிரியர் கூறவிழைந்துள்ளார். சிறுவர்களுக்கு ஏற்ற மொழியிலும் நம்பிக்கைச் சலிப்பு ஏற்படாமலும் ஆசிரியர் இக்கதையை எழுதியுள்ளமை சிறப்பானதாகும்.

அறிவு வளர்ச்சி, புத்திசாலித்தனம் என்பவற்றை வெளிப்படுத்தி சிறுவர்களிடையே சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தும் பாங்கிலான கதைகள் நம்பகத்தன்மை கொண்டதாக அமைவதும் முக்கியமானதாகும். கதை நகர்வு நம்பகத்ன்மையினையும் கருத்தியல் குழப்பத்தினையும் ஏற்படுத்துமாயின் அக்கதை இறுதியில் எதனையுமே தரப்போவதில்லை. எம்.எம்.மன்ஸூரின் 'குள்ளன்' என்ற கதை பல்வேறு திருப்பங்களும் விசித்திரங்களும் நிறைந்ததாக எழுதப்பட்டிருப்பினும் குள்ளனின் அறிவுத்திறனையும் புத்திசாலித்தனத்தையும் புலப்படுத்துவதாக அமைந்தாலும் இறுதியில் பல்வேறு குழப்பங்களுக்கு இட்டுச்செல்வதாகவும் மனச்சலிப்பினை உண்டுபண்ணுவதாகவுமே அமைந்துள்ளது. குள்ளன் என்ற அந்தச் சிறுவனின் உளவியல் கவனத்திற்கொள்ளப்படவில்லை. அதேவேளை இக்கதையினை வாசிப்பவர்களின் மனநிலை பற்றியும் பொருட்படுத்தப்படவில்லை. குழந்தையில்லாத பெண்ணொருத்தி தனக்கு விரலின் அளவிலாவது ஒரு குழந்தை பிறந்தால் போதும் என்று எண்ணுவதும் சில நாட்கள் செல்ல அவள் கர்ப்பம் தரித்து விரலளவிலான சிறியதொரு குழந்தையைப் பெற்றெடுப்பதும் அக்குழந்தை சற்று வயதாகி தந்தை சென்ற காட்டுக்கு வண்டில் ஓட்டிச் செல்வதும் வண்டில் யாருமின்றிச் செல்கின்றதென்று பார்க்கும் இளைஞர்கள் இருவர் ஆச்சரியப்படுவதும் அக்குழந்தையை காட்சிப்படுத்தி நல்ல பணம் சம்பாதிக்கலாம் என்று அவ்விருவரும் கருதி அக்குள்ளனின் தந்தையிடம் விலையாகக் கேட்பதும் தான் பணத்தைப் பெற்றுவிட்டு தப்பி வந்துவிடுவேன் என்று அக்குள்ளாகிய சிறுவன் கூறவும் அவனை விற்பதும் அதன் பின் அவன் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வீட்டுக்கு வந்து சேர்வதுமாக இக்கதை அநைதுள்ளது. மாடு புல் மேய்ந்தபோது மாட்டின் வயிற்றுக்குள் குள்ளன் செல்வதும் பின் மாட்டின் சாணத்தோடு வெளியே அக்குள்ளன் வருவதும் போன்ற முற்றிலும் நம்ப முடியாத பாங்கிலும் இக்கதை நகர்த்தப்பட்டுள்ளது. முற்கூறியதுபோன்று ஆச்சரியங்களும் திருப்பங்களும் கொண்ட கதையாக இது

அமைந்திருப்பினும் குழந்தைகளின் சுய அறிவுத்தளத்திற்கு அப்பாற்பட்டதாகவே விளங்குகின்றது. இத்தகைய கதைகள் சிறுவர்களின் சுய அறிவு விருத்திக்கு எவ்விதத்திலும் பங்களிப்பதில்லை.

சில கதைகள் சிறுவர்களுக்குத் தவறான புரிதலை ஏற்படுத்தும் வகையில் எழுதப்பட்டுள்ளன. ஒலுவில் அமுதனின் 'திட்டங்களும் சட்டங்களும்' என்ற கதையில் காட்டில் வாழுகின்ற கொடிய மிருகங்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டி முயல் முதலான விலங்குகளை வேட்டையாடத்திட்டமிடுவதும் அதனை மறைந்திருந்த முயல் கேட்டு விழிப்படைந்து உறவினர்களுக்குத் தெரிவித்து தம்மைப் பாதுகாப்பதுமாகக் கதை அமைந்துள்ளது. இக்கதையில் யானை ஒரு மாமிச உண்ணி என்ற அடிப்படைடையான தவறு இடம்பெற்றுள்ளது.

## ஒழுக்க விழுமியங்களை வளர்த்தலும் அறிவுரை புகட்டலும்

கோல்பெர்க்கின் ஒழுக்க மேம்பாட்டுக் கோட்பாடு (1981) சிறுவர்களுக்கான கதைகள் சிறுவர்களுக்கு நீதி, நேர்மை முதலான ஒழுக்க விழுமியங்களை வலுப்படுத்துவதை முன்னிலைப்படுத்துகிறது. குழந்தைகளுக்கு எளிமையான மற்றும் தொடர்புபடுத்தக்கூடிய முறையில் ஒழுக்க விழுமியங்கள் மற்றும் வாழ்க்கைக்கான படிப்பினைகளை வழங்குவதற்கான ஒரு ஊடகமாக கதைகள் செயல்படுகின்றன. பல கதைகள் நேர்மை, கருணை, பொறுமை, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, குழு ஒருமைப்பாடு, விடாமுயற்சி முதலானவற்றை உட்பொதித்து, நிஜ வாழ்க்கையில் எவ்வாறு நெறிமுறையாகவும் பொறுப்புடனும் நடந்துகொள்வது என்பதற்கான எடுத்துக்காட்டுகளைக் கதைகள் குழந்தைகளுக்கு வழங்குகின்றன.

'கதைகளில் வரும் பாத்திரங்களின் நடத்தைகள் வாயிலாகவும் உரையாடல்கள் வாயிலாகவும் அறவொழுக்கங்களை முன்னெடுத்தலே சிறந்த வழிமுறையாகும். கதை சொல்பவர் அல்லது பாடல் புனைபவர் தான் மேலோங்கிய நிலையில் நின்றும் சிறுவரை புத்திமதி கேட்கும் நிலையில் வைத்தும் அறமுரைத்தல் உளவியல் நோக்கிலே பொருத்தமான செயற்பாடு அன்று. சீர்மிய உளவியலில் அத்தகைய செயற்பாடு அங்கீகரிக்கப்படுதல் இல்லை' (சபா ஜெயராசா, 2019:176). இக்கருத்தியலின் அடிப்படையில் கதையாசிரியர்கள் பாத்திர உரையாடல்கள், பாத்திரங்களின் செயற்பாடுகள் மூலம் நுண்மையாகவும் கவனமாகவும் ஒழுக்க விழுமியங்களையும் அறிவுரைகளையும் முன்வைப்பது சிறந்ததாகும்.

'எது வெற்றி' என்ற கதை ஓட்டப்போட்டியில் கலந்துகொண்ட வீரன் ஆமை, நீதன் ஆமை ஆகிய இரு ஆமைகளையும் மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. ஆமை முயல் குறித்த கதை நன்கு அறியப்பட்டதாகும். தூங்கிய முயலுக்குத் தெரியாமல் கடந்துசென்றே ஆமை வெற்றிபெற்றமையை அக்கதை கூறுகின்றது. ஆனால் இக்கதை அவ்வாறானதல்ல. வேகமாக ஓடிச்சென்ற வீரன் ஆமை இடைநடுவில் களைப்புக் காரணமாகத் தூங்கிவிடுகின்றது. அடுத்ததாக ஓடிவந்த நீதன் ஆமை இதனைக் காண்கிறது. எனினும் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக அந்த நீதன் ஆமை அமைதியாகக் கடந்துசென்று ஓடி வெற்றிக்கம்பத்தை எட்டவில்லை. மாறாகத் தன்னை முந்திச்சென்ற வீரன் ஆமையை எழுப்பிவிட்டு ஓடுகின்றது. போட்டியில் வீரன் ஆமை வெற்றிபெறுகின்றது. பரிசைப்பெறுகின்றபோது வீரன் ஆமை நடந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு தனது வெற்றிக்கு நீதன் ஆமையே காரணம் என்று கூறி தனக்குக் கிடைத்த பரிசினை நீதன் ஆமைக்குக் கொடுக்கின்றது. பரஸ்பர விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, பிறர் திறமைக்கு மதிப்பளித்தல் முதலான மாண்புகளை இக்கதை வெளிப்படுத்துகின்றது. ஓ.கே.குணநாதனின் 'நாயின் தந்திரம்' என்ற கதை பிறருக்குத் துன்பம் விளைவிக்கக்கூடாது என்ற கருத்தை

எடுத்துக்கூறுகின்றது. இவரது புரிந்துணர்வு என்ற கதை ஒற்றுமை அவசியம் என்பதையும் தந்தை சொல் வேதம் கதை தந்தையின் சொல்லைக்கேளாது காட்டுக்குச் சென்ற சிறுமி எதிர்கொண்ட சிக்கல்களையும் எடுத்துக்கூறுகின்றன. அதேபோன்றே 'தாய் சொல்லைத் தட்டாதே என்ற கதை தாய் சொல்லைத் தட்டிக்கழிக்கக்கூடாது என்ற படிப்பினையைத் தரும் வகையில் அமையப்பெற்றுள்ளது.

அகளங்கனின் 'புலியும் கரடியும்' என்ற கதை ஒருவர் அடைக்கலம் தேடிவந்தால் அவர் நல்லவராகவோ கெட்டவராகவோ இருந்தாலும் அவரைப் பாதுகாக்கவேண்டும் என்பதை எடுத்துக்கூறுகின்றது. இவ்வெழுத்தாளரது 'பேராசை பெருநட்டம்' என்ற கதை பேராசைப் படக்கூடாது என்பதையும் எப்போதும், சத்தியம் தவறாமலும் நேர்மை பிசகாமலும் நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. பேராசை பிடித்த பணக்காரன் ஒருவன் தொலைந்துபோன தனது பணப்பையை எடுத்துத் தருகின்றவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பணம் சன்மானமாக வழங்கப்படும் என்று அறிவிக்கிறான். ஒரு நேர்மையான ஏழையொருவர் பத்தாயிரம் ரூபாய் உள்ள அந்தப் பணப் பையைக் கண்டெடுத்துக்கொடுத்த போதிலும் அந்தப் பணக்காரன் சொல்லியபடி ஆயிரம் ரூபாவை சன்மானமாக வழங்கவிருப்பமின்றி பணப்பையில் இருபது ஆயிரம் ரூபாய் இருந்ததாகவும் அதில் பத்தாயிரம் தொலைந்துவிட்டதாகவும் கூறி ஏமாற்றமுனைகிறான். இருவரும் நீதி மன்றம் செல்கின்றனர். இப்பிரச்சினையை விசாரித்த நீதிபதி அந்த ஏழைக்குடிமகனின் நேர்மைக் குணத்தை இனங்கண்டுகொள்வதோடு கண்டெடுக்கப்பட்ட பணப்பையில் பத்தாயிரமே இருந்துள்ளது என்றும் தொலைந்துபோன பணப்பை இதுவல்ல என்றும் தீர்ப்பு வழங்குகின்றார். சிறுவ்களுக்கு படிப்பினையூட்டும் பாங்கில் இக்கதை எழுதப்பட்டுள்ளது. பொய் சொல்லக்கூடாது, பேராசைகொள்ளலாகாது, நேர்மையாக இருக்கவேண்டும், பிறரை ஏமாற்ற நினைத்தால் இறுதியில் தாமே ஏமாரவேண்டியேற்படும் முதலான படிப்பினைகளை இக்கதை சிறுவர்களுக்கு ஊட்டுகின்றது.

அளங்கனின் 'நாயும் நரியும்' என்ற கதை கூடாத கூட்டங்களும் போகாத இடங்களும் ஆபத்தைத் தரும் என்பதைப் பிரசாரம் இன்றி இயல்பாக வெளிப்படுத்துகின்றது. காட்டில் பசிபோக்க வழியின்றி நாட்டுக்குள் நுழைந்த நரி நாயின் உதவியோடு திருமண வீடொன்றுக்கு கழிவு உணவு உண்ணச்செல்கிறது. மாடியின் மேல் மண்டபத்திலிருந்து கீழே கொட்டப்பட்ட உணவுகளைத் தின்றுகொண்டிருந்த நாயும் நரியும் ஆசை மேலெழ மாடிப்படிகளால் ஏறிச்சென்று மேல் மண்டபத்தின் படியருகில் கிடந்த உணவை உண்டுவிட்டு பின்னர் உண்ட களைப்பினால் நரி ஊழையிடுவதும் அங்கிருந்தவர்களால் துரத்தியடிக்கப்படுவதும் ஒருவாறு தப்பிக் காட்டுக்குச்செல்வதுமாக அமையப்பெற்றுள்ளது. காட்டுக்குச் சென்ற அந்த நரி ஊருக்குச்சென்றபோது ஏற்பட்ட சம்பவத்தை ஏனைய விலங்குகளுக்குச் சொன்னபோது அங்கிருந்த விலங்குகள் கூறுகின்றன:

> அப்பொழுது அங்கிருந்த கிழட்டு நரிகளில் ஒன்று அடிவாங்கி அழுதுகொண்டிருந்த நரியைப் பார்த்துப் பரிதாபப்பட்டு 'கூடாத கூட்டங்கள் கூடுவானேன் போகாத இடங்களுக்குப் போவானேன் என்று கூறியது.
>
> அப்பொழுது இன்னொரு கிழ நரி, போகாத இடங்களுக்குப் போனாலும், மாடங்கள் கூடங்கள் ஏறுவானேன் என்றது
>
> அதைக்கேட்டுக்கொண்டு நின்ற ஒரு குட்டி நரி, மாடங்கள் கூடங்கள் ஏறினாலும் நாதங்கள் கீதங்கள் இசைப்பானேன் என்றது (2017: 13).

பிறருக்கு உதவி செய்யும் குணத்தைச் சிறுவர்களிடையே வளர்க்கும் நோக்குடன் எழுதப்பட்டதாக 'ஒரு வேளை உணவு' என்ற கதை உள்ளது. பாடசாலை செல்லும் வழியில் உதவிசெய்யுமாறு கேட்ட ஒரு முதியவருக்கு தனது காலை உணவைக் கொடுத்துவிட்டுச் சென்ற நிலாந்தி என்ற மாணவி திடீரென்று பாடசாலையில் மயங்கி விழுகிறாள். காலை உணவை உண்ணாமையே அதற்கான காரணம் என்று குறிப்பிடும் கதாசிரியர் அம்மாணவி குறித்த முதியவருக்கு உதவிசெய்ததுபோலவே ஏனைய மாணவர்களும் பிறருக்கு உதவிசெய்யவேண்டும் என்பதை வலியுறுத்த ஆசிரியர் விழைந்துள்ளார். உதவி செய்யும் குணத்தைச் சிறுவர்களுக்கு வளர்க்கவேண்டியது அவசியமாயினும் குறித்த கதை பொருத்தமாக அமையவில்லை. மாணவர்கள் உணவு உண்ணாமல் மயங்கி விழுதல், பசியால் வருந்துதல் என்பவை உடல், உளரீதியாகப் பாதிப்பினை ஏற்படுத்துபவையாகும். ஒரு மாணவியை மயங்கிவிழச்செய்தே அவளிடமுள்ள உதவும்குணத்தை வெளிப்படுத்தவேண்டும் என்ற நோக்கு சிறுவர் உளவியல் குறித்த தெளவற்ற தன்மையின் விளைவேயாகும்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் 'அகப்பட்ட கள்வன்' என்ற கதை களவு கூடாது என்று அறிவுரை புகட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது. ச.அருளானந்தத்தின் 'பூஞ்சிட்டுக்கள்' என்ற கதை உயிர்களிடத்தில் அன்புகாட்டவேண்டும் என்பதையும் பறவைகளின் இயல்பான வாழ்க்கையைக் குலைக்கக்கூடாது என்பதையும் இயற்கைச் சூழலிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய அறிவைப்பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. பஞ்சாட்சரச்சர்மாவின் ;என்ன வேண்டும்?' என்ற கதை ஒற்றுமையின் அவசியத்தைக் கூறுகின்றது. ஒற்றுமையில்லையெனில் உடைமைகளைக் கூட வேறொருவர் அபகரித்துவிடுவார் என்பதை இக்கதை படிப்பினையாகத் தருகின்றது. தந்தை இறந்துவிட்ட நிலையில் தந்தையினுடைய சொத்துக்களான பாத்திரம், தடி, மிதியடி ஆகியவற்றைப் பெறுவதற்காக சகோதரர்கள் இருவர் மல்யுத்தப் போட்டியை ஒழுங்கு படுத்தி, அதில் வெற்றிபெறுகின்றவர்களுக்கே அப்பொருட்கள் எனக் கூறி மல்யுத்தம் செய்துகொண்டிருக்கையில் அப்பொருள்களின் அருமையை உணர்ந்த ஒருவர் அவர்களை ஏமாற்றிவிட்டு பொருள்களை எடுத்துச் சென்று பிறருக்குக் கொடுத்து உதவுவதாக இக்கதை அமைந்துள்ளது. ஒற்றுமையாக இருப்பதே பலம் என்பதை இக்கதையினூடாகக் கூறமுற்பட்ட ஆசிரியர் ஒருவரை ஏமாற்றிவிட்டு பொருளைப் பெறுவதாகக் குறிப்பிடுகின்றார். இது பொருத்தமற்றதாக அமைந்துள்ளது.

'கடற்கன்னி' என்ற கதை பெற்றோரின் அனுமதியின்றியும் தனியாகவும் கடற்கரைக்குச் செல்லக்கூடாது என்பதையும் கதைப்புத்தகங்கள் வாசிப்பதனூடாக பொழுதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் எதிர்பாராத விதமான ஆபத்தொன்றைச் சந்தித்தால் அதிலிருந்து விடுபடுவதற்கான வழிவகைகளைச் சிந்திக்கவேண்டும் என்றும் அறிவுரை புகட்டும் வகையில் அமைந்துள்ளது. கடலரசனால் சிறை பிடிக்கப்பட்ட சிறுவன் தனது தவறை பின்வருமாறு உணருகிறான்:

> பொழுதைப் போக்குவதற்குக் கதைப் புத்தகங்களைப் படித்துகெகொண்டிருந்தால் கடற்கரைக்கு வந்திருக்கவே மாட்டேன். இந்த அரக்கனிடம் அகப்பட்டிருக்கவும் மாட்டேன். இனி என்ன செய்வது? அந்தக் கொடியவனிடமிருந்து எப்படியாவது தப்பவேண்டும் என்ற சிந்தனையில் ஈடுபட்டது என் மனம் (1994:7)

இவ்விடயங்கள் போதனைத் திணிப்போ, பிரசாரமோ இன்றி இயல்பாக எடுத்துக்கூறப்பட்டிருப்பது இக்கதையின் சிறப்பாகும்.

## திறன் விருத்தி

சிறுவர் கதைகள் குழந்தைகள் சாதாரணத்தைத் தாண்டிச் சிந்திக்கவும், அவர்களின் சிந்தனைத்திறன், படைப்பாக்கத் திறன், கற்பனையாற்றல் முதலானவற்றைத் தூண்டவும் ஊக்குவிக்கின்றன. டேனியல் கோல்மேனின் உணர்ச்சி நுண்ணறிவு கோட்பாடு (1995), இலக்கியத்தில் ஈடுபடும் குழந்தைகள் சுய விழிப்புணர்வு, உந்துதல் மற்றும் சமூக திறன்களை வளர்த்துக் கொள்கிறார்கள் என்று கூறுகிறது. கற்பனைக் கதைகள் மற்றும் கற்பனையான கதைக்களங்கள் மூலம், குழந்தைகள் புதுமையாகச் சிந்திக்கவும், கதாபாத்திரங்களினூடாகச் சவால்களைச் சமாளிக்கவும் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் கற்றுக்கொள்கிறார்கள். கதைகள் சிறுவர்களின் கலை மற்றும் அறிவுசார் வளர்ச்சியை வளர்க்கின்றன.

சிந்தனை ஆற்றல் என்பது முக்கியமானதொரு திறனாகும். மர்மங்களைக் கண்டறியவும் பிரச்சினைகளிலிருந்து இலகுவாக மீளவும் படைப்பாற்றலை வெளிக்கொணரவும் புத்திசாலித்தானமாகச் செயலாற்றவும் சிந்தனையாற்றல் வழிவகுக்கின்றது. மேராவின் 'அம்சகியும் நண்பர்களும்' என்ற கதை பாடசாலையில் தொலைந்துபோன விளையாட்டுக் குண்டினை அம்சகி என்ற சிறுமி நண்பர்களோடு சேர்ந்து சில வழிகாட்டல் குறிப்புகள், குறியீடுகள் மூலம் புத்திசாதூரியமாகச் செயற்பட்டு கண்டுபிடிப்பதாக அமைந்துள்ளது. இக்கதை சிறுவர்களிடையே சிந்தனையாற்றல் வளர்க்கப்படவேண்டும் என்பதையும் பாடசாலை அதற்குரிய களமாக அமையவேண்டும் என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. புத்திசாதூரியமாக எதையும் சிந்திக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒலுவில் அமுதனின் திருடனைப் பிடித்த மந்திரி என்ற கதையும் அமைகின்றது.

முடிவெடுக்கும் திறன் சிறுவர்களிடையே வளர்க்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் எழுதப்பட்டது அகளங்கனின் 'முடிவெடுக்கும் திறன்' என்ற கதை. மாங்காய்களைக் களவாகத் திருடித் தின்ற சிறுவன் ஒருவனைப் பிடித்து அவனுக்குத் தண்டனை கொடுத்தால்தான் அவன் திருந்துவான் என்று ஊரிலுள்ளவர்கள் தீரமானித்து சொல்லப்படும் தண்டனைகளுள் ஒன்றை அவனே தீர்மானிக்கட்டும் என்றும் கூறுகின்றனர். ஐம்பது பிரம்படிகளைக் கொடுப்பது, ஐம்பது மாங்காய்களைத் தின்றுமுடிப்பது, ஐந்நூறு ரூபா பணம் கட்டுதல் என்னும் மூன்று தண்டனைகளுள் ஒன்றினை அவன் செய்யவேண்டும் என்று கூறியதும் அவன் ஐம்பது மாங்காய்களைத் தின்றுமுடிப்பதாகச் சொல்லிய போதிலும் அவனால் பத்து மாங்காய்களையே தின்னமுடிந்தது. இனி மாங்காய்களைத் தின்னமுடியாது என்று கூறி ஐம்பது பிரம்படிகளை ஏற்கத் தயார் என்று கூறுகின்றான். முப்பது அடிக்குமேல் அவனால் தாங்க முடியாமற்போக இறுதியில் ஐந்நூறு ரூபாய் பணத்தைக் கொடுக்க உடன்படுகின்றான். இதில் அவ்விளைஞன் முடிவெடுக்கும் திறனற்றவனாகக் காட்டப்பட்டுள்ளமையைக் காணலாம். குறிப்பாக தான் இறுதியாக ஏற்றுக்கொண்ட தண்டனையினையே முதலாவதாகக் கூறியிருப்பின் ஏனைய இரு தண்டனைகளையும் பெற்றிருக்கத் தேவையில்லை என்பதையும் சிறுவர்கள் சிந்தித்து முடிவெடுப்பவர்களாக இருப்பதன் அவசியத்தையும் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

உடுவை எஸ்.தில்லைநடராசாவின் 'கடற்கன்னி' என்ற கதை சிறுவர்களுக்கு ஏற்றதாக எழுதப்பட்டுள்ளது. பெற்றாரின் அனுமதியின்றியும் தனியாகவும் கடற்கரைக்குச்சென்why; விபரீதங்களைச் சந்திக்கவேண்டி வரும் என்ற படிப்பினையையும் சவால்கள் ஏற்படும்போது பயமின்றி துணிச்சலுடனும் புத்திசாதூரியத்துடனும் செயற்பட்டால் அத்தகைய சவால்களிலிருந்து மீண்டுவிடலாம் என்பதையும் கற்பனை அடிப்படையில் சம்பவங்களை இணைத்து சிறுவர்களுக்கு ஊட்டும் வகையில் இக்கதை எழுதப்பட்டுள்ளது. கற்பனையான

ஆச்சரியமூட்டும் சம்பவங்கள் பல இதில் இடம்பெறுகின்றன. அவை சிறுவர்களுக்கு வாசிப்பதற்குரிய ஆர்வத்தைத் தூண்டும் வகையில் சுவாரசியமாகக் கையாளப்பட்டுள்ளன. கடற் கன்னி, கடல் அரக்கன், கடல் மாளிகை ஆகியவற்றை மையப்படுத்தி இக்கதை எழுதப்பட்டுள்ளது. கடற்கரைக்குத் தனியாகச் சென்ற சிறுவன் கடலில் நீந்திக்கொண்டிருக்கும்வேளையில் உடலின் மேற்பகுதி மனித உருவமும் கீழ்ப்பகுதி மீன் உருவமும் கொண்ட ஒரு பெண்ணைக் காண்கிறான். அவ்வுருவம் கடற்கன்னி என்று தெரிந்துகொண்டதும் நீண்ட உரையாடல் இடம்பெறுகின்றது. தான் ஒரு மனிதப் பெண்ணாக இருந்து கடற்கன்னியாக மாற்றப்பட்டமை குறித்து அக்கடற்கன்னி கூறுகின்றது. கடலில் சிறைக்கூடம் இருப்பது பற்றியும் கடல் மாளிகை அமைத்து அங்கு வாழும் கொடிய அரக்கன் தேவலோகத்திலுள்ள சிந்தாமணி என்னும் சக்தியுள்ள கல்லொன்றை எடுக்கும்பொருட்டு ஆயிரம் கன்னிப்பெண்களைப் பலிகொடுப்பதற்காக அச்சிறைக்கூடத்தில் பெண்களை கடற்கன்னியாக மாற்றி வைத்திருப்பது பற்றியும் தான் கொழும்பிலுள்ள பிரபல நகைக்கடை முதலாளி செல்வராஜாவின் மகள் சுதா என்றும் கூறுகின்றது. ஊருக்குச்சென்று கடற்கன்னிகளைச் சிறை மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறிவிட்டு கரைக்கு வர எத்தனித்த அச்சிறுவன் அலையில் மூழ்கி மயங்கி எழுகிறான். அவனும் அரக்கனால் பிடிக்கப்பட்டு உருவமாற்றம்பெற்றுச் சிறைக்கூடத்தில் அடைக்கப்படுகிறான். அதன் பின்னர் பல்வேறு சவால்களைச் சந்தித்து அவற்றை வெற்றிகொண்டு தப்பிப்பிழைத்து வந்து, பொலிசாரின் உதவியுடன் மீண்டும் கடலுக்குச் சென்று கடற்கன்னிகளைச் சிறை மீட்கிறான். சுவாரசியமாகவும் அறிவை சிந்தனை ஆற்றலை வளர்க்கும் வகையிலும் இக்கதை அமைந்துள்ளது. அதேபோன்று மேராவின் சீனுவும் காகிதக் கப்பலும் என்ற கதை கடதாசியில் காகிதக் கப்பல் செய்யும் இயல்பான செயற்பாட்டினையும் தமது கண்டுபிடிப்பினை நினைத்துச் சிறுவர்களிடம் ஏற்படும் கொண்டாட்ட உணர்வினையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

**உள ஏற்புடைமை**

எப்படியும் சிறுவர்களுக்கான கதைகளை எழுதலாம் என்ற எண்ணத்தைக் கைவிட்டு தாம் எழுதுகின்ற கதைகள் சிறுவர்களின் உளவியலுக்கு ஏற்புடையதாக அமைகின்றதா என்று சிந்தித்து எழுதுவது முக்கியமானதாகும். ஈழத்தில் வெளிவந்த கதைகளுள் குறிப்பிடத்தக்கவை முற்றிலும் பொருத்தமற்றவையாகும். எடுத்துக்காட்டாக 'முள் அகன்றது' என்ற கதையைக் குறிப்பிடலாம். தன் பேனாவை தன் தம்பி எடுத்துவிட்டான் என்பதற்காக அக்கா தம்பியை நோக்கித் திட்டுகிறாள்:

> இவன் எப்பொழுதும் இப்படித்தான். என்னுடைய சாமான்களை எடுத்துவிட்டு இல்லையென்று சொல்லுவான். பொய்காரன். இவன் செத்துப்போகவேண்டும். சாபமிட்டுவிட்டு கோபத்தோடு போய்க் கட்டிலில் விழுந்தாள். அழுதபடியே தூங்கிப்போனாள்' (18)

இதில் கையாளப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லும் சிறுவர்களை உளரீதியாகப் பாதிக்கச்செய்பவையாகும். அதுமட்டுமன்றி குறித்த சிறுவன் அன்றிரவு வந்த சுனாமியினால் இறந்துபோவதாகவும் தனது தம்பி இறந்துபோனமைக்கு தான் திட்டிச் சாபமிட்டது காரணமாக இருக்குமா என்றும் குறித்த சிறுமி மனங்கலங்குவதாகவும் தனது சந்தேகம் நீங்க பெற்றார் உள்ளிட்டவர்களிடம் கேள்விகளைக் கேட்பதாகவும் இறுதியில் தான் காரணமில்லை என்று மனம்தெளவதாகவும் இக்கதையை ஆசிரியர் அமைத்துள்ளார். இது முற்றிலும் ஏற்புடையதல்ல என்பதை கதையை முழுமையாக வாசிக்கின்ற எவராலும் புரிந்துகொள்ளமுடியும். அதாவது சிறுவன் இறந்த துயரத்தை

விடவும் அச்சிறுவனின் அக்காவிற்கு ஏற்பட்ட மனக்குழப்பமே முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. இது நடைமுறைச்சாத்தியப்பாடற்றதாகும். அதற்கும் அப்பால் இத்தகைய கதைகளை வாசிக்கின்ற சிறுவர்கள் மன அளவில் பாதிக்கப்படுவார்கள் என்பதை ஆசிரியர் கவனத்திற்கொள்ளத்தவறியுள்ளார்.

திசைமாறிய குருவிகள் என்ற கதையில் கூடா நட்பு தீங்கு தரும் என்பதைக் கூறவந்த ஆசிரியர் அதனை வெளிப்படுத்தும் முறை சிறுவர்களுக்குப் பொருத்தமானதாக அமையவில்லை. தெரு ஓரத்து வளவினுள் நின்ற மாங்காய்களைப் பறிக்க முயன்ற குமரன், ரவீந்திரன் என்ற இரு சிறுவர்களையும் மாமரத்தின் உரிமையாளர் பிடித்து, நீங்கள் யாருடைய பிள்ளைகள் என விசாரித்த பின்னர் இவ்வாறு கூறுகிறார்:

> வேலுச்சாமி என்why; பொண்டாட்டியைச் சவூதிக்கு அனுப்பிற்று அவனும் எவளோடயோ சுத்தித்திரியிறான். பொண்டாட்டி சீரழிஞ்சா என்ன? புள்ள சீரழிஞ்சா என்ன? மாசமாசம் வாற பணத்தில சுதி பண்ணுறான். கதிரேசன் மிச்ச நல்லவன். கதிரேசனின் புள்ள ரவீந்திரன் மிக நல்லவனெண்டு மூர்த்தி மாஸ்டரும் எனக்கிட்ட சொல்லி,ருக்கிறார். ரவீந்திரன் இப்பிடியானவனோடு திரியாதே. உன்னையும் கெடுத்துப்போடுவான் என்று நிறுத்தினார் கந்தையாப் போடியார். (44)

பெரியவர்கள் சார்ந்த பிரச்சினையைச் சிறுவர்களுக்குத் திணிப்பது, ஒருவரை உயர்த்திக்கூறுவதற்கு இன்னொருவரை மிக மோசமாகப் பழித்துக் கூறுவது என்பவை சிறுவர்களுக்குப் பொருத்தமற்றவை. மேலுள்ள கதையில் குமரன் என்ற சிறுவன் பாடசாலைக்குச் செல்வதில் ஒழுங்கற்றவனாக இருப்பதும் கட்டுக்கடங்காது நடந்துகொள்பவனாக இருப்பதும் பொருத்தமற்றது என்றாலும் அச்சிறுவனை வழிப்படுத்தும் வகையில் கதையினை அமைக்காது, அவமானப்படுத்தும் வகையிலும் அந்நியப்படுத்தும் விதத்திலும் எழுதியிருப்பது ஏற்புடையதாக அமையவில்லை.

வ.இராசையாவின் அம்மாவைத் தேடிய குஞ்சு என்ற கதை கூடு கட்டத் தெரியாமையால் காகத்தின் கூட்டில் குயில் முட்டையிடுவதும் காகக் குங்சுகளோடு காணப்பட்ட குயில் குஞ்சியினை தாய்க் காகம் கொத்தித் துரத்துவதுமான சம்பவத்தை அடிப்படையாக் வைதத்து எழுதப்பட்டுள்ளது. தாய்ப்பாசத்தை உணர்த்தும் நோக்கில் ஆசிரியர் இக்கதையை எழுதியிருப்பினும் இக்கதையும் குழந்தை உளவியலை உள்வாங்கி எழுதப்படவில்லையென்றே கூறலாம். காகத்தின் கூட்டில் காக்கைக் குஞ்சுகள் இரண்டோடு மூன்றாவதாக ஒரு குயில் குஞ்சும் பொரிக்கின்றன. குஞ்சுகளின் முதல் கத்தல் தொடங்குகின்றது. அப்பொழுது குயில் குஞ்சியின் கத்தல் மாறுபட்டதாக இருக்கின்றது. இதனை அவதானித்த காகக் குஞ்சுகள் இரண்டும் தமது தாயிடம் கூறியபோது அதனைக் கேட்ட தாய்க் காகமும் அது உண்மையா என்று பரீட்சித்துப் பார்க்கின்றது. பின்னர் நீ எனது குஞ்சு இல்லை. உன் அம்மாவைத் தேடிச் செல் என்று கொத்தித் துரத்துகின்றது.

> மற்றைய இரண்டு குஞ்சுகளும் என்னப் போலக் கத்துகின்றன. ஆனால், நீ அப்படிக் கத்தவில்லை! நீ வேறு பறவையின் பிள்ளையோ! எங்கே இன்னும் ஒருமுறை கத்து. கேட்போம் என்றது அம்மாக் காகம்.
>
> எனக்கு அப்படிக் கத்த முடியவில்லை அம்மா கூ... கூ... என்றுதான் எனக்குச் சத்தம் வருகிறது!
>
> ஓ!... அப்படியானால் நீ காகம் அல்ல. என் பிள்ளை அல்ல. இந்தக் கூட்டுக்குள் நீ எப்படி வந்தாய்!
>
> எனக்குத் தெரியாது அம்மா!

> எனக்கும் தெரியவில்லை. எனக்கும் தெரியவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் தெரிகிறது! நீ காகக் குஞ்சு அல்ல.
>
> எனக்கு இது ஒன்றும் தெரியாது அம்மா!
>
> இனி என்ன அம்மா என்று சொல்லாதே! நீ எனது குஞ்சு அல்ல. இப்பொழுதே இந்தக் கூட்டைவிட்டுப் போய்விடு! என்று கோபமாகக் கூறியது காகம்.
>
> ஏனைய இரண்டு குஞ்சுகளும் இவன் என் தம்பி என்றும் அவனைத் துரத்தவேண்டாம் என்றும் தாயிடம் கெஞ்சியும்கூட தாய் கொத்தித் துரத்தியது.
>
> அந்தக் குஞ்சு அழுதுகொண்டு கூட்டைவிட்டுவெளியே பறந்துபோய் மரக்கிளை ஒன்றில் உட்கார்ந்தது. அதன் அழுகை ஓயவில்லை. எனக்கு அம்மா வேண்டும். எனக்கு அம்மா வேண்டும் என்று அழுதுகொண்டிருந்தது (0000:19-20).

கதையின் முடிவானது சிறுவர்களைக் கவலையில் ஆழ்த்துவதாகவோ உளச்சோர்வை ஏற்படுத்துவதாகவோ அமைதல் கூடாது. ஆனால் இக்கதை அதற்கு மறுதலையாக அமையப்பெற்றுள்ளது. நடுங்காலமாக வழக்கத்திலிருந்து வந்த கதைகளுக்குள்ளே இன்றைய நவீன அறிவியல் தளத்தை உள்வாங்கி பல மாற்றங்கள் புகுத்தப்பட்டு மீள்புனைவுபெற்றிருக்கின்றபோது இக்கதையை மாற்றி குஞ்சுக் குயில் பாதிக்காத வகையிலும் அதனை வாசிக்கின்ற சிறுவர்களின் மனம் வேதனையுறாத வகையிலும் இக்கதையை அமைத்திருக்கமுடியும். உதாரணமாக 'கூண்டுக்குள் இருந்துகொள் உனது அம்மாவை நாம் தேடிக்கண்டுபிடிப்போம். உனக்கு நானும் ஒரு அம்மாதான் என்று தாய்க்காகம் சொல்வதாகவும் அவ்வேளை குயில் ஒன்று கூவுகின்ற வகையிலும் கதையை அமைத்து அக்குயிலோடு குஞ்சுக்குயில் சேர்வதாகவும் அமைத்திருக்கமுடியும்.

### சிறுவர் கதையாக்க நுட்பங்கள்

### சிறுவர்களை ஈர்க்கக்கூடிய கதைக்களங்கள்

சிறுவர் கதைகளின் கதைக்களங்கள் சிறுவர்களோடு தொடர்புடையனவாகனவும் அவர்களை விசித்திரமான உலகத்திற்கு அழைத்துச் செல்லும் காட்சிகளை மனக்கண்முன் நிலைப்படுத்துவதாகவும் மகிழ்வூட்டுவதாகவும் அமைதல் சிறந்ததாகும். வீட்டுச் சூழல், பாடசாலை, பொது இடங்கள், அறிவியல் சிந்தனையை வளர்க்கும் வகையில் விண்வெளிகள், கடலினடி, விலங்குகளும் பறவைகளும் நிறைந்த விசித்திரமான காடு, கற்பனையான உலகு முதலானவற்றோடு தொடர்புபட்டதாக அமையும் கதைகள் சிறுவர்களை வெகுவாக ஈர்க்கும். குறிப்பாகக் கண்களைக் கவரக்கூடிய காட்சிகளை மனதில் நிலைநிறுத்தக்கூடிய வகையிலான கதைக்களங்களைக்கொண்ட கதைகளை ஆக்குவது சிறந்ததாகும்.

'கடற்கன்னி' என்ற கதையில் கடல் பிரதான கதைக்களமாகக் காட்டப்பட்டுள்ளது. விசித்திரம் கொண்ட இடங்களைச் சிறுவர்களுக்கு காட்சிப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. கடலில் காணப்படும் மாளிகை, அங்கு பெண்கள் சிறை வைக்கப்பட்டிருப்பது. அந்தச் சிறையின் கதவு, அங்கு வாழும் மீன்கள் என பலவற்றை ஆசிரியர் கூறியுள்ளார். இத்தகைய கதைக்களச்சித்திரிப்பு சிறுவர்களை வெகுவாகக் கவரும் வகையில் அமைந்துள்ளது. ஒலுவில் அமுதனின் 'திட்டங்களும் சட்டங்களும்', ச.அருளானந்தத்ன் 'யானையும் எறும்புகளும்' முதலான கதைகளில் காடும் காடு சார்ந்த சூழலும் கதைக்களங்களாக அமைந்துள்ளன. இதனால் இக்கதைகள்

சிறுவர்களை ஈர்ப்பனவாக உள்ளன. அநேகமான கதைகள் கதைக்களக்காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாதனவாகவே எழுதப்பட்டுள்ளன.

**சிறுவர்களுக்கேற்ற பாத்திரங்கள்**

குழந்தைகள் பெரும்பாலும் தாம் படிக்கும் கதைகளில் வருகின்ற பாத்திரங்களின் நடத்தைகளைப் பின்பற்றுவதோடு, கதைகளை நேர்மறையான பழக்கவழக்கங்கள் மற்றும் அணுகுமுறைகளை வடிவமைப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகவும் நோக்குகின்றார்கள். கதைகளில் உள்ள நேர்மறையான முன்மாதிரிகள், சிறுவர்களுக்கு கருணை, நேர்மை அல்லது விடாமுயற்சி போன்ற நல்ல நடத்தைகளை ஏற்றுக்கொள்ள ஊக்குவிக்கின்றன. ஆகவே இவற்றைப் பிரதிபலிக்ககூடிய பாத்திரங்கள் கதைகளில் இடம்பெறுவது சிறந்ததாகும். அத்தோடு விலங்குகள், பறவைகள், மரங்கள் பூக்கள், சிறுவர்களோடு நெருங்கிய தொடர்புடைய உறவுகள், ஆசிரியர்கள், கண்டு பிடிப்புச் சாதனங்கள் என்று பல்வேறு நிலைசார்ந்து சிறுவர்களுக்கு ஏற்ற மனநிலைப் பிரதிபலிப்புக் கொண்ட பாத்திரங்கள் இடம்பெறுவதும் சிறந்ததாகும்.

சூழலுடன் தொடர்புடைய பாத்திரங்கள் சிறுவர்களுக்கு வாழும் சூழலுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த உதவுகின்றன. ச.அருளானந்தத்தின் 'பூஞ்சிட்டுக்கள்' கதையில் வருகின்ற பூஞ்சிட்டு பாத்திரம் சிறுவனுக்கு உயிர்கள் மீதான நேசத்தையும் வாழும் சூழல் குறித்த புரிதலினையும் ஏற்படுத்துவதாகப் படைக்கப்பட்டுள்ளது. செ.அன்புராசாவின் 'அம்மாக் கோழியும் அப்பாச்சேவலும்' கதையில் வருகின்ற அம்மாக்கோழி, அப்பாச்சேவல் ஆகிய பாத்திரங்கள் உயிர் நேசப்பண்பினை ஊட்டும் வகையில் படைக்கப்பட்டுள்ளன. சிந்தனை ஆற்றலையும் கற்பனைத்திறனையும் வளர்க்கக்கூடிய பாத்திரங்களும் சிறுவர்களின் ஆளுமையை மேம்படுத்துவனவாகும். 'அம்சகியும் நண்பர்களும்' கதையில் வருகின்ற அம்சகி, கவினா, றகுனா ஆகிய பாத்திரங்கள் புத்திசாலித்தனம் கொண்டவர்களாகவும் சிந்தித்துச் செயலாற்றுகின்றவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

கதைகளில் வரும் பாத்திரங்கள் சவால்களை வெற்றிகொள்ளும் திறனை ஊட்டுவனவாகும். 'கடற்கன்னி' கதையில் வருகின்ற சிறுவன் தனது புத்திசாலித்தனத்தால் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வெற்றியோடு வெளியேறுகிறான். ஒலுவில் அமுதனின் ;திருடனைப் பிடித்த மத்திரி' கதையில் அரசனின் மாளிகையில் பொருள்கள் காணாமற் போவதும் யார் திருடினார்கள் என்பதுவும் ஒரு சவாலாக இருந்தபோது மந்திரி அவரது புத்திசாலித்தனத்தால் கள்வனைக் கண்டுபிடித்துவிடுகிறார். வ.இராசையாவின் 'அம்மாவைத் தேடிய FQ;சு' கதையில் வருகின்ற குயில் FQ;சுக்கு தனது அம்மாவைக் கண்டு பிடிப்பது சவாலாக இருந்தபோதிலும் இறுதியில் கண்டு பிடித்து தாயுடன் சேர்ந்துகொள்கின்றது. மனிதர்களின் காடழிப்புச் செயற்பாடு விலங்குகளுக்கு பெருத்த சவாலாக மாறிய சூழலில் எறும்புகள் சேர்ந்து மனிதர்களை விரட்டி சவாலை வெற்றி கொள்வதாக ச.அருளானந்தத்தின் 'யானையும் எறும்புகளும்' என்ற கதை அமைகிறது. இக்கதையில் வருகின்ற எறும்புகள் பாத்திரமும் சிறுவர்களுக்கு வழிகாட்டியாகவே அமைந்துள்ளன. மேராவின் 'புத்திசாலி எலி' என்ற கதையில் வருகின்ற தாய் எலி தன் பிள்ளை எலிகளுக்குப் பிறந்தநாள் விழாவினை உறவினர்கள் சகிதம் நடத்திக்கொண்டிருக்கும்போது இடைநடுவில் பூனை குறுக்கிட்டு பிடித்து உண்ணப்போவதாகப் பயமுறுத்தியபோதிலும் பயப்படாது தந்திரமாக அச்சவாலை வெற்றிகொண்டு தன் பிள்ளைகளையும் உறவின எலிகளையும் காப்பாற்றுகின்றது.

சிறுவர் கதைகளில் வருகின்ற பாத்திரங்கள் சிறுவர்களை மேம்படுத்துவனவாக அமைவதே சிறப்பாகும். எனினும் இத்தகைய அடிப்படையிலிருந்து விலகி சிறுவர்களின் மனங்களை நோகடிக்கக் கூடியதும் முன்மாதிரி அற்றதுமான பாத்திரங்களையும் கதையாசிரியர்கள் படைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக ஒலுவில் அமுதனின் ;திசைமாறிய குருவிகள்' கதையில் வருகின்ற மாமரத்தின் உரிமையாளர் என்ற பாத்திரம் சிறுவர்களிடையே பெரியோரின் காழ்ப்புணர்வு மனப்பாங்கினை ஊட்டுகின்ற ஒரு பாத்திரமாகவே படைக்கப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம்.

**சிறுவர்களுக்கு ஏற்புடைய மொழியாட்சி**

சிறுவர் கதைகளின் முக்கிய குறிக்கோள் குழந்தைகளின் கவனத்தை ஈர்த்தல், அவர்களின் சிந்தனைகளை ஊக்குவித்தல், நற்பண்புகளை வளர்த்தல் என்பனவேயாகும். இந்நோக்கங்களை அடைவதற்குக் கதையின் மொழிநடை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சிறுவர் கதைகளுக்கான மொழிநடை எளிமையாகவும் குழந்தைகளின் மனதைத் தொட்டுச்செல்லக்கூடியதாகவும் இருக்க வேண்டும். குழந்தைகளின் வயதுக்கேற்ப அவர்களுக்குப் புரியக்கூடிய சொற்களையும் வாக்கியங்களையும் பயன்படுத்துவதனால் கதைகளை எளிதாகப் புரிந்துகொள்ள வழிவகுக்கும். கதையாசிரியர்கள் VO வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான கதைகளில் அர்த்தச்செறிவுடையதும் சிக்கலானதுமான சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்வது சிறந்ததாகும். பொதுவாக சிறுவர்களின் ஆர்வத்தைத் தக்கவைத்து கதையோட்டத்தோடு அவர்களை பிணைப்புடையவர்களாக்குவதற்குச் சிறிய சிறிய வாக்கியங்களைக் கையாள்வது சிறந்ததாகும். சிறுவர் தாமாகவே கருத்துகளை உணரக்கூடிய வகையில் மொழியை அமைத்தால், கதையை அவர்கள் விரும்பிப் படிப்பார்கள்.

யோ.சத்யனின் 'சிவப்பு நிறச் சிங்காரக்குடை என்ற கதையின் மொழிநடை சிறுவர்களுக்கு ஏற்புடைய வகையில் இலகு நடையில் அமைந்துள்ளது. இத்தகைய இலகு நடை விவரிப்புக்கு பின்வரும் பகுதியை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்:

காக்கை அக்கா சிவப்பு நிறச் சிங்காரக் குடையொன்றை வாங்கினார். புத்தம் புதிய தனது குடையை விரித்துப்பிடித்துக்கொண்டே தாமரைக் குளத்தின் கரையிலே உலாவிக் காற்று வாங்கிட விரைந்து நடந்தார். வீதியில் சென்றவர்கள் எல்லாரும் காக்கை அக்காவின் குடையின் அழகைப் பார்த்து வியந்து பேசினார்கள். காக்கை அக்காவுக்கோ பெருமை தாங்கமுடியவில்லை. எல்லோருக்கும் நன்கு தெரியுமாறு தனது குடையைக் காட்டிக்கொண்டே உல்லாசமாக நடைபோட்டார் (சிவப்பு நிறச்சிங்காரக் குடை, 2002:51).

கதையை வாசிக்கின்றபோது சொற்கள் ஒற்றை வாசிப்பில் பொருளுணர்த்தும் பாங்கில் இலகுவாக அமைந்திருக்கவேண்டும். கடினமான சொற்கள் குறுக்கிடுமாயின் விருப்பார்ந்த வாசிப்பு தடைப்பட்டுவிடும். மேற்படி ஆசிரியரின் 'பள்ளிக்குச் சென்றேன்' என்ற கதையின் மொழி நடை பின்வருமாறு அமைகின்றது:

எனக்குப் பொல்லாத கோபம் பிறந்தது. எனினும் குண்டுப் பூனையார் என்ன செய்வார். உண்மையிலேயே எனது நிலையைப் பற்றி அறிந்திருந்தால் அப்படி நடந்துகொள்வாரா என்ன! கதவைத் தட்டித் தம்பி தம்பி என்று அன்பாய் அழைத்த அம்மாவின் குரல் கர்ணகடூரமாய் என் காதில் ஒலித்தது (2002:33)

இதிலே கையாளப்பட்டுள்ள 'கர்ண கடூரமாய்' என்ற சொல் இலகுவில் விளங்கும்படியாக அமையவில்லை என்பதோடு சிறுவர்களின் வாசிப்பு ஓட்டத்தைத் தாமதப்படுத்தி சலிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளதெனலாம்.

சிறுவர் கதைகள் ஆர்வமூட்டும் விதமாக இருக்க வேண்டும். அதற்காக, உரையாடல் நடை, சிறிய சிறிய வாக்கியங்கள் மற்றும் சுவாரஸ்யமான விளக்கங்களை பயன்படுத்த வேண்டும். மிகப் பெரிய வாக்கியங்கள் மற்றும் குழப்பமான சொற்கள் அவர்களின் ஆர்வத்தை குறைக்கும். குறிப்பாகச் சிறுவர் கதைகளில் விலங்குகள், பறவைகள், மரங்கள் போன்றவை பேசும் காட்சிகள் பொதுவாக இருக்கும். அவற்றின் உரையாடல்களை நகைச்சுவையாகவும், குழந்தைகள் தங்களை அதில் பங்களிக்க வேண்டும் என்று உணரக் கூடியதாகவும் அமைக்க வேண்டும். சிவப்பு நிறச்சிங்காரக் குடை என்ற தலைப்பில் யோ.சத்யன் எழுதிய கதையில் காக்கை அக்கா பிரதான பாத்திரமாகவும் தவளைத்தம்பி, சிட்டுக்குருவிகள் என்பன துணைப்பாத்திரங்களாகவும் இடம்பெற்றுள்ளன. இக்கதையின் உரையாடல் பாங்கு சிறப்பாகவுள்ளது. எடுத்துக்காட்டு:

> தவளைத் தம்பி! தவளைத் தம்பி! குடை வாங்கிட முடியாத நீமழை வந்தால் எப்படிச் சமாளிப்பாய்?
>
> முகத்தில் புன்னகை நிறைந்திடப் பதில் சொன்னார் தவளையார். காக்கை அக்கா மழை வந்திட்டால், இந்தத் தாமரைக் குளத்திலே நிறைந்திருக்கும் தாமரை இலைகளில் ஒன்றைப் பிடிங்கிக் குடையாய்ப் பிடித்திடுவேன்.
>
> பச்சைத் தவளையாரின் பதிலைக்கேட்ட காக்கை அக்கா உடல் குலுங்கிட விழுந்து விழுந்து சிரித்தார் (2002:53).

சிறுவர் கதைகளின் மொழிநடை மகிழ்ச்சி, அச்சம், FJ}கலம், கனிவு போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக இருப்பதும் சிறந்ததாகும். இதன் மூலம், குழந்தைகள் கதாபாத்திரங்களுடன் உணர்ச்சி ரீதியாக இணைந்து, கதையை நேசிப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். 'அம்சகியும் நண்பர்களும்' என்ற கதையின் பின்வரும் பகுதியில் சிறுவனின் FJ}கல உணர்வு வெளிப்பட்டு நிற்பதை எடுத்துக்காட்டலாம்:

> 'இந்தக் கப்பல் மிகவும் அழகாக இருக்கிறது! நன்றாக ஓடும்' என்று அவன் மனதிற்குள் FJ}கலப்பட்டான். வீட்டின் கதவு அருகே நின்று வெளியே பார்த்தான். மழைநீர் நிரம்பி எங்கும் வெள்ளக்காட்சி தெரிந்தது. வெள்ள நீர் ஓடிக்கொண்டிருந்தது.
>
> அந்நேரத்தில் மழையும் ஓய்ந்தது. தனது கப்பலை நீரிலே இறக்கிவிட இதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று சீனு கருதினான். நீரோட்டத்தை அவதானித்து, கப்பலை நீரிலே இறக்கி விட்டான்.
>
> ஆஹா! ஆஹா! என்ன மகிழ்ச்சி! என்ன மகிழ்ச்சி!
>
> ஆடி அசைந்து வெள்ளை அன்னம் போல கப்பல் சென்றது. பின்னர் போர்க்கப்பல் போல விரைவாக ஓடத் தொடங்கியது.
>
> அவன் செய்த கப்பல் அல்லவா? தண்ணீரிலே நின்று துள்ளிக் குதிக்கவேண்டும்போல் இருந்தது. குதித்தால் கப்பல் நீரிலே கவிழ்ந்து விபத்துக்குள்ளாகிவிடும் என்று எண்ணி FJ}கலத்தை அடக்கிக்கொண்டான் (2024:42-44).

சிறுவர் கதைகளின் மொழிநடை கற்பனைக்கு வித்திடும் வகையில் இருக்குமாயின் சிறுவர்களை வாசிக்கத் தூண்டுவதாக அமையும். வானவெளி, மாய உலகம், சோலைகள், பூவுலகம் போன்ற கற்பனைத் தளங்களில் சிறுவர்களின் மனங்களை நிறுத்தி சுவாரசியமான மொழியில் கதைசொல்வதும் சிறுவர் மனதில் ஆச்சரியத்தை

ஏற்படுத்தும். அதேவேளை மொழி அதிகபட்சமாக இயல்பாகவும் பாசமிகுந்ததாகவும் இருப்பதும் சிறந்தாகும். சிறுவர்கள் தங்களுக்கே நேரில் இக்கதையைச் சொல்கிறார்கள் என்று உணரும்வகையில் மொழிநடையை அமைப்பதும் கதையை விரும்பிப் படிக்க ஒரு தூண்டியாக அமையும். பெரும்பாலான கதைகளில் சொல்ல விழைந்த விடயம் அர்த்தமுடையதாகவும் சிறுவர்களுக்குப் பொருத்தமானதாகவும் இருந்தாலும் அதனைச் சொல்லுகின்ற மொழிநடையின் பலவீனம் காரணமாகவே அக்கதை சிறுவர்களால் வாசிக்கமுடியாததாகின்றது என்பதும் இங்கு கவனிக்கவேண்டியதாகும்.

### கதை கூறல் உத்தி

சிறுவர்களுக்கான கதைகளில் ஆசிரியர் கதைகூறுகின்றவராக இருந்து அக்கதையை நகர்த்திச்செல்வதைக் காட்டிலும் அக்கதையில் வரும் பாத்திரமொன்று கதை கூறுவதாக அமைவது பொருத்தமாக அமையும். சிறுவர்கள் விசித்திரமானதையும் புதுமையும் ஆச்சரியமும் கொண்டதையும் பெரிதும் விரும்புகின்றவராதலால் மனிதப் பாத்திரங்கள் அல்லாதவை கதைகூறுவதாக அமைவது விரும்பக்கூடியதாக அமையும். ஆசிரியர் கதை கூறுவதாக அமைந்த கதைகளில் ஆசிரியர் தேவையற்ற இடங்களிலும் குறுக்கிட்டு போதனை செய்கின்றவராக மாற வாய்ப்புண்டு. அவ்வாறு அமையுமாயின் அக்கதை சிறுவர்களுக்கு என்று எழுதப்பட்டதாக அமையுமே தவிர சிறுவர்களுக்கு ஏற்றதாக அமையாதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ‘எது வெற்றி’, ‘நாயும் நரியும்’ ஆகிய கதைகளில் விலங்குகள் கதை கூறுவனவாக வருகின்றன. ஆதலால் அக்கதைகள் சிறுவர்களுக்கு ஏற்புடைய வகையில் அமைந்துள்ளன.

### வண்ணப்படங்கள்ஃ விளக்கப்படங்கள்

சிறுவர்களைக் கவரக்கூடிய வண்ணப்படங்கள்ஃ விளக்கப்படங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி கதைகளை ஆக்கி நூலாக்குகின்றபோது அக்கதையைச் சிறுவர்கள் இலகுவாகவும் அதேவேளை தெளிவாகவும் விளங்கிக்கொள்வர். சிறுவர்களுக்கான கதைகளை எழுதுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் நூல் முழுவதுமே வசனங்களே நிறைந்திருக்க அதுவும் மிகக் குறைந்த வரிகளுக்கிடையிலான இடைவெளிகளுடனும் குறைந்தளவான எழுத்தளவுடனும்தான் நூல்களை வெளியிடுகின்றார்கள். வளர்ந்தவர்களுக்கான சிறுகதைகள் போலவும் கட்டுரைகள்; போலவுமே சிறுவர்களுக்கான கதைகளை ஆக்கமுற்படுகின்றார்கள். சிறுவர்களைக் கவரக்கூடிய தன்மையற்ற படைப்புகளாதலால் அக்கதைகள் கூறுகின்ற விடயங்கள் முக்கியமானவையாக இருந்தாலும்கூட சிறுவர்களுக்குப் பொருத்தமானவையாக அமைவதில்லை.

### தொகுப்பும் முடிவும்

ஈழத்தில் சிறுவர் பாடல்களுக்கு அடுத்தபடியாக சிறுவர் கதைகள் வெளிவந்துள்ளபோதிலும் அவற்றுள் பெரும்பாலானவை சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டனவாக அமையவில்லை. ஏனைய இலக்கியங்களை விடவும் சிறுவர் இலக்கியங்களைப் படைப்பது சிரமமானதாகும். சிறுவர்களின் உளவியலைக் கருத்திற்கொண்டு படைக்கப்படுவதாக இவ்விலக்கியங்கள் இருப்பதே அதற்கான அடிப்படைக் காரணமாகும். சிறுவர் உளவியல் குறித்த கோட்பாட்டு அறிவோடுதான் சிறுவர் இலக்கியங்களைப் படைக்கவேண்டுமென்பது அவசியமற்றதாகும். ஆனால் சிறுவர் உளவியலுக்கு ஏற்புடைய விடயங்களை, சிறுவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில், சிறுவர்களின் வயது நிலைக்கும் ஏற்புடைமைக்கும் பொருந்தக்கூடிய சொற்களில் கற்பனையும், நகைச்சுவையுணர்வும்

வெளிப்படும் விதத்தில் எழுதுவதென்பது முக்கியமானதாகும். ஆனால் அத்தகைய வகையில் சிறுவர்களுக்கான கதைகளை எழுதுகின்றவர்கள் மிகக்குறைவாகவே உள்ளனர். சிறுவர்களின் உளவியல் ஏற்புடைமைக்குப் பொருத்தமற்ற படைப்புக்கள் ஒரு வகையில் வயதானவர்களுக்கு ஏற்ற வகையிலேயே அமைந்துள்ளன.இதன் காரணமாகவே ஈழத்தில் சிறுவர் கதைகள் வளர்ச்சியடையாத ஒன்றாகக் காணப்படுகின்றன.

ஈழத்தில் ஆறுமுக நாவலர் ஆரம்பித்த கதை மரபிலிருந்து மாறுபட்டதும் சிறுவர் உளவியலை கருத்திற்கொண்டதுமான கதைகள் வெளிவந்துள்ளனவாயினும் அவற்றுள் பல, சிறுவர்களுக்கு அற உபதேசம் செய்யும் பாங்கும் வசீகரமற்ற மொழியும் கூறியது கூறலாக அமைந்த விடயங்களைத் தாங்கியதுமானவையாகவே உள்ளன. சிறுவர் கதைகள் என்ற நோக்கில் பெரியவர்களுக்கு ஏற்றவாறும் பெரியவர்களின் நடத்தைகள், மனநிலைகளைப் பிரதிபலிக்கக்கூடியதுமான கதைத் தொகுதிகள் இவற்றுள் ஒரு பகுதியாக உள்ளன. சில கதைகள் மிகவும் நீண்டனவாகவும் எவ்வித படங்களோ, தரிப்புக்களோ இன்றி தொடர்ந்து செல்கின்றனவாக எழுதப்பட்டுள்ளன.

சிறுவர் உளவியல் குறித்த கோட்பாடுகள் மற்றும் கருத்தியல்களின் அடிப்படையில் ஈழத்துச் சிறுவர் கதைகள் குறித்து நோக்கப்பட்ட இவ்வாய்வினடிப்படையில் ஈழத்துச் சிறுவர் கதைகளில் பெரும்பாலானவை சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு எழுதப்படாதனவாகவே அமைந்துள்ளன. மிக நீண்ட காலமாக சிறுவர்களுக்கான கதைகளை எழுதுகின்றவர்களாக உள்ள எழுத்தாளர்களிடம்கூட சிறுவர் உளவியல் குறித்த தெளிந்த பார்வை இல்லை. உளவியலைக் கருத்திற்கொள்வதற்குப் பதிலாக அறவியல் குறித்த கரிசனையுடன் எழுதப்பட்டனவாகவே பெரும்பாலானவர்களின் கதைகள் உள்ளன. இத்தகைய பலவீனங்களிலிருந்து ஈழத்துச் சிறுவர் கதை மரபு விடுபட்டு சிறந்ததொரு வழித்தடத்தில் வளர்ச்சிபெறுவதற்கு சிறுவர் உளவியல் குறித்த கவனம் ஆழமும் அகலமும் பெறவேண்டிய தேவையுள்ளது.

**உசாத்துணைகள்**


அகளங்கன், (2017). சிறுவர் சிந்தனைக் கதைகள், கொழும்பு: இலக்கியன் வெளியீட்டகம்

அந்தனி ஜீவா, (2003). திருந்திய அசோகன், கண்டி: மலையக வெளியீட்டகம்.

அந்தோனிப்பிள்ளை, (2010). சிறுவர் கதை விருந்து, கொழும்பு: லங்கா புத்தகசாலை.

அரியநாயகம், வி., (2009). கதைக்கோலங்கள், சேமமடு: சேமமடு பதிப்பகம்.

அருளானந்தம்,ச., (2006). பூஞ்சிட்டுக்கள், திருகோணமலை: அருள் வெளியீட்டகம்

அருளானந்தம்,ச., (1997). சின்னத் தேவதைகள், திருகோணமலை: அருள் வெளியீட்டகம்

ஒலுவில் அமுதன், (2002). கூடில்லாக் குருவிகள், அக்கரைப்பற்று: ரசஷணா வெளியீட்டகம்.

உடுவை தில்லைநடராசா, (1994). கடற்கன்னி, வவுனியா: பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

குணநாதன்,ஓ.கே., (2002). தர்மத்தின் வெற்றி, லண்டன்: காற்றுவெளி

குணநாதன்,ஓ.கே., (2004). மாவீரன் புள்ளிமான், மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.

# உணவுப் பண்பாட்டில் பெண்கள்

பேராசிரியர் வடிவேல் இன்பமோகன்
நுன்கலைப் பேராசிரியர்
நுண்கலைத்துறை
கலை கலாசார பீடம்
inpamohanv@esn.ac.lk

**Abstract:**

Although food is a biological necessity, it has been culturally constructed within human societies. Once culturally shaped, food practices—such as production, preservation, storage, preparation, distribution, consumption, and preparation of special meals—are governed by cultural norms. These practices have been passed down through generations and vary across cultures. Nevertheless, across all cultures, activities related to food within the family institution are typically organized around women. However, women's own nutritional needs are often not fully met, leading to adverse effects. These effects are observed on two levels: first, women's role in food-related activities is largely limited to serving the family; second, the quality and quantity of food available to women is often inadequate, with limited opportunities to eat according to personal preferences. This study explores why women are disadvantaged in food-related matters, using the South Asian cultural context as its basis. As a sociocultural inquiry, the study adopts a qualitative methodological approach, with findings and conclusions grounded in cultural analysis. The study ultimately clarifies the sociocultural factors behind the disadvantages faced by women in family food practices.

**Keywords:** family, matrilineal society, patrilineal society, food preparation, food distribution

## அறிமுகம்

ஏனைய உயிரினங்களைப் போன்று மனிதருக்கு உணவு, உயிரியல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு உரியதாக விளங்கினாலும் உணவுச் செயற்பாட்டில் மனித சமூகம் பின்பற்றும் நியமங்கள் சமூகங்களின் பண்பாட்டுச் செயற்பாட்டுடன் தொடர்புபட்டவை. மனித சமூகங்கள் உணவு தொடர்பாகப் பின்பற்றும் நியமங்கள் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபட்டனவாக அமைகின்றன. பண்பாட்டு உயிரியான மனிதர் ஏனைய உயிரினங்கள் போன்று உணவை உண்ணமுடியாத விதத்தில் உணவில் பின்பற்றப்படும் நியமங்கள் மனிதரைக் கட்டுப்படுத்துகின்றன.

நாகரிக மனிதரின் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன அமைப்பைக் கொண்டவனாக விளங்குவதால் உணவு செயற்பாட்டிலும் இந்நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. இதனால் மனிதர் உண்பதற்கான உணவை ஒரு நிறுவனத்தில் இருந்தே பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அந்நிறுவனம் வீடு, விடுதி, உணவு விற்பனை நிலையம், ஏனைய பொது நிறுவனங்கள் என ஏதோ ஒன்றாக இருக்கலாம்.

உணவு செயற்பாட்டில் வர்த்தக நிலையங்கள் பதப்படுத்தப்பட்ட உண்பதற்கேற்ற வகையில் தயாரான உணவை விநியோகிக்கின்றன. இது ஒரு பொருளாதாரச் செயற்பாடாக முன்னெடுக்கப்படுகின்றது. இதனை விட குடும்ப நிறுவனம் அதன் அங்கத்தவர்களுக்கான உணவை உண்பதற்கேற்றவிதத்தில் தயாரித்து (சமைத்து) வழங்குகின்றது. சமய நிறுவனங்கள் தெய்வத்திற்குப் படையலாகவும், அடியார்களுக்குப் பிரசாதமாகவும், அன்னதானமாகவும் உணவை வழங்குகின்றன. இதனைவிட விடுதி, வைத்திய சாலை, பயிற்சி முகாம்கள் போன்ற பொது நிறுவனங்களும் உணவு விநியோகத்தை மேற்கொள்கின்றன. உண்பதற்கேற்ற விதத்தில் தயாரித்து உணவை விநியோகிக்கும் நிறுவனங்களை 1.வர்த்தக நோக்கிலானது, 2.தெய்வ காரியங்களுக்குரியது, 3.குடும்ப அமைப்பினால் அதன் உறுப்பினர்களுக்காக மேற்கொள்ளப்படுவது 4.பொது அரச, சமூக நிறுவனங்கள் ஆகிய நான்கு நிலைகளில் பருமட்டாகப் பாகுபடுத்தலாம். இங்கு குடும்பத்திற்கு உணவளிப்பதனைத் தவிர்ந்த ஏனைய உணவு தயாரிப்பு, விநியோக நிறுவனங்களில் ஆண்கள் பிரதானம் பெறுகின்றனர். குடும்ப நிறுவனத்திற்கான உணவுச் செயற்பாடு முழுமையாக பெண்களை மையப்படுத்திய செயற்பாடாக அமைகின்றது. குடும்ப உறுப்பினர்களுக்கு உணவைத் தயார்படுத்தி வழங்குதல் குடும்ப நிறுவனத்தில் உறுப்பினராக இருக்கும் பெண்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது.

இந்த ஆய்வில் குடும்பத்திற்கான உணவளித்தலில் மாத்திரம் ஏன் பெண்கள் பிரதானம் பெறுகிறார்கள்? அதற்கான சமூகக் காரணிகள் யாவை? ஆகிய வினாக்களுக்கான விடையைக் கண்டறிய முயற்சிக்கப்படுகிறது.

இந்த ஆய்வு பெண்களை உணவுடன் தொடர்புபடுத்தி, அதாவது உணவு தயாரித்தல், பதப்படுத்தல், பரிமாறுதல் ஆகியவற்றில் குடும்ப நிறுவனத்தில் பெண்கள் பிரதானப்படுத்தப்படல், பெண்கள் உண்பதற்காகக் கிடைக்கும் உணவின் தரம், அளவு, போசாக்கு நிலையில் உள்ள பாகுபாடு ஆகிய விடயங்கள் பற்றிய உரையாடலுக்கு முதன்மையளிக்கும். இதன் போது உணவுடன் தொடர்புடைய செயற்பாடுகளால் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நிலையிலான சமூகப் பாதிப்புகள் உரையாடலுக்கு உட்படுத்தப்படும்.

## ஆய்வுப் பிரச்சினை

உணவைப் பதப்படுத்தி உண்ணும் பழக்கத்தை மனித சமூகம் கொண்டுள்ளது. பதப்படுத்தி உண்ணும் முறையில் சமூகத்திற்கு சமூகம் வேறுபட்ட பண்பாட்டு நடைமுறைகள் உள்ளது. வேறுபட்ட உணவுகளை, வேறுபட்ட சுவைகளைக் கொண்டதாக ஒரே உணவு மூலத்தில் இருந்து தயாரித்து உண்ணும் பயிற்சியும் பண்பாட்டு தனித்துவத்தின் விளைவாக உள்ளது. சமைத்தல், பரிமாறுதல், உணவைப் பதப்படுத்தல் எனும் செயல்முறையில் குடும்ப நிறுவனத்திற்கான உணவுச் செயற்பாடு பெண்களை மையமாகக் கொண்டதாக அமைந்துள்ளது. ஏனைய சமையல் முறைகளில் ஆண்கள் பிரதானம் பெறுகின்றனர். பெண்கள் குடும்ப சமையலில் பிரதான பாத்திரம் ஏற்றாலும் அவர்கள் உணவுத் தேர்வு, உண்ணும் அளவு, உண்ணும் உணவின் தரம், உண்ணும் சந்தர்ப்பம் (ஆண்கள் உண்டபின் உண்பது) போன்ற விடயங்களில் ஆண்களுடன் ஒப்பிடும் போது பெண்களுக்கு பாரபட்டசம் காட்டப்படுகின்றது. ஏனைய

உணவுச் செயற்பாடுகளில் ஓரங்கட்டப்படும் பெண் ஏன் குடும்பத்திற்கான உணவுச் செயற்பாட்டில் மாத்திரம் பிரதானப்படுத்தப்படுகிறாள், அவ்வாறு பிரதான பாத்திரம் வகித்தாலும் அவனுக்கான உணவுத் தேவைகள் விருப்பங்கள் ஏன் முழுமையாகத் தீர்க்கப்படாமல் உள்ளன என்பது இந்த ஆய்வின் பிரச்சினையாக அடயாளங்காணப்படுகின்றது.

## ஆய்வின் நோக்கம்

உணவு பெண்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள ஒன்று. பசிதீர்ப்பவள், உணவளிப்பவள் எனும் பதங்களின் பிரயோக அர்த்தங்கள் பெண்ணை "இல்லத்தரசி" என அழைப்பதில் பொதிந்துள்ளன. குடும்பம் எனும் சமூக நிறுவனத்தைப் பொறுத்தவரை பெண் உணவுடன் தொடர்புடையவளாக அனைத்துப் பண்பாடுகளிலும் சித்திரிக்கப்படுகின்றாள். பெண்ணை குடும்பநிறுவனத்திற்கான உணவுச் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தும் நிலை இன்று சமூக மாற்றங்கள் பல ஏற்பட்ட காலத்திலும் கூட, ஆரம்ப காலங்களில் எவ்வாறு கற்பிதம் செய்யப்பட்டதோ அதே நிலையில் தொடர்கிறது.

இங்கு முக்கியமாக இரண்டு விடயங்கள் சுட்டிக்காட்டத்தக்கனவாக உள்ளன. 1) குடும்ப நிறுவனத்தின் உணவு தயாரித்தல், உணவு பரிமாறுவதுடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் பெண் சார்ந்ததாகக் கட்டமைக்கப்பட்டிருக்க, வர்த்தக, புனித (தெய்வத்திற்கு படையல் செய்வதற்காக சமைக்கப்படுவது), பொதுச் சமயல் நடைமுறைகள் ஆண்களுடன் தொடர்புடையதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. 2.பெண் உணவு தொடர்பான செயற்பாட்டில் பிரதான பாத்திரத்தை எடுத்துக்கொண்டாலும் பெண்களின் உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான, அவர்களின் பசியைத் தீர்த்துக் கொள்வதற்கான உணவு முழுமையாகக் கிடைப்பதில்லை. இந்த இரு விடயங்களிலும் தாக்கம் செலுத்தும் சமூகக் காரணிகளை ஆய்வுக்குட்படுத்தல் இந்த ஆய்வின் நோக்கமாக அமையும்.

## முறையியல்

இந்த ஆய்வு குடும்ப நிறுவனத்திற்கான உணவை பெண்களுடன் தொடர்புபடுத்தும் ஒரு ஆய்வாகும். தென்னாசியப் பண்பாட்டில் பெண்கள் தொடர்புடைய கருத்தாக்கங்களை அடையாளங்காண்பதும், அவை பெண்களை உணவுச் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்துவதில் பெறும் முக்கியத்துவத்தை அடையாளங்காண்பதும் பிரதானம் பெற்றுள்ளது. ஆய்வுச் செயற்பாட்டில் ஆய்வாளரால் முன்வைக்கப்படும் கருத்துகளை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வாளர் களஆய்வின் மூலம் பெற்ற தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு கிராமங்கள் சாதகமான தெரிவுசெய்யப்பட்ட மாதிரியாகக் தேர்ந்தெடுக்கப்பட்டன. கள ஆய்வில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு குழுநிலைக் கலந்துரையால் (Focus group discussion), தனிநபர் கலந்துரையாடல் (indepth- interview), பிரதான தகவல் வளங்கி (Key Informant Method) ஆகிய நுட்பங்கள் கையாளப்பட்டன. முதல்நிலைத் தரவு (Primary Datas), இரண்டாம் நிலைத் தரவு (Secondary Datas) இரண்டையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஓர் பண்புசார் ஆய்வாக (Qualitative Research) இது அமைந்துள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பண்புசார் ரீதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## உணவுடன் பெண்களைத் தொடர்புபடுத்தும் சொல்லாடல்கள்

"சமையல்காரர்களின் புகழ், பிரபல அந்தஸ்து இருந்தபோதிலும் வீடு, சமையலறை, உணவு இன்றும் பெண்களுடன் பெரிதும் தொடர்புடையது" (2015:96) என்பார் விருந்தா வர்மா (Vrinda Varma). சமூகங்கள் பல மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியுற்றுள்ள போதும், குடும்ப நிறுவனத்திற்கான உணவு தயாரிப்பு விநியோகத்தைப் பொறுத்தலரை இவரின் இந்த மேற்கோள் இன்றுவரை மாற்றமின்றித் தொடருமொன்றாக உள்ளது. இதனை கீழ்காணும் கூற்று மேலும் தெளிவுபடுத்தும். "உணவு உற்பத்தியை ஆதிப் பெண்ணிடமிருந்து கையகப்படுத்திய ஆண் சமூகம், உணவுடன் தொடர்புடைய "சமைத்தல்" எனும் குறுகிய வெளிக்குள் பெண் சமூகத்தை அடைத்துள்ளது. "சமைத்தலும் பரிமாறுதலும்" மட்டுமே இன்றைய பெண்களின் ஒட்டுமொத்த சமூகக் கடமையாக உருவாகியுள்ளன" (சியாமளா கௌரி, சீ. 2021:231).

உணவு சூழலில் கவனிக்க வேண்டிய விடயம், உணவை அடிப்படையாகக் கொண்டு தாய், மனைவி, குடும்பத்திலுள்ள ஏனைய பெண் உறுப்பினர்கள், சிறுமிகளின் கடமைகள் வரையறுக்கப்பட்டு இருப்பதாகும். "ஒரு ஆணின் இதயத்தின் செல்லும் வழி அவரது வயிற்றில் உள்ளது, அல்லது சமையலறையில் உங்கள் மனைவியைத் தேர்ந்தெடுங்கள்" (Vrinda Varma, 2015: 96) என்பது ஒரு ஜப்பானிய பழமொழி. இது உணவு-பெண் தொடர்பைச் சுட்டிக்காட்டும் ஒரு பழமொழியாகும். "பெண்களுக்கு சமையல் அறிவு இருக்க வேண்டும் என்று நான் சொன்னால் யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். கணவனைப் பராமரிப்பது, குழந்தைகளைப் பராமரிப்பது, வீட்டை மேற்பார்வையிடுவது போல, இதுவும் முக்கியமானது. கணவன், குழந்தைகள், தன்னை ஆரோக்கியமாக வைத்திருப்பது இல்லத்தரசியின் பொறுப்பு. இந்தப் பொறுப்பை அவள் போதுமான அளவு நிறைவேற்ற வேண்டுமென்றால், அவளுக்கு சமையலில் நல்ல அறிவு இருக்க வேண்டும்" (Vrinda Varma, 2015: 98). இதனை விட "உண்டி சுருங்குதல் பெண்டிருக்கு அழகு" எனும் பழமொழி பெண்களின் உணவு விருப்பை கட்டுப்படுத்தும் ஒன்றாகக் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இவ்வாறான சொல்லாடல்கள் பெண்களை உணவுடன் பிணைப்பதற்காக, பெண்களின் உணவு விருப்பைக் கட்டுப்படுத்துவனவாகச் சமூகங்களால் தலைமுறைகள் தாண்டி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. உலகெங்கிலும் உள்ள பல்வேறு சமூகங்கள் உணவை அடிப்படையாகக் கொண்ட பாலின ரீதியாகப் பிரிக்கப்பட்ட பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் முழுமையாகக் கடைப்பிடித்து வருகின்றன. உதாரணமாக, இன்றும் கூட, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலுள்ள பல குடும்பங்களில் ஆண்கள் முதலில் சாப்பிடுகிறார்கள், பெண்கள் பின்னர் எஞ்சியிருப்பவற்றைச் சாப்பிட விடப்படுகிறார்கள். இதனை கள ஆய்வுச் செயற்பாட்டின் போது உறுதிப்படுத்த முடிந்தது (புவனேஸ்வரி,ந. 2025, கதிப்பிள்ளை,கு. 2025, குணலெட்சுமி,ந.2025). இவ்வாறு, உணவு என்பது உயிரியல் சார்ந்து உயிர்வாழ்வதற்கான அவசியமாக இருந்தாலும் பெற்றுக்கொள்ளல், நிராகரித்தல், சமைத்தல், பரிமாறுதல், உண்ணுதல் போன்ற பல்வேறு செயல்களின், பல அர்த்தங்களுடன் தொடர்புடைய ஒரு சிக்கலான குறியீடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு பாத்திரங்களை ஏற்றுக்கொண்டு குறிப்பிட்ட உணவுகளுடன் அடையாளப்படுத்தப்படுவதன் மூலம், பெண்மை,

ஆண்மை ஆகியவற்றின் ஒற்றுமைகள், அவற்றின் வேறுபாடுகளில் வரையறுக்கப்படுகின்றதன.

உணவு, அதன் தயாரிப்புப் பணிகளை பெண்களுடன் தொடர்புபடுத்தும் செயல்முறை உலகம் முழுவதும் பெரும்பாலும் ஒரே மாதிரியாக உள்ளது, ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, நாகரிக சமூகத்தின் உருவாக்கத்தின் தொடக்கநிலையிலும் கிராமங்களிலும், பெண்கள் சமைப்பதும், ஆண்கள் உழைப்பதும் அர்த்தமுள்ளதாக இருந்திருக்கலாம். காடுகளில் இருந்து உணவு சேகரிக்க வேண்டியிருந்தபோது, வேட்டையாடுவதும் உயிரினங்களைக் கொல்வது அதில் சம்பந்தப்பட்டிருந்தது. அதனால், ஆண்கள் காடுகளுக்குள் உணவீட்டத்திற்காக சென்றனர் பெண்கள் சமையல் பணியில் ஈடுபட்டனர். இந்த அமைப்பு மிகவும் வெளிப்படையானதாகவும், சமமாக அளவிடப்பட்டு எடைபோடப்பட்டதாகவும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, கடுமையானதாகவும் இருந்தது. டால்காட் பார்சன்ஸ் (Talcott Parsons) தனது "சமூக அமைப்பு பற்றிய செயற்பாட்டு கோட்பாட்டில்" (The Social System and his functionality theory), ஆண்கள் ஆயுதங்கள், உபகரணங்களின் செயல்பாடுகளுடன் (instrumental functions) தொடர்புடையவர்கள் என்றும், பெண்கள் உணர்வுபூர்வமான செயல்பாடுகளுடன் (expressive functions) தொடர்புடையவர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார் (Vrinda Varma, 2015:97). டால்காட் பார்சன்ஸ் அவர்களின் மேற்சுட்டிய கருத்து ஆண்களுக்குரியதான பொருளீட்டம், பெண்களுக்குரியதாக குடும்ப அமைப்பிற்குட்பட்ட உணவுச் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன என்னும் கருத்தை நாம் பெற்றுக்கொள்கின்றோம்.

சாதாரணமாக இன்றுவரை நாம் அடையாங் காணும் விடயம் வீட்டிலுள்ள பெண்களான பாட்டி, மனைவி, பெண் பிள்ளைகள் சமயல் பணியில் ஈடுபட தந்தை, மகன் மற்றுமுள்ள ஆண் உறுப்பினர்கள் வீட்டுக்கு வெளியே குடும்பத்திற்கான பொருளாதாரத்தை ஈட்டும் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். பருவகாலத்தில் மாத்திரம் வருமானம் ஈட்டும் தொழிலில் ஈடுபடுபவர்கள் தொழிலில் ஈடுபடாத காலங்களில் வீட்டில் ஓய்வெடுத்தல் அல்லது ஏதோவொரு பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். பெண்கள் எக்காலத்திலும் உணவு தயாரிப்புச் (சமைத்தல்) செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். உணவுடன் பெண்ணைத் தொடர்புபடுத்துவதற்கு உடற்கூற்றியல் ரீதியாகவோ, வரலாற்றுரீதியாகவோ எடுத்துக்காட்டுடன் கூடிய எந்தச் சான்றுகளும் இல்லாவிட்டாலும், இந்தப் பிரதிநிதித்துவம் சமையலறை என்பது பெண்ணின் இயற்கையான இடம் என்ற சமூகங்களில் நிலவும் பிரபலமான நம்பிக்கையின் எதிரொலிப்பாக உள்ளது (சின்னப்பிள்ளை, மா. 2025). இதனை Anishika Kapoor ”பாரம்பரியமாக, பெண்கள் எப்போதும் உணவு, அதன் தயாரிப்புடன் தொடர்புடையவர்களாக செயற்படுகின்றனர். இது எப்போதும் பாலின ரீதியாக பெண்மை சார்ந்ததாகவும், ஒரு பெண்ணின் வேலையாகவும் கருதப்படுகிறது. சமூகக் கருத்தாக்கத்தின் படி, சமையலறை எப்போதும் ஒரு பெண் தனது திறமைகளையும் கலை நுட்பங்களையும் வெளிப்படுத்த சரியான களமாக இருந்து வருகிறது” (Anishika Kapoor, 2021:120) எனக் குறிப்பிடுவார்.

உணவுடன் தொடர்புடைய பணிகள் பெண்களுக்கு உரியதாக கருத்துருவாக்கம் பெற்றுள்ளதால், பெண் சமையலில் அல்லது சமையல் தொடர்பான பணிகளில் ஆர்வம் காட்டவில்லை என்றால், அவளுடைய பெண்மையின் மீது சந்தேகங்கள் ஏற்படுகின்றது.

பெண்களின் பொருளாதார அல்லது இன, சாதிப் பின்னணிகள் எதுவாக இருந்தாலும், அனைத்துப் பெண்களும் இயற்கையாகவே உணவு சமைத்தல், பரிமாறுவதுடனான பணி தங்களுடையது எனக் கருதி பொறுப்பேற்க வேண்டும் என்ற விதிமுறை ஒரு ஆணாதிக்கக் கட்டமைப்பாக நடைமுறையில் உள்ளது. இது ஆண்கள், பெண்களுக்கான எதிர்பார்க்கைகளையும் பாலினப் பாத்திரங்களையும் வடிவமைப்பதில் ஒரு பலமான தாக்கத்தை இன்றுவரை ஏற்படுத்தியவண்ணமுள்ளது. இதனால் பெண்களுக்கும் உணவு தயாரிப்பிற்கும் இடையிலான பாரம்பரிய தொடர்பு பல தசாப்தங்களாக முக்கியமானதொன்றாக கொள்ளப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், பெண்ணியம் வேரூன்றி பெண்களின் உரிமைகள், பெண் விடுதலையை பற்றிய கருத்துகள் பிராதானம் பெறும்வரை இந்த அமைப்புத் தொடர்ந்தது. இருபதாம் நூற்றாண்டு வரை உணவின் பாலினப் பாகுபாடு ஒரு தீவிரமான பாலினப் பிரச்சினையாகப் பேசப்படவில்லை.

பெண்கள் சமையலறை, வீட்டுப் பகுதியின் எல்லைகளிலிருந்து வெளியேறி, சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட தொழில் புரிந்து வருமானம் ஈட்டுபவர்களாகவும் சுயமாக அவர்களின் வாழ்வை முன்னெடுக்கக்கூடிய இயலுமையைக் கொண்டவர்களாகவும் இன்று வளர்ச்சியுற்று உள்ளனர். இதனடிப்படையில், பெண்கள் வீட்டுக் கடமைகளுக்கு மேலதிகமாக வருமானம் ஈட்டும் தொழில்களைப் புரிய முன்வந்தபோது, பாரம்பரிய குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்ட இந்த வரையறை மாறியிருக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் வீட்டை விட்டு வெளியே வேலை செய்து வாழ்க்கையை நடத்துவதால், சமையலறை, வீட்டுப் பணிகள் ஓரளவிற்கு பாலின ஏற்றத்தாழ்வு அற்றதாக மாறியிருக்க வேண்டும். ஆனால் அது மாறவில்லை. ஆனால் இங்குதான் நாம் முரண்பாட்டைக் காண்கிறோம். நுட்பமான, வெளிப்படையான வழிகளில் தொடர்ச்சியாக பெண்கள் உணவு, அதன் தயாரிப்புடன் இணைக்கப்பட்டனர். இவை பெண் எனும் பாலினத்தின் அடையாளமாகக் கொள்ளப்பட்டன. அதை பெண்கள் ஏற்றுக்கொண்டு பணியாற்றினர் (சுகிர்தவதனி, ர. 2025)

ஒரு பெண் திருமணம், அலுவலகவேலை, வீட்டுப் பணிகளுக்கு இடையில் உணவு சமைப்பது, பரிமாறுவதுடன் தொடர்புடைய செயற்பாடுகளையும் தனது பணியாக இணைத்துச் சமாளித்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டால். "பெண்விடுதலை பெற்ற காலங்களில்" கூட இந்த நிலைமைகள் பெரிதாக மாறவில்லை. கணவன் மனைவி இடையே சமையலறை வேலைகளில் சமத்துவம் என்பது ஒரு எதிர்பார்க்கையாக உள்ளதேயன்றி அது புரிந்துணர்வுக்குரியதாக நடைமுறைச் சாத்தியமுடையதாக மாறவில்லை. பெண்களின் பணியாகவே உணவுச் செயற்பாடு குடும்ப நிறுவனத்தில் தொடர்கின்றது.

## குடும்ப நிறுவனத்திற்கான உணவு விநியோகத்தில் பெண்கள்

குடும்ப நிறுவனத்திற்கான உணவுடன் தொடர்புடைய செயற்பாடுகள் அனைத்தும் பெண்களின் கட்டுப்பாட்டிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் பெண்களுக்குரிய உணவுத் தேவையில் தன்னிறைவை ஏற்படுத்தியிருக்க வேண்டும். மாறாக ஆண்களுக்குப் பரிமாறப்படும் உணவின் அளவு, தரம், போசனை, உணவுச் செயற்பாட்டில் வழங்கப்படும் முக்கியத்துவம் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது பெண்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இது தொடர்பாக Leela Dube குறிப்பிடும் போது "வீட்டின் உணவு

நிர்வாகம் வயதான பெண்களின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் ஆண்களின், ஆண் பிள்ளைகளின் உணவு வழங்கலில் கூடுதல் தரம் பேணப்படுவதுடன் பெண் பிள்ளைகளின் உணவு வழங்கல் ஒப்பீட்டடிப்படையில் குறைவாகவே உள்ளது. இதற்கு அவர்கள் சொல்லும் நியாயம் "நீ ஒரு பெண்; நீ குறைவாக சாப்பிடவும் துன்பத்தை எதிர்கொள்ளவும் கற்றுக்கொள்ள வேண்டும்" (Leela Dube, 2009:137) என்பதாகும். குடும்பத்தில் உள்ள ஆண்கள் ஒருபோதும் பெண்களுக்கான உணவு விநியோகத்தை இரண்டாம் நிலைப்படுத்துமாறு வற்புறுத்துவதில்லை. இருந்தும், இந்நடைமுறை குடும்பத்தில் உள்ள வயதான பெண்களாளேயே பின்பற்றப்படுகிறது. இது காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒரு மரபாகத் தொடர்வதால் அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை.

எடுத்துக்காட்டாக, மேற்கு மகாராஷ்டிராவில் உள்ள மராட்டியர்கள், பிராமணர்களிடையே ஒரு பொதுவான நடைமுறையாகப் பெண்ணுக்குப் பால் உணவாகக் கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில் ஆண்கள் உயரமாகவும் வலுவாகவும் வளர வேண்டும் என்பதற்காக பால் ஆண்களின் உணவாகக் கொள்ளப்படுகிறது. மாறாக, பெண்கள் உயரமாகவோ அல்லது துரிதமாகவோ வளரக்கூடாது; அவர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இங்கு பெண்கள் ஆண்களை விட அனைத்து வியங்களிலும் குறைவாக அல்லது குறைபாடு உடையவர்களாக விளங்க வேண்டும் எனும் எதிர்பார்க்கை வெளிப்படுகிறது. புரதங்களின் பெரும் பங்கு, குறிப்பாக பால் பொருட்கள், இறைச்சி, கொழுப்புகள், குறிப்பாக அதிக பிரயத்தனமெடுத்துத் தயாரிக்கப்பட்ட சுவையான உணவுகள் ஆண்களுக்குக் கூடுதலாக வழங்கப்படுகின்றன. இதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களாக ஆண் குழந்தைகள் குடும்பத்திற்கு ஆதரவாக இருப்பார்கள் என்றும், அதே நேரத்தில் பெண் குழந்தைகளை அவ்வாறு நம்பியிருக்க முடியாது என்பதாகும். ஏனெனில் அவர்கள் எந்த நாளிலும் வேறு வீட்டிற்குச் செல்லக்கூடும் என்றும் தந்தை வழி சமூக அமைப்பினைக் கொண்ட சமூகங்களில் வியாக்கியமானம் அளிக்கப்படுகின்றது (Leela Dube, 2009:137 - 138).

இந்தப் பாரபட்சமான நிலைமை தாய்வழிச் சமூக அமைப்பைக் கொண்ட குடும்பங்களில் இல்லாதிருக்க வேண்டும். இருந்தும் அங்கும் இந்நிலைமை தொடர்கின்றது. இலங்கை போன்ற நாடுகளில், குறிப்பாக தமிழர் செறிந்து வாழும் வடக்குக் கிழக்கில் தாய்வழிச் சமூக அமைப்பின் அடிப்படைகள் பின்பற்றப்படுகின்றன. சொத்துகள் பெண்களின் உரிமையாகவே கொள்ளப்படுகின்றன. இங்கு பெண்களுக்குத் தாய்வழிப் பரம்பரைச் சொத்துகள், தந்தையின் தேட்டம் என்பவற்றில் கூடுதல் அதிகாரம் உள்ளபோதும் பெண் வீடு வந்து தனது திருமண வாழ்வைத் தொடரும் ஆண்களுக்கும், ஆண் குழந்தைகளுக்கும் உணவு நடைமுறைகளில் முதன்மையளிக்கப்படுகிறது. மட்டக்களப்பு கன்னன்குடாக் கிராமத்தில் மனைவியின் இல்லத்தில் திருமணவாழ்வைத் தொடரும் தம்பதிகளுடன் மனைவியின் வயதான பெற்றோரையும் இணைத்ததாக குறித்த குடும்பம் செயற்பட்டது. கணவன் அதிக உறைப்பு, மாமிச உணவில் நாட்டம் இல்லாததால் மனைவியின் தாய், தந்தையர் அவர்களுக்கான உணவை வேறாகச் சமைக்க வேண்டியேற்பட்டது. மனைவியின் தந்தை வருமானமீட்டும் ஆற்றலற்றவராகக் உள்ளமை, குடும்பத்தின் செயற்பாடுகளுக்கு கணவனின் வருமானத்தில் தங்கியிருக்க வேண்டியிருந்தமை ஆகிய காரணங்களால் குடும்பத்திற்கான உணவு தேர்வு

கணவனை பிரதானப்படுத்தியதாக அமைந்திருந்தது (சின்னப்பிள்ளை, மா. 2025, முருகுப்பிள்ளை, வி. 2025, ரேனுகலா, சி. 2025).

தந்தைவழி, தாய்வழி, கலப்பு சமூக அமைப்பு என எதுவானாலும், பெண்கள் உணவு விடயத்தில் இரண்டாம் நிலைப் படுத்துவதற்கும் உணவு தொடர்பாகக் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் சமூக நடைமுறைகளுக்கும் இடையேயான உள்ள தொடர்பே காரணமாகிறது.

மேற்சுட்டிய எடுத்துக்காட்டுக்கள் ஒரு பெண்ணின் சொந்த நலன்களையும் தேவைகளையும் மறுப்பது அதாவது சுய தியாகத்திற்கான எதிர்பார்ப்புகளும் இங்கே வெளிப்படுத்தப்படுகின்றன. ஒரு பெண் உணவு கேட்டுக் அழுகிறாள் என்றால் அவள் வம்புக்காரியாக, சுய கட்டுப்பாடு இல்லாதவளாகக் கேலிசெய்யப்படுகிறாள். இவ்விடயத்திலேயே "உண்டி சுருங்குதல் பெண்டீருக்கு அழகு" எனும் பழமொழியை பொருத்தமாகப் பயன்படுத்திப் பெண்களின் ஆசைகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர். பெண்களுக்கு எதிரான எவ்வாறான செயற்பாடுகள் நடந்தாலும் அவற்றைத் தாங்கிக் கொண்டு அமைதியாகவும் பொறுமையாகவும் தன்னடக்கத்துடன் பெண்கள் செயற்படவேண்டும் எனும் சமூக எதிர்பார்க்கையை மீறும் பெண்கள் சமூகத்தின் கோபத்திற்கு ஆளாகி சமூகத்தால் தண்டிக்கப்படுகிறார்கள். தனது தேவைகள், பிரச்சினைகளை முறையீடு செய்தல், தனக்கு ஏற்படும் அநீதிக்கு எதிராக நியாயம் தேட முயற்சித்தல் போன்ற செயற்பாடுகளில ஈடுபடமுடியாத விதத்தில் பெண்கள் கட்டுப்படுத்தப்படுகின்றனர்.

வளங்கள் பற்றாக்குறையாக இருக்கும்போது அதாவது ஆண்களுக்கும் சாப்பிட போதுமான அளவு உணவு இல்லாதபோது பெண்களின் நிலைமை மேலும் மோசமாக மாறும். ஆண்கள், வீட்டிலுள்ள பெரியவர்கள் உண்டு மீதமுள்ள உணவுகளை வீட்டின் பெண்கள் சாப்பிட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடைமுறைகளைப் பெண்கள் சிறியவர்களாக இருக்கும்போதே பின்பற்றுவதற்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன (சுகிர்தவதனி, ர. 2025). அவர்களால் வெளிப்படுத்தப்படும் மறுப்பு சில சலுகைகளைத் தரக்கூடும், ஆனால் பொதுவாக மற்றவர்களின் மனநிலைகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப அவர்களைச் சரிசெய்யும் திறன் பெண்களுக்கு இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம் பெண் உணவளிக்கும் பாத்திரமாகவே உணர்வுபூர்வமாக சமூகத்தால் வளர்த்தெடுக்கப்பட்டிருப்பதாகும்.

இதனால், பெண்கள் தாங்கள் உண்பதற்கு மிகுதியாக உணவு உள்ளதா? என்பதைப் பற்றி கவலைப்படாமல், மற்றவர்களுக்கு இருக்கும் உணவை வழங்கி அவர்களை ஆறுதல்படுத்துவது பற்றி சிந்திக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இங்கு காணப்படுகிறது. வீட்டிலுள்ள ஆண்களின் மனநிலை தாங்கள் பசிதீர திருப்தியாக உணவுண்ண வேண்டும் என்பதாக இருக்கும். தாங்கள் உண்டு முடிந்த பின்னர் பெண்கள் உண்பதற்கு உணவு உள்ளதா? தயாரித்த உணவு தீர்ந்து போனால் அவர்கள் தங்களின் உணவிற்கு என்ன செய்வார்கள் என்பது பற்றி ஆண்கள் கவலையடைவதில்லை. இதற்கான ஆண்கள் தரப்பு நியாயம் "குடும்பத்திற்கான உணவு விநியோகத்தை நேர்த்தியாக மேற்கொள்ளும் பொறுப்புக்கள் பெண்களிடம் உள்ளன. அவர்கள் ஆண்களின் பசி, சுவை, உணவுடன் தொடர்புடைய எதிர்பார்க்கைகளைப் பூர்த்தி செய்யும்

வகையில் உணவு வழங்க வேண்டிய கடப்பாடுடையவர்கள்" (புருசோத்மன், பொ. 2025) என அமைந்துள்ளது. இது பெண்களை சமயலறையுடன் கட்டிப்போடும், பெண்களை இரண்டாம்நிலைப் படுத்தும் கருத்தாக்கமாகும். ஆண்களை பிரதானப்படுத்திய கருத்தாக்கம் தெற்காசியப் பண்பாட்டில் மேற்பட்டு இருப்பதால் பெண்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் பரிமாறிய பிறகு, மீதமுள்ளவற்றைக் கடைசியாக உண்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒரு பண்பாட்டு நடைமுறையாக உள்ளது. பெண்கள் இந்நடைமுறைக்குக் குறிப்பாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர் (கோகுலவதனி, ச. 2025).

இருந்தும், தெற்காசிய சமூகத்தில் சமையலறைக்குப் பொறுப்பாக பெண்கள் உள்ளனர், பெரும்பாலான அன்றாட உணவு தொடர்பான முடிவுகளை அவர்களே எடுக்கிறார்கள். இருந்தும் ஒரு குடும்ப அமைப்பை எடுத்துக்கொண்டால், பெண்களுக்கிடையே காணப்படும் அதிகாரம் சமயலறை, சமயற் பணிகளை மேற்கொள்வது, உணவுத் தேர்வுகள் தொடர்பான முடிவுகளை எடுப்பது என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும். கால ஓட்டத்தில் இந்த அதிகாரப் படிநிலையின் தன்மை இடமாற்றம் பெறும், சில வேளைகளில் தலைகீழாக மாறுகின்றது. ஆனால் சமைப்பது தொடர்பான முடிவுகளை யாரைப் பிரதானப்படுத்தி எடுக்கிறார்கள் என்பது மாற்றமடைவதில்லை. அதாவது ஆண்களைப் பிரதானப்படுத்தியே எடுக்க வேண்டும் என்பது பொது நியதியாக அமையும் (குணலெட்சுமி, ந, 2025). குடும்பத்தில் உள்ள ஆண்கள், குழந்தைகளின் தேவைகள், விருப்பங்களைக் கருத்தில் கொண்டு பெரும்பாலான உணவுத் தேர்வுகள் தீர்மானிக்கப்படுகின்றன. குடும்பத்தில் அதிகாரம் மிக்க ஆண் தற்செயலாக வீட்டில் இல்லாத சந்தர்ப்பங்களில் அன்றைய சமையல் சாதாரணமாகவே அமையும். ஆண்கள் இல்லாத போது மேற்கொள்ளும் சமயல், சாதாரண காலங்களை விட தரக்குறைவான உணவைப் பெண்களுக்குச் சில வேளை வழங்கிவிடுவதுமுண்டு.

சுடச் சுட உணவளித்தல் என்பது ஒரு பண்பாட்டு நடைமுறையாக உணவு தயாரிப்பில் பின்பற்றப்படுகிறது. அனைவருக்கும் இதில் ஒரு தனித்துவமான விருப்பம் உள்ளது. இந்நடைமுறை தெற்காசிய சமூக அமைப்பில் குறிப்பாகப் பெண்களைப் பாதிக்கும் அம்சங்களில் ஒன்றாக நோக்கப்படுகிறது. தானிய உணவுகளின் தயாரிப்புகளில் பெரும்பாலானவை அடுப்பிலிருந்து நேரடியாக எடுக்கப்படும்போது உண்பது சிறந்ததாகக் கருதப்படுகிறது. இட்லி, தோசை, பூரி போன்ற உணவுகளை பெண்கள் தயாரித்துக் கொண்டு இருக்கும் போதே உண்ணும் செயற்பாடும் நடைபெறும். இதன் விளைவாக, பெண்கள் பொதுவாக குடும்ப உறுப்பினர்கள் உணவு உண்டுகொண்டு இருக்கும் போது சமயல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும். அவர்களால் எல்லாவற்றையும் முன்கூட்டியே தயாரிக்கவோ அல்லது ஆண்களுடன் சேர்ந்து சாப்பிடுவதற்கோ இந்த நடைமுறை இடமளிப்பதில்லை. எல்லாம் உணவுப் பொருட்களும் முன்பே தயாரிக்கப்பட்டு உண்பதற்குத் தயாராக இருந்தாலும், பெண்கள் ஆண்களுக்கும் குழந்தைகளுக்கும் உணவு உண்ணும்போது அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுடன் இணைந்து உண்ண முடிவதில்லை. எனவே, உணவு அடுப்பிலிருந்து நேரடியாகப் பரிமாறப்பட வேண்டிய அவசியமில்லாத போதும், குடும்பத்தின் ஆண்கள் உணவு உண்டு முடியும்வரை பெண்கள் காத்திருக்க வேண்டியது நியதி. பெண்கள் பிந்தி உண்பதில் தாக்கம் செலுத்தும் காரணிகளில் ஒன்றாக தயாரித்த உணவு தீர்ந்து போனால் என்ன செய்வது எனும்

பெண்களுக்கு எழும் அச்ச உணர்வைக் குறிப்பிடலாம். இதனால் தெற்காசியாவில், பெண்கள் தங்களைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்பு மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பது பெண்களுக்கான பயிற்சியின் ஒரு பகுதியாக உள்ளது. ஏயைவர்களுக்கு ஊட்டச்சத்து அளிப்பவர்களாகவும் தங்களின் ஊட்டச்சத்தைப் பற்றிக் கவலைப்படாது செயற்படுபவர்களாகவும் பெண்களின் பங்கு பெரிதும் போற்றப்படுகிறது. மேலும் அவர்கள் மீதமுள்ளதை அவசர அவசரமாக உண்டு அவர்களின் பசியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும், பெண்கள் உணவு உண்பது மற்றயவர்களின் பார்வைக்குத் தென்படாதிருக்க வேண்டும் எனும் நடைமுறைகளும் உள்ளன.

ஏனையவர்களின் உணவுத் தேவையில் கரிசனையுன் செயற்பட வேண்டும், ஆனால் தனது உணவுத் தேவையை இரண்டாம் நிலைப்படுத்த வேண்டும் எனும் சமூக எதிர்பார்க்கையின் பாற்பட்டதாகவே பெண்ளுக்கான உணவுத் தேவையுடன் தொடர்புடைய நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதை மேற்குறித்த எடுத்துக்காட்டுக்கள் தெரியப்படுத்துகின்றன.

## ஊட்டச்சத்துக் குறைபாடு

பெண்களுக்கு வழங்கப்படும் உணவில் காட்டப்படும் இரண்டாம் பட்சமான பாரபட்ச நிலைமை தெற்காசியாவில் பாலின வேறுபாட்டின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாக ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கொண்டமைந்துள்ளது. ஒரு வீட்டில் ஆண், பெண் குழந்தைகளுக்கு வழங்கும் உணவின் அளவு, தரத்தில் உள்ள வேறுபாடுகளுக்குப் பல காரணிகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன, மேலும் அவை உறவுமுறை அமைப்பு, குடும்ப அமைப்பு, அவற்றுடன் இணைந்த கருத்தியல் உருவாகும் பெறுமானங்கள், சிந்தனைகளுடன் தொடர்புடையவை. பெண்கள், சிறுவர்களின் இறப்பு, நோய்த்தாக்கங்கள் வேறுபட்ட விகிதாசாரத்தில் காணப்படுவதற்கு ஊட்டச்சத்து, சுகாதாரப் பராமரிப்பில் உள்ள பாகுபாட்டால் ஏற்பட்ட தாக்கத்தின் பாதிப்பு காரணம் என விபரிக்கப்படுகிறது. பெண் சிசுக்கொலையானது குடும்பத்தில் மகளின் மதிப்பிழப்புக்கான தீவிர வெளிப்பாடாகும்.

தெற்காசியாவில் பெண்களில் புரதக் குறைபாடு அதிகமாக உள்ளது. இந்தியாவில் 73%,[1] இலங்கையில் 52%,[2] மாலதீவில் 100000 பெண்களுளில் 3421 பெண்கள்[3] புரதக் குறைபாடு உடையவர்கள் என புள்ளிவிபரங்கள் தெரியப்படுத்துகின்றன. நோய், சுகாதாரம், இறப்பு, நோயுற்ற தன்மை பற்றிய புள்ளிவிவரங்களிலிருந்து பெறக்கூடிய அனுமானங்களை நாம் பார்த்தால், ஆண்களை விட பெண்கள் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள் என்பது தெரியவருகிறது.

உறவு முறையின் அமைப்பு, குடும்ப அமைப்பு ஆகியவை பெண் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கும் அவர்களின் உடல்நலம் புறக்கணிக்கப்படுவதற்கும் மிகப் பெரிய அளவில்

1. https://avinews.com/en/protein-availability-vs-affordability-in-india-a-reality-check/?utm, 03.06.2025.
2. https://www.thelancet.com/journals/lansea/article/PIIS2772-3682%2825%2900044-7/fulltext?utm, *03.06.2025.*
3. https://www.frontiersin.org/journals/nutrition/articles/10.3389/fnut.2024.1426790/full?utm, 03.06.2025.

காரணம் என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது. ஆணாதிக்க சமூகங்களில் எந்தவொரு சமூக-பொருளாதார மட்டத்திலும், ஆண்களைவிடப் பெண்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## உணவு, பாலின உரிமை தொடர்பான சட்ட ஏற்பாடுகள்

இன்று சர்வதேச சட்டங்கள் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் எந்த வித பாகுபாடும் இன்றி உணவு கிடைப்பதற்கான உரிமையை வலியுறுத்துகின்றன. ஐக்கிய நாடுகள் சபையின் உணவு, விவசாய அமைப்பு உணவு தொடர்பான உரிமைகளைப் பரிந்துரைத்துள்ளவற்றில் பெண்களுக்கான உரிமைகள் தொடர்பான பரிந்துரைகள் கீழே வழங்கப்படுகின்றது.

"உலகம் முழுவதும், சமூகம், சந்தை, மாநிலம், அவர்களின் சொந்த வீடுகளுக்குள்ளும் கூட பெண்களுக்கு எதிரான பாகுபாட்டிற்கு சமமற்ற அதிகாரம், வளங்களை அணுகுவது மையமாக உள்ளது. பெண்களின் உணவு உரிமையை உணர இந்த சமத்துவமின்மையைச் சரிசெய்வது மிகமுக்கியமானது. சமமற்ற உணவு விநியோகம் ஊட்டச்சத்துக் குறைபாட்டை அதிகரிக்க வழிவகுக்கிறது, இது கற்றல் திறனைக் குறைக்கிறது, இனப்பெருக்கம், தாய்வழி சுகாதார அபாயங்களை அதிகரிக்கிறது, உற்பத்தித்திறனைக் குறைக்கும். இந்த காரணிகள் பெண்களின் பொருளாதார திறன்களைக் குறைத்து, பாலின சமத்துவத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தி, வறுமை, ஊட்டச்சத்துக் குறைபாடு என்ற தீய வட்டத்தில் பெண்களை சிக்க வைக்கின்றன.

மனித உரிமைகள் சட்டங்கள் பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை போதுமான உணவுக்கான உரிமையையும் பசியிலிருந்து விடுபடுவதற்கான அடிப்படை உரிமையையும் அங்கீகரிக்கிறது (art. 11), இவை இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது பிற கருத்து, தேசிய அல்லது சமூக தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்து என எந்த விதமான பாகுபாடும் இல்லாமல் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், மாநிலங்கள் "...அனைத்து பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளையும் அனுபவிக்க ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமையை..." உறுதி செய்யும். (art. 2,3) பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாடு "....கர்ப்பம், சிறைவாசம், பிரசவத்திற்குப் பிந்தைய காலம் தொடர்பாக பெண்களுக்கு பொருத்தமான சேவைகளை மாநிலக் கட்சிகள் உறுதி செய்யும், தேவையான இடங்களில் இலவச சேவைகளை வழங்க வேண்டும், அத்துடன் கர்ப்பம், பாலூட்டலின் போது போதுமான ஊட்டச்சத்தை வழங்க வேண்டும்" (art. 12), மேலும் "கிராமப்புறங்களில் பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை நீக்குவதற்கு மாநிலக் கட்சிகள் அனைத்து பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும், குறிப்பாக வீட்டுவசதி, சுகாதாரம், மின்சாரம், நீர் வழங்கல், போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியவற்றில் ஆண்கள், பெண்களுக்கு சமத்துவத்தின் அடிப்படையில் போதுமான வாழ்க்கை நிலைமைகளை உறுதி செய்வதற்காக" (art. 14).

கண்ணியமாகத் தங்களுக்குரிய உணவைப் பெற்றுண்ணும் உரிமையை மேம்படுத்த, பெண்கள் பொருளாதார வளங்களைச் சமமாக அணுக வேண்டும், இதில் மரபுரிமை, நிலம், பிற

சொத்துக்களின் உரிமை, கடன், இயற்கை வளங்கள், பொருத்தமான தொழில்நுட்பம், அத்துடன் ஊதியம் பெறுபவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஒழுக்கமான வாழ்க்கையை வழங்கும் சுயதொழில், வேலையை மதிக்கவும் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

உணவு ஆரோக்கியத்திற்கும் உயிர்வாழ்விற்கும் அவசியம், ஆனால் ஊட்டச்சத்துப் போதுமானதாக இல்லாத, பாதகமான பொருட்களிலிருந்து விடுபட்ட உணவு, ஒருவரின் ஆரோக்கியத்தைக் கடுமையாகப் பாதிக்கும். உணவுப் பாதுகாப்பில் பெண்கள் முக்கிய பங்கு வகிப்பதால், ஒட்டுமொத்த சமூகங்களின் ஆரோக்கியத்திற்கும் பெண்களின் ஆரோக்கியம் மிக முக்கியமானது என்பது பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. "கல்வியை மேம்படுத்துவது பசி, ஊட்டச்சத்து குறைபாட்டைக் குறைப்பதற்கான மிகவும் பயனுள்ள வழிகளில் ஒன்றாக இருக்கலாம்" என்று 2004 ஆம் ஆண்டு உலகின் உணவுப் பாதுகாப்பின்மை நிலை கூறுகிறது. "அதிகரித்த கல்வியறிவுடன், குறிப்பாகப் பெண் கல்வியறிவு" மூலம் ஊட்டச்சத்துக் குறைபாடு விகிதங்கள் குறைகின்றன. கல்வி பாகுபாடு உணவு உரிமையை அடைவதைத் தடுக்கலாம் (Food and Agriculture Organization of the United Nations).[4]

பெண்களுக்கான உணவு விநியோகம் நேர்த்தியாக மேற்கொள்வதற்கு ஏற்புடையதான சட்ட ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையின் உணவு, விவசாய அமைப்புப் பரிந்துரைத்தாலும் அது இன்றுவரை நடைமுறைச் சாத்தியமாகவில்லை என்பதை நாம் பெண்களின் உணவு விநியோகத்தில் பின்பற்றப்படும் மேற்சுட்டிய பாகுபாட்டிலிருந்து கண்டுகொள்ளலாம். உலகிலுள்ள அனைத்து மனிதர்களுக்கும் உரியது போன்று பெண்களுக்குரிய உணவு விநியோகமும் நேர்த்தியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சட்ட முன்மொழிவாக உள்ள நிலையில் அதனை நடைமுறைச் சாத்தியமுடையதாக்குவதில் உள்ள தடைகள் யாவை என்பதைக் கண்டறிவது இந்த ஆய்வைப் பூரணப்படுத்தும்.

## பெண்களை உணவுடன் தொடர்புபடுத்தும் சமூகவியல் காரணங்கள்

ஆண் – பெண் ஆகிய இரு பாலினத்தினதும் இணைந்த செயற்பாடு சமூக இயக்கத்திற்கு அவசியமானது. இருந்தும் இரு பாலினத்திடையேயும் வேறுபாடு சமூகச் செயற்பாட்டின் பல அம்சங்களிலும் எக்காலத்திலும் நிலவி வந்துள்ளது, வருகிறது. இந்த வேறுபாட்டில் ஆண்கள் சமூகத்தில் அதிகாரத் தளத்தில் உயர்நிலையில் வைத்து நோக்கப்பட, ஆண்களை விட அதிகாரத் தளத்தில் குறைந்தவர்களாக பெண்கள் நோக்கப்பட்டு வந்துள்ளனர். சமூக வளர்ச்சியின் கட்டங்களில் பெண்கள் ஓர் அணியில் திரண்டு பெண் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி, சமூக அந்தஸ்தைப் பெறுவதற்கான, மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட போராட்டங்கள் அதிகாரச் சமநிலை, பல அடிப்படையான உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தது. இருந்தும் இன்றுவரை பால்நிலை ரீதியாக நோக்கும் போது பெண்களை விட ஆண்கள் அதிகாரத் தளத்தில் உயர்நிலையில் உள்ளனர். உலகம் முழுவதும் பரந்துவாழும் பெண்கள் இந்தப் பாதிப்புக்கு உட்படுத்தப்பட்டாலும் தென்னாசியாவில் பெண்களுக்கு

4. Right to Food AND Gender, https://www.fao.org/4/a1610e/a1610e.pdf, 03.06.2025.

ஏற்படும் பாதிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த் பகுதி ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

தென்னாசியப் பண்பாட்டில் 1. உறவுமுறை, குடும்ப அமைப்பு, 2. குடும்ப அல்லது குழு உறுப்புரிமை, பரம்பரைத் தொடர்ச்சி, சொத்து உரிமை 3. பாலியல் செயற்பாடுகள், 4. தீட்டு, மகப்பேறு போன்ற உடலியல் செயற்பாடுகள் ஆண்களைப் பிரதானப்படுத்திப் பெண்களை இரண்டாம் நிலைப் படுத்தப்படுத்துவதனை ஆய்வுகள் தெரியப்படுத்தியுள்ளன.

**உறவுமுறை, குடும்ப அமைப்பு, சொத்து உரிமை**: தென்னாசியப் பண்பாட்டில் அநேகமான பிராந்தியங்களில் தந்தை வழிச் சமூக அமைப்பின் ஆதிக்கம் நிலவுகின்றது. இது பரம்பரை அல்லது தந்தை வழிச் சொத்தில் ஆணுக்கு கூடுதலான அதிகாரம் வழங்குகின்றது. எடுத்துக்காட்டாக இருதரப்பு கண்டி சிங்களவர்கள் மத்தியில் ஆண் உடன்பிறப்புகளைக் கொண்ட ஒரு பெண் நிலச் சொத்தை மரபுரிமையாகப் பெறுவதைத் தடுக்க சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பெண்கள் ஆண்வீட்டில் தமது திருமணத்தின் பின்னரான வாழ்வைத் தந்தை வழி உறவால் வழங்கப்படும் சீதனத்துடன் தொடரவேண்டியுள்ளது. இதனால் தமது தந்தை வழி அடையாளங்களைத் தொலைத்து திருமணத்தின் பின்னர் அறிமுகமாகும் கணவன் வழி அடையாளங்களைத் தாங்கிக் கொள்வது அவசியமாகிது. இந்நிலைமையால் திருமணத்திற்கு முன்னரான தந்தை வழி குடும்ப வாழ்வு, திருமணத்தின் பின்னரான கணவன் குடும்பத்தில் தொடரும் வாழ்வு ஆகிய இரண்டிலும் பெண்கள் ஆண்களுடன் ஒப்பிடும் போது கும்பத்தில் இரண்டாம் நிலைப்படுத்தி நோக்கப்படுகின்றனர். இருகுடும்பங்களின் (பெண் வீடு, மாப்பிளை வீடு) பொருளாதார, சமூக அந்தஸ்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் பெண்ணின் திருமணத்தின் பின்னரான வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.
இலங்கையில் தமிழர் செறிந்து வாழும் வட-கிழக்கில் தாய்வழி சமூக அமைப்பு நடைமுறையில் இருந்தாலும் குடும்ப அமைப்பின் முக்கியமான தீர்மானங்கள் ஆண்களினாலேயே மேற்கொள்ளப்படும் நிலை சுட்டிக்காட்டத்தக்கது. இது தாய்வழிச் சமூக அமைப்பைப் பின்பற்றும் ஏனைய நாடுகளுக்கும் பொருந்தும். பெண்களின் செயற்பாடு வீட்டுடன் மட்டுப்படுத்தப்பட ஆண்கள் குடும்ப அமைப்பின் செயற்பாட்டிற்கு முதன்மையானதாகக் கொள்ளபடும் பொருளாதார ஈட்டத்திற்காக வீட்டிற்கு வெளியே சென்று வருகின்றனர். குடும்பச் செயற்பாட்டிற்குத் தேவையான பொருளாதாரத்தைப் பணமாகவும் பொருளாகவும் கொண்டுவரும் ஆண்கள் குடும்பத்தின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாகக் கொள்ளப்பட்டனர். இந்த மதிப்பு மரியாதையில் பொருளாதார ஈட்டம் கடின செயற்பாட்டைக் கொண்ட ஆண்களால் மேற்கொள்ளக்கூடிய ஒன்று எனும் கருத்தாக்கத்தைச் சமூகத்தில் ஏற்படுத்தி வைத்திருந்தது.

இருந்தும், பெண்கள் எப்போதும் குடும்ப வருமான ஈட்டத்திற்குப் பங்காற்றுபவர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அனேகமான குடும்பங்களில் பெண்கள் குடும்பத் தொழிலில் (பரம்பரைத் தொழில் என்றும் குறிப்பிடலாம்) பங்கேற்கிறார்கள். இருந்தும் அவர்களின் உழைப்பு பெரிதுபடுத்தப்படுவதில்லை. பெண்கள் குடும்ப நிறுவனத்தின் செயற்பாட்டுக்குக் கூடுதலாகப் பங்களிக்கிறார்கள் எனினும் அவர்களுக்குச் சுயாதீனமான

வருமானம் இல்லை. பெண்கள் பல்வேறு வகையான குடிசைத் தொழில்கள், கைவினைப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு வகையான கைவினைப்பொருட்கள், திறன்கள் வீட்டு உற்பத்தியின் கீழ் (ஆடை, மட்பாண்டம், பின்னல்வேலை) வருகின்றன. படித்த மத்தியதர வர்க்கப் பெண்கள் படிப்படியாகப் பொருளாதாரத் துறையில் பிரகாசித்து வருகின்றனர். அவர்கள் தங்கள் வருவாய் காரணமாக பேரம் பேசும் ஆற்றலைப் பெறுகின்றனர். இருந்தும் அவர்களின் பொருளாதார மேன்நிலையாக்கம் அவர்களின் உறவு முறைகளின் சித்தாந்தங்களுடன் பொருந்தவில்லை. இதனால் பொருளாதாரத்தில் எவ்வளவு மேன்மை பெற்றாலும் பெண்கள் பெரும்பாலும் தங்கள் குழந்தைகளை வளர்ப்பதிலும், பெற்றோர்கள், உடன்பிறந்தவர்களை பராமரிப்பதிலும் முழுக்கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

**பாலியல் செயற்பாடுகள்**: பாலியல் செயற்பாடு அல்லது பாலியல் நடத்தை தொடர்பான விடயம் பெண்களைப் பாதிக்கும் முக்கியமானதொன்றாகக் கொள்ளப்படுகிறது. பெண்களை ஆளும் கற்பு, கன்னித் தன்மை பற்றிய கருத்தாக்கங்கள் பெண்களைக் கட்டுப்படுத்தும் முக்கிய ஆற்றல் மிக்கன. ஆண்கள், குடும்பத்தின் "மரியாதை" அவர்களின் பெண்களிடம் உள்ளது என்பதில் முழு நம்பிக்கை கொண்டுள்ளனர். பெண்கள் பாலியல் நடத்தையில் தவறுவிடுடல், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படல் குடும்ப கௌரவத்தை, குறிப்பாக ஆண்களின் கௌரவத்தைப் பாதிக்கும் எனக் கருதுகின்றனர். இதனால் பாலியல் ரீதியான பாதிப்புக்கு உட்படாமல் பெண்களைப் பாதுகாப்பது பெண்சார்ந்த குடும்பத்திலுள்ள ஆண்களின் பொறுப்பாக, கடமையாக அமைந்திருந்தது. இந்தப் பாதுகாப்புப் பொறுப்பு, ஆண்களுக்குத் தங்கள் பொறுப்பில் உள்ள பெண்கள் மீது அதிகாரம் செலுத்தவும், பெரும்பாலும் அவர்களின் நடத்தையின் ஒவ்வொரு அம்சத்தையும் ஆணையிடவும், கட்டுப்படுத்தவும் உரிமை அளிக்கிறது. பெண்கள் நடமாடும் எல்லைகளை வரையறுப்பது, ஆடையணியும் பாங்கு, பேச்சுச் சுதந்திரத்தைத் தீர்மானிப்பது என பல்வேறு நடத்தைகளையும் ஆண்களே தீர்மானிக்கின்றனர். இதன் தொடர்ச்சியாக ஆண்களே ஒரு பெண்ணுக்கான கணவனை அவளின் விருப்பத்திற்கு பெரியளவில் முக்கியத்தவம் வழங்காமல் தீர்மானிக்கின்றனர் (கதிரிப்பிள்ளை, ச. 2025). ஒரு பெண்ணின் எதிர்கால வாழ்வு பற்றிய தீர்மானங்களை பெண்களுக்கு எடுக்கும் ஆற்றல் இல்லை என்றும் அதனை ஆண்களே மேற்கொள்ள முடியும் எனும் நம்பிக்கை சமூகத்தில் வேரூன்றியுள்ளது இதில் தாக்கம் செலுத்தும் காரணியாகும். திருமணம் என்பது ஒரு கணவனுக்குத் தனது மனைவியின் மீது உரிமையை நிறுவும் செயற்பாடாக அமைகிறது. தெற்காசியாவில் தந்தைவழிச் சமூக நடைமுறை பெண்கள் மீது வழக்கத்திற்கு மாறாகக் கடுமையான விதிகளை நடைமுறைப்படுத்துகிறது. அவர்களின் பாலுணர்வை நிர்வகிப்பதற்கும் அவர்களின் இனப்பெருக்க சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்கும் வழிமுறைகளை இவை உருவாக்குகின்றன.

பெண் பாலியல் மீது செலுத்தப்படும் கட்டுப்பாட்டுக்கு சாதி ஒரு சிறப்புத் காரணியாக அமைகிறது. சாதி பெண்களை குறிப்பிட்ட வழிகளில் கட்டுப்படுத்துகிறது. நகர்ப்புற ஒதுக்குப்புறங்கள், கிராமப்புற ஏழை அல்லது தாழ்த்தப்பட்ட பெண்கள் பொருளாதார, அரசியல் அல்லது வெறும் உடல் அதிகாரம் உள்ளவர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிறார்கள் என்பது சாதாரணமான செயற்பாடாகக் கருதப்படுகிறது. ஆண்களே

பெண்களின் பாலுணர்வைப் பயன்படுத்துபவர்கள் என்ற கருத்து இந்தப் பண்பாடுகளில் வெளிப்படுகிறது.

**தீட்டு, தாய்மை நிலை**: பெண்களுக்குரிய உடலியல் நிலைமைகளாக தீட்டு அதாவது மாதவிடாய், இனப்பெருக்கத் திறன் மூலம் ஏற்படும் தாய்மை உணர்வு எனும் இரண்டும் ஆண்களில் இருந்து பெண்களை வேறுபடுத்தும் அடிப்படையான அம்சங்களாகும். மனித இன விருத்திக்கு இந்த ஆற்றல்களால் பங்காற்றும் பெண், இந்த ஆற்றல்களினாலேயே இரண்டாம்நிலைப்படுத்தப்படும் நிலைமையையும் சமூகம் ஏற்படுத்துகிறது.

மாதவிடாயால் பெண்களுக்குப் பல கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன. மாதவிடாயை தீட்டாகக் கருதும் மக்களின் நம்பிக்கையே இதில் கூடுதல் தாக்கம் செலுத்துகிறது. இந்த குறிப்பிட்ட உடல் செயல்முறை பெண்களை ஆண்களை விட தனித்துவமாகத் தாழ்ந்தவர்களாக ஆக்குகிறது. மாதவிடாய் தீட்டாவதால், மாதவிடாயின் போது மத நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்படுவது நிச்சயமாக உலகளாவிய ரீதியில் பொதுவானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தூய்மை, மாசுபாட்டின் சடங்கு மொழியில் உணவு ஒரு முக்கிய அங்கமாகும். மாதவிடாய் இரத்தத்தின் அசுத்தம் பெண்கள் குறிப்பிட்ட இடங்களைப் பயன்படுத்துவதையும் சில வகையான உணவுகளைக் கையாளுவதையும் தடை செய்கிறது. நேபாளத்தில் பிராமண, சேத்ரி பெண்கள் மாதவிடாய் முதல் மூன்று நாட்களில் பெண் நாய்களைப் போல நடாத்தப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது. இது பாரம்பரிய நம்பிக்கைகளைப் பின்பற்றும் அனைத்துச் சமூகங்களுக்கும் பொருத்தமுடையது. இந்தக் காலங்களில் பெண்கள் சமையலறைக்குள் நுழையவோ அல்லது மற்றவர்கள் சாப்பிட வேண்டிய உணவு அல்லது தண்ணீரைத் தொடவோ அனுமதிக்கப்படுவதில்லை. மாதவிடாய்க் காலத்தில் பெண்கள் பொதுவாக வீட்டில் ஆண்களின் பாவனைக்குட்படுத்தப்படாத ஒதுக்குப்புறத்தில் தங்கவைக்கப்படுகின்றார்கள் (புவனேஸ்வரி, ந. 2025).

பெண் பருவமடைந்ததில் இருந்து ஒரு பாலியல் உயிரினமாக மாறிவிட்டாள் என்பது ஒரு குறியீட்டுப் புரிதல். இது அவளுடைய பங்கில் கட்டுப்படுத்தப்பட்ட நடத்தையையும் மற்றவர்களின் பாதுகாப்பு, விழிப்புணர்வையும் கோருகிறது. ஒரு பெண்ணின் பாலியல் மீதான இடைவிடாத கட்டுப்பாடு பருவமடைதலில் தொடங்கி மாதவிடாய் நிறுத்தத்துடன் முடிவடைகிறது, மிகவும் முக்கியமான காலமாக மாதவிடாய், திருமணத்திற்கு இடையிலான காலம் கொள்ளப்படுகிறது. அந்த காலத்தில் அவள் ஒரு சட்டபூர்வமான விதை கொடுப்பவரைப் (கணவரைப்) பெறுகிறாள்.

ஒரு மனைவியின் உடல்நலக்குறைவு அல்லது அவள் மகப்பேற்று ஆற்றல் அற்றிருத்தல் (மலடி) பலதார மணம், விவாகரத்திற்கான முக்கியமான இரு காரணங்களாகும். பெண் குழந்தைகள் ஒரு தொந்தரவாகவும் குடும்பத்தின் மரியாதைக்கு ஒரு பிரச்சனையாகவும் கருதப்படுகிறார்கள். அவர்கள் மீது ஒரு நெருக்கமான கண்காணிப்பு வைக்கப்பட வேண்டும், பின்னர் அவர்கள் வரதட்சணையுடன் அனுப்பப்பட வேண்டும். இந்த எதிர்மறை மதிப்பீடு உடல்

செயல்முறைகளை சீர்குலைத்து, விரும்பிய இலக்குகளை அடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளை அணுகுவதற்கு வழிவகுக்கிறது. தாய்வழிச் சமூகங்களில், பரம்பரை தொடர்வதற்கு ஒரு மகள் அவசியம் என்ற நம்பிக்கை வேரூன்றியுள்ளது.

## முடிவுரை

மேற்சுட்டிய பெண்கள் தொடர்பான எதிர்மறையான கருத்துகள் யாவும் காலங்காலமாக சமூகத்தால் பின்பற்றப்படும் சமூக நடைமுறைகளாகவே உள்ளன. இந்தப் பண்பாட்டுக் காரணிகள் ஆண்களை பிரதானப்படுத்தி பெண்களை இரண்டாம் நிலைப்படுத்துகின்றன. குடும்பம் என்பது ஆண்களை மையமாகக் கொண்ட முதலாளித்துவ நிறுவனமாகும். ஆண் செல்வத்தை வீட்டுக்குக் கொண்டு சேர்க்கின்றான், பெண் (மனைவி, தாய் போன்ற உறவுகள்) அதனைச் செலவிடுகிறாள் என்ற கருத்து இதன் போது உருவாக்கப்பட்டுள்ளது. சமகாலத்தில் பெண்ணும் பொருளாதார ஈட்டத்தில் ஈடுபடுகின்றாள் என்றாலும், உணவு, உணவு சார்ந்த தயாரிப்புகளுக்கான செயற்பாடுகள் பெண்கள் சார்ந்ததாகவே உள்ளன. சமையலறை என்பது பெண்ணின் "இயற்கை" இடம் என்பதை பெண்களுக்குத் தொடர்ந்து நினைவூட்டுவதை சமூகம் உறுதிசெய்தது. பெண்கள், ஆண்களுக்கான சமூக விதிமுறைளை வரையறுக்கும் போது சமயலறையுடன் தொடர்புடைய அனைத்துச் செயற்பாடுகளும் பெண்ணுக்குரியதாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. சமூகத்தில் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அவர்களின் பாலின வகிபாகத்தில் ஒன்றாக சமயலறையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் முக்கியமாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

உணவு, அதன் தயாரிப்புடன் தொடர்புடைய பெண்களின் உறவு பல நூற்றாண்டுகளாக பாலின சமூகமயமாக்கலின் பெண்ணின் ஒரு குறிப்பிடத்தக்க வடிவமாக, அடையாளமாக இருந்து வருகிறது. இது பெண்களின் கீழ்ப்படிதலையும் இன்றும் இருக்கும் பாலின பிரிவின் உழைப்பின் பங்கையும் உறுதி செய்ய உதவுகிறது.

உணவுடன் தொடர்புடைய பாத்திரங்களைப் பொறுத்தவரை, பாரம்பரியமாக பெண்கள் உணவளித்தல், குடும்ப நிர்வாகத்தை நிர்வகிப்பர்களாக உள்ளனர். இக்கருத்தாக்கம் சமையலறை பெண்ணுக்குரியது என்று ஆழமாக குறியிடப்பட்டுள்ளது. இது காலங்காலமாக பின்பற்றப்படும் சமூக நடைமுறையாக உள்ளது. இந்த சமூக நடைமுறையில் ஆண்களை பிரதானப்படுத்தி பெண்களை இரண்டாம் நிலைப்படுத்தும் ஆண்களால் வடிவமைக்கப்பட்ட பண்பாட்டு நியமங்களின் பாதிப்பே தாக்கம் செலுத்துகின்றது. இந்தப் பண்பாட்டு நியமங்களுக்குப் பயிற்றப்பட்ட பெண்கள் உணவுடன் தொடர்புடையதாகப் பின்பற்றப்படும் நடைமுறைகளைப் பேணுவது பெண்மையின் அடையாளமகக் கொண்டு அதனை கடைப்பிடிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

பெண்களை தாழ்வானவர்களாக, ஆண்களை விட ஆற்றல் குறைந்தவாகளாக, ஆண்களின் தயவுடன் வாழ்பவர்களாக சமூகங்களால் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டுவரும் கருத்தாக்கமே பெண்களை குடும்பத்திற்கான உணவு விநியோகத்துடன் தொடர்புபடுத்துகின்றது. இது, பெண்களுக்கான உணவு ஆண்களை விட தரம், அளவில் குறைந்ததாக இருக்க வேண்டும் எனக் கற்பிதம் செய்கிறது. இந்நடைமுறைகள் சமூகம்

காலங்காலமாகப் பின்பற்றிவரும் பண்பாட்டு நியமமாக உள்ளதால் பொதுச் சட்டங்களோ, புரட்சிகரமான செயற்பாடுகளோ இதில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. எதிர்காலத்தில்....?

## உசாத்துணைகள்


1. Anishika Kapoor (2021) "Liberalizing the Kitchen from Women" International Journal of English Literature and Social Sciences. Journal Home Page Available: https://ijels.com/. Journal DOI: 10.22161/ijels. Vol-6, Issue-4; Jul-Aug, 2021.
2. BENDER A. E. (1976) "Food preferences of males and females". Proceedings of the Nutrition Society. London: Volume 35, Issue 2, September 1976, pp. 181 – 189.
3. Food and Agriculture Organization of the United Nations. Right to Food. Unit Economic and Social Development Department. Viale delle Terme di Caracalla - 00153 Rome, Italy.
4. Leela Dube (Indian Edition, 2009) Women and kinship: Perspectives on gender in South and South-East Asia. Jawahar Nagar, Jaipur: Prem Rawat for Rawat Publications.
5. Sherrie A. Inness (2001), Dinner Roles: American Women and Culinary Culture. America: the University of Iowa Press.
6. Varma, Vrinda. "The Food Woman Connection. Is Food Really a Woman's Thing?" in Making Sense of Food: Constructing Culinary and Cultural Identities. Ed: Sally Baho and Gregory Katsas. Inter Disciplinary Press. Oxford. London. 2015. ISBN: 978-1-84888-011-5 (Book Chapter) Pp: 95 – 110.
7. கனகரத்தினம்,நித்தி. (2024) பாரம்பரிய தமிழர் உணவுகளின் போசனைக் கூறுகள் – ஓர் அறிவியல் நோக்கு. மட்டக்களப்பு: மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்.
8. சியாமளா கௌரி, சீ. (2021) "உண்டியும் பெண்டிரும்" பக்தவத்சல பாரதி (தொகு). தமிழர் உணவு. எட்டாம் பதிப்பு. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம். பக்:231 – 2141.
9. சேதுராமன்,கே.ஈ. (2014) மூலிகைக் களஞ்சியம். சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
10. பக்தவத்சல பாரதி (தொகு). (2021) தமிழர் உணவு. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம். எட்டாம் பதிப்பு.
11. ------------------------- (2021) சங்ககாலத் தமிழர் உணவு. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
12. நீலகண்டன்,வெ. (2022) தென்னிந்திய வட்டார உணவுகள்: கர்நாடகா – கேரளா, பாகம் – 02. சென்னை: சந்தியா பதிப்பகம்.
13. ------------------------- (2022) தென்னிந்திய வட்டார உணவுகள்: தமிழகம் – ஆந்திரா, பாகம் – 01. சென்னை: சந்தியா பதிப்பகம்.


### நேர்காணல்


1. கதிரிப்பிள்ளை, கு. (2025) "குடும்ப நிறுவனத்திற்கானஉணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்காணல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 31.05.2025.

2. குணலெட்சுமி, ந. (2025) "குடும்ப நிறுவனத்திற்கானஉணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்கானல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 31.05.2025.
3. சின்னப்பிள்ளை, மா. (2025) "குடும்ப நிறுவனத்திற்கானஉணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்கானல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 31.05.2025.
4. சுகிர்தவதனி, ர. (2025) "குடும்ப நிறுவனத்திற்கானஉணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்கானல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 01.06.2025.
5. புருசோத்தமன், பொ. (2025) "குடும்ப நிறுவனத்திற்கான உணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்கானல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 31.05.2025.
6. புவனேஸ்வரி, ந. (2025) "குடும்ப நிறுவனத்திற்கானஉணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்கானல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 31.05.2025.
7. முருகுப்பிள்ளை, வி. (2025) "குடும்ப நிறுவனத்திற்கானஉணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்கானல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 31.05.2025.
8. ரேனுகலா,சி. (2025) "குடும்ப நிறுவனத்திற்கானஉணவு செயற்பாட்டில் பெண்களின் இடம்" நேர்கானல் மேற்கொண்டவர் இன்பமோகன், வ, 31.05.2025.

# புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தொழிலாளர் தரநிலைகளுடன் இலங்கை தொழிலாளர் தரநிலைகளின் இணக்கத்தன்மை

வைத்தியரட்ணம் பத்மானந்தகுமார்
புவியியல் துறை,
கலை கலாசார பீடம்
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
pathmanandakumarv@esn.ac.lk

## ஆய்வுச்சுருக்கம்

புலம்பெயர் தொழிலாளர்கள் உலகளாவிய தொழிற் சந்தையில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தொழிலாளர்களை பிற நாடுகளுக்கு அனுப்பும் மற்றும் அவர்களை பெற்றுக்கொள்ளும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். இருப்பினும், அவர்கள் பெரும்பாலும் தொழிலாளர் சுரண்டல், பாகுபாடு மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுதல் உட்பட பல சவால்களை எதிர்கொள்கின்றனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பு போன்ற அமைப்புகளால் நிறுவப்பட்ட சர்வதேச தொழிலாளர் தரநிலைகள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கட்டமைப்பை வழங்குகின்றன. சர்வதேச நியமங்கள் தொடர்பில் இலங்கையின் சட்ட கட்டமைப்பு மற்றும் நடைமுறைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தரநிலைகளுடன் இலங்கை தொழிலாளர் தரங்களின் இணக்கத்தன்மையை இந்தக் கட்டுரை விமர்சன ரீதியாக ஆராய்கிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளை திறம்பட பாதுகாப்பதை உறுதிசெய்வதற்கு மறுசீரமைப்பும் முன்னேற்றமும் தேவைப்படும் பகுதிகளை அடையாளம் காண்பது இக் கட்டுரையின் பிரதான நோக்கமாகமாகும். தொழிலாளர் இடம்பெயர்வினை நிர்வகிப்பதற்திற்கு சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் மற்றும் உள்நாட்டு சீர்திருத்தங்களுடன் சந்தை சக்திகளை சமநிலைப்படுத்தும் ஒரு விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. இலங்கை தனது தொழிலாளர் தரத்தை சர்வதேச நியமங்களுடன் சீரமைப்பதில் முன்னேற்றம் அடைந்துள்ள அதேவேளை அமுலாக்கம் மற்றும் சமூக பாதுகாப்பில் சவால்களை எதிர்கொள்கிறது.

முதன்மைச் சொற்கள்: இலங்கை, புலம்பெயர் தொழிலாளர், சர்வதேச தொழிலாளர் அமைப்பு, சர்வதேச தொழிலாளர் தரநிலை, சர்வதேச தொழிலாளர் உரிமை

## அறிமுகம்

வேலைவாய்ப்பிற்கான இடம்பெயர்வு என்பது பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், தொழிற்சந்தை தேவைகள் மற்றும் புவிசார் அரசியல் நகர்வுகள் போன்ற பல்வேறு காரணிகளால் இயக்கப்படும் ஒரு உலகளாவிய நிகழ்வாகும். தொழிலாளர்

இடம்பெயர்வானது சந்தை சக்திகளால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. அவை, சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டமைப்புகளாலும் தீர்மானிக்கப்படுகின்றன[1]. இந்த தரநிலைகள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட தேசிய சட்டம், கொள்கை மற்றும் நடைமுறைகளை வடிவமைப்பதற்கான ஒரு முக்கியமான கட்டமைப்பை வழங்குகின்றன. புலம்பெயர் தொழிலாளர்கள் என்பது "தங்கள் சொந்த ஊர் அல்லது சொந்த நாட்டிற்கு வெளியே வேலை தேடுவதற்காக வீட்டை விட்டு வெளியேறும் நபர்களை குறிக்கும்". தங்களது சொந்த நாட்டிற்குள் வேலைக்குச் செல்லும் நபர்கள் 'உள்நாட்டு' புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எனப்படுகின்றனர். அதேவேளை, வேலைக்காக வேறொரு நாட்டிற்குச் செல்லும் நபர்கள் பொதுவாக 'சர்வதேச புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள்[2] . சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் என்பது "பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் அடைவு மட்டத்தினைக் குறிக்கும் உலகளாவிய நியமங்களாகும். அவை அடிப்படைக் கொள்கைகள் மற்றும் நோக்கங்களை உருவாக்குவதோடு, முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளையும் கடமைகளையும் வெளிப்படுத்துகின்றன[3]". சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் அனைத்து தேசிய தொழிலாளர்களுக்கும் கண்ணியமான வேலையை ஊக்குவிக்க வடிவமைக்கப்பட்டுள்ளதோடு அவை சட்ட வடிவத்தையும் பெறுகின்றன.

இலங்கையிலிருந்து தொழிலாளர் இடம்பெயர்வானது அண்மைகாலமாக முக்கியத்துவம் பெற்றதொன்றாகக் காணப்படுவதோடு, அது நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. உலக மயமாக்கப்பட்ட பொருளாதாரத்தின் பின்னணியில், இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் தரமான வேலை மற்றும் சிறந்த வாழ்வாதாரத்தை தொடர்ந்து தேடுகின்ற நிலையானது தொழிலாளர் இடம்பெயர்வு மற்றும் இலங்கைக்கான அந்நியச்செலாவணி ஆகியவற்றில் ஆண்டுதோறும் அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது[4]. தொழிலாளர் இடம்பெயர்வானத்து உள்நாட்டில் வேலையின்மை விகிதங்களைக் குறைத்துள்ளதோடு பலருக்கு அவர்களது வருமானத்திற்கான ஆதாரமாகவும் காணப்படுகின்றது[5].

2017 ஆம் ஆண்டில், இலங்கையில் இருந்து வேலைக்காக புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 212,000 ஆக காணப்பட்டதென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இலங்கை புலம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள். 2000 ஆம் ஆண்டில் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தின் பெறுமதியானது மொத்த

[1] ILO, *Rules of the Game: A Brief Introduction to International Labour Standards* (2005).
[2] ILO, 'International Labour Standards on Migrant Workers' Rights: Guide for Policymakers and Practitioners in Asia and the Pacific' (International Labour Office 2007).
[3] ibid.
[4] ILO, 'Decent Work Country Programme Sri Lanka 2018-2022'.
[5] ibid.

ஏற்றுமதி வருமானத்தில் 20 சதவீதமாகக் காணப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டில் 63 சதவீதமாக அதிகரித்தது. தற்போது வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பணம் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அண்ணளவாக ஒன்பது சதவீதத்தை உள்ளடக்கியுள்ளது[6].

தொழிலாளர் இடம்பெயர்வின் முக்கியத்துவத்தினை அங்கீகரித்த்துடன், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் இடம்பெயர்வவின் போது அனைத்து நிலைகளிலும் எதிர்கொள்ளும் சவால்களை கருத்திற்கொண்டு, இலங்கை அரசாங்கம் தொழிலாளர் இடம்பெயர்வுகளை நிர்வகிப்பதற்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும் முக்கியமான ஒழுங்குமுறைகள் மற்றும் நிறுவன ரீதியான வழிமுறைகளை உருவாக்கியுள்ளது. எனினும், புலம்பெயர் தொழிலாளர் தொடர்பான பல சவால்கள் தீர்க்கப்பட வேண்டியவையாகவே உள்ளன[7].

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உலகளாவிய தொழிலாளர் சந்தையில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இருப்பினும், அவர்கள் பெரும்பாலும் தொழிலாளர் சுரண்டல், பாகுபாடு மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுதல் உட்பட பல சவால்களை எதிர்கொள்கின்றனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பு போன்ற அமைப்புகளால் நிறுவப்பட்ட சர்வதேச தொழிலாளர் தரநிலைகள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கட்டமைப்பை வழங்குகின்றன. இந்த சர்வதேச அளவுகோல்களுடன் இலங்கை தொழிலாளர் தரநிலைகளின் இணக்கப்பாட்டினை இந்த கட்டுரை ஆராய்கிறது.

## ஆய்வு முறையியல்

இக்கட்டுரையில், இலங்கையில் தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பையும் சர்வதேச தொழிலாளர் தரங்களையும் ஆராயவும் பகுப்பாய்வு செய்யவும் the black letter methodology பயன்படுத்தப்படுகிறது. இவ் ஆய்வானது புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளின் பின்னணியில் தொழிலாளர் தொடர்பான தற்போதைய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் சமவாயன்களை, புரிந்துகொண்டு முன்வைப்பதில் கவனம் செலுத்துகிறது. இந்த ஆய்வு கட்டுரையில் இலங்கையில் தொழிலாளர் தரங்களுடன் தொடர்புடைய சட்ட விதிகள், மற்றும் சமவாயன்களை அடையாளம் கண்டு அவற்றை நன்கு நிறுவப்பட்ட சர்வதேச தொழிலாளர் தரங்களுடன் ஒப்பிடப்பாடுகிறது. புலம்பெயர் தொழிலாளர் தரநிலைமைகள் தொடர்பாக சட்டத்தின் தெளவான பகுப்பாய்வை முன்வைப்பதே இதன் நோக்கம்.

[6] ILO, 'Review of Law, Policy and Practice of Recruitment of Migrant Workers in Sri Lanka' (2019).
[7] ILO, 'Fair Recruitment Country Brief : Sri Lanka' (2019) <https://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_protect/---protrav/---migrant/documents/publication/wcms_720181.pdf>.

## பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

### 1. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச தொழிலாளர் தரநிலைகள்

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உலகளாவிய தொழிற்சந்தையில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்[8], அவர்களின் சொந்த நாடு மற்றும் குடியேறிய நாடுகளின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கின்றனர். புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், அவர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது இன்றியமையாத உலகளாவிய கரிசினையாக மாறியுள்ளது[9]. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பான "சர்வதேச தொழிலாளர் தரநிலைகள்" அவர்களின் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்கும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வதற்கும் ஒரு கட்டமைப்பை வழங்கும் முக்கியமான கருவியாகும். இந்த தரநிலைகளின் வளர்ச்சிக்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐவெநசயெவழையெட டுயடிழரச ழுசபயணையவழைn) பொறுப்பான அமைப்பாக காணப்படுவதோடு, உலகளாவிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளை நிர்வகிக்கும் சில முக்கியமான உடன்படிக்கைகளும் காணப்படுகின்றன[10].

நாடுகள் தங்களது சொந்த தொழிலாளர் தொடர்பாகவும், இடப்பெயாவு தொடர்பாகவும் கொள்கைகளை உருவாக்க இறையாண்மை கொண்டுள்ளன. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது உட்பட, தொழிலாளர் இடம்பெயர்வை திறம்பட நிர்வகிப்பதற்கு ஒத்திசைவான மற்றும் விரிவான தேசியக் கொள்கைகள் இதற்குத் தேவைபடுகின்றன. தொழிலாளர்களின் பாலினம், இனம், தொழில் மற்றும் வதிவிட அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் பல குறைபாடுகள் மற்றும் பாகுபாடுகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்பு நாடுகள் 1919 ஆம் ஆண்டு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் யாப்பில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் மிகுந்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்தின. இவ் வெளிப்பாடானது 1945 இல் மீண்டும் வலியுறுத்தப்பட்டதுடன், 1998 இல் சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் "சிறப்பு கவனம் தேவை" என்று வலியுறுத்தப்பட்டது[11]. சர்வதேச புலம்பெயர்ந்த தொழிலாளர்களின்

---

[8] Axel Marx, Glenn Rayp and Jan Wouters, *Global Governance of Labour Rights: Assessing the Effectiveness of Transnational Public and Private Policy Initiatives* (Edward Elgar Publishing 2015).
[9] Jan Cremers, 'Invisible but Not Unlimited – Migrant Workers and Their Working and Living Conditions' (2022) 28 Transfer: European Review of Labour and Research 6.
[10] NKK Mudalige, 'Sri Lankan Legal Version of Migrant Workers ' Rights : How It Is and How It Shall Be' [2007] KDU-IRC 1 <http://ir.kdu.ac.lk/handle/345/1679>.
[11] ibid.

உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பும் பல தரநிலைகளை ஏற்றுக்கொண்டன[12].

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் Migration for Employment Convention (Revised), 1949 (No. 97) சமவாயத்தின் உறுப்புரை 2-6 வரை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அடித்தளத்தை அமைத்துள்ளது[13]. குறித்த சமவாயத்தின் உறுப்புரை 2 பின்வருமாறு குறிப்பிடுகிறது. "இந்த சமவாயம் நடைமுறையில் உள்ள ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்ந்தோருக்கு உதவுவதற்கும், குறிப்பாக அவர்களுக்கு துல்லியமான தகவல்களை வழங்குவதற்கும் போதுமான மற்றும் இலவச சேவையை மேற்கொள்ளும்"[14].

சமீபத்திய ஆண்டுகளில், அதிகரித்த இடம்பெயர்வானது கொள்கை வகுப்பாளர்கள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், சிவில் சமூகம் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் மத்தியில் பிரதாகன பேசுபொருளாக மாறியுள்ளன. அரசாங்கங்கள், தொழிலாளர்கள் மற்றும் முதலாளிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச தொழிலாளர் தரநிலைகளானவை மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும், கண்ணியத்துடனும் பணிபுரியக்கூடிய அடிப்படை குறைந்தபட்ச சமூகத் தரங்களை வகுக்கிறது[15]. பொருளாதார மேம்பாட்டினை மாத்திரம் பிரதானமானதாகக் கருதாது, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகத் தொடரப்படுவதை உறுதி செய்வதற்கானவையாக சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் உள்ளன. குறித்த தரநிலைகள் உலகப் பொருளாதாரத்தில் சமநிலையை உருவாக்குவதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தில் நன்மைகளைப் பெறுவதற்கு அரசாங்கங்களுக்கும் தொழில்தருனர்களுக்கும்; உதவுகின்றன[16].

சர்வதேச தொழிலாளர் தரநிலைகளானது தேசிய சட்டங்களின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன. மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் சர்வதேச தொழிலாளர் தரங்களுக்கு இணங்க இயற்றப்பட்ட தேசிய சட்டங்களால் பயனடைந்துள்ளனர். இந்த வகையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தரநிலைகள் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உட்பட மில்லியன் கணக்கான தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகளின் மீது உண்மையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன[17].

---

[12] WAC Perera, 'Proceedings Beware If You Are a "Digital Consumer" – Intangible Digital Goods and Consumer Protection in Sri Lanka', *11th International Research Conference* (Kotelawala Defence University, Sr i Lanka 2017).
[13] Mudalige (n 10).
[14] ibid.
[15] ILO, 'International Labour Standards on Migrant Workers' Rights: Guide for Policymakers and Practitioners in Asia and the Pacific' (n 2).
[16] Marx, Glenn Rayp and Jan Wouters (n 8).
[17] ILO, 'International Labour Standards on Migrant Workers' Rights: Guide for Policymakers and Practitioners in Asia and the Pacific' (n 2).

சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் ஒரு நாட்டின் தேசிய தொழிலாளர்களுக்கு எவ்வாறு பொருந்துமோ அதே போன்று புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் பொருந்தும்[18]. சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் சர்வதேச மட்டத்தில் உலகளாவிய ரீதியில்; ஏற்றுக் கொள்ளப்பட்ட குறைந்தபட்ச தொழிலாளர் தரநிலைகளாக காணப்படுகின்றமையினால் அவை கொள்கையளவில் அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் பொருத்தமானவையாகும்[19].

தங்களுடைய ஆட்புல எல்லை மற்றும் தொழிற் சந்தை ஆகியவற்றினுள் யார் நுழைகிறார்கள் என்பதனைத் தீர்மானிக்கும் இறையாண்மை அந்தந்த அரசுகளுக்கு உண்டு[20]. சர்வதேச தொழிலாளர் தரநிலைகளில் வழங்கப்பட்டுள்ள சமமான நடத்துகை கொள்கைக்கு எதிராக இறையாண்மை செயற்படாது என்பதை உறுதிப்படுத்தவும், தொழிலாளர்களின் இடம்பெயர்வுச் செயல்பாட்டின் போது பாதுகாப்பை வழங்கவும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்பு நாடுகள் சில சமவாயன்களையும் பரிந்துரைகளையும் ஏற்றுக்கொண்டுள்ள[21]. அவையாவன

- Migration for Employment Convention (Revised), 1949 (No. 97) and Recommendation (Revised) 1949, (No. 86)
- Protection of Migrant Workers (Underdeveloped Countries) Recommendation, 1955 (No. 100)
- Migrant Workers (Supplementary Provisions) Convention, 1975 (No.143)
- The Migrant Workers Recommendation, 1975 (No. 151)
- International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families (ICRMW)

சமீபத்திய ஆண்டுகளில், சில தரநிலைகள் சமமான சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன என்ற ஒருமித்த கருத்து வெளிப்பட்டுள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்பு நாடுகள் உலகப் பொருளாதார ஒருங்கிணைப்பின் அழுத்தங்களைச் சமாளிப்பதற்கும், சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் குறிப்பிடப்பட்டுள்ள இந்த தரநிலைகளின் அடிப்படையிலான கோட்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டு, மதிக்கப்படுவதையும், அவை அனைத்து இடங்களிலும் உணரப்படுவதையும் உறுதி செய்வதற்காக, பல நாடுகள் மற்றும் தொழிலாளர் அமைப்புகள் போன்றவை The Declaration on Fundamental Principles and Rights at Work இனை ஏற்றுக்கொண்டன[22].

பிரகடனத்தின் முன்னுரையானது "விசேட தேவை கொண்ட நபர்கள், குறிப்பாக வேலையற்றோர் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள்" மீது சிறப்பு கவனம்

---

[18] Laurie Berg, *Migrant Rights at Work: Law's Precariousness at the Intersection of Immigration and Labour* (Taylor & Francis 2015).

[19] Michael Hasenau, 'Part I : The Genesis of the Convention ILO Standards on Migrant Workers : The Fundamentals of the UN Convention and Their Genesis' (1990) xxv International Migration Review 687.

[20] Berg (n 18).

[21] ILO, 'International Labour Standards on Migrant Workers' Rights: Guide for Policymakers and Practitioners in Asia and the Pacific' (n 2).

[22] ILO Declaration on Fundamental Principles and Rights at Work ,1998.

செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அனைத்து மட்டங்களிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. The Declaration on Fundamental Principles and Rights at Work பின்வரும் நான்கு முக்கிய பகுதிகளை உள்ளடக்கியது[23].

- கூட்டம் கூடும் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமை
- அனைத்து வகையான கட்டாய உழைப்பையும் ஒழித்தல்
- குழந்தை தொழிலாளர் முறையை ஒழித்தல்
- வேலை மற்றும் தொழிலில் உள்ள பாகுபாட்டை நீக்குதல்

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரகடனத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் தொழில் தொடர்பான உரிமைகள் அனைத்து நாடுகளிலும் உள்ள அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தும். குறித்த சமவாயன்களை அங்கீகரிக்காத நாடுகளில் கூட இந்த அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் உரிமைகள் கட்டாயம் மதிக்கப்பட வேண்டும்[24].

சர்வதேச தொழிலாளர் அமைப்பால் உருவாக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தரநிலைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்[25]. அவையாவன, ஒன்று கூடும் சுதந்திரம், கூட்டு பேரம் பேசுதல், கட்டாய உழைப்பு, குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு, சம வாய்ப்பு, முத்தரப்பு ஆலோசனை, தொழிலாளர் நிர்வாகம்;, பதவி உயர்வு, தொழில் வழிகாட்டுதல் மற்றும் பயிற்சி, கூலிகள்;, வேலை நேரம,;; தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம், சமூக பாதுகாப்பு, மகப்பேறு பாதுகாப்பு, சமூக கொள்கை, புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்;, கடற்படையினர்;, மீனவர்கள்;, கப்பல்துறை தொழிலாளர்கள்;, பழங்குடியினர்;, தொழிலாளர்களின் குறிப்பிட்ட வகைகள் என்பனவாகும்.

சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் உலக அளவில் தொழிலாளர் உரிமைகள் பாதுகாப்பின் அடிப்படையாக செயல்படுகின்றன. சமூக நீதி, கண்ணியமான வேலை மற்றும் புலம்பெயர்ந்தோர் உட்பட பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு அவை அவசியம். இந்தத் தரநிலைகள், தொழிற்சந்தையில் ஒரு சமமான வேலைத்தளத்தினை நிறுவ உதவுகின்றன, தொழிலாளர்களின் பிறப்பிடத்தினைக் கருத்தில் கொள்ளாது அனைத்துத் தொழிலாளர்களும் தொழிலாளர் அடிப்படை உரிமைகள், பாரபட்சமற்ற நடத்தை, மற்றும் சம வாய்ப்புகள் ஆகியவற்றுக்கு உரிமையுடையவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது[26]. இது தொடர்பாக International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families என்ற சமவாயம் குறிப்பிடுகிறது. குறித்த சமவாயத்தின் உறுப்புரை 01 பின்வருமாறு குறிப்பிடுகிறது.

---

[23] ibid.

[24] ILO, 'International Labour Standards on Migrant Workers' Rights: Guide for Policymakers and Practitioners in Asia and the Pacific' (n 2).

[25] ibid.

[26] International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families, 2003.

"இதனடுத்து வேறு வகையில் குறிப்பிட்டாலன்றி, இச் சமவாயமானது பாலினம், இனம், நிறம், மொழி, மதம் அல்லது நம்பிக்கை, அரசியல், தேசியம், சமூகம், தோற்றம், வயது, பொருளாதார நிலை, சொத்து, திருமண நிலை, பிறப்பு அல்லது பிற நிலை போன்ற எந்த வகையிலும் வேறுபாடு இல்லாமல் அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பொருந்தும்[27]." புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் சு+ழலில், புலம்பெயர்ந்தோர் அடிக்கடி எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களை எதிர்கொள்வதற்கு தேவையான அம்சங்களை இந்த தரநிலைகள் கொண்டிருப்பதனால் அவை குறிப்பாக புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு முக்கியமானவையாகும்[28].

## 2. சர்வதேச தொழிலாளர் தரங்களுடன் இலங்கை தொழிலாளர் தரநிலைகளின் இணக்கத்தன்மை

புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது என்பது ஒரு உலகளாவிய பிரச்சினையாகும்[29]. இதற்கு சர்வதேச விதிமுறைகள் மற்றும் ஒப்பந்தங்களுடன் தேசிய தொழிலாளர் தரங்களை சீரமைக்க வேண்டும். பல நாடுகளைப் போலவே இலங்கையிலிருந்து அதிகமான தொழிலாளர்கள் பிற நாடுகளில் புலம்பெயர் தொழிலாளர்களாக தொழிலில் ஈடுபட்டுள்ளனா;. குறித்த புலம்பெயர் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை ஒழுங்குபடுத்துவதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தொழிலாளர் தரங்களை இலங்கை நிறுவியுள்ளது[30]. பின்வரும் பகுதியானது புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச தொழிலாளர் தரங்களுடன் இலங்கை தொழிலாளர் தரங்களின் இணக்கத்தன்மையை ஆராய்கிறது,

இலங்கை தனது குடிமக்களை வெளிநாடுகளுக்கு குறிப்பாக மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு வேலைக்காக அனுப்பும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இலங்கை தனது தொழிலாளர் தரத்தை சர்வதேச நியமங்களுடன் சீரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கையின் அர்ப்பணிப்பின் முக்கிய அம்சங்களை பின்வரும் விடையங்களினூடாக அவதானிக்கலாம்.

இலங்கை 1948 ஆம் ஆண்டு முதல் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்பினராக உள்ளது. இதுவரை, சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவாயங்களில் இலங்கை 41 சமவாயங்களை அங்கீகரித்துள்ளது, அதில் 32 சமவாயங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன, 9 சமவாயங்கள் கைவிடப்பட்டுள்ளன[31]. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தொழிலாளர் தொடர்பான

[27] ibid.
[28] Mudalige (n 10).
[29] Marx, Glenn Rayp and Jan Wouters (n 8).
[30] Mudalige (n 10).
[31] ibid.

சமவாயங்களான C029[32], C087[33], C098[34], C100[35], C105[36], C111[37], C138[38], C182[39], C081[40], C122[41], C144[42] ஆகியன உட்பட தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பான பல சர்வதேச சமவானங்களை இலங்கை அங்கீகரித்துள்ளது . இந்த சமவாயங்கள் சர்வதேச தொழிலாளர் தரத்தை நிலைநிறுத்துவதற்கான நாட்டின் நோக்கத்தை நிரூபிக்கின்றன.

The Sri Lanka Bureau of Foreign Employment Act, No. 21 of 1985 சட்டத்தின் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நிறுவப்பட்டது , இது வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில்துறையை நிர்வகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் நலன், மற்றும் இலங்கைக்கு வெளியே உள்ள இலங்கையர்களின் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு பொறுப்பாகும். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தைத் தவிர, உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களும் தொழிலாளர் ஆட்சேர்ப்பு ஊக்குவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் அமைப்புகளுக்கான ஒழுங்குமுறைகள் போன்றன புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு மற்றும் பாதுகாப்பிற்கான ஒழுங்குமுறை கட்டமைப்பை வழங்குகின்றன .

மேலும் 2010 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிலாளர் இடம்பெயர்வுக்கான தேசியக் கொள்கையானது பிரதானமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் மனித கண்ணியம் ஆகியவற்றினை கொண்டிருக்கக்கூடிய காத்திரமான தொழில்களுக்காக இடம்பெயர்வதற்கான வாய்ப்புகளை அனைத்து ஆண்களும் பெண்களும் ஊக்குவிக்க குறித்த தேசிய கொள்கை உதவுகிறது . எனவே பாலின சமத்துவம் மற்றும் கண்ணியமான வேலை அணுகுமுறை ஆகியவை தேசிய கொள்கையின் முக்கிய நோக்கங்களாகும். அத்துடன், பிற நாடுகளில் வேலையில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரஜைகள் தொடர்பான அரச கொள்கையை வெளிப்படுத்துவது மற்றும் அந்நியச்செலாவணி உள்ளிட்ட வழிமுறைகள் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு அனைத்து இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அங்கீகரிப்பதும் இதன் மற்றுமொரு நோக்கமாகும் .

---

[32] Forced Labour Convention, 1930 (No. 29).
[33] Freedom of Association and Protection of the Right to Organise Convention, 1948 (No. 87).
[34] Right to Organise and Collective Bargaining Convention, 1949 (No. 98).
[35] Equal Remuneration Convention, 1951 (No. 100).
[36] Abolition of Forced Labour Convention, 1957 (No. 105).
[37] Discrimination (Employment and Occupation) Convention, 1958 (No. 111).
[38] Minimum Age Convention, 1973 (No. 138).
[39] Worst Forms of Child Labour Convention, 1999 (No. 182).
[40] Labour Inspection Convention, 1947 (No. 81).
[41] Employment Policy Convention, 1964 (No. 122).
[42] Tripartite Consultation (International Labour Standards) Convention, 1976 (No. 144).

மேற்கூறிய நிறுவன மற்றும் கொள்கை கட்டமைப்பைத் தவிர, இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜோர்டான், கத்தார் மற்றும் பஹ்ரைன் போன்ற தொழிலாளர் பெறும் நாடுகளுக்கும் இடையில் சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உள்ளன . இலங்கைத் தொழிலாளர்களின், குறிப்பாக பெண் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்வதே இந்த ஒப்பந்தங்களின் முக்கிய நோக்கமாகும். மேலும், இலங்கை தொழிற்சங்கங்கள் பஹ்ரைன், ஜோர்டான் மற்றும் குவைத்தில் உள்ள தொழிற்சங்கங்களுடன் ஆட்சேர்ப்பு மற்றும் வேலைவாய்ப்பு முகவர் மற்றும் துணை ஒப்பந்ததாரர்களின் நடவடிக்கைகளை கடுமையாக மேற்பார்வை செய்வதற்கும் கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்கும், அனுசரணை திட்டங்களின்; தவறான பிரயோகத்தை அகற்றுவதற்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன .

இலங்கை தொழிலாளர் தரநிலைகள் பொதுவாக பாகுபாடு இல்லாத கொள்கையை நிலைநிறுத்துகின்றன, இது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தேசியம், இனம் அல்லது பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. இது சமத்துவத்தை வலியுறுத்தும் சர்வதேச தொழிலாளர் தரங்களுடன் ஒத்துப்போகிறது .

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சம வேலைக்கு சம ஊதியம் பெறுவதை உறுதி செய்வதற்கான முயற்சிகளை இலங்கை மேற்கொண்டுள்ளது. இருப்பினும், நடைமுறையில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம், அமுல்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். தொழிலாளர் இடப்பெயர்வு செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களை நிர்வகிக்க இலங்கை விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது . இந்த விதிமுறைகள் அதிகப்படியான ஆட்சேர்ப்பு கட்டணம் போன்ற சுரண்டல் நடைமுறைகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன, மேலும் ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்களை நெறிமுறை தரங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். நாடு திரும்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சில சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை இலங்கை வழங்கும் அதே வேளையில், விரிவான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியப் பலன்களின் அடிப்படையில் மேம்படுத்தப்பட வேண்டும். இலங்கையில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு சட்டரீதியான தீர்வுகள் மற்றும் பிணக்குகளை தீர்க்கும் வழிமுறைகளை அணுகுவதற்கான உரிமை உள்ளது. இருப்பினும், இந்த வழிமுறைகள் எளிதில் அணுகக்கூடியதாகவும் பயனுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்வது ஒரு சவாலாகவே உள்ளது.

## 3. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கான சட்ட சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகள்

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உலகளாவிய தொழிலாளர் சக்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர், அவர்களின் சொந்த மற்றும் குடியேறிய நாடுகளின் பொருளாதாரங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றனர். இருப்பினும்,

அவர்கள் பெரும்பாலும் சுரண்டல், பாகுபாடு மற்றும் அவர்களின் உரிமைகளின் போதிய பாதுகாப்பின்மை உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர் . இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நியாயமான நடத்துகை மற்றும் கண்ணியத்தை உறுதிப்படுத்தவும், விரிவான சட்ட சீர்திருத்தம் அவசியம்.

1990 இல் ஐக்கிய நாடுகள் சபையினால் நிறுவப்பட்ட நிறுவன ரீதியான மற்றும் கொள்கை அடிப்படையிலான கடமைகளை உள்ளடக்கிய UN Convention on the Protection of the Rights of All Migrant Workers and Their Families என்ற ஐ.நா உடன்படிக்கையை அங்கீகரிக்கத் தேவையான சட்ட ஏற்பாடுகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், உள்நாட்டுச் சட்டத்தை உருவாக்கும் போது இலங்கை சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அடிப்படைகளை பின்பற்றக்கூடிய சிறந்த நடைமுறைகளை நாட்டிற்குள் இணைத்துக்கொள்வதற்கு Migration for Employment Convention (Revised), 1949 (No.97) மற்றும் Migrant Workers (Supplementary Provisions) Convention, 1975 (No. 143) ஆகிய உடன்படிக்கைகளை அங்கீகரிக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளை மேலும் பாதுகாப்பதற்காகவும் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்துவதற்கும் இலங்கைக்கும் தொழிலாளர் பெறும் நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேம்படுத்துவது அவசியமாகும். இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அதன் கடமையின் அடிப்படையில் வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு அதற்கு மேலதிக அதிகாரம் வழங்கப்பட வேண்டும். புலம்பெயர் தொழிலாளர் ஒருவர் தொழில் புரியும் நாட்டிலிருந்து சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கு ஏற்ற வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும். புலம்பெயர் தொழிலாளர்கள் மத்தியில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு அவர்களைக் கட்டுப்படுத்தும் அமைப்பான இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் சக்திவாய்ந்ததாக இருக்க வேண்டும்.

மேலும், தற்போது இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் வழங்கும் சமூக நலத்திட்டங்கள் புலம்பெயர் தொழிலாளர்களின் உண்மையான தேவைகளை பூர்த்திசெய்கின்றனவா என்பது தொடர்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். தொழிற்சந்தையில் புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒழுங்குமுறை கட்டமைப்பை உருவாக்குவது மட்டுமல்லாமல், அவற்றை நடைமுறைப்படுத்தும் செயல்முறையயிலும் அரசாங்கத்தின் முழுமையான பங்களிப்பு தேவைப்படுகிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் புலம்பெயர்தல் கொள்கை வலுவாக இருக்க வேண்டும். அதே வேளை குறித்த கொள்கைகள் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பினை வழங்கக்கூடியதாகவும் காணப்பட வேண்டும்.

## முடிவுரை

தொழிலாளர் இடம்பெயர்வினை நிர்வகிப்பதற்திற்கு சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் மற்றும் உள்நாட்டு சீர்திருத்தங்களுடன் சந்தை சக்திகளை சமநிலைப்படுத்தும் ஒரு விரிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. இலங்கை தனது தொழிலாளர் தரத்தை சர்வதேச நியமங்களுடன் சீரமைப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளது, ஆனால் அமுலாக்கம் மற்றும் சமூக பாதுகாப்பில் சவால்களை எதிர்கொள்கிறது. மேலே பரிந்துரைக்கப்பட்ட சட்ட சீர்திருத்தங்களை அமுல்படுத்துவது இலங்கையில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய முயற்சிகளுடன் இணைந்து அவர்களை நியாயமான மற்றும் நெறிமுறையுடன் நடத்துவதற்கு பங்களிக்க முடியும்.

உசாத்துணை நூல்கள்:


Berg L, *Migrant Rights at Work: Law's Precariousness at the Intersection of Immigration and Labour* (Taylor & Francis 2015)

Cremers J, 'Invisible but Not Unlimited – Migrant Workers and Their Working and Living Conditions' (2022) 28 Transfer: European Review of Labour and Research 6

Hasenau M, 'Part I : The Genesis of the Convention ILO Standards on Migrant Workers : The Fundamentals of the UN Convention and Their Genesis' (1990) xxv International Migration Review 687

ILO, 'Decent Work Country Programme Sri Lanka 2018-2022'

——, *Rules of the Game: A Brief Introduction to International Labour Standards* (2005)

——, 'International Labour Standards on Migrant Workers' Rights: Guide for Policymakers and Practitioners in Asia and the Pacific' (International Labour Office 2007)

——, 'Fair Recruitment Country Brief : Sri Lanka' (2019) <https://www.ilo.org/wcmsp5/groups/public/---ed_protect/---protrav/---migrant/documents/publication/wcms_720181.pdf>

——, 'Review of Law, Policy and Practice of Recruitment of Migrant Workers in Sri Lanka' (2019)

Marx A, Glenn Rayp and Jan Wouters, *Global Governance of Labour Rights: Assessing the Effectiveness of Transnational Public and Private Policy Initiatives* (Edward Elgar Publishing 2015)

Mudalige NKK, 'Sri Lankan Legal Version of Migrant Workers ' Rights : How It Is and How It Shall Be' [2007] KDU-IRC 1 <http://ir.kdu.ac.lk/handle/345/1679>

Perera W, 'Proceedings Beware If You Are a "Digital Consumer" – Intangible Digital Goods and Consumer Protection in Sri Lanka', *11th International Research Conference* (Kotelawala Defence University, Sr i Lanka 2017)

Abolition of Forced Labour Convention, 1957 (No. 105)

Discrimination (Employment and Occupation) Convention, 1958 (No. 111)

Employment Policy Convention, 1964 (No. 122)

Equal Remuneration Convention, 1951 (No. 100)

Forced Labour Convention, 1930 (No. 29)

Freedom of Association and Protection of the Right to Organise Convention, 1948 (No. 87)

ILO Declaration on Fundamental Principles and Rights at Work ,1998

International Convention on the Protection of the Rights of All Migrant Workers and Members of Their Families, 2003

Labour Inspection Convention, 1947 (No. 81)

Minimum Age Convention, 1973 (No. 138)

National Labour Migration Policy for Sri Lanka, 2010

Right to Organise and Collective Bargaining Convention, 1949 (No. 98)

The Sri Lanka Bureau of Foreign Employment Act, No. 21 of 1985

Tripartite Consultation (International Labour Standards) Convention, 1976 (No. 144)

Worst Forms of Child Labour Convention, 1999 (No. 182)

# மட்டக்களப்புத் தேசத்து வேதாந்த மரபில் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

மேகலா சிவகுமாரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
mekalas@esn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

பன்மைத்துவமான சமய, தத்துவப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குவது மட்டக்களப்புத் தேசம். இத்தேசத்தில் ஊருக்கு ஊர் நிலவும் சடங்குவழிப்பட்ட வழிபாட்டு முறைகளாலும், தேசத்துக் கோயில்களின் தனித்துவமான மரபுகளினாலும், வேதாந்தம், வீரசைவம், தாந்திரீகம், சைவசித்தாந்தம் எனும் தத்துவச் செல்நெறிகளாலும் இப்பன்மைத்துவம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பிற்கான மையவிசையாக வேதாந்தமே விளங்குகிறது. இத்தகைய மட்டக்களப்புப் பண்பாட்டு பின்னணியில் தோன்றியவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. இவர் தமிழ்ப்பண்டிதராக பகவத்கீதை வெண்பா, மட்டக்களப்பு தலங்கள் மீதான பதிகங்கள், கவிதைகள் முதலான இலக்கியங்களைப் படைத்ததோடு, சமூக, அரசியல் தளங்களில் சமத்துவ சிந்தனைகளை முன்னெடுத்தவர். இவரை மரபுவழிப் பண்டிதராக சமய, தமிழ்ப் பணிகளில் முடக்கிவிடாது முற்போக்குப் பண்டிதராக இயக்குவித்த இவரது சமய இயங்கியல் தளம் இதுவரை ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. சுவாமி விபுலானந்தராலும் இராமகிருஷ்ணமிஷனாலும்; செயன்முறை வேதாந்தம் வீறுபெற்றிருந்த அன்றைய மட்டக்களப்புச் சூழலில் புலவர்மணியின் ஆக்கங்களும் பணிகளும் வெளிப்படுத்தும் சமத்துவம் சமயங்கடந்தவையா? அல்லது வேதாந்த தத்துவ சிந்தனைகளின் பாற்பட்டவையா? எனும் வினாக்கள் ஆய்வினை முன்னகர்த்துகின்ற ஆய்வுப்பிரச்சினைகளாக அமைகின்றன. இவற்றின்வழி புலவர்மணியின் படைப்புகளும், பணிகளும் முன்வைக்கும் சமத்துவத்தை செயன்முறை வேதாந்தத்துடன் ஒப்பிட்டு நோக்கி அவரது சமய தத்துவத்தளத்தினை அடையாளப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். ஒப்பீட்டு முறையியல், விபரண முறையியல் முதலான ஆய்வுமுறைகள் இவ்வாய்வில் கையாளப்பட்டு, அவரது பகவத்கீதை வெண்பாவின் உட்கிடக்கை வேதாந்தம் என்பதும், அவரது புலமை மரபின் அடித்தளமும் பணிகளுடாக வெளிப்படுத்தப்பட்ட சமரசமும் வேதாந்த நெறியின் வெளிப்படுகைகள் என்பது இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்: பெரியதம்பிப்பிள்ளை, செயன்முறைவேதாந்தம், சமத்துவம், பகவத்கீதை வெண்பா

## 1. அறிமுகம்

இலக்கியங்களின் படைப்புக்களினாலும், நிறுவனங்களின் செயற்பாடுகளினாலும் மட்டக்களப்பே ஈழத்தில் வேதாந்த தத்துவத்திற்கான விளைநிலமாக அமைந்துவிடுகிறது. அந்தவகையில் மட்டக்களப்பிற்குரியதான சுருதி நூல் முறை எனும் ஏட்டுச்சுவடியே ஈழத்து வேதாந்த மரபில் பழமையான அத்வைத வேதாந்த நூலாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இப்பனுவலைத் தொடர்ந்து மட்டக்களப்பவரான சுவாமி விபுலானந்தரது படைப்புகள் வேதாந்த செழுமை

பெற்றனவாக அமைகின்றன. சுவாமியால் மட்டக்களப்பில் நிறுவப்பட்ட இராமகிருஷ்ண மிஷன் நிறுவன ரீதியாக செயன்முறை வேதாந்தப்பணிகளை முன்னெடுத்துவருகின்றது.

செயன்முறை வேதாந்தம் பாரம்பரிய வேதாந்தக் கருத்தியல்களில் இருந்தபடி சமூக நியாயப்பாட்டையும், அறிவியற் பொருத்தப்பாட்டையும் தழுவியவையாய் அத்வைதக் கருத்துக்களுக்கு புதிய ஒளி பாச்சியது. இச்சிந்தனை மரபு சுவாமி விவேகானந்தரால் உலகந்தழுவிய தெய்வப் பேருணர்வாகக் கட்டமைக்கபட்டு 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உலக அரங்கில் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. இவ்வலை மட்டக்களப்பு பண்பாட்டு மரபில் சுவாமி விபுலானந்தராலும், இராமகிருஷ்ண மிஷனினாலும் ஆழக்காலூண்றியது. இதற்கு ஏலவே மட்டக்களப்பு சமய மரபில் ஏலவே பிணைந்திருந்த தாந்திரீகமும், வீரசைவமும் உரம் சேர்த்தன.

தெய்வப் பேரன்பினால் அனைத்து ஆத்மாக்களைளும், பிரபஞ்ச வஸ்துக்களையும் பிரம்மமாக கருதி சகோதரத்துவத்தை முன்னிறுத்தவும், சகிப்புத்தமை, சமயசமரசம், சமுதாய நல்லிணக்கத்தினை முதன்மைப்படுத்தவும், ஜீவ சேவை மூலம் ஞானத்தினை சாத்தியப்படுத்தவும் செயன்முறை வேதாந்தம் முதன்மைப்படுத்தியது. இத்தகைய வேதாந்த சூழலும், சமூக சீர்திருத்த சிந்தனைகளைக் கொண்ட வீரசைவத்தின் தாக்கமும், விழிம்பு நிலை சாதியினருக்கான சுதந்திரமும் மட்டக்களப்பு சமூகத்தில் நெகிழ்ச்சியானதும் பன்மைத்துவமானதுமான இந்து சமய பண்பாட்டை நிலைநிறுத்தியிருந்தது. இத்தகைய பண்பாட்டு மரபில் தோன்றிய மட்டக்களப்பு ஆளுமைகளுள்; ஒருவரே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை.

## 2. ஆய்வுப்பிரச்சினை

சுவாமி விபுலானந்தராலும் இராமகிருஷ்ணமிஷனின் கால்கோளினாலும் செயன்முறை வேதாந்தம் வீறுபெற்றிருந்த அன்றைய மட்டக்களப்புச் சூழலில் புலவர்மணியின் ஆக்கங்களும் பணிகளும் வெளிப்படுத்தும் சமத்துவம் சமயங்கடந்தவையா? அல்லது வேதாந்த தத்துவ சிந்தனைகளின் பாற்பட்டவையா? எனும் வினாக்கள் இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினைகளாக அமைகின்றன.

## 3. ஆய்வின் நோக்கம்

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் இலக்கியப் படைப்புக்களினூடாகவும் சமய, சமூகப் பணிகளினூடாகவும் அவர் முன்வைத்துள்ள சமத்துவத்தை செயன்முறை வேதாந்தத்துடன் ஒப்பிட்டு நோக்கி அவரது சமய தத்துவத்தளத்தினை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 4. இலக்கிய மீளாய்வு

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை குறித்த ஆய்வுகளில் பெரும்பாலானவை அவரது தமிழ் இலக்கியப் பணிகள் பற்றியே பிரஸ்தாபித்துள்ளன. சமய, சமூகப் பணிகள் பற்றிய ஆய்வுகளும் மிகக் குறைந்தளவிலேயே வெளிவந்துள்ளன.

புலவர்மணி தொடர்பாக வெளிவந்த க.விஜயரெத்தினம் என்பவரது தமிழ் தந்த புலவர்மணி எனும் நூல் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களது வாழ்க்கை வரலாற்றினையும், அவரது சமூக, இலக்கியப் பணிகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றது. சிவநிர்த்தானந்தாவின் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஓர் ஆய்வு எனும் நூல்

புலவர்மணியின் வாழ்க்கைக் குறிப்புக்களையும், அவரது தமிழ் இலக்கியப் பணிகளையுமே விபரிக்கின்றது.

எதிர்மனசிங்கம் என்பவரது புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை எனும் நூலும் அவரது வரலாற்றையும், தமிழ், சமய, சமூகப் பணிகளையுமே குறித்துப் பேசியுள்ளது.

இவற்றின் அடிப்படையில் நோக்குகின்ற பொழுது புலவர்மணி பெரயதம்பிப்பிள்ளை அவர்களது வேதாந்த மரபு தொடாபான ஆய்வுகள் இதுவரை வெளிவராத நிலையில் இவ்விடைவெளியினை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## 5. ஆய்வு முறையியல்

மட்டக்களப்பு வேதாந்த மரபு பற்றியும், அவரது கால மட்டக்களப்புச் சமூகச் சூழல் பற்றியும் அறிந்து வெளிப்படுத்துவதற்கு விபரண ஆய்வு முறையும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களது இலக்கியங்களின் பொருண்மையை அடையாளங்கண்டு அவற்றை வேதாந்த மெய்யியலுடன் ஒப்பிட்டு நோக்குவதற்கு ஒப்பீட்டு முறையியலும் கையாளப்பட்டுள்ளன.

## 6. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் வாழ்க்கைச் சுருக்கம்

மட்டக்களப்புத் தேசத்தின் தனித்துவமான பண்பாட்டை வெளிப்படுத்துவதில் திருப்படைக் கோயில்களுக்கும், தேசத்துக் கோயில்களுக்கும் முக்கிய பங்குண்டு. அந்தவகையில் திருப்படைக் கோயில்களில் ஒன்றாக விளங்குவது மண்டூர் கந்தசுவாமி கோயில். இக்கோயில் வண்ணக்கர் பரம்பரையில் தோன்றியவரே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. இவர் தந்தை ஏகாம்பரப்பிள்ளை, தாயார் சின்னத்தங்கம். தந்தையார் கோயில் வண்ணக்கர். தாயாரும் பிறிதொரு வண்ணக்கரான சிதம்பரப்பிள்ளை என்பவரின் புதல்வியாவார். சைவப் பற்றுள்ள பெற்றோருக்கு மூத்த மகனாக 1899ஆம் ஆண்டு தை மாதம் 8ஆம் திகதி பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை மண்டூரிலே கற்றார். இக்காலத்தில் சூடாமணி நிகண்டு, பாரதம், கந்தபுராணம், திருச்செந்தூர் புராணம் முதலிய நூல்களைக் கற்றார். தொடர்ந்து கல்முனை வெஸ்லிக் கல்லூரியிலே ஆங்கிலக் கல்வியினைத் தொடர்ந்த வேளை ஏற்பட்ட வாத நோயினால் பாடசாலைக் கல்வியினை 7ஆம் வகுப்புடனே இடைநிறுத்திக் கொண்டார். நோயிலிருந்து குணமடைந்த வேளை மண்டூர் ஆலய உற்சவத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்த புத்தக வியாபாரியான தம்பிமுத்துப்பிள்ளை, வண்ணக்கர் வீட்டிலேயே தங்கியதோடு பெரியதம்பிப்பிள்ளைக்கு யாழ்ப்பாணத்தில் கல்வியை முன்னெடுக்க ஏற்பாடு செய்து கொடுத்தார். இதன்வழி யாழ்ப்பாணம் சென்று நாவலர் தாபித்த காவியப் பாடசாலையில் கற்றார். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடமும், வித்துவ சிரோமணி கணேசையர் முதலானோரிடமும் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுக் கொண்டார். அக்காவிய பாடசாலையிலே பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களும், புலவர்மணியும் ஒருசாலை மாணாக்கர்கள்.

மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த பண்டிதர் மயில்வாகனனார் யாழ்ப்பாணத்தில் ஆசிரியப் பணியை மேற்கொண்டிருந்த வேளையில் பண்டிதரோடு ஏற்பட்ட மேலான நட்பும், அறிவூட்டலும் கவிதையாக்கத்தை தூண்டிட அக்காலப்பகுதியில் மண்டூர்ப்பதிகம் உருவாயிற்று. இப்பதிகத்திற்கு பண்டிதர் மயில்வாகனனார் சாற்று

கவியினையும் பாடிச் சிறப்புச் சேர்த்தார். இக்காலப்பகுதியில் மயில்வாகனனாருக்கும், பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கும் யோகர் சுவாமியின் ஆசியும், அருளும் கிட்டியது. அந்நாட்களிலே துறவு மேற்கொள்ள மயில்வாகனனார் இந்தியா சென்று சுவாமி விபுலானந்தரானார். இதனைத் தொடர்ந்து பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் காவிய பாடசாலையை விட்டு சாகவச்சேரியில் ஆசிரியப் பணியை மேற்கொள்ளலானார்.

அக்காலத்து யாழ்ப்பாணச் சூழலில் சாதியடுக்கமைவு இறுக்கமாகப் பேணப்பட்டது. இயல்பாகவே சமத்துவவாதியான பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் பள்ளர் வகுப்பைச் சேர்ந்த ஆறுமுகம் எனும் கலைஞரோடு தொடர்பு கொண்டிருந்தமைக்காகக் கண்டிக்கப்பட்டதோடு அவரின் மரணத்திற்கு இரங்கற்பா பாடியமையால் உயர்சாதியினரால் பாடசாலையை விட்டு வெளியேற்றப்பட்டார். இவ்வாறான கசப்பான சம்பவங்களால் கிறிஸ்தவ சமயத்தில் விசுவாசங் கொண்டு இந்தியா சென்று கிறிஸ்தவ வேதசாஸ்திரங்களை கற்கலானார். இந்தியாவில் தங்கியிருந்த வேளையில் மதுரை மங்கம்மாள் சத்திரத்தில் சுவாமி விபுலானந்தரின் அருள் பெற்று மீண்டும் இந்துவாய் இலங்கை திரும்புகிறார்.

1926,ல் இல்லறத்தில் இணைந்ததோடு, சுவாமி விபுலானந்தரின் அழைப்பில் இராமகிருஷ்ண சங்கத்தின் திருகோணமலை இந்துக் கல்லூரியில் தமிழாசிரியரானார். தொடர்ந்து மட்டக்களப்பு அர்ச் அகுஸ்தீனார் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும், அர்ச் சிசிலியாக் கல்லூரியிலும் தமிழ் கற்பித்தார். பின் மட் அரசினர் கல்லூரியில் 1959ஆம் ஆண்டுவரை ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் ஆராய்ச்சியாளர், கவிஞர், அரசியல் சிந்தனையாளர், சமூக சேவையாளர் எனப் பலமுனைகளில் தனது பணிகளை முன்னெடுத்து 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

### 6.1 சுவாமி விபுலானந்தருடனான தொடர்பு

சுவாமி விபுலானந்தர் அவர்கள் 'மன்பதைக்கு தொண்டு புரிதலே தவம்' எனக்கருதி துறவு பூண்டு சமய, சமூக, கல்வி பணிகளை முன்னெடுத்தவேளை தன்னையும் அப்பணியில் பிணைத்துக்கொள்ள முனைந்தவர்களுள் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் ஒருவராவார். இவர்களுக்கிடையிலான தொடர்பினை "கண்ணபரமாத்மாவிற்கும், அர்ஜூனனுக்குமான உறவினைப் போன்றது" என்பர். காரணம் யாதெனில் நண்பராகவும், உறவினராகவும் மட்டுமன்றி குருவாகவும் விளங்கியவர்.

புலவர்மணி சிறுவயதில் மரபுவழிக் கல்வியிலிருந்து விடுபட்டு ஆங்கிலக் கல்வியை பெற வெஸ்லிமிஷன் பாடசாலையில் இணைந்த போது சுவாமி விபுலானந்தரின் ஆங்கில ஆசானான FQ;சித்தம்பி என்பவரையே தனது ஆசானாகப் பெறும் பேறு கிடைத்தது. எனினும் இடைநடுவே வாதநோயால் பீடிக்கப்பட்டு ஆங்கிலக் கல்வியை விடுத்து வீடு திருப்பினார். நோயிலிருந்து விடுபட்டு மண்டூரில் வசித்த காலத்திலேயே விவேகானந்தரின் சிஷ்யை அவபாமியா அம்மையாரின் மட்டக்களப்பு வருகையும், அவரது பிரச்சாரமும் மட்டக்களப்பு சுதேச இயக்கம் தோன்றுவதற்குக் காலாய் அமைந்தது. இவ்வியக்கத்தில் முதலியார் கா.வ. மார்க்கண்டன், வித்துவான் ச.பூபாலப்பிள்ளை, வித்துவான் அ.சரவணமுத்தன், பொ.வைத்தியலிங்கதேசிகர், அருணாசலதேசிகர், பண்டிதர்; சா.மயில்வாகனம் ஆகியோருடன் வயதில் இளையவனாக பெரியதம்பிப்பிள்ளையும் இணைந்தார். இதனை "ஊரெங்கும் தேவையான பள்ளிக்கூடங்களை நாமே கட்டுவோம் என்று இளைஞர்களும்,

முதியவர்களும் துள்ளியெழுந்து தமது தோள்களில் மரம் தடிகளைச் சுமந்தனர். நானும் முழுநேரத் தொண்டனானேன்." (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப27) எனத் தனது சுயசரிதையில் குறிப்பிடுகிறார். ஒரே உபாத்தியாயரிடம் கற்றது, சுதேச இயக்கத்தில் பங்கு கொண்டது என இவர்களிடையே ஆரம்ப அதிர்வுகள் இருந்தபோதும் அவ்வுறவு யாழ்ப்பாணத்திலே நெருங்கிய உறவாகப் பட்டை தீட்டப்பட்டது.

யாழ்ப்பாணக் காவிய பாடசாலையில் படித்த காலத்தில் குருநகர் மரகத மடத்தில் பண்டிதர் மயில்வாகனனார் தங்கியிருந்தார். மரகத மடத்திலேயே அவரோடு ஊரவராகவும், உறவினராகவும், குருவாகவும் பந்தமேற்படலானது. வசதி வந்தபோதெல்லாம் மரகத மடத்தினை நாடிய பெரியதம்பிப்பிள்ளைக்கு மயில்வாகனனாரின் சேர்க்கையால் மனம் விசாலமாயிற்று. பண்டிதர் யாழ் ஆனைப்பந்தி விவேகானந்த சபையில் தங்கிய போது காவிய பாடசாலையை விட்டு பெரியதம்பியும் அவர் கூடவே தங்கியதுடன் அறிவையும் ஆழமாக்கிக்கொண்டார். (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப39) இக்கால கட்டத்திலே மண்டூர்ப்பதிகம் முகிழ்ந்தது. இப்பதிகத்திற்கு மயில்வாகனார்,

"பண்டூரும் முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர்திருப் பதியீ தென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
வளம்மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரி லுறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளையெனும் கலைவல் லோனே." (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப45) என வழங்கிய சிறப்புப் பாயிரத்தால் மேலும் பதிகம் சிறப்புற்றது.

யாழ்ப்பாணத்தில் யோகர் சுவாமியின் ஆசியினை மயில்வாகனனோடு கொண்டிருந்த தொடர்பின் வாயிலாக பெரியதம்பிப்பிள்ளையும் பெற்றார். யாழ்ப்பாண விவேகானந்த சபையில் தங்கிய காலத்தில் சாயங்கால வேளைகளில் நல்லூர் கந்தசுவாமி கோயில் உள்வீதியில் யோகர் சுவாமியுடனும், பண்டிதரோடும் அமர்ந்து திருப்புகழ், திருமுருகாற்றுப்படை படித்தார். இவ்வாறு யாழ் மண்ணிலே இருவருக்குமான பிணைப்புத் தொடர்ந்த வேளையிலேயே பண்டிதர் மயில்வாகனனார் இந்தியா சென்று சுவாமி விபுலானந்தரானார்.

காலவோட்டத்தில் யாழ்ப்பாண சாதியடுக்கமைவால் ஏற்றப்பட்ட மனமாற்றத்தால் பெரியதம்பிப்பிள்ளை கிறிஸ்தவராகி மெதடிஸ்த மிஷனில் வேதாகமப் பயிற்சிக்கு இந்தியா சென்றார். அப்பயிற்சிக் காலத்தில் தனது படைப்பாற்றலால் பல கிறிஸ்தவப் பாடல்களை இயற்றியமையும் குறிப்பிடற்குரியது. அங்கிருந்த வேளையிலேயே சுவாமி விபுலானந்தர் மதுரைக்கு வந்தமையை பண்டிதர் சுப்பிரமணியசர்மா மூலம் அறிந்து மதுரைக்கு விரைந்து சுவாமியை தரிசித்ததோடு மீண்டும் சைவரானார். இத்தரிசனத்தினை "என்னைக் கண்டதும் விரைந்து வந்து இரும்பைக் காந்தம் இழுப்பது போல அவர் என்னை இறுகத் தழுவிக் கொண்டார். இரண்டு நிமிஷம் ஒரு பேச்சுமில்லை. பரமஹம்சர் கைப்பட்ட நரேந்திரர் போல் ஆகிவிட்டேன். பரிசதீட்சை கிடைத்து விட்டது. இனி நான் வேறு மனிதன்." (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப 99) எனப் பதிவிட்டுள்ளார். மேலும் இந்நிகழ்வை,

"சங்கத் தமிழ்மதுரைச் சத்திரத்தில் வைத்தெம்மை

அங்குவச மாக்கி அருள்செய்தே - தங்கியெம்
புத்தி புகுந்தவிபு லாநந்தர் பொன்னடிக்கண்
வைத்திந்நூல் நெஞ்சே வணங்கு”

என பகவத்கீதை வெண்பாவின் சமர்ப்பணச் செய்யுளில் குறிப்பிடுகிறார். இந்நிகழ்வைத் தொடர்ந்து தருமசேனர் சமணத்திலிருந்து மீண்டது போன்று இலங்கை திரும்புகிறார். இயல்பாகவே சாதி ஏற்றத்தாழ்வுகளைப் புறந்தள்ளிய பெரியதம்பிப்பிள்ளைக்குச் செயன்முறை வேதாந்தியான சுவாமி விபுலானந்தருடனான தொடர்பு மேலும் அவரில் செயல்முறை வேதாந்த்தையும் அதன்வழி சமரசப் பண்பையும் நிலைக்கச் செய்தது.

இலங்கை மீண்ட பெரியதம்பிப்பிள்ளை சுவாமி விபுலானந்தரின் நிர்வாகத்தில் இயங்கிய திருகோணமலை இந்துக்கல்லூரியில் ஆசிரியப் பணியைத் தொடரலானார். சுவாமியுடனான தொடர்பினால் மகாத்மாகாந்தியடிகள் இலங்கை வந்த போதும், சேர் பொன் இராமநாதன் திருகோணமலை சண்முகாக் கல்லூரி திறப்பு விழாவிற்கு வந்த போதும் வரவேற்று பா பாடும் வாய்ப்பினையும் பெற்றார்.

விபுலானந்த அடிகளார் நோய்வாய்ப்பட்டிருந்த வேளை அவர் மீது கொண்டிருந்த அளவிலா ஈடுபாட்டினால் ‘சுகமே மீள்க பல்லாண்டு வாழ்க’ எனும் பொருளமைதியில் விபுலானந்தர் மீட்சிப்பத்தினைப் பாடியுள்ளார்.

“பாரேறும் புகழாளன் மீள்கெனக் கூவாய் பைங்குயிலே

பன்மொழி விபுலானந்தன் வாழ்கெனக் கூவாய் பைங்குயிலே”
(பெரியதம்பிப்பிள்ளை.ஏ.1;980:ப.17) என்றும் “இமயத்தலையிற் தமிழ் முத்திரை வரை ஈழக்கரிகாலன்” என்றும் பாடுகிறார்.

1944ஆம் ஆண்டு வீரகேசரியில் தொடராகப் பகவத்கீதை வெண்பா வெளிவந்துகொண்டிருந்த போது கொழும்பு இராமகிருஷ்ணமடத்திற்குப் பெரியதம்பிப்பிள்ளை அவர்களை அழைந்து நல்லறிஞர்கள் முன்னிலையில் விரித்துரைக்கச் செய்து ஆசிர்வதித்தார்.

இவ்வாறு புலவர்மணி சுவாமி விபுலானந்தரோடு கொண்டிருந்த நீண்டகால உறவினை தனது வாழ்வின் பின்னாளில் “யாழ்ப்பாணத்தில் வைத்து என்மீது அரும்gpa பண்டிதர் மயில்வாகனனாரின் அன்பு அவர் துறவியான பின்பு அருளாக மலர்ந்துள்ளதை நினைந்து நினைந்து உள்ளம் உருகி நிற்கின்றேன்.” (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப 33) என்று பக்திபூர்வமாகப் பதிவு செய்துள்ளார்.

இவ்வாறு இவ்விரு வேதாந்த ஆளுமைகளுக்குமிடையிலான தொடர்பு உறவினனாய், நண்பனாய், குருவாய்த் தொடர்ந்தது. இத்தொடர்ச்சியின் நீட்சியே இயல்பாகவே சமத்துவ சிந்தனைப் போக்குடைய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையை பின்னாளில் வேதாந்தியாய்ப் புடம் போட்டது.

### 6.2 சமய இலக்கியப் பணிகள்

புலவர்மணி உரைநடையிலும், செய்யுள் நடையிலும் பல நூல்களை இயற்றியவர். இவரால் பால்ய வயதில் இயற்றப்பட்டதாக மண்டூர்ப் பதிகம் விளங்குகிறது. பத்து பதிகங்களைக் கொண்ட இந்நூல் மண்டூர்க் கந்தசுவாமி ஆலயத்தோடு கொண்ட

பூர்வாங்க தொடர்பின்பால் அவ்வாலயத்தின் பழமையையும், சிறப்பினையும் எடுத்துரைக்கும் வகையில் பிரவகிக்கப்பட்டது. இது இவரியற்றிய முதலாவது தோத்திர நூலாகவும் விளங்குகிறது.

புலவர்மணியின் சைவப் பதிகங்கள் வரிசையில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பதிகம், சித்தாண்டிப்பதிகம், மாமாங்கப்பதிகம், காளிகாமடு கற்பகவிநாயகர் CQ;சல் என்பனவும் குறிப்பிடத்தக்கவை. இப்பதிகங்கள் இறைவனதும், தலத்தினதும் சிறப்புக்களையும், வழிபாட்டின் முக்கியத்துவங்களையும் வெளிப்படுத்துவனவாக விளங்குகின்றன. இவரியற்றிய செய்யுள் நூல்களில் பகவத்கீதை வெண்பா மணிமுடியாகத் திகழ்கின்றது. மூன்று பாகங்களாக வெளிவந்த இவ்வெண்பா தத்துவஞானிகளுக்கு தத்துவ நூலாகவும், சமயக்கோட்பாட்டாளர்களுக்குச் சமய நூலாகவும், இலக்கிய ஆய்வாளர்களுக்கு இலக்கிய நூலாகவும் அமைந்துள்ளது. இவரது வசனநடை வல்லமையை பகவத்கீதை வெண்பாவிற்கு வழங்கிய விளக்கவுரை எடுத்துக்காட்டுகிறது. வசனநடையில் வெளிவந்த பாலைக்கலி பிறிதொரு படைப்பாக விளங்குகிறது. இவரது நாடகப் படைப்பாக்கமாக நாமகள் இலம்பகம் வெளிவந்துள்ளது. அத்தோடு இவர் எழுதிய கவிதைகள் புலவர்மணி கவிதைகள் எனத் தொகுக்கப்பட்டுள்ளதோடு, இவர் தனது சுயசரிதையை 'உள்ளதும் நல்லதும்' எனும் தலைப்பில் எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 6.3 பகவத்கீதை வெண்பாவில் வேதாந்தம்

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் வேதாந்தத்தின் சமரச மனோபாவத்திலேயே (செயல்முறை வேதாந்தம்) பகவத்கீதை வெண்பாவை யாத்துள்ளார் என்பதை அவரது முகவுரையில் இடம்பெறும் "பகவத்கீதை தருகின்ற திருச்செல்வம் சமத்துவ புத்தியே. இந்நூல் முழுவதிலும் பரந்து கிடக்கும் செழும் பொருளும் இதுவே. கருமயோகம், ஞானயோகம் இரண்டும் இதனையே நிலைக்களனாகக் கொண்டுள்ளன.(பகவத்கீதை வெண்பா.ப.13 உரோமன் இல) என்பதை அவரது கூற்றே புலப்படுத்தி நிற்கின்றது. மேலும் அக்கூற்றினை வலுப்படுத்துவதாக அந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய சுவாமி நடராஜானந்தா அவர்களைப் பற்றி புலவர்மணி வழங்கிய கருத்துரை அமைந்துவிடுகின்றது. "பகவத்கீதை வெண்பாவின் இந்தக் கருமயோகப் பகுதியைத் தமது சமத்துவ புத்தியால் ஒரு நூலாக மதித்துத் தமது மதிப்புரையால் ஆசிர்வதித்தார் உயர்திரு சுவாமி நடராஜானந்தா அவர்கள். இந்நாட்டுத் தவப்புதல்வர். விபுலானந்தர் பரம்பரை: இராமகிருஷ்ண மடச் சந்நியாசி" என அமைகிறது. இங்கு சுட்டப்படும் இராமகிருஷ்ண மடத் துறவியான நடராஜானந்தா அம்மடத்தின் செயன்முறைவேதாந்த துறவியாவார். அவர் குறிப்பிடும் சமத்துவம் என்பது செயல்முறை வேதாந்தத்தின் பண்புகளுள் ஒன்றே. எனவே புலவர் மணி அவர்கள் கீதை பற்றியும், இராமிகிருஷ்ண மடத் துறவி பற்றியும் முன்வைக்கும் சமத்துவம் என்பது செயல்முறை வேதாந்தமேயாகும்.

பகவத்கீதை வெண்பாவை வேதாந்தப் பொருளமைதி கொண்ட நூலென பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. "மல்லாகம் சரவணமுத்து அவர்களின் நன்முயற்சியால், யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் சைவப்பெரியார் க. நடேசப்பிள்ளை அவர்களின் தலைமையில் பகவத்கீதை வெண்பாவின் முதற்பகுதியாகிய கருமயோகம் வெளியிடப்பட்டது. இது யாழ்ப்பாணப் பாரம்பரியத்தின் முற்றுமுழுதான புலமை அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்டதெனினும் இந்நூலின் உட்கிடக்கை சைவ

சித்தாந்தம் அன்று வேதாந்தம் ஆகும்." (விஜயரெத்தினம்:1998:ப.ஒi)என இந்நூல் வேதாந்தசார்புடையது எனக்குறிப்பிட்டுள்ளதோடு, சுவாமி விபுலானந்தரைப் போன்றே இவரும் வேதாந்தச் சார்புடையவராகின்றார் எனும் இவரது குறிப்பபு நூலை மட்டுமன்றி நூலாசிரியரையும் வேதாந்த மரபிற்குரியவராய் எடுத்துக்காட்டுகின்றது.

பகவத்கீதை கருமத்திற்குத் தொடக்கமாகவும், ஞானத்திற்கு மூலமாகவும் அமையும் சுவதருமத்தை உணரவைப்பதற்குப் பதினெட்டு அத்தியாயங்களாகப் விரிந்திருக்கின்றது. போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு உண்டான கலக்கத்தை ஒருசில வார்த்தைகளால் உணர்த்தமுடியாது. தனது குருமாரை, உறவினர்களை, நண்பர்களை, மூத்தோரை கொன்று குவிப்பதா என்று கலங்கி போரை வெறுத்து அகிம்சை பேசுபவனாக மேற்கிளம்புகிறான். இந்நிலையில் பகவான் சுவதருமத்தை விரித்து ஞானம், ஞானத்தின் மூலம் எது எதுவென விரித்துகாட்ட வேண்டியதாயிற்று.

காமிய கருமமாயினும், நிஷ்காமிய கருமமாயினும் சமநிலை வேண்டும். சமநிலை புத்திக்கு செயலிற் செயலின்மையும், செயலின்மையிற் செயலும் என இருவகைத்தது என அர்ச்சுனனை பகவான் தட்டியெழுப்புகிறார். சுவதருமத்தில் தொடங்கும் கருமப்பரப்பு, இறுதியிற் செய்யாமையாய் ஞான நிலையாய் முதிர்வதைக் காணுகின்றான் அர்ச்சுனன். இக்கீதையானது அர்ச்சுனனுக்கு மட்டுமன்றி சீவாத்மாக்களான அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது. மனிதன் நாள்தோறும் கணந்தோறும் தன் நிலையை அறியாது தன் தருமத்தை உணராது தடுமாறுகின்றான். அனைவருக்குமான சஞ்சீவியே பகவத்கீதை. அவ்வகையில் மனைவியின் நோய்ப்படுக்கையால் மனநிலை தளம்பலில் இருந்த புலவர்மணிக்கும் அவ்வாறே.

புலவர்மணியின் அகச்சூழலும் புறச்சூழலும் போர்க்களமாக இருந்த நிலையிலேயே பகவத்கீதை வெண்பாவாகப் பிரவாகமெடுத்தது. ஞானத்திற்கும் ஞானத்திற்கு நிமித்தமான கர்மத்திற்கும் உள்ள தொடர்பினை உரைக்கும் நூல்; பகவத்கீதை. இத்தொடர்பினையே சுவாமி விவேகானந்தர், பாரதியார், சேர்.பொன்.இராமநாதன், வேதாந்தச்செல்வர் குமாரசாமி எனப்பல வேதாந்திகளும் செயல்முறை வேதாந்தமாகக் கொண்டனர். இதுவே புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைக்கும் பிரசன்னமாயிற்று.

புலவர்மணி பகவத்கீதை வெண்பாவில், இறப்பென்பது கடத்தலே. அதாவது நித்தியமான ஆன்மா தனது கருமத்திற்கீடாகக் கிடைத்த நிலையற்ற தேகமாகிய குடிலைக் கடந்து செல்லுதல். கருமமென்பது காரணகாரியத் தொடர்பாக நிகழ்ந்துவருஞ் செயங்கூட்டத்தின் விளைவு. இன்பதுன்பங்கள் வரும்போது சமநிலையில் நின்ற அவைகளை அனுபவித்தல் விடுதலைக்குரிய வழியாகும் என எடுத்துரைத்து

"எவனிவற்றாற் கட்டுணான் இன்பதுன்ப மெய்தின்
எவன்சமநோக் கெய்தி யிருப்பான் - அவனன்றோ
சித்தங் கலங்காத தீரன் அவனுக்கே
முத்தியுரித் தாதல் முறை" (பகவத்கீதை வெண்பா.1சாங்கிய யோகம் 15)

என விடுதலைக்குரிய மார்க்கம் சமநிலையான திடசித்தம் எனப் பகர்கிறார்.மேலும் இவ்வெண்பாவிற்கான விளக்கக் குறிப்பிலே, 'மக்களிடையே சமத்துவ நோக்கம் பரவ வேண்டுமாயின், அன்பினாற் சமநோக்கம்: சமநோக்கத்தாற் சமசந்தர்ப்பம்: சமசந்தர்ப்பத்தால் ஐக்கியம்: ஐக்கியத்தால் வல்லமை: வல்லமையாற் காரிய சித்தி

பின்பு விடுதலை. விடுதலையால் இன்பம். இங்குமின்பம், எங்குமின்பம், எல்லோருக்கும் இன்பம்;'(பகவத்கீதை வெண்பா, கருமயோகம் ப.44) எனப் பாரதியைப் போன்று அனைவருக்கும் இன்பம் வேண்டுகிறார். இவ்வேண்டுதல் அவர் கைக்கொண்ட செயன்முறை வேதாந்தந்தின் பாற்பட்டதே.

மேலும் ஆன்மா நித்தியமானது. என்பதை இல்லாதது உள்ளதாகாது. உள்ளது இல்லாததாகாது. இவ்விரண்டுக்குமிடையே உள்ள வேற்றுமையை உண்மையுணர்ந்தோர் அறிவர் என கூறி,

"நிறைந்துலகில் ePf;கமற நிற்கும் பொருளீ
திறந்தழித லற்ற தெனத்தேர் - இறந்தழிதல்
அற்ற வுயிரை அழித்தற் கவனியிலே
மற்றெவனோ வல்ல மகன்" (பகவத்கீதைவெண்பா.1சாங்கியயோகம் 17)

எனப் பாடுகிறார். இங்கு இவ்வுலகம் முழுவதிலும் நிற்கும் அழிவற்ற பொருள். எங்கும் வியாபித்து நிற்கும் உயிரை வெறும் உடல்களை அழிப்பதால் அழித்துவிட முடியாது. உடல் சடப்பொருளாலானது. சித்துப்பொருளாகிய ஆன்மா மாறுபாடற்றது. மாறுபாடற்றதே உண்மைப் பொருள். எனவே ஆன்மாவின் இந்த தேகங்களே அழிவுடையன. ஆன்மா என்றுமுள்ளது. அழிவற்றது.

ஆம்மா பிறப்பதுமில்லை: இறப்பதுமில்லை: முன்பு இல்லாமலிருந்து பின்பு உண்டாவதுமில்லை. இது பிறப்பிற்கு அப்பாற்பட்டு அழிவின்றி நிற்கும் பழம்பொருள். தேகம் அழிய ஆன்மா அழியாது நிற்கும். என வேதாந்தமரபில் உரைத்து அதனை,

"இல்லை பிறத்த லிறத்தல் பழம்பொருளீ
தில்லா திருந்திடையி லெய்தலிலை - தொல்லைப்
பிறப்பற் றழிவற்ற பேரான்மா தேகம்
இறப்பவழி யாதுநிற்கு மே' (பகவத்கீதைவெண்பா.1சாங்கிய யோகம் 20)

என வெண்பாவாக ஆன்மாவின் நித்தியத்தினை முன்வைக்கிறார். தொடர்ந்து இவ்வெண்பாவிற்கான விளக்கக் குறிப்பில் பிறப்புகள் உடலுக்கே. ஆன்மா பழம் பொருள். கருமத்துக்கு ஈடாக உடல்கள் ஆன்மாவிற்கு கிடைக்கின்றன. அவை அழியும் இயல்புடையன. உடல்கள் அழிய ஆன்மா சாட்சி மாத்திரமாத்திரனாய் புறப்படும் என்று குறிப்பிட்டு அத்வைத வேதாந்தத்திகள் ஆத்மா பரமாத்மாவிலிருந்து வேறுபடாத்தன்மையை அவச்சேதவாதத்தினூடாக நிறுவுவர். புலவர் மணியும் அவச்சேத வாதத்தினை தனது விளக்கவுரையில் முன்வைக்கிறார். 'குடத்தினுள்ளிருக்கும் ஆகாயம் அக்குடமுடையப் பெருவெளியிற் கலத்தல்போ லுள்ளது உடலை விடுத்துச் செல்லும் உயிரின் நிலைமை. கரும சேட முண்டேற் பின்னும் உடலெடுக்கும். எடுக்கும் உடல் அதன் பாவனைக்குத் தக்கதாயிருக்கும்.' (பகவத்கீதைவெண்பா.1கருமயோகம், ப.46) என்கிற புலவர்மணியின் விளக்கவுரையானது பகவத்கீதை வெண்பா அவரது வேதாந்த விருப்பின் வெளிப்படுகை என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

வேதாந்தம் முன்வைக்கும் சீவன் முத்தர் நிலையைக் குறிப்பிடுமிடத்து
சீவன் முத்தர்களாய் ஆனபின்பு கருமச்சக்கரத்தால் பயனில்லை என்று சுட்டி
"தன்னிலே பேரன்பு தானுடையான் ஆனம்மாவாம்
தன்னிலே தானிறைவு தானுடையான் - தன்னிலே
தானுவகை கொண்டிருப்பான் சார்கரும சக்கரத்தால்

ஆனதொன்று மில்லை யவற்கு" (பகவத்கீதை வெண்பா: கருமயோகம் 17)

எனப் பாடுகிறார். இதன் விளக்கவுரையில் புலவர்மணி அவர்கள் மேல்வருமாறு குறிப்பிடுகிறார். தானும் அவளும், தானே அவள், அவளே தான் என்னும் அபேத நிலையடைந்து வாழும் கணவன் மனைவியரிடையே ஒருவருக்கொருவர் நன்றி பாராட்டுதல் அவசியமில்லை. இருவரும் ஒருவரான பின் யார் யாருக்கு நன்றி பாராட்டுவது. பரம்பொருளோடு ஒன்றுபட்டு அதன்மயமாகி விட்டபின்பு கருமத்தால் என்னபயன்? (பகவத்கீதைவெண்பா பாகம் 1:ப.90) எனக் கேட்டு சீவப்பிரம்ம ஐக்கியத்தைக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு பகவத்கீதை வெண்பாவும், வெண்பாவிற்கான அவரது விளக்கக்குறிப்புக்களும் அவரது வேதாந்த தத்துவ முதிர்ச்சியின் வெளிப்படுகையாகவே அமைந்துள்ளது.

### 6.4 புலவர்மணி கவிதைகளில் சமத்துவம்

சமசந்தர்ப்பம், சமத்துவம், சமரசம் என்னும் மூன்று மொழிகளும் எனக்கு ஜீவ மந்திரமாகிவிட்டன எனக் குறிப்பிடுபவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பெரும்பாலான தம் கவிதைகளின் பொருண்மையாக சமத்துவத்தையே கைக்கொண்டார். மானிட சகோதரத்தினை சாரமாகக் கொண்டு சாதி, மத, மொழி , இன பேதங்களை ஒதுக்கிய இந்து சமயத்தின் புதிய பரிணாமமாக செயல்முறை வேதாந்தம் அமைந்தது. இவ்வேதாந்த ஊடாட்டமே இவரது சமத்துவமாக பிரவகித்தது.

மக்களைப் பற்றிப் பாடுவதையும் , வாடியே உழலும் ஏழ்மை மக்கள் வருத்தம் நீங்க பாடுவதைத் தனது கவிதைகளின் குறிக்கோளாகக் கொணடவர். இதனை

"பாடுவதெல்லாம் பாட்டோ
மக்கள் தம் பாட்டை நாளும்
நாடியே யுணர்ந்துயர்த்தும்
நலமின்றேல் சமூகம் தன்னை
சாடியே கிண்டல் செய்து
தாழ்த்துவோன் கவிஞனாமோ
வாடியே உழலும் மக்கள்
வருத்தம் நீங்கிடவே பாடீர்"

இக்கவிப் பிரகடனம் ஏழைகள் உயர்த்தப்பட வேண்டும். பசி, வறுமைத் துயரங்கள் துடைக்கப்பட வேண்டும் எனும் செயன்முறை வேதாந்தத்தின் பிரகடனமாக அமைந்துள்ளது.

'கன்னியாத் திரு' எனும் கவிதை அவரது வேதாந்த மனத்திலிருந்து தோற்றம் பெற்ற சமத்துவத்தின் உதயமாக அமைகிறது.

"சாதி பேதம் பாராதே
சமமா யெவரும் உனைத்தழுவ
ஏதுங் கலங்கா திருப்பதென்னே
எல்லா உயிரும் சமமென்றே
ஓதும் படைப்பின் ஒருமைநிலை
உணர்த்து முண்மை நிலைகண்டீர்" (புலவர்மணி கவிதைகள்:கன்னியாத்திரு 5)

அகிம்சை நெறி கடைப்பிடித்த இராமச்சந்திரன் எனும் கவிதையில் ஒரு வேதாந்தியாகவே இராமச்சந்திரனாரை உருவகித்துப் பாடியுள்ளார்.

"சைவத்திற் காலூன்றிச் சமயநெறி
தலைப்பட்ட ராமச்சந்த்ரன்
மெய்வைத்த வேதாந்த விசாரத்தால்
சமரசஞா னம் மேற் பட்டே
கைவைத்த நெல்லியென....." (புலவர்மணி கவிதைகள்: அகிம்சை நெறி கடைப்பிடித்த இராமச்சந்திரன.5)

இங்கு இராமச்சந்திரனாருக்கு வேதாந்த விசாரத்தால் சமரசஞானம் மேம்பட்டதென்கிறார். எனவே இவர் தன் ஜீவ மந்திரமாகக் குறிப்பிடும் சமரசமும் வேதாந்த விசாரத்தால் இவருக்கு வாய்க்கப்பெற்றதெனலாம். இச்சமரசம் எனும் பதம் வேதாந்தக் கலைச்சொல்லாகவே இவர் கையாண்டமைக்கு பிறிதொரு கவிதையும் வலுச்சேர்க்கின்றது.

"விவேகா நந்த வேதாந்த சூரியன்

தத்துவ ஞான சமரச ஒளியால்...." (புலவர்மணி கவிதைகள்:விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்).

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிக் கொடுமைகளையும் கண்டித்து தெய்வப்பேரன்பினால் சமத்துவம் காண விளைந்தவராகிறார். இதனை பள்ளர் குலத்தவரான ஆறுமுகம் என்பரின் இரங்காற்பாவிலும் மாவைக் கந்தன் கதவடைப்பிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

"ஒழுக்கத் துயர்குலமாம் ஓங்கு புகழுண்டாம்
இழுக்கத் திழிகுலமாக என்றே - விழுப்பத்து
நூற்குலத்தை யெல்லாம் நுணுகியறிந் தாறுமுகன்
மேற்குலத்தா னானான் விரைந்து" (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப.75)

வேதாந்தம் யாவரும் பிரம்மத்தின் பிரதிவிம்பங்கள் எனும் பரந்த நோக்கும் சேவை மனப்பாங்கும் கொண்டது. இப்பொருளமைதியில் பிரவகிக்கப்பட்ட புலவர்மணியின் கவிதைகளின் உட்பொருள் வேதாந்தமேயாகும்.

## 6.5 சமூகப் பணிகளில் வேதாந்தம்

புலவர்மணி இளமைக்காலம் முதலாகவே சமய, சமூகச் செயற்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்டவர். எந்தப் பொறுப்பிலிருந்தாலும் அதனைச் செம்மையாகவும், நேர்மையாகவும் மேற்கொண்டவர்.சுதேச இயக்கச் செயற்பாடே இவரது வாழ்வின் முதற்பணியாக ஆரம்பமாகியது. 1914ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பில் சுவாமி விவேகானந்தரின் அமெரிக்க சிஷ்யைகளுள் ஒருவரான அவபாமியா அம்மையார் கிராமம் தோறும் சமயப் பிரச்சாரம் செய்தார். இதனால் மட்டக்களப்பில் ஒரு பேரியக்கம் தோன்றியது. இது 1936ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. சைவப்பிள்ளைகள் சைவப்பாடசாலையில் கல்வி கற்க வேண்டும் என்பதற்காகத் தேவையான பாடசாலைகளை ஊரெங்கும் நடாத்த வேண்டும் என்ற நோக்கில் இவ்வியக்கத்தில் பல இளைஞர்களும், முதியவர்களும் இணைந்து கொண்டனர். இதில் 1917,ல் இளைஞனான பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் சேர்ந்து கொண்டார். கிராமங்களுக்குப் போய் மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக்

கேட்டறிந்து அவற்றிற்கான பரிகாரங்களை மேற்கொள்வதில் முக்கிய கவனம் செலுத்தினர். இம்முயற்சியில் ஈடுபட்டவர்களுள் முதலியார் கா.வ மார்க்கண்டர், குருநாதப்பிள்ளை கனகசபை, கந்தப்பமுதலியார், வித்துவான் பூபாலப்பிள்ளை, பண்டிதர் சாமிநாத மயில்வாகனனார், வித்துவான் சரவணமுத்தன், அருணாசல தேசிகர், வித்துவான் பொ.வைத்தியலிங்க தேசிகர், பொ.ஆறுமுகசாமி என்போர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். (எதிர்மனசிங்கம்.எஸ்:1993:ப.32) இவர்களுடன் சேர்ந்து புலவர்மணியவர்களும் தீவிரமாக சமயப்பணியில் ஈடுபட்டார். புலவர்மணி அவர்களது மண்டூர் வீட்டிலேயே எல்லோரும் ஒன்று கூடி திட்டங்களை வகுத்து செயற்படுத்தினர்.

இவ்வியக்கத்தினர் ஊர்ஊராகச் சென்று சைவப்பாடசாலைகளை அமைக்கும் திட்டங்களை முன்னெடுத்தனர். இதன் காரணமாக சைவப்பிள்ளைகள் எல்லோரும் சைவப் பாடசாலைகளுக்குச் சென்று படிக்கத் தொடங்கினர். இவ்வாறு சுதேச இயக்கத்தில் இவரது பங்கேற்பிருந்தது.

புலவர்மணி அவர்கள் செய்த சமயப் பணிகளுள் அவரால் இயற்றப்பட்ட ஆலயங்கள் மீதான பதிகங்கள் குறிப்பிடற்குரியவை. கிழக்கிலங்கையின் புகழ்மிக்க திருத்தலங்கள் ஒவ்வொன்றின் மீதும் பதிகங்களை பாடியுள்ளார். இவற்றுள் தில்லை மண்டூர் பதிகம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பதிகம், அமிர்தகழி சித்தி விக்கினேஸ்வரர் பதிகம், சிற்றாண்டி கந்தசுவாமி பதிகம், திருக்கோயில் சித்திரவேலாயுதர் பதிகம் என்பன குறிப்பிடற்குரியவை. இவற்றுள் மண்டூர் பதிகம் சுவாமி விபுலானந்தரின் சாற்றுகவியினைப் பெற்ற சிறப்பிற்குரியது.

“பண்டுரு முகிற்குலங்கள் எமதிறைவர்
மருகர் திருப்பதியீதென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
வளம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டுரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளை எனும் கவிவல்லோனே” (விஜயரெத்தினம்.பெ:1998:ப9)

எனப் பாடி விபுலானந்த அடிகளார் சிறப்பித்துள்ளார்.
இந்து சமய விவகார ஆலோசனைச் சபையின் அங்கத்தவராக 1970ஆம் ஆண்டு தொடக்கம் 1973ஆம் ஆண்டின் முற்பகுதிவரை செயற்பட்டவர். இந்து மாமன்றத்திலும் பங்கெடுத்தவர். 1955ஆம் ஆண்டு இந்து மாமன்றம் நிறுவப்பட்டபோது அதற்குப் பெயர் சூட்டுவதில் பல்வேறு அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. ஒரு சாரார் சைவமாமன்றம் எனப் பெயரிட வேண்டுமென வாதாட, மறுசாரார் இந்து மாமன்றம் எனப் பெயரிடவேண்டுமென்றனர். இதுபற்றி புலவர்மணி கூறுகையில் “இந்து மாமன்றம் எனப் பெயரிட வேண்டுமென வாதாடிய கோஷ்டியின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள். நான் ஸ்ரீஸ்கந்தராசா கோஷ்டியில் இணைந்துகொண்டு உரையாற்றுகையில் இந்து என்னும் சொல் சைவம் முதலிய எல்லாப் பிரிவுகளையும் அடக்கும். சைவம் என்னும் சொல் அவ்வாறு அடக்காது. இந்து சாதனம், இந்துக்கல்லூரி, இந்து வித்தியாவிருத்திச்சபை, இந்து அறநிலையம் போன்ற அடிபட்ட வழக்குகளையுடைய சொற்களையும் நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். பெயர் பொருத்தமானதாக அமைய வேண்டும். நமது நோக்கம் விசாலமானது. எல்லோருக்கும் இடம்கொடுக்க வேண்டும். இந்து என்ற பெயரே சபையில் அங்கீகாரம்

பெறலாயிற்று" (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப 222) என்று கூறிய அவர், சில வருடங்கள் இந்துமாமன்றத்தின் உபதலைவர்களுள் ஒருவராகவும் இருந்து செயலாற்றினார்.

இலங்கையில் உள்ள இந்து சமயச் சங்கங்கள் எல்லாம் புத்த ஜயந்தியைக் கொண்டாட வேண்டும் என்ற பிரேரணை வந்தவேளை அரசாங்க உயர் பதவிகளில் இருந்தவர்கள் இதனை எதிர்க்கவில்லை. ஆனால் புலவர்மணியோ "சமயக் கொள்கைகள் பற்றி இங்கே பேசவேண்டியதில்லை. ஒரு சமயத்தை இன்னொரு சமயம் கௌரவிப்பது மிக அவசியம். அதைச் சுதந்திரமாகச் செய்யவேண்டும். அரசாங்க அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுச் செய்வதையே நான் எதிர்க்கின்றேன்" எனத் தனது எதிர்ப்பினைத் தைரியமாக தெரிவித்தவர்;. (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப223) இதனால் விரும்gpa சங்கங்கள் கொண்டாடலாம் என பிரேரணை திருத்தத்திற்குட்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இச்செயல் பிரிவினையின்றி இலங்கையர் அனைவரும் வாழ வேண்டும் என வேதாந்த வழி நின்று சர்வ இன சமரசம் பேசியபோதிலும் இன ஆதிக்கத்தை எதிர்ப்பவராகவும் திகழ்ந்தமையை வெளிப்படுத்துகின்றது.

கிழக்கிலங்கையில் பல சமயச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென்ற விருப்பினை உடையராய் புலவர் மணி திகழ்ந்துள்ளார். இந்துமாமன்றத்தின் நிருவாகத்திலும் உபதலைவராக இருந்த காலப்பகுதியிலும் இதனைச் செய்ய விழைந்தார். மட்டக்களப்பு தேசத்தில் ஆலய நிர்வாகங்களுக்கிடையே பல சீர்கேடுகள் காணப்பட்டதுடன் பிணக்குகளும் ஏற்படலாயின. இவற்றைத் தீர்ப்பதற்காக அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட குழுக்களுள் முக்கிய பொறுப்பிற்குரியவராக புலவர் மணி திகழ்ந்ததுடன் இயல்பாகவே சமரச சிந்தனையாளனாக விளங்கிய இவரால் சாதி மற்றும் குடியுரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கும் சிறந்த தீர்வுகளை வழங்குபவராகவும் விளங்கியுள்ளார். ஆலயங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட 11 குழுக்களுள் இவர் பங்கு வகித்தமை சான்றாக விளங்குகின்றது. "(எதிர்மனசிங்கம்.எஸ்:1993:ப36)

இந்துசமய வழிபாட்டு தலங்களிலே காணப்பட்ட நிர்வாகச் சீர்கேடு, பரம்பரை ஆதிக்கம், பூசை ஒழுங்கின்மை போன்றவற்றையும் சீர்ப்படுத்தி ஒரு சிறந்த வழிமுறைக்குக் கொண்டு வருவதற்கும் புலவர்மணியவர்கள் திட்டமிட்டு செயற்படத் தொடங்கினார். "ஆலய வருமானங்கள் தனி ஒருவரின் ஆதிக்கச் சொத்தாக மாறுகின்றன. ஆண்டவன் சந்நிதியிலே பெருமை, சிறுமை, உயர்வு, தாழ்வு, முன்னீடு இவைகள் தாண்டவமாடுகின்றன. சுவாமியே குடியெழும்புமளவிற்கு இவைகள் உச்சநிலையடைந்து விடுகின்றன. கோயில் நிருவாகிகளுக்கு முதலிடம்: சுவாமிக்கு இரண்டாமிடமானால் சமயத்தால் என்ன பயன்? இந்தக் குடிவகை மயக்கம் தௌந்தால்தான் சுவாமியைக் காண்பார்கள்." (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப236) என நிர்வாகத்தினை கேள்விக்குட்படுத்துகிறார். இக்கருத்தினை எடுத்துரைக்கும் வகையில் மேல்வரும் பாடல் அமைகிறது.

"சாதித் திமிரோடுன் சன்னிதியிலே முருகா
வாதித் ததிகாரம் வாய்பேச -மோதிச்
செருக்கோடு நிற்பாரைச் செவ்வேலால் நெஞ்சத்
திருக்கோட்டி யாள்வாய் தினம்" (பெரியதம்பிப்பிள்ளை:1982:ப.242)

இங்கு இவர் காண விழைந்த சாதி, ஆசாரம், பால்நிலை, வர்க்க பேதங்களைப் புறக்கணித்த சமூகம் என்பது சுவாமி விவேகானந்தர் கட்டியெழுப்ப அறைகூவிய செயன்முறை வேதாந்த சமூகமே. புலவர்மணியின் இச்செயற்பாடு அவர்

தம்வாழ்வில் செயற்படுத்திய செயன்முறை வேதாந்தத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## 6.6 சொற்பொழிவுகளில் வேதாந்த இழையோட்டம்

சொல்லாற்றல் வாய்க்கப்பெற்ற புலவர்மணி அவர்கள் இளமைக்காலம் முதலாக பல்வேறு விழாக்களிலும், கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றியவர். மேலும் இவர் தான் சுவாமி விபுலானந்தர் மூலமாகத் தனது ஆற்றலை வளர்த்துக் கொண்டதாக குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணத்தில் உள்ள சைவக்கோயில்களில் பண்டிதர் மயில்வாகனனாரின் பிரசங்கம் ஒலித்தது. இவர் போகுமிடமெல்லாம் தாமும் செல்பவர். சொற்பொழிவுகளின் பொழிப்புரைகளை மயில்வாகனனாரிடம் முன்னமே பெற்று மனனம் செய்து பண்டிதரின் சொற்பொழிவின் பின்னர் பேசுவதால் தனது ஆற்றலினை வளர்த்துக் கொண்டவர்.

தாம்; பேச எடுத்துக்கொண்ட பொருளை கேட்பவர்கள் எளிதாக விளங்கிக் கொள்ளும் வகையிலும், நகைச்சுவையாகவும், நேர்படவும் பேசுவதில் வல்லவர். அவர் தனது சொற்பொழிவுகளைப் பற்றி மேல்வருமாறு குறிப்பிடுகின்றார். “இலக்கியப் பேச்சென்றாலும் சரி, அரசியல் பேச்சென்றாலும் சரி, என் உள்ளக் கருத்துக்களையும், கொள்கைகளையும் விளக்குவது தான் எனது போக்கு. ஆட்களை தாக்கிப் பேசும் முறையில் நான் பழகவில்லை. என்னைத் தாக்கிப் பேசுவோருக்கும் நான் மறுமொழி சொல்வதில்லை. நமது பேச்சு நம்மையும் திருத்தி பிறரையும் திருத்தும் முறையில் அமைய வேண்டும்.”(பெரியதம்பிப்பிள்ளை:1982:ப.182) இவர் கொள்கையையும், பேச்சு நாகரிகத்தையும் பின்பற்றியதோடு முன்மாதிரியான ஆளுமையாகவும் திகழ்ந்துள்ளார். புலவர்மணி அவர்கள் தமது பேச்சுவன்மையினால் பண்டிதர் பட்டம் பெற்றவர் என எஸ்.டி. சிவநாயகம் குறிப்பிடுகிறார். “கம்பராமாயணம், திருக்குறள், திருவாசகம், நளசரிதம் ஆகிய இலக்கியங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களையும் வைத்துப் பேசுவதில் பண்டிதர் பெரும் விற்பன்னராகவும் விளங்கினார். அவருடைய பேச்சுவன்மையே பண்டிதர் என்ற பட்டத்தினைத் தேடிக்கொடுத்தது.” (விஜயரெத்தினம்.பெ:1998:ப.03) இக்கூற்று இந்து சமய இலக்கியங்களில் தத்துதவ பேதம் காணது அனைத்து சமய இலங்கியங்களிலும் நாட்டமுடைய வேதாந்தியாக விளங்கியமையைப் புலப்படுத்துகின்றது.

புலவர்மணி தமது சொற்பொழிவுகளினூடாக அரசியல் தளத்திலும் வேதாந்தத்தை முன்னெடுத்தவர்; என்பது குறிப்பிடத்தக்கது. வேதாந்த நெறி நின்று சர்வ இன சமரசம் பேசி தமிழரசுக்கட்சியினரின் விமர்சனத்துள்ளாகியமையும் குறிப்பிடத்தக்கது. காலமெல்லாம் சமூக வளர்ச்சிக்காகப் பணியாற்றிய புலவர்மணி அவர்கள் தீண்டாமை, சாதி விலக்கு முதலிய சீர்திருத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு உயர்குலத்தவரான தாமே நடைமுறையில் தீண்டாமையை விலக்கி செயன்முறையில் வாழ்ந்து காட்டியவர். இறுதிவரை தனது கொள்கையிலிருந்து தளரவேயில்லை. இதனால் பல எதிர்ப்புக்களையும் சந்தித்ததோடு அவற்றையெல்லாம் துணிந்து முறியடித்தார்.

## நிறைவுரை

சுவாமி விபுலானந்தருடனான தொடர்பும், இராமகிருஷ்ண மிஷன் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சியும் இயல்பாகவே சமரச சிந்தனையாளனான புலவர்மணியை வேதாந்தியாக உருவாக்கியதில் கணிசமான செல்வாக்குச் செலுத்தியதெனலாம்.

சமரசம் என்பது நவவேதாந்தத்தின் பண்பு. இவர் சமத்துவம் பேசியவராயினும், தன்னை சமயங்கடந்தவராகவோ, நாத்திகராகவோ ஓரிடத்திலும் பதிவு செய்யவில்லை. வாலிபப் பருவத்தில் சமூக அடுக்கமைவினைக் களைய கிறிஸ்தவ சமயம் புகினும் மீண்டும் சைவனாகியமையை தமது சுயசரிதையில் மருள்ePf;கியார் தருமசேனராகி மீண்டும் மருள்ePf;கியாராக மீண்டமை எனப் பதிவுசெய்கிறார். இந்துசமயத்தின் நவவேதாந்தியாக சமரசம் வேண்டி நின்றவர். சமசந்தர்ப்பம், சமத்துவம், சமரசம் என்னும் மூன்று மொழிகளும் தனக்கு ஜீவ மந்திரமாகிவிட்டன எனக் குறிப்பிடும் புலவர்மணியின் உள்ளத்தை பகவத்கீதையின் பொருளமைதி கொள்ளை கொண்டது. இதனால் பகவத்கீதை வெண்பாவை பக்திச் சுவையும், வேதாந்த உணர்வும் மேலோங்க கவியாக்கியுள்ளார். இவ்வெண்பாக்களும் அதற்கான உரை நடையும் அவரது உள்ளத்து வேதாந்தக் கிடக்கையின் வெளிப்படுகையாகத் திகழ்கின்றன.

புலவர்மணி மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இரு சூழல்களிலும் தன்னை வளப்படுத்திக் கொண்டவர். இங்கு யாழ்ப்பாணத்துச் சமய, சமூக, அரசியல் பண்பாட்டுப் பின்னணிக்கும், மட்டக்களப்புச் சூழலின் சமய, சமூக, அரசியல் பண்பாட்டுப் பின்னணிக்குமிடையே கணிசமான வேறுபாடுகளுண்டு. அக்காலத்து யாழ்ப்பாணச் சமூகத்தின் இறுக்கத்தன்மையை மட்டக்களப்பில் காணமுடியாது. பன்மைத்துவமான சமய பண்பாட்டு மரபுகளைக் கொண்டதாக மட்டக்களப்பு திகழ்வதால் அச்சமூகத்தில் கூடிய நெகழ்ச்சித்தன்மைகளையே காணமுடியும். பன்மைத்துவப் பண்பாட்டில் ஒற்றுமையைக் கட்டியமைக்க பேதங்களற்ற வேதாந்த மரபு வழிசமைத்தது. காலங்காலமாக இம்மண்ணின் பிரதான கூறாக பன்மைத்துவம் விளங்கியமையால் புலவர்மணி சைவசித்தாந்தச் சூழலோடு பல்வகைத் தொடர்புகளை மேற்கொண்டிருந்த போதிலும் வேதாந்தியாகவே மிளிர்ந்தார்.

புலவர்மணியின் பல்துறை ஆளுமையும் அவரது சமய, சமத்துவ பாதைக்கு வலுச்சேர்த்த பிறிதொரு காரணமாகும். சங்கநூற் புலமையும், ஆங்கில அறிவும், பிறநாட்டு நல்லறிஞர்களின் தொடர்பும் வாய்க்கப் பெற்றமையினால் பரந்த உலகில் அனைவரையும் சமமாகப் பேணும் மனிதநேயமுடைய விசால மனப்பான்மையுடையவராக அவரைக் கட்டமைப்பதில் செல்வாக்குச் செலுத்தியது எனலாம்.

இவ்வாறு புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தன்னியல்பினாலும், சூழலினாலும், சுவாமி விபுலானந்தரினாலும் புடமிடப்பட்டு சமூக நாட்டமுடைய வேதாந்தியாக விளங்கியுள்ளார்.

## உசாத்துணை நூல்கள்:

எதிர்மனசிங்கம்,எஸ்.,1993, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, விபுலம் வெளியீடு.

சிவநிர்த்தானந்தா,சி., 2005, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஓர் ஆய்வு, கிறிப்ஸ் பப்ளிகேசன்.

பெரியதம்பிப்பிள்ளை.ஏ.,1982, உள்ளதும் நல்லதும், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம், மட்டக்களப்பு.

பெரியதம்பிப்பிள்ளை,ஏ.,2005,புலவர்மணி கவிதைகள், மணிமேகலைப் பிரசுரம்.

பெரியதம்பிப்பிள்ளை. ஏ., 1962, பகவத்கீதை வெண்பா, அரசு வெளியீடு.

விஜயரெத்தினம். பெ., 1998, தமிழ் தந்த புலவர்மணி, கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

# தமிழர் கல்விச் சிந்தனை மரபு: நன்னூலை அடிப்படையாகக் கொண்ட பார்வை

பி. சுமன்
தமிழ் கற்கைகள் துறை
கலைகலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sumanp@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இடைக்காலத் தமிழ் இலக்கண நூல்களில் நன்னூல் தனித்த கவனிப்புக்குரியதாகிறது. தமிழ்மொழியின் இலக்கணப் பகுப்பையும் தொகுப்பையும் மேற்கொண்ட முறைமை, இடைக்கால மொழி வழக்குகளை அனுசரித்தமை ஆகியன அத்தகைய கவனிப்புக்குக் காரணங்களாகின்றன. அவ்விலக்கண நூலின் முற்பகுதியில் இடம்பெறும் பொதுப்பாயிரமானது பாயிர வகை, முதல் நூல், வழி நூல், சார்பு நூல், நூலில் இடம்பெறும் குற்றங்கள், அழகு, உத்தி, உரை வகை, நல்லாசிரியர் இலக்கணம், ஆசிரியராகாதார் இயல்பு, நன்மாணாக்கர் இலக்கணம், கல்வி பெறத் தகுதியுடையோர் - தகுதியற்றோர், மாணாக்கர் வகை, மாணாக்கரின் கற்றல் நுட்பம் முதலானவை குறித்து விபரிக்கிறது. மேற்கூறிய விடயங்களுள் நல்லாசிரியர் இலக்கணம், ஆசிரியராகாதார் இயல்பு, நன்மாணாக்கர் இலக்கணம், கல்வி பெறத் தகுதியுடையோர் - தகுதியற்றோர், மாணாக்கர் வகை, மாணாக்கரின் கற்றல் நுட்பம் ஆகியவை குறித்து நன்னூலார் முன்வைக்கும் கருத்துக்கள் தொடர்பிலான ஆழ்ந்த பார்வையை இக்கட்டுரை முன்வைக்கிறது. அதன்வாயிலாக பண்டைத் தமிழரின் கல்விச் சிந்தனைகளை வெளிக்கொணர இந்த ஆய்வு முனைகிறது. அத்தகைய ஆய்வானது விபரண, பகுப்பாய்வு, ஒப்பியல், வரலாற்று அணுகுமுறைகளைக் கைக்கொள்கிறது. இலக்கியம், இலக்கணம், சோதிடம் முதலான நூற்கல்வியே கல்வியாக விளங்கிய காலத்தில் வாழ்ந்த நன்னூலார் அக்கல்வியையே மையப்படுத்தித் தமது கருத்துக்களை முன்மொழிந்துள்ளமை, அவர் முன்வைத்த கருத்துகளிற் சில, கல்விக் கொள்கைகளும் நோக்கங்களும் நுட்பங்களும் உளவியலும் விசாலித்துக் காணப்படும் இன்றைய சூழலில் வலுவிழந்து காணப்படுகின்றமை ஆகிய விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு, ஆசிரியத்துவம் குறித்த புரிதலும் கற்பித்தல் நுட்பங்கள் பற்றிய அக்கறையும் மாணாக்கரின் அறிதிறன் குறித்த தெளவும் தமிழர் மரபில் வேரூன்றி இருந்தமைக்கு நன்னூலார் கருத்துகள் சான்றாய் அமைகின்றமையும் அவையே அவரைத் தமிழர் கல்விச் சிந்தனை மரபின் ஆளுமைகளில் ஒருவராக நிலைநிறுத்தியுள்ளமையும் வெளிக்கொணரப்பட்டுள்ளன.
திறவுச் சொற்கள் : நன்னூல், நூற்பா, தமிழர், நவீன கல்வி.

## அறிமுகம்

தமிழ்மொழியில் தோன்றிய இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது தொல்காப்பியம். தமிழ்மொழியின் இலக்கணத்தையும் இலக்கிய மரபையும் துல்லியமாக வெளிக்காட்டும் நூலது. அந்நூலைத் தொடர்ந்து தமிழில் வெளிவந்த இலக்கண நூல்களுள் இடைக்காலத்தில் தோன்றிய நன்னூல் பெரும் சிறப்பைப் பெறுகிறது. தமிழ் இலக்கணக் கல்வியில் நன்னூல் பெரும் தாக்கத்தைச் செலுத்திவருவதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழியின் இலக்கணப் பகுப்பையும் தொகுப்பையும் மேற்கொண்ட முறைமை, இடைக்கால மரபுகளை அனுசரித்தமை ஆகியனவே அச்சிறப்பிற்குக் காரணங்களாகும். அந்நூலின் பொதுப்பாயிரம்

வலியுறுத்தும் கருத்துகள் கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளோடு மிக நெருக்கமான உறவுகொண்டவை. நன்னூல் இலக்கணத்தைப் பயிலும் பலர், அது வலியுறுத்தும் பொதுப்பாயிரக் கருத்துகளில் அதிக கவனம் கொள்வதில்லை. அப்பொதுப்பாயிரம் நல்லாசிரியர் இலக்கணம், ஆசிரியராகாதார் இயல்பு, நன்மாணாக்கர் இலக்கணம், கல்வி பெறத் தகுதியுடையோர் - தகுதியற்றோர், மாணாக்கர் வகை, மாணாக்கரின் கற்றல் நுட்பம் முதலானவை குறித்து விபரிக்கிறது. இந்நிலையில், மேற்படி விடயங்கள் குறித்து அப்பொதுப்பாயிரம் முன்வைக்கும் கருத்துக்கள் குறித்த ஆழ்ந்த பார்வையை உரைக்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை முன்வைக்கிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

தமிழர் கல்விச் சிந்தனை மரபைப் புலப்படுத்துதில் நன்னூலின் வகிபாகம் யாதென்பதும் அது முன்னிறுத்தும் சிந்தனைகள் சமகாலத்துக்கும் பொருத்தமுடையனவா என்பதுவும் இவ்வாய்வின் பிரச்சினைகளாக விளங்குகின்றன.

**ஆய்வின் நோக்கம்**

நன்னூல் முன்னிறுத்தும் கல்விச் சிந்தனைகளை எடுத்துரைப்பதனையும் அவற்றைச் சமகாலக் கல்விச் சிந்தனைகளுடன் பொருத்திப்பார்ப்பதையும் இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

**முன்னைய ஆய்வுகளின் மீளாய்வும் ஆய்வு இடைவெளியும்**

பழந்தமிழர் கல்விச் சிந்தனைகள் குறித்துப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை சங்க இலக்கியங்கள், திருக்குறள், நாலடியார் முதலான அறநெறிக் கால இலக்கியங்கள், ஔவையாரின் படைப்புகள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழரின் கல்விச் சிந்தனைகளை ஆராய்கின்றன. கல்வியியல் குறித்த இரு ஆய்வு நூல்களில் நன்னூல் குறிப்பிடும் கல்வியியற் சிந்தனைகள் நோக்கப்பட்டுள்ளன. அவ்வகையில், எஸ்.எச்.எம்.ஜெமீல் எழுதிய கல்விச் சிந்தனைகள் எனும் நூல் குறிப்பிடத்தக்கது. இந்நூலில் உள்ளடங்கியுள்ள நன்னூலாரின் நல்லாசிரியன், நன்னூலாரின் நல்மாணாக்கன் ஆகிய இரு கட்டுரைகளும் முறையே நன்னூல் குறிப்பிடும் நல்லாசிரியன், நல்மாணாக்கன் பற்றிய கருத்துகளை முன்வைத்து இஸ்லாமிய கல்வி மரபு அதன்வழிப்பட்டதாக ஆரம்ப காலத்தில் விளங்கிற்று எனக் குறிப்பிடுகின்றன. அக்கட்டுரைகள் நன்னூல் முன்னிறுத்தும் நல்லாசிரியர் இலக்கணம், நன்மாணாக்கர் இலக்கணம் குறித்த உரைக்குறிப்புகளை மனங்கொண்டு விரிந்த விளக்கங்களை முன்வைக்காமையும் நோக்கத்தக்கது.
ப.சந்திரசேகரம் ‘கல்வியியற் கோவை’ எனும் தமது நூலில் ‘தமிழ்நெறி காணும் கல்வி மரபு’ என்ற தலைப்பில் பழந் தமிழரிடம் காணப்பட்ட கல்வியியற் சிந்தனைகளை வரலாற்று நோக்கில் எடுத்துவிளக்கியுள்ளார். அவ்வாறு விளக்குகையில் நன்னூலார் எடுத்துரைத்த நல்லாசிரியர் இயல்புகள் குறித்தும் அடையாளப்படுத்திச் செல்கிறார். அதுதவிர நன்னூல் முன்னிறுத்தும் கல்வியியற் சிந்தனைகள் குறித்து எவையும் குறிப்பிடப்படவில்லை. இந்நிலையில், நன்னூல் முன்னிறுத்தும் கல்வியியற் சிந்தனைகள் குறித்த விரிவான பார்வையை முன்வைப்பதாகவும் அச்சிந்தனைகளை இன்றைய நவீன கல்வியியற் சிந்தனைகளோடு பொருத்தி நோக்குவதாகவும் இந்த ஆய்வு அமைகிறது.

**ஆய்வு முறையியல்**

நன்னூல் முன்னிறுத்தும் கல்வியியற் சிந்தனைகள் குறித்த விரிவான பார்வையை முன்வைப்பதற்கு விபரண ஆய்வு முறை, பகுப்பாய்வு முறை என்பனவும் அக்கருத்துகள் முன்வைக்கப்பட்ட காலப் பின்னணியில் நின்று அக்கருத்துகளை அணுக வரலாற்று அணுகுமுறையும் இன்றைய நவீன கல்வியியற் சிந்தனைகளோடு நன்னூல் முன்னிறுத்தும் கருத்தாக்கங்களைப் பொருத்தி நோக்குவதற்கு ஒப்பீட்டு அணுகுமுறையும் கைக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது நன்னூல் பிரதியையும் அதற்கான உரையையும் முதன்மை மூலமாகக் கொள்கிறது.

## ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடலும்

### நல்லாசிரியர் இலக்கணம்

இன்றைய கல்விச் சிந்தனையாளர்கள் ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டிய பட்டறிவு, திறன்கள், பண்புநலன்கள் குறித்து விரிவான முறையில் எடுத்துரைத்துள்ளனர். நன்னூலார் நல்லாசிரியர் இலக்கணம் வகுக்கும்போது, இவை பற்றி முதலில் கருத்துரைக்கிறார். உயர்குடிப்பிறப்பு, சீவகாருண்யம் மற்றும் கடவுள் வழிபாடு முதலியவற்why; அடைந்த மேன்மை, நிலம், மலை, நிறைகோல் (துலாக்கோல்), பூ ஆகியவற்றை ஒத்த இயல்புகள் என்பனவற்றை நல்லாசிரியருக்குரிய இயல்புகளாக வரையறுக்கும் நன்னூலார், பல நூல்களில் பழகிய தேற்றம் (பன்னூற் புலமை), நூற்பொருளை எளிதில் உணரும்படி தொகுத்துச் சொல்லும் வன்மை (திறன்) ஆகியவற்றையும் நல்லாசிரியர் இலக்கணமாக அடையாளப்படுத்துகிறார். இதனைப் பின்வரும் நூற்பா விளக்கும் :

குலனரு டெய்வம் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே
(பொதுப்பாயிரம் : 26)

நல்லாசிரியர் உயர்குடிப் பிறந்தவராக விளங்குதல் வேண்டும் என நன்னூலார் கூறிய தகுதிப்பாடு இன்றைய கல்வி உலகில் பொருத்தமற்றதொன்றாகிவிடுகிறது. நிலவுடைமைச் சமுதாயத்தில் - சாதிய கட்டுமானம் கல்வியில் தாக்கம் செலுத்திய காலத்தில் - எழுந்த கருத்துருவாக்கமே அது. உயர்குடிப் பிறந்தவர்களே முறையான நூற்கல்வியைப் பெறும் வாய்ப்புடையோராகவும் வசதிபடைத்தோராகவும் விளங்கினர். கல்வி உயர்குடியின் ஏகபோக உரிமையாக விளங்கிய காலத்தில் வாழ்ந்த நன்னூலார், தன் காலத்தை ஒட்டிய கருத்தைப் பதிவுசெய்தார். மாறிவந்த கல்வி உலகு இச்சித்தாந்தத்தைத் தகர்த்தெறிந்தது. ஆதலால், 'நல்லாசிரியர் உயர்குடிப் பிறந்தவராக விளங்க வேண்டும்;' என்ற நன்னூலார் கொள்கை இன்று வலுவிழந்து போய்விட்டது.

மாணாக்கர் எளிதில் உணரும்படி நூற்பொருளைத் தொகுத்துச் சொல்லும் திறனைக் கொண்டிருப்பதை ஆசிரியரின் தகுதிப்பாட்டுக்குள் வைக்கிறார், நன்னூலார். ஆசிரியத்துவத்தின் வெற்றி கற்பித்தற் திறனிலேயே அதிகம் தங்கியிருக்கிறது. கற்றல் - கற்பித்தற் செயன்முறையில் எளிமையில் இருந்து கடினத்தை நோக்கிச் செல்லல், படிமுறைக் கற்பித்தல், கதைகள், காட்சிப் பொருள்கள், உதாரணங்கள் முதலியவற்றினூடாக விளக்குதல் எனக் கற்பித்தல் நுட்பங்கள் பலவற்றை மாணவர் வயதுமட்டத்திற்கு ஏற்றவாறு நவீன கல்வியியலாளர் எடுத்துரைப்பர். ஆனால்,

நன்னூலாரோ தொகுத்து உரைத்தலையே நுட்பமாக வலியுறுத்துகிறார். அவர் காலத்துக் கல்வி மரபுக்கு அது ஏற்புடையதாகவே விளங்கியது. கல்வியின் விடயப் பரப்புகளும் கற்பித்தற் செயன்முறைகளும் விரிவடைந்த இன்றைய சூழலில் புதிய கற்பித்தல் நுட்பங்கள் பல அவசியமாகின்றமையை எவரும் மறுக்க இயலாது.

நல்லாசிரியரின் இயல்புக்கு நிலம், மலை, துலாக்கோல், பூ ஆகியவற்றை உவமானம் காட்டும் நன்னூலார், அவை பற்றி மேலும் குறிப்பிடுவதன் மூலம் நல்லாசிரியர் இயல்புகளை விரித்துரைக்கிறார். பிறரால் அறியப்படாத உருவத்தின் பெருமை, தன்னை நெருங்குபவையைக் கண்டு கலங்காத வலிமை, தன்னை மனிதர் தோண்டுதல் முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கின்ற பொறுமை, பருவத்திலே உழவர் செய்யும் முயற்சிக்குத் தக்க பயனைத் தருதல் ஆகியன நல்ல நிலத்திற்குரிய இயல்புகளாகும் என்று கூறுகிறார். இத்தகைய இயல்புகளை உடைய நிலம் போல ஆசிரியரும் விளங்க வேண்டும் என்பது நன்னூலார் எதிர்பார்ப்பு.

தெரிவரும் பெருமையும்; திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே
(பொதுப்பாயிரம் : 27)

நன்னூலார் காட்டிய நிலத்தின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு, நன்னூலார் எதிர்பார்க்கும் நல்லாசிரியர் இயல்புகளை உரையாசிரியர்கள் விபரிப்பர். பிறரால் அறியப்படாத கல்வியறிவின் பெருமை, பெரும் வாதம் செய்து தன்னை நெருங்கியவரைக் கண்டும் கலங்காத வலிமை, மாணாக்கர் இகழ்தல் முதலிய குற்றங்களைச் செய்தாலும் பொறுக்கும் பொறுமை, பருவத்திலே மாணாக்கர் செய்யும் முயற்சி அளவிற்கு அவர்க்குப் பயனை அளித்தல் முதலிய குணங்களை நல்லாசிரியர் கொண்டிருக்க வேண்டும் என்பதால் நிலத்திற்கு உவமானம் காட்டினார் என உரைவிளக்கம் செய்வர். இங்கு மாணாக்கரின் முயற்சிக்குத் தக்க பயனை அளித்தல் வேண்டும் என்ற இயல்பு அவதானிக்கத்தக்கது. மெல்லக் கற்கும் மாணாக்கர், மீத்திறன் மாணாக்கர் எனப் பல வகையினரும் ஒரு குழுவினுள்ளே காணப்படுவர். அவர்களது அறிவு, திறன், மனப்பாங்குக்கு ஏற்ப கற்றலை மேற்கொள்ளும் தகுதியும் திறனும் ஆசிரியருக்கு அவசியம் என்பதை நன்னூலார் உணர்ந்துள்ளமை தெளவாய்த் தெரிகிறது.

கல்வியியலில் இன்று வலியுறுத்தப்படும் நிரலித்த கற்பித்தல் (Pசழபசயஅஅநன வுநயஉபெ) இத்தகைய சிந்தனையோடு பொருத்திப்பார்க்கத் தக்கது. “மாணவரிடையேயுள்ள தனி வேறுபாடுகளுக்கேற்றவாறு அவர்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்பது ஒரு நல்ல கற்பித்தலின் முக்கியமான அம்சமாகும். ஒரு மாணவனுக்கு ஒரு ஆசிரியர் இருந்தாலேயே அவர் மாணவனின் திறமைக்கேற்றவாறு கற்பிக்க முடியும். ஆனால், பல்வேறு திறமைகளையும் கொண்ட 30, 35 மாணவரைக் கொண்ட ஒரு வகுப்பில் ஒவ்வொரு மாணவனின் திறமைக்கேற்றவாறு கற்பிப்பது சிரமமானது. தொகையானோரை ஒரே வகுப்பில் வைத்துக் கற்பிக்கும்போது மீத்திறனுடையோர் பாடத்தை இலகுவில் புரிந்து அப்பியாசங்களை முடித்து எஞ்சிய நேரத்தில் வேறு வேலையின்றிச் சோம்பலடைவர். ஆனால், மெல்லக் கற்போர் ஆசிரியரின் கற்பித்தலைப் பின்பற்ற முடியாது பின்னடைந்து மனமுறிவர். ஆனால், நிரலித்த கற்பித்தல் தனி வேறுபாடுகளுக்கேற்ற வகையில் உள்ளது. நல்ல கற்பித்தலில் போட்டி முறைகள் தவிர்க்கப்படும்.

ஒவ்வொரு மாணவனும் போட்டியில் வெகுமதி பெற்றுத் தனது பாடங்களைக் கற்க ஊக்கம் பெறுவான்" (முத்துலிங்கம், ச., 1995:102) என அறிஞர் வலியுறுத்துவர்.

அளக்க முடியாத தன் வடிவத்தின் அளவு, எப்படிப்பட்ட வலிமையுடையவராலும் அசைக்க முடியாத உருவம், நெடுந்தூரத்திலுள்ளோராலும் அடையாளம் காணக்கூடிய உயர்ச்சி, மழை பெய்யாமல் வறந்த காலத்திலும் தன்னைச் சேர்ந்த உயிர்களுக்கு நீர்வளத்தைக் கொடுக்கும் கொடை ஆகிய இயல்புகளை உடைய மலை போல ஆசிரியரும் விளங்க வேண்டும் எனக் கீழ்வரும் நூற்பாவால் சுட்டிக்காட்டுகின்றார் :

அளக்க லாகா அளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே
(பொதுப்பாயிரம் : 28)

மலையின் இயல்புகளாக நன்னூலார் காட்டியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அளவு செய்யப்படாத பல வகை நூற்பொருள், எப்படிப்பட்ட புலமையை உடையோராலும் அசைக்கமுடியாத கல்வியறிவு, நெடுந்தூரத்திலுள்ளோராலும் அறியப்படும் தன்மை, பொருள் வருவாய் அற்ற காலத்திலும் தன்னைச் சேர்ந்த மாணாக்கருக்குக் கல்விப் பொருளைக் கொடுக்கும் கொடை ஆகிய இயல்புகளை நல்லாசிரியர் கொண்டிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மலைக்கு உவமானமாக்கினார் என்பர், உரையாசிரியர். தன் குணத்தாலும் அறிவுத் திறத்தாலும் சிறந்து விளங்குகையில்தான், வாழும் சூழல் கடந்தும் நல்லாசிரியர் புகழ் பரவும். அதனால் அவர் நெடுந்தொலைவிலுள்ளோராலும் அறியப்படுவர். இதனை மனங்கொண்டு 'நெடுந்தூரத்திலுள்ளோராலும் அறியப்படும் தன்மை'யையும் நல்லாசிரியருக்குரிய இலக்கணமாக வகுத்தார். பழங்காலக் கல்விமுறை ஆசிரியருக்குப் பொருள் கொடுத்துக் கற்பதாகவே விளங்கியது. அவ்வாறு பொருள் பெற்றுக் கற்பிக்கும் ஆசிரியர் மாணவரிடத்திலிருந்து பொருள் வருவாய் கிடைக்காத பட்சத்திலும் தன்னைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் உள்ளத்தனாய் இருத்தல் வேண்டும் ஆசிரியருக்குரிய இயல்பைச் சுட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்வி வணிகமயமாகி வரும் சமகாலக் கல்வியுலகில் நன்னூலாரின் கருத்து மீள நினைந்தோதற்குரியது.

சந்தேகம் தீர நிறுக்கப்பட்ட பண்டத்தின் அளவைக் காட்டுதல், உண்மை பெறத் தான் இரண்டு தட்டுக்களுக்கும் நடுவே நிற்றல் ஆகிய இயல்புகளைப் கொண்டது நிறைகோல் (தராசு). அதுபோல சந்தேகம் தீர வினாவப்பட்ட விடயத்தின் இயல்பை விளக்கிக்காட்டுதல், புலவர் இருவர் மாறுபட்டால் உண்மையைப் பெறத் தான் அவ்விருவருக்கும் நடுவாக நிற்றல் ஆகிய இயல்புகளை ஆசிரியர் கொண்டிருத்தல் வேண்டும் எனக் கீழ்வரும் நூற்பாவால் அடையாளப்படுத்துகிறார்:

ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே
(பொதுப்பாயிரம் : 29)

சுப கருமத்திற்கு உரியதாதல், தானில்லாமல் யாதொரு செயலும் அலங்கரிக்க முடியாதிருத்தல், கண்டோர் யாவரும் மகிழ்ந்து தன்னைச் சூடிக்கொள்ளுதல், மெல்லிய குணமுடையதாகவிருத்தல், மலர்தற்குரிய காலத்தில் முகம் மலர்ந்து காணப்படுதல் ஆகிய இயல்புகளைக் கொண்டுள்ள மலர் போன்று நல்லாசிரியர் திகழ

வேண்டும் என்கிறார். இதன்மூலமாக நற்கருமங்களுக்குரியவாதல், கண்டோர் யாவரும் தன்னை மகிழ்ந்து ஏற்றல், மென்மைக் குணங்களைத் தாங்கியிருத்தல், பாடம் சொல்லும் காலத்தில் (கற்பிக்கும் காலத்தில்) முகமலர்ச்சியுடையவனாக இருத்தல் ஆகிய இயல்புகளை அடையாளம் காட்டுகிறார்.

மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் யுடையது "வே
(பொதுப்பாயிரம் : 30)

ஆசிரியராவதற்குத் தகுதியற்றவர்

நல்லாசிரியர் இலக்கணத்தை வகுத்துக் கூறும் நன்னூலார், தொடர்ந்து ஆசிரியராவதற்குத் தகுதியற்றவர்களின் இயல்புகளைப் பட்டியலிடுகிறார். இழிகுணங்களைக் கொண்டிருத்தல், பிறருக்கு வருகின்ற கல்வியைக் குறித்துப் பொறாமைகொள்ளுதல், பொருள்மேல் அதிக ஆசை கொண்டிருத்தல், மெய்ப்பொருளை மறைத்துப் பொய்ப் பொருளைக் காட்டி வஞ்சித்தல், கேட்போருக்கு அச்சம் உண்டாகும்படி பேசுதல் ஆகிய இயல்புகளையும் கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தென்னை முதலியவற்றின் இயல்புகளையும் உடையோர் ஆசிரியராகும் தகுதி அற்றவர் என்பது நன்னூலார் கருத்து. இதனைக் கீழ்வரும் நூற்பா விளக்கும்:

மொழிகுண மின்மையும் இழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலுங்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே
(பொதுப்பாயிரம் : 31)

மேற்படி நூற்பாவில் தான் காட்டிய உவமானங்களை அடுத்துவரும் நூற்பாக்களில் விளக்கியுரைப்பதன் மூலம் ஆசிரியராகாதவர் இயல்புகளை விரித்துரைத்துள்ளார். தன்னுள்ளே போட்ட முறையினாலன்றி முன்போட்ட கழற்காய்களையும் (ஒருவகைக் காய்) பின்போட்ட காய்களையும் வழங்கும் இயல்பினை உடையது கழற்குடம். அதுபோல தமக்குக் கற்பித்த முறையினாலன்றி முன் கற்பிக்கப்பட்டவற்றையும் பின் கற்பிக்கப்பட்டவற்றையும் அம்முறைப்படி அல்லாமல் வழங்கும் இயல்புடையவர் ஆசிரியர் ஆகும் தகுதியற்றவர் என்கிறார்.

பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றருஞ்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே
(பொதுப்பாயிரம் : 32)

நூற் கல்வியே கல்வியாக விளங்கிய அக்காலத்தில் இலக்கியம், இலக்கணம் முதலான நூல்களைக் கற்பதற்கென ஓர் ஒழுங்கு பின்பற்றப்பட்டது. மாணவர் முதலில் கற்றுத் தேற வேண்டிய இலக்கிய, இலக்கண நூல்கள், அதனை அடுத்த கட்டத்தில் கற்றுத் தேற வேண்டிய நூல்கள் என ஓர் ஒழுங்குமுறை பேணப்பட்டது. அந்த வளர்நிலையே இலக்கிய, இலக்கணக் கல்விக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. முதற்படிநிலையில் கற்க வேண்டிய நூல்களைக் கற்காது, அடுத்த படிநிலைக்குரிய நூல்களைக் கற்பது மிகவும் சிக்கலான விடயம். இன்றைய கல்வி முறைமையிலும்

கலைத்திட்டங்கள் மேற்படி கண்ணோட்டத்துடனேயே வடிவமைக்கப்படுகின்றன. படிமுறையாக அறிவு, திறன், மனப்பாங்கு என்பன வளர்த்தெடுக்கப்படுவதனை இச்செயன்முறை காட்டுகிறது. இம்முறையில் பிறழ்ந்து - படிமுறை வளர்ச்சியின்றி கற்பிப்பது பொருத்தமற்றது. ஆகையால், அத்தகைய இயல்புடையோர் ஆசிரியராகும் தகுதி அற்றவர் என்றார்.

தானே தன்னிடத்திலுள்ள பழங்களைத் தந்தால் ஒழிய, ஒருவன் விருப்போடு தன்னை நெருங்கிப் பறித்துக்கொள்ள இடங்கொடுக்காத இயல்பினை உடையது தன் முழுவதும் மடல் விரிந்த பனை (முழுவதும் பனங்கருக்குகளைக் கொண்ட பனை). அதுபோலவே, தாம் விரும்பி நூற்பொருளைக் கற்பித்தால் பிறர் பெற்றுக்கொள்ளலாமே ஒழிய, எவருமே தாமாக விரும்பி வந்து பெற்றுக்கொள்ள முனையும்போது நூற்பொருளை விளக்க விரும்பாத இயல்புடையவர் ஆசிரியராகும் தகுதி இல்லாதவராவர் எனக் கீழ்வரும் நூற்பாவில் சுட்டுகிறார்:

தானே தரக்கொளி னன்றித் தன்பான்
மேவிக் கொளக்கொடா விடத்தது மடற்பனை
(பொதுப்பாயிரம் : 33)

சிறிது சிறிதாக அடைக்கும்போது தன்னுள்ளே பெற்றுக்கொண்டு மீளக்கொடுக்கும்போது இலகுவில் அளிக்காத பண்பினை உடையது பஞ்சு அடைக்கப்பட்ட குடுக்கை (பருத்திக் குண்டிகை). அதுபோலவே, தாம் சிறிது சிறிதாக வருத்தமுற்றுக் கற்று முழுமை பெற்றதன் பின்னர், பிறர்க்கு அக்கல்வியை இலகுவில் கொடுக்க விரும்பாதவர் ஆசிரியராகும் தகுதிப்பாடு அற்றவர். இவர்கள் தாம் வருத்திக் கற்றது போலத் தம் மாணாக்கரும் வருந்திக் கற்க வேண்டும் எனும் இயல்பினையுடையவராக விளங்குவர் என்கிறார்.

அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்
கௌதீ வில்லது பருத்திக் குண்டிகை
(பொதுப்பாயிரம் : 34)

நீர்விடுதல் முதலான காரியங்களைச் செய்து தன்னைப் பராமரிப்பவர்களுக்கு அல்லாது, பிறருக்குத் தனது காய்களைத் தரும் இயல்பினை உடையது வேலிக்கு வெளியே வளைந்து வளர்ந்த தென்னை மரம். அதுபோன்று பொருள் கொடுத்தல் முதலிய பல உபகாரங்களைச் செய்யும் குணமுடைய ஒருவருக்கு அல்லாது, பிறர்க்குத் தாம் கற்ற கல்வியை வழங்குபவர் ஆசிரியராகும் தகுதிப்பாடு அற்றவராவார் என்கிறார்.

பல்வகை யுதவி விபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே
(பொதுப்பாயிரம் : 35)

பொருள் கொடுத்துக் கல்வியைப் பெற்ற நிலவுடைமைச் சமுதாயம் நிலவிய காலத்தில் தோன்றிய நன்னூலாரின் மேற்படி கருத்து, யாவருக்கும் கல்வி என்ற சித்தாந்தத்தில் இயங்கும் இன்றைய நவீன முறைமைக்கு முரணானதாக உள்ளது. இவ்வாறிருந்தபோதிலும், சமகால சமூக இயங்குதளத்தையும் சிந்தனையையும் கல்விமரபையும் நன்னூலாரின் மேற்படி கருத்து தெளவாக வெளிப்படுத்துகிறது.

**மாணாக்கர் இலக்கணம்**

மாணாக்கர் இலக்கணம் கூற விழைந்த நன்னூலார், முதலில் ஆசிரியர் ஒருவர் கற்பிக்க வேண்டிய மாணவர்களின் பட்டியலைத் தருகிறார். தன் புதல்வன், தன்னாசிரியன் புதல்வன், அரசன் புதல்வன், பொருளை மிகுதியாகக் கொடுப்போன், வழிபாடு செய்வோன், தன்னால் சொல்லப்பட்ட உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோன் ஆகிய அறுவர்க்கும் உரைக்கப்படுவதே நூலாகும் என்கிறார். அவரது கருத்தில் இவ்வறுவருமே மாணாக்கராகும் தகுதியுடையோராவர்.

தன்மக னாசான் மகனே மன்மகன்
பொருளணி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளற் குரைப்பது நூலே
(நூற்பா : 37)

இவ்விதமாக மாணாக்கராகும் தகுதிபடைத்த அறுவரையும் பட்டியற்படுத்தும் நன்னூலார், மாணாக்கராகும் தகுதியற்றோரின் நீண்ட பட்டியலையும் தருகிறார். கள்ளுண்டு களிப்பவன், சோம்பேறிக் குணமுடையவன், அகங்காரமுடையவன், காமமுடையவன், திருடன், நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடுடையவன், கோபமுடையவன், மிகத் தூங்குபவன், புத்தி நுட்பமில்லாதவன் (மந்த புத்தியுள்ளவன்), பழைய நூல்களைக் கண்டு அஞ்சித் தடுமாறும் உள்ளத்தை உடையவன், அஞ்சத்தக்கவைகளுக்கு அஞ்சாதவன், பாவம் செய்பவன், பொய் பேசுபவன் ஆகியோர் மாணாக்கராகும் தகுதியற்றவர் என்பது நன்னூலார் நிலைப்பாடு. இதனைப் பின்வரும் நூற்பா வாயிலாக வலியுறுத்துகிறார் :

களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே
(நூற்பா : 39)

“கற்காமல் இருப்பதைவிட பிறக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில், அறியாமைதான் தீவினையின் மூலவேர் ஆகும்” என்பது பிளேட்டோவின் மகோன்னத வாக்கு. கல்வி தொடர்பிலான மேற்படி சிந்தனைக்கு எதிர்நிலையானது நன்னூலாரின் சிந்தனை. இது நிலவுடைமைச் சமுதாய காலத்துப் பின்னணியில் எழுந்த கருத்துருவாக்கமே ஆகும். உயர்குடிப் பிறந்தவர்களும் பொருள்வளம் உடையோருமே முறையான நூற்கல்வியைப் பெறும் வாய்ப்புடையோராகவும் வசதிபடைத்தோராகவும் விளங்கிய காலத்தில்; வாழ்ந்த நன்னூலார், தன் காலத்தை ஒட்டிய கருத்தையே பதிவுசெய்தார். இருப்பினும், தன்னால் சொல்லப்பட்ட உரையை விரைவிலே கற்கும் அறிவுடையோனையும் அந்த வட்டத்துக்குள் ஈர்த்துள்ளமை சிறப்பிற்குரியது. எவ்வாறிருப்பினும், மாறிவந்த கல்வி உலகு நன்னூலார் எடுத்துரைத்த இச்சித்தாந்தத்தைத் தகர்த்தெறிந்தது. ஆதலால், நன்னூலார் கொள்கை இன்று வலுவிழந்து போய்விட்டது.

இன்றைய உலகு கல்வியைப் பொதுவுடைமையாக்கியுள்ளது. 'யாவருக்கும் கல்வி' என்ற சித்தாந்தத்திற்குள் நின்றியங்குகிறது. கல்வி பெறுதலை சிறுவர் உரிமைகளுள் ஒன்றாகப் பிரகடனம் செய்துள்ளது. பெரும்பாலான நாடுகள் அப்பிரகடனத்தை அங்கீகரித்து ஏற்றுமுள்ளன. ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை தொடர்பான சமவாயத்தின் 28ஆம் உறுப்புரை, “எல்லாப் பிள்ளைகளும் கல்வி கற்கும்

உரிமையுடையவர்களாவர். அரசு ஆரம்பக் கல்வியேனும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைப்பதை உறுதிசெய்தல் வேண்டும்" என்கிறது. இந்நிலையில், மாணாக்கராகும் தகுதியுடையோர் - தகுதியற்றோர் என்ற பாகுபாட்டிற்கே இடமில்லாது போகிறது.

கல்வியானது மாணவரிடத்தே நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டது. நன்னூலார் மாணாக்கராகாதார் எனப் பட்டியலிட்டுள்ளோரில் பலருக்கு நடத்தை மாற்றத்துக்கான கல்வியே அவசியமாகிறது (கள்ளுண்டு களிப்பவன், சோம்பேறிக் குணமுடையவன், அகங்காரமுடையவன், திருடன், மாறுபாடுடையவன், கோபமுடையவன், மிகத் தூங்குபவன், அஞ்சத்தக்கவைகளுக்கு அஞ்சாதவன், பாவம் செய்பவன், பொய் பேசுபவன்). நன்னூலார் நோயாளி, மந்தபுத்தியுள்ளவன் ஆகியோரையும் நூல் பயிலும் தகுதியற்றோர் வரிசையிலேயே நிறுத்துகிறார். இன்றைய கல்வி உலகில் இவர்கள் விசேட தேவையுடைய மாணவர்களாக (உட்படுத்தற் கல்விக்குரியவர்களாக) அடையாளங் காணப்பட்டுள்ளனர். அவர்களை அடிப்படையாகக் கொண்ட கல்விக்கொள்கைளும் உளவியல் வழிமுறைகளும் கற்பித்தல் நுட்டபங்களும் விசாலம் பெற்றுள்ள நிலையோடு ஒப்பிடுமிடத்து நன்னூலாரின் சிந்தனை அர்த்தமற்றதாகிவிடுவதைக் காணலாம்.

**மாணாக்கர் வகை**

நன்னூலார் மாணாக்கராகும் தகுதியுடையோராகக் காட்டிய அறுவகையானோரையும் தலைமாணாக்கர், இடைமாணாக்கர், கடைமாணாக்கர் என வகைப்படுத்துகிறார். அவர்களுடைய இயல்பையும் திறனையும் உவமையினூடாக எடுத்துரைக்கிறார். அந்நூற்பா பின்வருமாறு :

அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்
(நூற்பா : 38)

தலை மாணாக்கர் : அன்னமும் பசுவும் போல்வார்
இடை மாணாக்கர் : மண்ணும் கிளியும் போல்வார்
கடை மாணாக்கர் : இல்லிக்குடமும் ஆவும் எருமையும் நெய்யரியும் போல்வார்

இவ்வுமானங்களை விரித்துரைப்பதன் மூலம் அவரவர்க்குரிய இயல்பையும் திறனையும் உரையாசிரியர் வெளிப்படுத்துவர். அன்னமானது பாலையும் நீரையும் வேறுபிரித்துப் பாலை மாத்திரம் குடித்தல்போல, தலை மாணாக்கர் குணத்தையும் குற்றத்தையும் வேறுபிரித்துக் குணத்தை மாத்திரம் கொள்வர். அவ்வாறே, பசு மிகுந்த புல்லையுடைய இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்த பின்பு ஓரிடத்திற் போயிருந்து சிறிது சிறிதாக வாயில் வருவித்துக்கொண்டு மென்று தின்னல் போல, மிகுந்த கல்வியறிவுடைய ஆசிரியனைக் கண்டால் அக்கல்வியைத் தன்னுள் நிறையக் கேட்டுக்கொண்டு பின்பு ஓரிடத்துப் போயிருந்து சிறிது சிறிதாக நினைவிற் கொண்டு வந்து சிந்திப்பர். இவ்விரு இயல்பாலும் தலை மாணாக்கரை அன்னத்துக்கும் பசுவுக்கும் உவமானமாக்கியுள்ளார்.

மண்ணானது உழவர் வருந்திப் பயிர் செய்கின்ற முயற்சியின் அளவைப் பொறுத்து விளைவைத் தருவது போல, ஆசிரியர் வருந்திக் கற்பிக்கும் முயற்சின் அளவைப் பொறுத்துக் கல்வியறிதலை இடை மாணாக்கர் காட்டுவர். கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன்றையும் சொல்ல மாட்டாதது போல, தமக்குக் கற்பித்த நூற்பொருளை அன்றி, வேறெந்த நூற்பொருளையும் சொல்லும் இயலுமை அற்றவராகவிருப்பர். இவ்விரு இயல்பாலும் இடை மாணாக்கரை மண்ணுக்கும் கிளிக்கும் உவமானமாக்கியுள்ளார்.

இல்லிக்குடம் (ஓட்டைக்குடம்) நீரை வார்க்கும் தோறும் ஒழுக விடுவது போல, நூற்பொருளைக் கற்பிக்கும் தோறும் கடை மாணாக்கர் மறந்துவிடுவர். ML ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது, செடிதோறும் போய் மேய்வது போல, ஓராசிரியரிடத்து மிகுந்த கல்வியறிவு காணப்பட்டாலும் புலமை நிறையக் கற்றுக்கொள்ளாது பலரிடமும் பாடங் கேட்பர். எருமையானது குளத்து நீரைக் கலக்கிக் குடித்தல் போல, ஆசிரியரை வருத்திப் பாடம் கேட்பர்;. பன்னாடையானது தேன் முதலியவற்றைக் கீழே தள்ளிவிட்டு அவற்றிலுள்ள குற்றங்களைப் பற்றிக்கொள்ளுதல் போல, நல்ல பொருளை மறந்துவிட்டுத் தீய பொருளைச் சிந்தித்துப் பற்றிக்கொள்வர். இத்தகைய இயல்புகளினால் கடை மாணாக்கரை இல்லிக்குடம், ML, எருமை, நெய்யரி ஆகியவற்றிற்கு உவமானமாக்கியுள்ளார்.

இன்றைய நவீன கல்வி உலகிலும் மாணாக்கரின் அறிவு, ஆற்றல், மனப்பாங்கு அடிப்படையில் அவர்களை இனங்காண்பதும் அதற்கேற்ப கற்றல் - கற்பித்தற் செயன்முறைகளை ஒழுங்கமைத்தலும் வலியுறுத்தப்படுகின்றன. இந்நிலையில், நன்னூலாரின் இவ்வகைப்பாடு இன்றைய கல்விச் சிந்தனையோடும் ஒத்துப்போவதைக் காணலாம்.

**கல்வி பயிலும் முறை**

தக்க காலத்திலே போய், வெறுப்பின்றி வழிபாடு செய்து, ஆசிரியர் குணத்தோடு பொருந்திப் பயின்று, அவர் குறிப்பின்வழியே சேர்ந்து, இரு என்று சொன்னபின் இருந்து, படி என்றபின் படித்து, பசித்துண்பவன் உணவிடத்துக் கொண்டுள்ள ஆசை போல பாடம் கேட்பதில் ஆசையுடையவனாகி, சித்திரப் பாவை போல அசைவற்று குணத்தோடு அடங்கி, காதானது வாயாகவும் மனதானது கொள்ளுமிடமாகவும் முன் கேட்டவற்றை மீண்டும் கேட்டு, அவற்றை மறந்துவிடாமல் உள்ளத்தில் நிறுத்திக்கொண்டு போ என்றபின் போதல் வேண்டும் என மாணவனொருவன் ஆசிரியரிடம் கல்வி பயிலும் முறையைக் கீழ்வரும் நூற்பாவில் விபரிக்கிறார்:

கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன வார்வத் தனாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர்
(நூற்பா : 40)

கீழைத்தேச நாடுகள் பலவற்றில் ஆசிரியரை வழிபாடு செய்து, பரிபக்குவத்தோடு அவரை அணுகி, அவரது கருத்தின்வழியே ஒழுகி, கல்வி பயிலும் மரபுண்டு. தமிழர் கல்வி மரபும் அதன்வழிப்பட்டதே. அந்த மரபையே நன்னூலார் இங்கு காட்டுகிறார். இருப்பினும், 'சித்திரப் பாவை போல அசைவற்று'க் கற்றல் என்பது இன்றைய கல்விச் சிந்தனையோடு முரண்கொள்கிறது. மாணவர்கள் வகுப்பறையில் இயங்கிக் கற்பதையே அதிகம் வலியுறுத்தும் தற்காலக் கல்விச் சிந்தனைகளோடு ஒப்பிடுமிடத்து நன்னூலாரது சிந்தனை முரணிலையாகவே தோன்றுகிறது (நன்னுலார் நூற்கல்வியையே வலியுறுத்திய போதிலும்).

குளிர்காய்பவன் விட்டு நீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப் போல ஆசிரியரை நினைத்து அச்சமுற்று நீங்காமலும் நெருங்காமலும் விடாது பின் செல்லும் நிழலைப் போல தொடர்ந்து சென்று எத்தன்மையினால் ஆசிரியனானவன் மகிழ்வானோ அத்தன்மையோடு பொருந்தி அறத்திலிருந்து வேறுபடாது நடத்தல் வேண்டுமெனவும் குறிப்பிடுகிறார்.

அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே
(நூற்பா : 46)

ஆசிரியர் ஒருவரை அணுகிக் கல்வி கற்கும் முறையை வலியுறுத்திய நன்னூலார், ஆசிரியரிடம் தாம் கற்றுக்கொண்டவற்றைத் தொடர்ந்து கற்கும் முறைபற்றி மிகச் சிறப்பாக தமது சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார்.

நூல்பயி லியல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும்
(நூற்பா : 41)

இந்நூற்பாவினுடாக அவர் காட்டிய நுட்பங்களைப் பின்வருமாறு பட்டியற்படுத்தலாம்:

1. உலக வழக்கும் செய்யுள் வழக்கும் எனும் இருவகை நடையினையும் ஆராய்ந்தறிதல்
2. மூல பாடங்களை மறவாது பாதுகாத்தல்
3. தான் கேட்ட பொருள்களைப் பலதரம் சிந்தித்தல்
4. அவை தன் மனத்துள் அமையும்படி மீண்டும் கேட்டல்
5. கற்கும் தொழிலுடையோரோடு பழகுதல்
6. தான் ஐயுற்ற பொருளை அவர்களிடம் வினவுதல்
7. அவர்கள் வினாவியதற்குத் தான் பதில் அளித்தல்

இன்றைய நவீன கல்வி உலகில் வலியுறுத்தப்படும் கல்விச் சிந்தனைகளும் கொள்கைகளும் பெரிதும் வளர்ச்சியடையாத காலத்தில் வாழ்ந்த நன்னூலார், மாணவர்களின் கற்றல் நுட்பங்களாக எடுத்துக்காட்டியவை மிகச் சிறப்பானவையாக விளங்குகின்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

இலக்கியம், இலக்கணம், சோதிடம் முதலான நூற்கல்வியே கல்வியாக விளங்கிய காலத்தில் வாழ்ந்த நன்னூலார் - அக்கல்வியையே மையப்படுத்தித் தமது கருத்துக்களை முன்மொழிந்த நன்னூலார் - மாணாக்கர் இலக்கணம், மாணாக்கராகாதார் இலக்கணம், மாணாக்கர் கற்கும் முறை, நல்லாசிரியர் இலக்கணம், ஆசிரியராகாதார் இயல்பு முதலியன குறித்துச் சுட்டிய கருத்துகளிற் சில, கல்விக் கொள்கைகளும் நோக்கங்களும் நுட்பங்களும் உளவியலும் விசாலித்துக் காணப்படும் இன்றைய சூழலில் வலுவிழந்து காணப்படினும், அவர் நிலைநாட்டிய கல்விச் சிந்தனைசார் கருத்துகள் பல இன்றளவும் ஏற்புடையனவாக - பொருத்தமுடையனவாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மறுபுறம், ஆசிரியத்துவம் குறித்த புரிதலும் கற்பித்தல் நுட்பங்கள் பற்றிய அக்கறையும் மாணாக்கரின் அறிதிறன் குறித்த தெளிவும் தமிழர் மரபில் வேரூன்றி இருந்தமைக்கும் நன்னூலார் கருத்துகள் சான்றாய் அமைகின்றன. அவையே அவரைத் தமிழர் கல்விச் சிந்தனை மரபின் ஆளுமைகளில் ஒருவராக நிலைநிறுத்தத்தக்கன.

**உசாத்துணை நூல்கள்**

ஆறுமுகநாவலர், 1958, நன்னூல் காண்டிகை உரை (இருபத்திரண்டாம் பதிப்பு), சென்னை : வித்தியாநுபாலன அச்சகம்.

சந்திரசேகரம், ப., 1987, கல்வியியற் கோவை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கல்விக் கழகம்.

செல்வராஜா,மா. 2005, கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள், மட்டக்களப்பு : எவர்கிறீன் அச்சகம்.

முத்துலிங்கம்,ச. 1974, கல்வியியல் - ஒரு அறிமுகம், யாழ்ப்பாணம் : கீதாஞ்சலி வெயியீடு.

முத்துலிங்கம்,ச. 1995, கல்வியும் உளவியலும், கொழும்பு : யுனி ஆர்ட்ஸ்.

ஜெமீல், எஸ்.எச்.எம்., 1996 (இரண்டாம் பதிப்பு), கல்விச் சிந்தனைகள், இராகிரிய, தமிழ் மன்றம்.

ஜெயராசா, சபா. 2011, கல்வியில் எழுவினாக்கள், கொழும்பு : சேமமடு பதிப்பகம்.

# விசிட்டாத்வைதம் குறிப்பிடும் முத்தி: ஓர் சமய மெய்யியல் ஆய்வு

இ.சகாயசீலன்
ஒப்பீட்டுச்சமயமும் சமூகநல்லுறவும் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sahayaseelanr@esn.ac.lk

## ஆய்வுச்சுருக்கம்:

சங்கரர் தத்துவத்தில் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவற்றை மறுக்கும் முகமாகவே இராமானுஜர் தனது தத்துவத்தை விளக்குகின்றார். சங்கரர் முன்வைக்கும் மாயா வாதம் விளக்கப்பட முடியாத ஒன்றென இராமானுஜர் குறிப்பிடுகிறார். உள்ள பொருள் என்பதற்கு நிலையாக இருப்பது என்ற தவறான கருத்தை சங்கரர் கொண்டதாலேயே தேவை அற்ற இந்த மாயா வாதம் சொல்லப்படவேண்டியாயிற்று எனக் கூறி சங்கரரில் இருந்து வேறுபட்ட வரைவிலக்கணத்தை உள்பொருளுக்கு காட்டுகிறார். நிலையான அழிவற்ற இயக்க கூடிய பொருள் எதுவோ அதுவே உள் பொருள் ஆகும் என சுதந்திரமாக இயக்குதல் என்ற பண்பினை முக்கியப்படுத்தி உண்மைப் பொருளை விளக்குகிறார். கடவுள், உயிர், உலகம் என்ற முன்றினையும் “இருக்கின்றவை” எனக் கொள்ளும் இராமானுஜர் அம் மூன்றினுள் சுதந்திரமாக இயங்க கூடியது ஒன்றுதான் எனக் காட்டி உள்பொருள் இரண்டல்ல எனும் தனது விசிட்டாத்வைத கோட்பாட்டை விளக்குகின்றார். ஆன்மாவான சரீரிக்கும் உடலான சரீரத்திற்கும் உள்ள தொடர்பைப் போன்றதுதான் கடவுளுக்கும் -ஆன்மாக்களாலும் சடப் பொருளா லும் உருவாக்கம் பெற்ற இவ்வுலகுக்கும் உள்ள தொடர்பு. அதனை விசிட்டாத்வைதிகள் மேல் வருமாறு விளக்குவர். கடவுள் ஆன்மாக்களின் ஆன்மாவாகவும், இயற்கையின் ஆன்மாவாகவும், இருப்பவர். ஆன்மாக்களும் உலகும் சுடவுளில் நின்று வேறுபட்டவை. ஆயினும் அவை அக்கடவுளில் இருந்து பிரிக்க இயலாதவை. இவற்றினை ஒன்றாய்ப் பிணைத்து நெறிப்படுத்துவது தொடர்பாய் அமைவதன்று, உள்ளார்ந்த இயல்பாய் அமைந்து நிற்கும் பிரிக்க முடியாத இயற்பண்பாகும். அதாவது அது அப்ருதச் சித்தி என்பர். இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே விசிட்டாத்வைத நெறி அமைவு பெற்றுள்ளதெனலாம். இக்கோட்பாட்டின்படி ஆன்மாக்களாலும் சடப்பொருளாலும் அமைந்த உலகால் இறைவனின் சிறப்பியல்பு வெளிப்படுகின்றது. இக்கட்டுரையில் விசிட்டாத்வைதம் குறிப்பிடும் முத்தி பற்றிய கருத்துக்கள் ஆராயப்படுகின்றன.
திறவுச் சொற்கள்: இராமானுஜH, விசிட்டாத்வைதம், முத்தி, ஆன்மா, பிரம்மம்.

## விசிட்டாத்வைதம் பற்றிய அறிமுகம்:

பிரம்ம சு+த்திரத்திற்கு இராமானுஜர் எழுதிய விளக்க உரையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது விசிட்டாத்வைத வேதாந்தமாகும். சங்கரர் தத்துவத்தில் காணப்படும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவற்றை மறுக்கும் முகமாகவே இராமானுஜர் தனது தத்துவத்தை விளக்குகின்றார். சங்கரர் முன்வைக்கும் மாயா வாதம் விளக்கப்பட முடியாத ஒன்றென இராமானுஜர் குறிப்பிடுகிறார். உள்ள பொருள் என்பதற்கு நிலையாக இருப்பது என்ற தவறான கருத்தை சங்கரர் கொண்டதாலேயே தேவை அற்ற இந்த மாயா வாதம் சொல்லப்படவேண்டியாயிற்று எனக் கூறி

சங்கரரில் இருந்து வேறுபட்ட வரைவிலக்கணத்தை உள்பொருளுக்கு காட்டுகிறார். நிலையான அழிவற்ற இயக்க கூடிய பொருள் எதுவோ அதுவே உள் பொருள் ஆகும் என சுதந்திரமாக இயக்குதல் என்ற பண்பினை முக்கியப்படுத்தி உண்மைப் பொருளை விளக்குகிறார். கடவுள், உயிர், உலகம் என்ற முன்றினையும் “இருக்கின்றவை” எனக் கொள்ளும் இராமானுஜர் அம் மூன்றினுள் சுதந்திரமாக இயங்க கூடியது ஒன்றுதான் எனக் காட்டி உள்பொருள் இரண்டல்ல எனும் தனது விசிட்டாத்வைத கோட்பாட்டை விளக்குகின்றார்.

உயிரானது உடலில் எவ்வாறு தங்கியிருகிறது. அவ்வாறு கடவுளானவர் உயிர் உலகங்களில் தங்கி நிற்கிறார். என்றும் உடலை நோக்க உயிரே சுதந்திரமுடையது. உயிர் உலகங்களை நோக்க இறைவனே சுதந்திரமுடைவர். எனக் காட்டி உள் பொருள் இரண்டல்ல என நிறுவுகிறார். (பத்மநாதன்,சி.,1992,பக்67-68)
இராமானுஜர் அங்கம் அங்கி என்ற தொடர்பின் அடிப்படையில் உயிர் உலகங்களை அங்கங்களாகக் கொண்டே அங்கியாக இறைவன் அமைகிறான் என்றும் இவற்றுள் அங்கியே சுதந்திரமாக இயங்கக்கூடியது என்றும் கூறுகிறார். உயிரும் உலகும் பிரம்மத்திக்கு விசேடணம். விசேடணம் என்பது அங்கம் அங்கி என்பது விசேடியம் எனப்படுகிறது. விசேடண விசேடியங்களை உள்ளடக்கிய இராமானுஜரது அத்வைதம் விசிட்டாத்வைதம் எனப்படுகிறது.

இறைவன், உயிர், உலகங்களுக்கிடையிலான தொடர்பு எத்தகையதென விளக்குகின்ற போது உலகில் உள்ள பேதங்களை மூன்று வகையாக இராமானுஜர் பிரித்து காட்டுகிறார். ஒரு பொருளுக்கு இன்னொரு பொருளுக்கு வித்தியாசம் என்ற “விஜாதீய பேதம்” ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு பொருள்களுகிடையிலான வித்தியாசம் என்ற “சஜாதீய பேதம்” ஒரு பொருளுக்கு அதன் பகுதிகளுகிடைலான வித்தியாசம் என்ற “சுவகத பேதம்” என்பனவே அவ் முவகை பேதங்களாகும் இதனை முறையே ஒரு மரத்திற்கும் செடிக்குமான வித்தியாசம், ஒரு மரத்திற்கும் இன்னொரு மரத்துக்கும் இடையிலான வித்தியாசம், ஒரு மரத்துக்கும் அதனது வேர், கிளை என்பவற்றின் வித்தியாசம் என்பதன் மூலம் காட்டலாம். இவற்றுக்கு மூன்றாவது வகையான “சுவகத பேதத்தை” இறைவன், உயிர்,உலகங்களுக்கு காட்டி அதன் மூலம் ஒரு முழுபொருளுக்கு அதன் பகுதிகளுக்குமிடையிலான வித்தியாசம் போன்ற பிரிக்கப்பட முடியாத தொடர்பே இவைகளுக்குகிடையில் உண்டு என இராமானுஜர் விளக்குகிறார் (Dvaita philosophy (contd.), Hinduism - Philosophies, Shad Darshan – Vedanta philosophies 2.0http://www.justforkidsonly.com/truth/?p=125).

## விசிட்டாத்வைதம் குறிப்பிடும் ஆன்மா:

வேதாந்தக் கோட்பாடுடையவர்களின் கருத்தில் விவாதத்துக்குரியதாக அமைந்துள்ளது பிரம்மம். அது நிர்க்குணம் ஆனதா? அன்றிச் சகுணம் ஆனதா? என்பதே அதனைப் பற்றிய விவாதம். புரம்மம், சகுணம் என்ற கருத்தினைக் கொண்ட கோட்பாட்டினைக் கொண்டவர்கள் விசிட்டாத்துவைதிகள் எனப்படுவர். இக் கோட்பாட்டினை முன்னெடுத்துச் சென்றவரில் தலைமை பெற்றவர் இராமானுசர்.

விசிட்டாத்துவைதிகளின் கருத்துப்படி உள்பொருள் என்பது இருமையற்ற பரம்பொருளாயினும் அது வேற்றுமையற்ற ஒரே சீரான பொருள் அன்று. அது உள் வேறுபாடுடையது. பல்வகைப்பட்ட குணங்களையுடைய ஒரு பொருள். அக்குணங்களே பல்லேறு வகைப்பட்ட பொருளாய் அமைந்துள்ளது. இத்தகைய குண இயல்புகளைப் பெற்றதனால் பிரமமானது விசேட குணங்களோடு கூடியது. அது

விசிட்டம் எனப்படுகின்றது. அதனால் அது நிர்விசேட சைதன்னியம் அன்று. இத்தத்துவ முறைமை உபநிடத சித்தனைகளை மட்டுமல்லாது ஆழ்வார்கள் அருளிய பக்திப்பாடல் களான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தநெறியினையும் விசிட்டாத்வைதம் போற்றுகின்றது. அதனால் விசிட்டாத்வைத நெறி உபய வேதாந்தம் என்றும் பெயர் பெற்றுள்ளது.

ஆளவந்தார் என வழங்கப்பட்ட யமுனாசாரியர் விசிட்டாத்வைதம் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் ஆகம பிராமாணியம், கீதார்த்த சங்கிரகம், சித்தி-திரம் என்பன குறிப் பிடத்தக்கவை. இராமானுசர் எழுதிய வேதாந்த விளக்க உரையாகிய ஸ்ரீபாஸ்யம் என்ற நூலும் பசுவக்கீதை விளக்கவுரையும் வேதாந்த சங்கிரகம், கத்திய - திரயம் என்ற நூல்களும் விட்டாத்வைதத்தை விளக்கும் நூல்களாகக் கருதப்படுகின்றன.(மு.கு.நூ.,1992,பக்67-68)

விசிட்டாத்துவைதிகளின் கருத்துப்படி உள் பொருள் என்பது இருமையற்ற பரம்பொருளாயினும் அது வேற்றுமையற்ற ஒரே சீரான பொருள் அன்று. அது உள்வேறுபாடுடையது. பல்வகைப்பட்ட குணங்களையுடைய ஒரு பொருள். அக்குணங்களே பல்வேறுவகைப்பட்ட பொருளாய் அமைந்துள்ளது. இத்தகைய குண இயல்புகளைப் பெற்றதனால் பிரமமானது விசேட குணங்களோடு கூடியது. அது விசிட்டம் எனப்படுகின்றது. அதனால் அது நிர்விசேட சைதன்னியம் அன்று. இத்தத்துவ முறைமை உபநிடத சிந்தனைகளை மட்டுமல்லாது ஆழ்வார்கள் அருளிய பக்திப்பாடல்களான நாலாயிரத் திவ்வியப் பிரபந்த நெறியினையும் விசிட்டாத்வைதம் போற்றுகின்றது. அதனால் விசிட்டாத்வைத நெறி உபய வேதாந்தம் என்றும் பெயர் பெற்றுள்ளது.

ஆன்மாவான சரீரிக்கும் உடலான சரீரத்திற்கும் உள்ள தொடர்பைப் போன்றதுதான் கடவுளுக்கும் -ஆன்மாக்களாலும் சடப் பொருளா லும் உருவாக்கம் பெற்ற இவ்வுலகுக்கும் உள்ள தொடர்பு. அதனை விசிட்டாத்வைதிகள் மேல் வருமாறு விளக்குவர். கடவுள் ஆன்மாக்களின் ஆன்மாவாகவும், இயற்கையின் ஆன்மாவாகவும், இருப்பவர். ஆன்மாக்களும் உலகும் சுடவுளில் நின்று வேறுபட்டவை. ஆயினும் அவை அக்கடவுளில் இருந்து பிரிக்க இயலாதவை. இவற்றினை ஒன்றாய்ப் பிணைத்து நெறிப்படுத்துவது தொடர்பாய் அமைவதன்று, உள்ளார்ந்த இயல்பாய் அமைந்து நிற்கும் பிரிக்க முடியாத இயற்பண்பாகும். அதாவது அது அப்ருதச் சித்தி என்பர். இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே விசிட்டாத்வைத நெறி அமைவு பெற்றுள்ளதெனலாம். இக்கோட்பாட்டின்படி ஆன்மாக்களாலும் சடப்பொருளாலும் அமைந்த உலகால் இறைவனின் சிறப்பியல்பு வெளிப்படுகின்றது. (ஞானன்,செ., 1999, ப45,) இவ்வுலகின்கண் வாழ்பவனும். உள்ளுறைபவனும், ஆன்மாக்களால் உணரப்படுபவனும், இவ் வுலகையே உடலாகக் கொண்டவனும், இவற்றின் உள்ளிருந்து உலகை இயக்குபவனுமான அவனே, ஆத்மனின் உள்ளிருந்து ஆள்பவன். அவன் அழியாத் தன்மையுடையவன் எனக் கூறப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே இவ்வுலகை மீட்பவனும் அவனே, ஆக்குபவனும் அவனே என்ற விளக்கம் தரப்படுகின்றது. file;தேறாது இருக்கும் ஆன்மாக்களை மீட்பவனாக அவன் மீண்டும் மீண்டும் அவ்வப்போது அவதாரம் எடுக்கின்றான் எனக் கூறப்படுகின்றது

'அசித்து" எனப் பகரப்படும் அறிவற்ற இவ்வுலகானது ஆன்மாக்கள் வாழ்வதற்கு இடமாக அமைவு பெற்றுள்ளது. இத்தன்மையினால் இவ்வுலகம் இறைவன் வாழும் இடமாகின்றதென்பர். பிரகிருதி அல்லது பிரபஞ்சமாகிய இச்சடப்பொருள் தாமஸம் - இராஜஸம் - சத்வம் ஆகிய முக்குணங்களையுடையது. அஃது நுண் - பொருள் வடிவு

கொண்டது. இல்லது பிறப்பதில்லை. அதில் செயல் (காரியம்) மறைந்து நிற்கின்றது. இதனைச் சத்காரியம் என்பர். காரணகாரியத் தொடர்புடையதென விளக்கப்படுகின்றது. அதாவது வடிவ மாற்றம் நிகழ்வது அல்லது மறைந்திருப்பதை வெளிக்கொண்டு வருதல் என்பதாகும். இதனைக் கூர்ப்பறக்கோட்பாடு எனக் கூறுதல், அழிவு எனக் கருதப்படுவதும் சடப்பொருள்களின் தோற்றமும் மறைவுமாகும். எந்த ஒன்றும் முற்றுமுழுதாக அழிவதும் இல்லை என்ற கருதுகோளும் தரப்படு கின்றது. இயக்கமற்ற பொருளாக, அதாவது அசித்தாக இருக்கும் காலம் என்பது பொருட்களின் இருத்தல் தன்மையின் வடிவமே. இது பிரகிருதிக்குச் சமமான கூட்டுப் பொருளாகப் பிரமத்தில் அடங்கி இருக்கின்றதென்பர். காலத்துக்குட் பட்ட இவ்வுலகு ஆன்மாவின் உலகியல் வாழ்வுக்கு வேண்டுவன அனைத்தினையும் கொடுக்கின்றது. உலகமானது இறைத்தன்மையென்ற ஆன்மாவின் முன்னேற்றம் அடையச்செய்யும் சாதனமாக அமைக்கின்றது என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.((முற்குறிப்பிட்டநூல்,1999,ப98) இவ்வாறாக ஆன்மா பற்றிய கருத்துக்களை விசிட்டாத்வைத வேதாந்தமானது பிரம்மத்தோடு தொடபுபட்டவகையில் விளக்கிநிற்பதைக் காணலாம்.

## விசிட்டாத்வைதம் குறிப்பிடும் முத்தி

இராமானுஜH கி.பி. 1017 – 1137 காலப்பகுதியில் தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புத்தூல் பிறந்து வாழ்ந்தவH. "உலகமும் உயிருமாகிய விசேஷணங்களையுடையது பிரம்மமாகிய விசேஷியம், இந்த விசேஷணம், விசேஷியம் ஆகிய இரண்டும் சேந்த விசிஷ்டமே இராமானுஜH பேசும் பரம்பொருள். இதனாலேயே இராமானுஜH பேசும் தத்துவம் விசிஷ்டாத்வைதம்"( பூலோகசிங்கம்,பொ., 1990,ப.213.) என வழங்கப்படுகின்றது.

ஆரம்பகாலங்களில் இராமானுஜH ஒரு அத்வைத தத்துவஞானியிடம் கல்வி கற்றாH. இடையில் ஆழ்வாகளுடைய வைணவக்கோட்பாடுகளில் ஈடுபாடு உடையவராக மாறினாH. இக்கோட்பாடுகள் சங்கரருடைய அத்வைதக் கோட்பாட்டிற்கு எதிராகப் பிரபந்தங்கள் என்ற பாடல்களில் விளக்கப்பட்டிருந்தன. இதில் ஈடுபாடு கொள்வதற்கு இராமானுஜருக்கு அத்வைத வேதாந்தி ஒருவாடம் கல்விகற்றது பொதும் உதவியது. பிரம்மசு+த்திரத்திற்கு அவH ஸ்ரீபாஷ்யம் என்ற விமசன நூலை எழுதினாH. பிரம்மம் அல்லது கடவுள் என்பதை ஏற்றுக்கொண்டாH. அதற்கு விசிட்டாத்வைதம் என்று பெயாட்டாH.

